எளிமை, இனிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்.

பேராசிரியர் முனைவர்
ந சுப்பு ரெட்டியார்



வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றுந் 291
தீமை இலாத சொலல்

1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publication

வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

திருக்குறளை ஆழ்ந்து நுட்பமாக கற்கும்போது ஒருசில கருத்துகள்
முரண்பாடாகத் தென்படும் என ஒரு சிலர் கூறுவர்.
முரண்பாட்டை பேராசிரியர் சான்றுகளுடன்
வன்மையாக மறுக்கின்றார். திருக்குறள் நெறியை
எக்காலத்தும் எவ்விடத்தும் எவராலும்
வழிபட இயலும்.

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939685-6-7

eBOOK ~ மின் நூல்

வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்

அருங்கலைக்கோன், சடகோபன் பொன்னடி, சேவா ரத்னா,
தமிழ்ப்பேரவைச் செம்மல், கலைமாமணி, ஆய்வுத்தமிழரசு,
பொதுமறைச் செம்மல், வைணவ இலக்கிய மாமணி

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

முன்னாள் வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்

All rights are reserved. No part of the publication may be reproduced, stored in a retrieval system (including but not limited to computers, disks, external drives, electronic or digital devices, e-readers, websites), or transmitted in any form or by any means (including but not limited to cyclostyling, photocopying, docutech of other reprographic reproductions, mechanical, recording, electronic, digital versions) without the prior written permission of the publisher, not be otherwise circulated in any form of binding or cover other than that in which it is published and without a similar condition being imposed on the subsequent purchase.

முதற்பதிப்பு – 2004
இரண்டாம் பதிப்பு - 2018

Price: Rs.350.oo

Published by:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN 978-81-939685-6-7

9 788193 968567

Wrapper design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095

தொண்டே செய்து
    என்றும் தொழுது வழியொழுக
பண்டே பரமன்
    பணித்த பணிவகையே [1]

- நம்மாழ்வார்



நீதியரசர் பி.ஆர். கோகுலகிருட்டிணன்
முன்னாள் குஜராத் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி

ஒழிவில் கால மெல்லாம்
    உடனாய் மன்னி
வழுஇலா அடிமை
    செய்ய வேண்டும்[2]

- நம்மாழ்வார்

1. திருவாய் 10.4 :9
2. மேலது 3.3 :1

கல்லூரி வாழ்க்கை முதல் திரு.வி.க. பேரில்
மணவழகர் மன்றம் தொடங்கி நாளிது வரை
சிறப்பாக நடத்தி வருபவரும்,
முன்னாள் குஜராத் உயர்நீதிமன்றத் தலைமை
நீதி அரசருமான

திரு. பி. ஆர். கோகுலகிருட்டிணன் அவர்கட்கு

அன்புப் படையல்

உயரற மன்றத் தலைமையை அணிசெய்
    ஒப்பிலா நடுவராய் உயர்ந்தோன்;
உயிரெனத் தமிழை, ஒண்டமிழ் இசையை
    உடையவன்; தமிழினம் உயர
அயர்விலாது உழைப்போன்; தமிழ்முனி வர்பால்
    அளவிலா மதிப்புடை அறிஞன்;
மயர்வறு மதிசால் கோகுலக் கண்ண
    வள்ளலுக் கிந்நூல் படையல்!

பாடலின் நாலாவது அடியில் 'கண்ண' என்பது தமிழ் மரபுக் கேற்ப 'கிருஷ்ண' என்பதற்குப் பதிலாய் வந்தது.

பேராசிரியர். திருக்குறள். க. பாஸ்கரன்
B.Sc., B.Sc(Hons), M.Sc, M.Phil, B.T., M.Ed.,

அணிந்துரை

தமிழ்ச் செம்மல், கலைமாமணி பேராசிரியர் முனைவர். ந. சுப்புரெட்டியார் M.A., B.Sc., L.T., வித்வான் Ph.D., D.Lit., அவர்கள் நுட்பத்துடனும் திட்பத்துடனும் எழுதிய நூலை, படித்தேன். மகிழ்ந்தேன். எளியேனாகிய எனக்கும் அன்னார் பெருமையை அளித்தமைக்கு வியந்தேன். ஒருநூலுக்கு அணிந்துரையை வரைவது என் கன்னி முயற்சி. பேராசிரியர் ரெட்டியார் இயற்றிய பெருமையும், பேருவகையும் எய்திய எனக்கு அவர் வழங்கிய பணியை அரும்பெருபேறு என கருதுகிறேன்.

வான் பொய்ப்பினும் தான் பொய்யா காவிரி ஆறு பாயும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் அல்லது சோழநாடு ஈன்ற சான்றோராகிய திரு. சுப்பு ரெட்டியார் ஓர் தமிழறிஞர்; மாபெரும் எழுத்தாளர்; சிந்தனைச் செம்மல். பேராசிரியர் 'திருக்குறள் தெளிவு' என்பதில் உள்ளபடி அறிவியல், ஆய்வு, இலக்கியம், உளவியல், கல்வியியல், மற்றும் சமூகம் முதலிய பல்வேறு துறைகளில் இந்நாள்வரை 123 நூல்களை

கல்லூரிக் கல்வி மண்டல இணை இயக்குநர்
நிறுவனர், கருணாகரன் நினைவுத் திருக்குறள் நூலகம்
அறிஞர் அண்ணாநகர் சென்னை - 600 040.
அ.பெ. 7342 போ. 26211150

இயற்றி வெளியிட்ட பின்பு, 124 ஆவது வெளியீடாகிய 'வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்' எனும் நூலுக்கு அணிந்துரையை அளிக்கும் அரியதோர் வாய்ப்பை வழங்கிய மையில் ஒரு நுட்பம் புலனாகிறது. 124 எண்ணில் அடங்கிய இலக்கங்களை கூட்டினால் (1+2+4) 7 ஏழு என்னும் எளிய விழுமிய எண் உருவாகும். இந்நூலின் கருப்பொருளாகிய திருக்குறளுக்கும் நெருங்கிய உறவை அறிய இயலும்.

அகவை (89) முதிர்ச்சியிலும் பல்வேறு இடர்ப் பாடுகளையும், இடையூறுகளையும், இன்னல்களை யும் புறக்கணித்து, 'வாக்கு வாளை விட வலிமை மிக்கது' எனும் மூதுரையை முற்றிலும் நம்பும் நூலாசிரியர், ஆழியில் மூழ்கி முத்துக்களை கண்டறிவதுபோல், திருக்குறள் இலக்கியப் பெருங்கடலில் மிக நுண்ணிய கருத்துக்களை அறிந்து, வரைகிறார் இப்படைப்பை, அறிவுக்கு விருந்தாக, கருத்துக் கருவூலமாக பட்டறிவுப் பாசறையாக சிந்தனையைத் தூண்டும் ஊக்கியாக விளங்குகிறது இந்நூல். புதிய அணுகுமுறையில் உருவாக்கப்பட்ட இயற்றப்பட்ட இந் நூலைச் சிறப்பிக்கவும், படைப்பாளியைப் பாராட்டவும் அணிந்துரையைத் துணிந்து, பணிந்து வழங்குகிறேன் அற நூலுடன் தொடர்புடைய அருமையான நூலை முழுமை யான ஆர்வத்துடன் படிக்க வாய்ப்பை வழங்கிய பேரா சானுக்கு முதற்கண் வணக்கங்கள் கணக்கில.

அரிது அரிது மானிடராய்ப் பிறப்பது அரிது. இவ்வரிய இனத்துக்கு இயல்பாக வழங்கப்பட்ட சிந்தனைத் திறன் என்பது தெளிவு. சிந்தனையே இயற்கையில் மறைந்துள்ள உண்மைகளைக் கண்டறிந்து வெளிப்படுத்து பவன் அறிஞனாவான். சிந்தனையற்றவன் பேதை. சிந்தித்த

கருத்துகளை வெளியிட அஞ்சி மறுப்பவன் ஏழையல்ல. அவனொரு கோழை. இந்நூலை ஆழ்ந்து படிக்கும்போது, முனைவர் சுப்புரெட்டியார் ஒரு சிந்தனைச் சிற்பி என உறுதியாக அறுதியிட்டு இறுதியாக இயம்ப இயலும்.

அணுவைத் துளைத்துஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்தது குறள்

இதனை இயற்றிய திருவள்ளுவர் தன்னை உலகினுக்கே ஈந்து வான்புகழ் ஈட்டிய தமிழகத்தில் தோன்றினாலும் அந்நூல் காலத்தை வென்று, இனம், சாதி, சமயம், நாடு, மற்றும் மொழி முதலிய பல்வேறு பாகுபாடுகளைக் கடந்து, ஞாலம் போற்றும் அறநூலாக, பொருளியல் பனுவலாக, வாழ்க்கைத் துணை நூலாக நீதி இலக்கியமாக இலங்குகிறது.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக (391)

குறில் எழுத்துக்கள் மட்டுமே அடங்கிய இத்திருக்குறளுக்கு எடுத்துக் காட்டாக வழிபடத்தக்க, தகுதிமிக்க திருக்குறள் நூலே திகழ்கிறது என்பது தெளிவு. அகர முதல எழுத்தெல்லாம். . . எனத் தொடங்கும் முதல் குறட்பாவில் 'அ' எனும் உயிரில் அரும்பி, உயிர் மெய்யில் மலர்ந்து தொடர்ந்து, 'கூடி முயங்கப் பெறின்' என்னும் ஈற்றடி அடங்கிய இறுதி 1330 ஆவது குறட்பா 'ன்' என்னும் மெய்யில் முடிகிறது. வாழ்வியக்கமும் உயிர் உடலில் இணைந்து, உயிர் மெய்யாக இயங்கி, இறுதியில் உயிர் உடலிலிருந்து விலகி, 'மெய்' எனப்படும் உடல் மட்டும் எஞ்சி அழிகிறது. இத்தகைய மெய்யறிவு திருக்குறளில் புலனாகிறது.

அளப்பரிய சிறப்புகளுடன் ஈடு இணையற்ற இலக்கியமாக உலவும், உலகப் பொதுமறையாகிய திருக்குறள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப் பட்டாலும், வியக்கத்தக்க சீரிளமைத் திறன் குன்றாமல் எப்பாவலரும் விரும்பும் குவலயம் போற்றும் முப்பால் ஒப்பற்ற ஒல்காப் புகழ் எய்திய காவியமாக இலங்கும் திருக்குறளுக்குப் பல்வேறு உரைகள்; எளிய உரை, தெளி வுரை, கருத்துரை முதலியன ஏராளமாக வெளியிடப் படுகின்றன. உரைகளை இயற்றல் மற்றும் அவைகளை வெளியிடல் தொடருகின்றன. பொதுவாக, பெரும்பான்மை யான உரை களில் புதுமை இல்லை. பரிமேலழகர் இயற்றிய பழம் உரையையே எதிரொளிக்கின்றன. திருக்குறளுக்கு உரை மூலம் பொருள் மட்டும் புகன்று, செய்யுளை எளிமையாக தெளிவாக சுருக்கமாக விளக்கும் பணி இந்நாள் தேவையையும் எதிர்பார்ப்பையும் நிறைவேற்றுமா? வாழ்வியல் அடிப்படையில், உலகியலுக்கு ஏற்ப திருக்குறள் கருத்துக் களை எளிமையாக, தெளிவாக விளக்கியும், வாழ்வியல் நடவடிக்கைகளுடன் ஒப்பிட்டு, மனித வாழ்வை மாமறைக் கிணங்க மாற்றிட வலியுறுத்தி உரைப்பதே நற்பயனை நல்கும் என்பதே பேராசிரியரின் விழைவாகும். குறளர் திருமால் திருவடியால் உலகையே முழுமையாக அளந்தார் என பழங்கதை பகருகிறது. ஒன்றே முக்கால் அடியில் உலகியல் வாழ்வை அறிந்து, அறிவுரைகளை உவமை நயத்துடன் உள்ளத்தில் உறுதியாக ஊன்றுமாறு உரைத்து உலகப் பொதுமறையை உருவாக்கிய திரு வள்ளுவர் மன்பதையை நெறிப்படுத்துகிறார்.

புராணங்கள், இதிகாசங்கள் பழம்பெரும்

இலக்கியங்கள், காவியங்கள் மற்றும் சமய நூல்கள் முதலியன எண்குணத்தானாகிய இறைவனைப் பல்வேறு வடிவங்களிலும் தோற்றங்களிலும் உருவகப்படுத்திய. உருவங்களும் சிலைகளும் பெருகப் பெருக வழிபாட்டு வகைகள் வளர்ந்தன. இறைநெறிகளை வழிபடுதல் புறக்கணிக்கப்பட்டன. 'மரத்தை மறைந்தது மாமத யானை; மரத்தில் மறைந்தது மாமத யானை(2290)' எனும் திருமூலர் வாக்கு வழிபடுதலை விலக்கி வழிபாட்டு முறைகள் பெருகிய இக்கால உலகியல் நடைமுறைக்கு முற்றிலும் பொருந்தும். தெய்வ மறையாகிய திருக்குறள் உலகியல் வாழ்வில் மனிதனை மையமாக அமைத்து, அம்மனிதனை தெய்வ நிலைக்கு உயர்த்தியது.

> **வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
> **தெய்வத்துள் வைக்கப் படும் (50)**

என்பது காண்க. இவ்வுலகில் அறநெறிகளுக்கேற்ப வாழத் தக்க முறைகளில் வாழ்பவன் தெய்வ நிலையை எய்தியதாக கருதப்படுவான் என உலகப் பொதுமறை உணர்த்துகிறது.

அண்மையில் வெளியிடப்பட்ட பல்வேறு உரை நூல்களில் திருக்குறளின் முதல் பதிகத் தலைப்புகள் பல்வேறாகக் குறிப்பிடப்படுகின்றன. பரிமேலழகர் உரையைத் தழுவி வெளியிடப்பட்ட உரைநூல்களில் உரையாசிரியர்கள் முதல் பதிகத்தை 'கடவுள் வாழ்த்து' என, குறிப்பிடுகின்றனர். பல்வேறுக் கோணங்களிலும் அணுகு முறைகளிலும் நோக்கும்போது, முதல் பதிகத்துக்கு இறை வழிபடுதல் எனும் தலைப்பே பொருத்தமாகும்; ஏற்புடையதுமாகும். இந்நூலில் 'கடவுள் உண்மை' என்னும்

இரண்டாவது பதிகத்தில் முதல் குறளின் விரிவான விளக்கம் அறிவியியல் அணுகுமுறையிலும் ஆன்மிகப் பார்வையிலும் அமைகிறது.

'வான்சிறப்பு' 'நீத்தார் பெருமை' 'அறன் வலியுறுத் தல்' மற்றும் 'வாழ்க்கைத் துணைநலம்' ஆகிய நான்கு பதிகங்களும் திருக்குறள் நூலின் மற்றும் 2,3,4 ஆகிய நான்கு பதிகங்களின் தலைப்புகளும் ஒத்தவை. உணவும் மருந்தும், மற்றும் நோயற்ற வாழ்வு ஆகிய முறையே 24 மற்றும் 27 ஆவது பதிகங்களில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளில் பொதுவாக வேறுபாடு இல்லை. 95 ஆவது பதிகமாகிய மருந்து என்னும் தலைப்பே கருப்பொருளாக அறியப்படு கிறது.

மழைநீர் அறுவடைக்காக வலியுறுத்தப்பட்ட அறிவுரைகள், அறிவிப்புகள், அறிவிக்கைகள், விளம்பரங் கள் மற்றும் செயல்விளக்ககங்கள் வெளியிடப்பட்ட காலத்திலும் இன்றும் மழைநீர் சேகரிப்புக்கு, வான் பொய்த்தமையால் வாய்ப்பு இல்லை. யாண்டும் வரட்சியே காட்சி. 'தண்ணீர், தண்ணீர்' என மக்கள் அலைகின்றனர். அல்லல்படுகின்றனர். உலக நடைமுறையில் ஆக்கமும், அழித்தலும் ஆகிய இருவேறு பணிகளை இருவர் நிறைவேற்றுவர். மழைப்பொழிவால் நாடு செழுமையாக வளமாகக் காணப்படும். மழைத்துளி வீழ்ச்சி இன்றி பசுமை மறையும். தேவையான அளவு மழை பொழியுமாயின் நிலம் வளம் பெறும். மாறாக அளவுக்கு மீறி, இடைவிடாது, தொடர்ந்து, நெடிது, மழை பொழியுமாயின் வெள்ளம் வீதிதோறும் தெருவெல்லாம் பெருகிப் பாயும். வீட்டினுள் புகும். கழனிகள் நீரில் மூழ்கும். பயிர்கள் பாழாகும். ஊரே

அழியும். மனித வாழ்க்கையே செயலற்று, உடைமைகளையும் உயிர்களையும் இழந்து மக்கள் இன்னலுக்குட்படுவர். கூரியக் கத்தியால் கனியை அறுத்து, அருந்தி, சுவைக்க இயலும். அதே கருவி மாற்றானுடைய கழுத்தை அறுத்துக் கொல்லவும் பயன்படும். தாய் துன்புறுத்தினாலும் குழந்தை 'அம்மா' என அலறி அன்னையை நாடி அணைக்கிறது ஈன்றாளும் தன்னருமை மழலையை அன்பால் ஆதரவளிக்கிறாள். நன்மையை நல்குவதும், தீமையை விளைவிப்பதும், விலக்குவதும், மழையே. ஒரே கருவி இருவேறு வினைகளை நிறைவேற்றுகிறது. ஆக்கலும் அழித்தலும் ஆகிய இருவேறு பணிகளை நிறைவேற்ற வல்லவன் இறைவனே. வானியக்கத்திலும் இறைமையும் தாய்மையும் ஒளிருகிறது.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை (15)

வான்பொய்ப்பின் மக்கள் வாழ்வை அழிக்க வல்லதும், வளம் குன்றி துன்புறுபவர்களுக்குத் துணையாக அமைந்து ஆதரவளிப்பதும் மழையே. மழைப்பொழிவு, இறைமை மற்றும் தாய்மை ஆகிய முக்கூறுகளிலும் திருக்குறள் விளக்கம் மூலம் நூலாசிரியர் ஒருமைப்பாட்டை உணருகின்றார்.

'இல்லாள்' எனும் சொல் 'வாழ்க்கைத் துணைநலம்' பதிகத்தின் ஒரு குறட்பாவில் மட்டும் குறிப்பிடுகிறது.

மனைமாட்சி இல்லாள் கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித்து ஆயினும் இல் (52)

'இல்' எனும் உயிரும் மெய்யும் இணைந்த ஈரெழுத்துச்

சொல் இத்திருக்குறளில் மூன்று இடங்களிலும் கடைசி இரண்டு 'இல்' எனும் சொற்கள் 'இல்லை' என்ற எதிர் மறைப் பொருளிலும் குறிப்பிடப்படுகின்றன. ஆனால் இல்லாள்கண் இணைந்த 'இல்' இல்லத்தைச் சுட்டுகிறது. இல்லாள் என்றால் இல்லத்தை ஆள்பவள், 'இல்லத்தரசி' 'வாழ்க்கைத் துணை' மரபு முறையில் 'மனைவி' என பொருள்படும். இல்லான் இல்லாளுக்கு இணையாக இயம்ப இயலாது. 'இல்லான்' என்றால் இல்லாதவன் என பொருள் படும். இல்லாளுக்கும் இல்லானுக்கும் இடையே அறியப் படும் வேறுபாட்டை தமிழறிஞர் ரெட்டியார் தெளிவாகத் தெரிவிக்கிறார்.

> ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச்
> சான்றோன் எனக் கேட்ட தாய் (69)

என்ற இத்திருக்குறளுக்குப் பேராசிரியருடைய விளக்கம் நெஞ்சத் தினுள் தஞ்சம் புகுகிறது. ஈரைந்து திங்கள் சுமந்து, பேறு நேரம் நெருங்கி, குழவி தாய் கருப்பையிலிருந்து வெளி யேறும்போது, ஏற்படும் உடலியல் நிகழ்வுகளை, உடற்கூறு மாறுபாடுகளை, தாய்சேய் நல மருத்துவர்போல் மூதறிஞர் விவரிக்கிறார். இத்துணை அறிவைத் தமிழறிஞர் எவ்வாறு ஈட்டி விளக்குகிறார் என்ற வினா எழுகின்றது. மகனைச் சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடன். கற்றவர்கள் குழுமிய அவையில் தன் மகன் முதன்மையாக சிறப்பாக விளங்கும் நிலைக்கேற்ப அவனை உருவாக்கி முன்னிலைப்படுத்தல் மகனுக்குத் தந்தை நல்கும் நன்மை என்று முப்பாலாசிரியர் மொழிகிறார். தந்தை செவிவழி மகனின் மாட்சிமையை அறியும்போது மகிழ்ந்து மனநிறை வெய்துகிறார். ஆனால் தாயின் எதிர்பார்ப்பு வேறு மது, மாது மற்றும் சூது

தொடர்புடைய தீயவைகளை மகன் தீண்டாது, ஒழுக்கத்தை உயிரென ஓம்பி, அறநெறி காவலனாக சான்றோனாக விளங்குகிறான் எனப் பிறர் தன்னை அணுகி, தன் மகனை பெருமையாகக் கூற அறிந்து அன்னை எய்தும் மகிழ்ச்சிக்கும் எல்லை இல்லை. கதை, கட்டுரை, கவிதை, காவியம், மற்றும் ஓவியம் முதலிய பலவகைப் படைப்புகளை இயற்றி, அவைவெளியிடப்பட்டு ஆக்கியோனை பாராட்டும் போது, ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாயைப் போல் படைப்பாளி தன் எதிர்பார்ப்பு நிறைவேறியதை எண்ணி மகிழ்ந்து மனநிறை வெய்துகின்றார். நூலாசிரியருக்கும் தாய்மை உணர்வு எதிரொளிக்கும் என்ற அரியதொரு கருத்தும் புதுமையாகப் புலப்படுகிறது.

'மக்கட்பேறு' பதிகத்தின் பத்துப் பாக்களுள் மூன்று மட்டுமே குறிப்பாக மகனுக்காகவும் எஞ்சிய ஏழும் மக்கள் என்னும் பொதுச் சொல்லில் அடங்கிய 'மகள்' மற்றும் 'மகன்' ஆகிய இருபாலாருக்கும் ஒதுக்கப்பட்டன. மக்கள் என்னும் சொல் ஆண் மற்றும் பெண் ஆகிய இரு பாலாரையும் குறிப்பிடும் என வலியுறுத்தப்படுகிறது. குழவிகள் மகனாகவோ, மகளாகவோ பிறக்கும் இயற்கை நிலைமைக்காகவும் கணவன் மனைவி இருபாலாராக இணைந்து, இயைந்து இணங்கி இல்லறத்தில் ஈடுபடும் வாழ்வியல் இன்றியமைக்காவும் மக்கள் என்னும் சொல்லே இருபாலாருக்கும் பொருந்தும். பெண்ணியத்தையும் பெண்ணின் பெருமையையும் பொய்யில் புலவர் போற்றுகிறார் என்பது மறுக்கப்பட இயலாத உண்மை என சிந்தனையாளர் முனைவர் சுப்புரெட்டியார் செப்புகின்றார்.

'வாழ்' என 'கருச்' சொல்லிலிருந்து 'வாழை'

என்னும் சொல் உருவாகிறது. வாழை பல்லாற்றானும் பலருக்கும் பயன்பட்டு, தன் மரபு அழியாமல் தொடர குலையைத் தள்ளி, கடமை நிறைவேறிய பின்பு வீழ்கிறது. மனிதன் மாய்ந்த பின்பும் உடலுறுப்புகள் பயன்படுத்தப் படுவதைப் போல் வீழ்ந்த வாழையும் பயன்படுகிறது. வாழையின் பயன்பாட்டுச் சிறப்பினையும் வாழ்வியலுடன் இம்மரம் எங்ஙனம் ஒப்பிடப்படுகிறது என்றும், வாழை வழங்கும் படிப்பினையும் திருக்குறள் மூலம் பேராசிரியர் வழங்கும் தெளிவான, விரிவான விளக்கம் வரவேற்கத் தக்கது.

அறத்துப்பாலில் 'இறைவழிபடுதல்' முதல் பதிகமாகவும் 'ஊழ்' இறுதி 38 ஆவது பதிகமாகவும் அமைகிறது. இறைமை, ஊழ்வினை ஆகிய இரண்டும் தனித்தன்மையும், வலிமையும் மிக்கது. ஆக்கமும் அழிவும், பீடும் கேடும், பிறப்பும் இறப்பும், வளமும் வறுமையும் வாழ்வும் தாழ்வும், வெற்றியும் தோல்வியும், ஊழின் ஆதிக்கத்தால் விளையும். அறிவு, அடக்கம் அமைதி, அவாவின்மை, இனிமை, ஈகை, உழைப்பு, ஊக்கம் எதிர்பார்ப்பு, ஏக்கம், ஒழுக்கம், பொறுமை, முயற்சி முதலிய அகவாழ்வின் கூறுகளில் ஊழின் ஊடுறுவல் இல்லை. மனவலிமையுடன் உள்ளம் உறுதியுடன் ஆர்வம் குன்றாமல் எழுச்சியுடன் முயன்று, வென்று, என்றும் ஏற்றத்தை எய்த இயலும்!.

> அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
> பெருமை முயற்சி தரும் (611)

ஒரு செயலை நிறைவேற்ற இயலாது என எண்ணும் எதிர்பார்ப்புக்கு மாறாக, மனச்சோர்வின்மை வேண்டும்.

இடைவிடாத முயற்சி செயலுக்குரிய சிறப்பை நல்கும்.

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்
தாழாது உஞற்று பவர் (620)

மனத்தளர்ச்சியும், சோர்வுமின்றி, இடைவிடாது தொடர்ந்து செயலில் ஈடுபடுவர் செயலுக்குத் தடையாக அமையும் தீவினையின் விளைவை தோல்வியுறச் செய்வர். மேற் காணும் இருதிருக்குறள்கள் மனித மேம்பாட்டுக்கு ஆதர வளித்தும், வாழ்வுக்கு ஆறுதலை வழங்கியும் ஊக்கு விக்கின்றன.

திருக்குறளை ஆழ்ந்து நுட்பமாகக் கற்கும்போது ஒரு சில கருத்துகளை முரண்பாடாகத் தென்படும் என ஒரு சிலர் கூறுவர். ஒரே கோணத்தில் ஒரு குறிப்பிட்ட நிலைமையில் திருக்குறளை நோக்கும்போது முரண்பாடு இயல்பாக எழுவதில் வியப்பன்று. முரண்பாட்டை நூலாசிரியர் சான்றுகளுடன் வன்மையாக மறுப்பது பாராட்டுதலுக்குரியது. திருக்குறள் நெறியை எக்காலத்தும் எவ்விடத்தும் எவராலும் வழிபட இயலும். இயலாமையால் தன்னலத் தாக்கத்தால் தூய்மை, வாய்மை, நேர்மை பொறுமை முதலிய பல்வகைப் பண்புகளை வழிபடத் தவறியவர்கள், திருக்குறள் நெறி இக்கால உலகியலுக்கு ஒவ்வாது எனப்புறக்கணித்து அஞ்சி ஒதுங்குவர். மனித வாழ்வு உய்ய, திருக்குறள் நெறியே ஏற்புடையது என்ற கொள்கைப் பற்றை உறுதியுடன் செயல்படுத்த விரும்புவரே, முரண்பாடான கருத்துகளிலும் மெய்யறிவை உணர்ந்து வாழ்க்கையில் உயர்வர்.

எண்களின் ஏற்றத்தை எளிமையாக விளக்கும்

நூலாசிரியர் தன் ஆசிரியர், அருள் தந்தை ஜெரோம் 'டி' சௌசாவை நினைவுகூர்கிறார். பல்லாண்டுகளுக்குப் பின்பு, அருள் தந்தை மாணாக்கனைச் சந்தித்தபோது Are you not subbu with number 306? என வினவிய நிகழ்ச்சியை நம்மவர் மறக்கவில்லை. மேலும் அருள் தந்தை ஆசிரியப் பெருந்தகையின் நினைவாற்றல் வியக்கத்தக்கது. திரு. சுப்புரெட்டியார் கல்லூரி இளநிலை அறிவியல் பட்ட வகுப்பில் பயிலும்போது வரிசை எண் 306. இம்மூன்று இலக்கங்களைக் கூட்டினால் (3+0+6=9) 9 எனும் எண் உருவாகும், 3,6,9 ஆகிய மூன்று எண்களும் மூன்றால் வகுபடும். இடைவெளியும் 3. இம்மூன்று எண்களுக்குள் ஒற்றுமையை அறிகிறோம்.

3. முப்பாலைக் குறிப்பிடுகிறது. நூலாசிரியர் திருக்குறளில் ஈடுபாடுடையர். இந்நூல் முப்பாலுக்குத் தொடர்புடையது.

6. ஆறு. நீரோட்டம் முன்னோக்கிப் பாயும். பேராசிரியர் முற்போக்கு எண்ண முடையவர் ஆறு - நெறி. அன்னார் திருக்குறள் நெறியை இயன்றவரையில் வழி படுவர். கூட்டு எண் 9 'ஒன்பான் மணிகள்' தங்கத்தாலான ஏடுகளில் கலைமாமணியின் வாழ்க்கை வரலாறு ஒன்பான் மணிகளால் பொறிக்கப்படத்தக்கது. மேன்மையான வாழ்க்கை யைத் தொடருகிறார். வளரும் தலைமுறைக்கு எடுத்துக் காட்டாக இலங்குகிறார்.

சுழியம் மூன்றுக்கு ஆறுக்கும் இடையே அமைந்த இலக்கம். பேராசிரியரின் முழுமையான, செழுமையான, வரன்முறைக்குட்பட்ட வாழ்வுக்கு ஒரு எளிய குறியீடு. வட்டவடிவமான சுழியத்துக்கு எல்லை உண்டு. ரெட்டியார்

தனக்கென நெறியை வகுத்து அவ்வரன்முறையிலிருந்து விலகாமல் வாழ்வாங்கு வாழ்கிறார். திண்ணமான எண்ணமுடைய கொள்கைப் பற்றாளர்.

பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர் (723)

போர்க்களத்தில் அஞ்சாமல் எளிமையாக இறப்பவர் பலர். கற்றோர் அவையில் அச்சமின்றி தயக்கமின்றி கருத்துகளை வெளியிட வல்லவர் சிறப்பாக சிலரே. விழுமிய சிலருள் முதன்மையானவர் ஈரோடு ஈன்ற இருபதாம் நூற்றாண்டு புரட்சியாளர் பெரியார் ஈ.வே.ரா என்றால் மிகையாகாது. திருக்குறளை ஊன்றிக்கற்றவர்கள் அனைவரும் தன்மானத்துடன் வாழ இயலும் என உரைத்தவரும் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட வருக்காகவும் பிற்படுத்தப் பட்டவருக்காக வும் குறிப்பாக பார்ப்பாரல்லாத மக்களுக்காவும் போராடியவரும், பகுத்தறிவுப் பகலவன் எனப் பாரெங்கும் பாராட்டப்பட்டவரும் நம் சிந்தையை ஈர்த்த திராவிடத் தந்தை பெரியார் ஈ. வேரா. அவர்களை மேற்காணும் திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாக, உவமையாக நூலாசிரியர் குறிப்பிடுகிறார். அச்சமின்றி, தடையின்றி, தயக்கமின்றி துணிவுடன் பொதுமேடைகளில் தம் சிந்தனையில் விளைந்த கருத்துகளை தெரிவிக்கும் தனித்தன்மைக்கு உரியவர் பெரியார் ஒருவரே. இறையருளில் ஈடுபட்டு, ஆன்மிக நெறியில் வாழும் பொதுமறைச் செம்மல் சுப்புரெட்டியார் கடவுள் எனக் கருதப்படுவது உயர் பண்பே உருவம் அன்று என உரைத்த, புதுமையான புரட்சிக் கருத்துகளை புகன்ற பெரியாரின்மீது மதிப்பும் மரியாதையுமுடையவராக நூலாசிரியர் விளங்குவதால் பேராசிரியரின் பெருந்தகை

மையும் பெருந்தன்மையும், பாராட்டத்தக்கன. மூதறிஞர் ஆயிரத்தில் ஒருவர் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர்.

'திருவள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்' தமிழ் கூறும் நல்லூலகத்துக்குப் புதுவரவு. எம் போன்ற எளி யோருக்கு உரிய நூல். பேராசிரியரின் எழுத்தாற்றல் ஆய்வாளர் களுக்கும், திருக்குறள் ஆர்வலர்களுக்கும் பயனை நல்குவ தாகுக. 'புத்தன்' என்றால் அமைதி, 'இயேசு' என்றால் அன்பு, 'காந்தி' என்றால் எளிமை மற்றும் உண்மை பேரறிஞர் அண்ணா என்றால் கடமை, கண்ணியம் மற்றும் கட்டுப்பாடு முதலிய நிரலுக்கேற்ப, பேராசிரியர் முனைவர் சுப்புரெட்டியார் என்றால் சிந்தனை ஊற்று என இந்நூல் மெய்ப்பிக்கிறது. தமிழ் மக்கள் இந்நூலை வரவேற்பர்.

என்கெழுதகை நண்பர் பெரியவர், முனைவர் மூதறிஞர் சுப்பு ரெட்டியார் நோயின்றி நூறாண்டுகள், உடல் நலத்துடனும் மனவளத்துடனும் வாழ்ந்து தமிழ்ப்பணியை தொடர வாழ்த்துக்கள்.

அன்னாருடைய அரிய நூலுக்கு அணிந்துரை வரைய வாய்ப்பை வழங்கிய மூதறிஞருக்கு என் நன்றி கலந்த பாராட்டுக்களை நவின்று மகிழ்கிறேன்.

குறளகம்
அறிஞர் அண்ணாநகர்
சென்னை - 40
25.3.2004

இவண்
அன்புடன்
பாஸ்கரன்.

நூல் முகம்

இருக்கினும் நிற்கும் போதும்
    இரவுகண் துயிலும் போதும்
பொருக்கென நடக்கும் போதும்
    பொருந்திஊண் துய்க்கும் போதும்
முருக்கியல் கனிவா யாரை
    முயங்கிநெஞ்சு அழியும் போதும்
திருக்களா உடைய நம்பா !
    சிந்தைஉன் பால தாமே [1]

- அதிவீர ராம பாண்டியனார்

பள்ளி, கல்லூரிகளில் ஆசிரியர்கள் மூலம் கற்ற சில குறள்களைத் தவிர திருக்குறளை முறையாகக் கற்கத் தொடங்கியது 1939-இல். 'ஓதற் கெளிதாகி உணர்தற் கரிதாகி' இருக்கும் குறட்பாக்களை அசை போட்ட வண்ணம் இருந்தேன். எந்த நூலைப் படித்தாலும் அப்போதெல்லாம் கூட குறட்பாக்கள் அடிக்கடித் தலைகாட்டிக் கொண்டே இருக்கும்.

2001-இல் 'திருக்குறள் தெளிவு' என்ற நூல் வெளியிட்டேன். அது தொடங்கி அவ்வப்போது தோன்றும்

1. திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி - ம2.

வாழ்வுபற்றிய சிந்தனைகள் வள்ளுவர் பெருமான் கருத்தின் அடிப்படையில் சிறு சிறு கட்டுரைகளாக உருவம் பெற்றன. சில சமயம் தனிக்குறட்பாவும் சிந்தனையில் இடம் பெற்று விளக்கம் அடையும். அவையும் சில விளக்கக் கட்டுரைப் போல் இடம் பெற்றன. இவ்வாறு கிடந்த முப்பத்தாறு சிறுசிறு கருத்துக் கோவைகளை ஒருநாள் எடுத்துத் தொகுத்து நோக்கினபொழுது அவை நூல் வடிவம் பெற்று நாட்டில் உலவினால் பலருக்குப் பயன்படக் கூடும் என்று எண்ணிய எண்ணமே இந்த நூல் வெளிவரக் காரணமாயிற்று.

பல அரிய நூல்களைப் பதிப்பித்து வேகமாக முன்னேறி வரும் திருமதி R. தேவகி அவர்களை உரிமை யாளராகக் கொண்ட அவ்வை பதிப்பகம் இந்த நூலின் படியை அன்புடன் ஏற்று பதிப்பித்து தமிழ்கூறு நல்லுலகில் நடையாட விட்டமைக்கு என் இதயங்கலந்த நன்றி என்றும் உரியது.

இந்த அரிய நூலுக்கு அரியதோர் அணிந்துரை வழங்கியவர் பேராசிரியர் பாஸ்கன் (வயது 70) (பிறப்பு 1-3-1934) பௌதிகம் பி.எஸ்சி., பி.எஸ்சி , எம்.எஸ்சி., எம். ஃ.பில்., மற்றும் பி.டி., எம்.எட்., ஆகிய பட்டங்களைப் பெற்று கலைக் கல்லூரி கல்வியியல் கல்லூரி, பொறியியல், மருத்துவ, கால்நடைக் கல்லூரிகளில் பேராசிரியராக, முதல்வராக, பதவி உயர்வு; இறுதியாக கல்லூரிக்கல்வி இணை இயக்குநராகப் பணியாற்றி அகவை முதிர்வினால் பணியிலிருந்து விலகினார்(1992).பின்பு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் போன்றவற்றில் பல்வேறு நிலைகளில் திருக்குறள் கருத்துகளைப் பரப்புவதில் தம் வாழ்க்கைப்

பணியாக அழைத்து தொண்டாற்றியவர். உலகப் பொதுமறையான திருக்குறளுக்காகத் தனியொரு நூலகம் (1000 ச.அடி அளவுள்ள இடத்தில்) நிறுவி, ஆண்டு விழாக்கள் கொண்டாடியும், கட்டுரைகள் எழுதியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் திருக்குறள்நெறியை மிக்க ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் பரப்புகிறார். இத்தகைய பேரன்பரிடம் திருக்குறள் பற்றிய இந்த நூல் அணிந்துரை பெற்றது இந்நூலின் தனிச்சிறப்பும் பேறுமாகும். இராமசேதுப் பணியில் ஒரு சிறு அணில் ஆற்றிய தொண்டுபோல், தமிழ் மறைக்கருத்துகளைப் பரப்பிவரும் அடியேனின் பேறும் ஆகும் என்பது மிகையன்று. அணிந்துரை பெற்றது திருக்குறள் தொண்டருக்கு என் இதயங்கனிந்த பாராட்டுக் கள். நன்றியையும் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

குஜராத் உயர்நீதிமன்றத் தலைமைநீதியரசர் (ஓய்வு) பி.ஆர். கோகுலகிருட்டிணனை அறியாதவர்களே இரார். இவர் தம்மாணாக்கப்பருவம் முதலே தமிழார்வம் மிக்கவர். தமிழ் முனிவர் திரு.வி. கல்யாணசுந்தர முதலியார் (திரு.வி.க) மீது அளவற்ற மதிப்பும், மரியாதையும் கொண்டு மாணாக்கப் பருவத்திலேயே 'மணவழகர் மன்றம்'[2] நிறுவி அதன் ஆதரவில் இன்று வரை பல்வேறு இலக்கியக் கூட்டங்களை நடத்திவருபவர். இதனைத் தவிர பல்லாண்டுகளாக இயல், இசை, நாடக மன்றத் தலைவராகவும், பல்லாண்டுகளாக விக்டோரியா இன்சிடியூட் (பழம் பொருள் கிடைக்கும் இடம்) தலைவராகவும் பணியாற்றி வருபவர். இதனால் இவர்தம் கலையார்வத்தை நன்கு அறிய முடிகிறது.

தமிழ்ப்பற்றும் சமயச் சிந்தனையும் அவர்

2. மணம் - கல்யாணம்; அழகர் - சுந்தரர்; மன்றம் கழகம்.

மேற்கொண்டிருந்த நீதித்துறைப் பணியைச் 'சமன் செய்து சீர் தூக்கும் கோல்' போல் (குறள் -118) மனத்தூய்மையுடன் நிறைவேற்றச் செய்தவர் என்பது அடியேனின் கணிப்பு. மேலும் இவையே சென்னைப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்தத்துறை, வைணவத்துறை இவற்றை நிறுவச் செய்தமைக்கு உந்து விசையைத் தந்தது. துறையொன்றுக்கு இருபது இலட்சம் ரூபாய் வீதம் நன்கொடைகள் மூலம் திரட்டி வழங்கித் துறைகளை உருவாக்கினார். இவர்தம் வழியைப் பின்பற்றியே சைனத்துறை, கிறித்துவ சமயத் துறை, கிறித்தவ இலக்கியத்துறை, அண்ணா பொதுவாழ்வியல் துறை போன்றவைகள் தோன்றின.

என் வாழ்வில் நல்லோர் இணக்கம் இறைவன் திருவருளால் ஏற்பட்டது என்பது என் துணிவு. அரசியல் அறிஞர்கள் ஓரிரு நல்லவர்களின் இணக்கத்தைத் தவிர பெரும்பாலும் நீதியரசர்களின் இணக்கமே அதிகமாக ஏற்பட்டது என் நல்லூழே காரணமாக அமைந்தது. நீதிஅரசர்களிலும் அதிகமாக இணக்கம் ஏற்பட்ட நீதி அரசர் பி. ஆர். கோகுலக் கிருஷ்ணன் அவர்கள். இவர் சென்னை நீதி மன்றத்துத் தலைமை நீதிபதியாக இருந்தபோது (1981) சோழநாட்டுத்திருப்பதிகள் (இரண்டாம் பகுதி) என்ற நூலுக்கு அணிந்துரை நல்கிச் சிறப்பித்தார். குஜராத் நீதிமன்றத்திலிருந்து ஓய்வு பெற்றபின் (2002) 'சைவமும் தமிழும்' என்ற நூலுக்கு அணிந்துரை வழங்கிப் பாராட்டி வாழ்த்து கூறினார். வள்ளுவரின் 'நடுவுநிலைமை' தவறாது நீதித்துறையில் பணியாற்றிய இப்பெருமகனருக்கு 'வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்' என்ற என் அரிய நூலை அன்புப் படையலாக்கி உளம் பூரிப்பு அடைகின்றேன்.

இவரது ஆசியால் இந்த நூல் தமிழ் கூறு நல்லுலகம் எல்லாம் உலாப் போந்து மக்களை நல்வழியில் உய்க்கப் பணிபுரியும் என்பது என் அதிராத நம்பிக்கை.

இந்நூல் வெளிவருதற்கு முதற்காரணமாக இருந்தது சிவபரம் பொருள். அதனை நினைந்து அமைகின்றேன்.

சிறக்கத் தக்கது கருவையான்
　　திருவடி நேயம்!;
மறக்கத் தக்கது மற்றுள
　　சமயத்தின் மயக்கம்!;
துறக்கத் தக்கதுஇவ் உடம்பை, யான்
　　என்னுறு தொடர்பு!;
பிறக்கத் தக்கது சிவானந்த
　　வாரியின் பெருக்கே.[3]

\- அதிவீரராம பாண்டியனார்.

'வேங்கடம்'
AD - 13, அண்ணாநகர்,
சென்னை - 600 040.
25-3-2004

அடியேன்
ந. சுப்புரெட்டியார்.

---

3. இருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி - 89.

உள்ளுறை

அன்புப் படையல் iii
அணிந்துரை iv
நூல் முகம் v

1.	தோரணவாயில்	1
2.	கடவுள் வாழ்த்து	6
3.	வான்சிறப்பு	19
4.	நீத்தார் பெருமை	23
5.	அறன் வலியுறுத்தல்	28
6.	வாழ்க்கைத் துணைநலம்	37
7.	தாயும் நூலாசிரியரும்	42
8.	மக்கள் செல்வம்	48
9.	வாழைநல்கும் படிப்பினை	56
10.	நன்றி மறவாமை	58
11.	வாழையும் வள்ளுவமும்	66
12.	ஈத்துவக்கும் இன்பம்	73
13.	அறிவியல் நோக்கு	79
14.	மழித்தலும் நீட்டலும்	86
15.	ஊழ்	89
16.	எண்ணும் எழுத்தும்	101
17.	செவியுணவு	109

18. பெரியாரின் துணை	115
19. பணியாளர் தேர்வு	120
20. நாகரிக ஏணி	125
21.பேச்சாற்றல்	133
22. அவைக் குறிப்பறிதல்	137
23. பணப் பெருக்கம்	141
24. உணவும் மருந்தும்	148
25. பெரியாரை மதித்தல்	154
26. ஆக்கம் கருதி முதல் இழத்தல்	160
27. நோயற்ற வாழ்வு	165
28. மானமிகு வாழ்க்கை	172
29. பண்புடையார் உலகம்	178
30. ஏர்ப்பின்னது உலகம்	181
31. நோயும் மருந்தும்	187
32. இனிய இன்பம் எது?	190
33. எது இனியது - சிற்றின்பமா? பேரின்பமா?	192
34. ஊடலும் கூடலும்	195
35. மாலை அலரும் நோய்	202
36. மலரினும் மெல்லிது காமம்	209
37.முடிப்புரை	211

பின்னிணைப்பு

பயன்பட்ட நூல்கள்	216

1. தோரணவாயில்

வள்ளுவர் பெருமான் படைத்தருளிய **திருக்குறள்** ஒருமறைநூல், அதுவும் பொதுமறைநூல்; மேலும் உலகில் பொதுமறை இத்தகுதிகளுக்கேற்ப அதன் அமைப்பு பல சிறப்புகளுடன் அமைந்துள்ளது. நூலின் பெயர்களுள் ஒன்றாகிய **'பொதுமறை'** என்றுள்ளதே ஒரு தனிச்சிறப்பு.

ஒருநூல் தோன்றிய காலத்தில் சிறப்புடன் போற்றப் பெறலாம். அதன் பயனை நோக்கிக் காலம் போகப் போக மக்களின் குறிக்கோள்கள் மாறுவதால் நூல் அவற்றிற் கேற்பப் பயன்படாததால் அதன் சிறப்பு குறைந்து கொண்டே வரும். பொதுவாக மன்பதைக்கு நூற்றுக்கு நூறு பயன்படத் தக்கனவாக, எல்லாக் காலத்திற்கும் பயன்படத்தக்கனவாக அமைந்த கருத்துகளைக் கொண்டு ஒரே நூலாக அமைந் திருப்பதால் அது இன்றளவும் சிறப்புடன் போற்றப் பெறுகின்றது; காலந்தோறும் போற்றப் பெறும் என்பதற்கு யாதொரு ஐயமும் இல்லை.

வாழ்வது எல்லா மனிதர்க்கும் பொது; ஆதலால் வாழ்க்கை விளக்கங்களும் பொதுவாக அமைதல் வேண்டும். நாடு, இனம், மதம், நிறம்,மொழி முதலிய பிரிவுகளை யெல்லாம் கடந்து எக்காலத்திற்கும் பொருந்துவனவான கருத்துகளைக் கொண்டு இயங்கும் ஒரே நூல் இது.

மனிதனின் வாழ்நாள் குறுகியது; இதில் பிணிகளும் முயற்சிகளும் பல. ஆதலால் கற்கத் தக்கவை மட்டும் கற்றால் போதுமென்பதும், கற்றவகையில் உடனுக்குடன் செயலுறு தல் மிகுதியாயிருக்க வேண்டும் என்பதும், செயலுறுதலின் முகமாகத் தெளிவு மேம்பட்டுக் கொண்டு வருதலே மேன்மேலும் கற்றலாகும் என்பதும் அப்பெருமானின் கருத்தும் குறிக்கோளும் ஆதலால் அவற்றிற் கேற்ப நூலின் சுருக்க அமைப்பும் அமைந்துள்ளது.

(1) நூல் மிகச்சுருக்கமான குறள் யாப்பில் அமைந்து அதன் அதிகாரம் ஒவ்வொன்றும் சுருங்கிய அளவு எனப்படும் பதிகமாகவே அமைந்துள்ளது. இவற்றுடன் இயலும் பாலும் நூலுக்கெல்லாம் சுருங்கிய அளவிலேயே அமைந் துள்ளன.

(2) அதிகார அமைப்பும் அற்புதம். எல்லா அதிகாரங்களும் அளவு ஒத்துப் பத்துப் பத்துக் குறட் பாக்களையே கொண்டிருப்பது.

(3) அதிகாரக் கருத்துகள் எவ்வளவாக இருந்தாலும் அவை பத்துக் குறள்களின் மூலமே சுரந்து வெளிப்படும் முறையில் பாக்கள் அமைந்துள்ளன.

(4) கருத்துகள் பலவாயினும் அவற்றைப் பத்து முறைகளால் ஒவ்வோரதிகாரத்திலும் எடுத்துக் கூறுதல் அற்புதம்.

(5) பாக்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் அமையும் எளிமையும் பத்தின் முறையே என்பதும் சிறப்பு.

(6) நெட்டுருச் செய்து நினைவுகூர்வதற்கு அதிகாரந்தோறும் ஒரே அளவாய் இருத்தலும் சிறப்பாகும்.

நவில் தொறும் நூல்நயம் (283)என்னும் அருமைக்கு சிறப்பாகப் பொருந்துகிறது. ஓர் அதிகாரத்தின் பத்துக் குறள்களில் பத்துக் கருத்து மட்டுமே வருவன அல்ல; பல வருகின்றன. கூறிய குறட்பாவில் அவை பலவும் சுரந்து தோற்றிக் கொண்டுள்ளன.

ஒவ்வோர் அதிகாரக் கருத்தையும் பத்து வகைகளில் ஆராய்ந்து மன்பதைக்குத் தெளிவை வழங்கியுள்ளார். எல்லோரும் நன்முறையில் வாழவேண்டும் என்ற நல்லெண்ணத் துடன் கையாண்டிருக்கும் விரகுகள் நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து நன்றியுடன் பாராட்டுதற்குரியன.

மன்பதைக்கு இன்றியமையாத் தேவையாக இருப் பவை திருக்குறள் கருத்துகள். வையத்துள் வாழ்வாங்கு வாழ (50) வழிகாட்டுபவை. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வையத்தில் பிறந்துவிட்ட மாந்தர்களின் கடமை இங்ஙனம் வாழ்தல் என்பது முன்பிறவியின் வினைவு தெளிந்து மறுமையின் ஆக்கத்தைக் காரண காரியத்தில் உணர்ந்து, அவ்விருமைக்கும் ஏற்ப, இப்பிறவியில் அறத்தாற்றின் நிலைகுன்றாமல் சான்றாண்மையுடன் வாழ்தலையே உணர்த்து 'இருமை' வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார் பெருமை' யையே (23) திருக்குறள் விரும்புகின்றது. 'இருமை' என்றது முற்பிறவியையும் பின் மறுபிறவியையும் குறிக்கும்; 'ஈண்டு'என்றது. இம்மையாகிய நிகழ்காலத்தைக் குறிக்கும். 'அறம்' என்றது அறத்தாற்றை உணர்த்தும். 'அறத்தொடு நிற்றல்'தான் வாழ்வாங்கு வாழ்தல் என்பதாகும்.

'வாழ்க்கை' என்பது ஆண்மை பெண்மையின்

கூட்டுறவில் தொடங்கி அதன் நடைமுறைக்காகப் புறத்தில் செல்வம் திரட்டல் நிகழ்தலின் புறம் என்பது சிறப்பாகப் பொருளீட்டலையே குறிக்கும்.

'அகம்புறம்' என்னும் இவ்விரண்டும் ஆண் பெண் உணர்ச்சியில் நிகழ்வன. ஆயினும் இன்பத்தில் அவ் வுணர்ச்சி அகத்தளவிலும், பொருளில் அவ்வுணர்ச்சி புறநிலையிலும் நிகழ்வதனால், அகப்புறம் என்பன சிறப்பாக அவ்விரண்டை யும் குறிக்க நேர்ந்ததாயினும் அவ்விரண்டும் நிலையாமையாய் இருத்தலின் அவ்விரண்டிலும் அவர்கள் அறத்தோடு நிற்க முற்பட்டனர். அறத்தொடு நிற்றலின், தொடக்கத்தில் ஆண் பெண் உணர்ச்சி நிகழ்ந்தாலும் அதன் இறுதியில் அற்றுப் பொதுவாக உயிர்கள் என்னும் அளவில் அவர்கள் பின்பற்றித் திகழ்வார்கள். அந்நிலையில் கிழவனும் கிழத்தியும் பேரா இயற்கையாகிய (370) வீடுபேற்றினை எய்துவர்.

இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு (374)

என்ற வள்ளுவர் பெருமானின் வாக்கின்படி அகம், புறம் இரண்டும் 'திரு' என்றும்; அறமும் வீடும் அமையும் நிலையில் ஆண் பெண் இருபாலாரும் பாலுணர்ச்சி நீங்கித் தெள்ளி யராவர் என்றும் மாற்றம் அடைவதை அறிந்து கொள்ளலாம்.

இன்பம் என்பது பாலுணர்ச்சியோடு கூடிய அகம் என்றால், அறமும் வீடும் பாலுணர்ச்சி குன்றியும் அற்றும் திகழும் மிக நுணுகிய அக நிலைகளாகும். ஆயினும், பாலுணர்ச்சியில் இவை சேர்வதில்லையாதலின், அதற்குப் புறமாயின. ஆகவே பாலுணர்ச்சி இன்பம் 'அகம்' எனவும் செல்வம் 'புறம்' எனவும் சொல்லுவதே சிறப்பு !

உயிர் உணர்ச்சிகளாகிய இவ்விரண்டுக்கும் அப்பாற் பட்டதாய், கடந்த தாய், இவ்விரண்டையும் நெறிப்படுத்து வதாய் உள்ளதே அறம் என்பதும், அதன் பயனாகிய 'வீடு' என்பதும் தெய்வ நிலைகள்; செல்வத்துச் செல்வங்கள். செல்வம் 'புறம்' எனப்பட்டதனால், செல்வத்துச் செல்வமாகிய அறம் வீடு என்னும் அருளியல்புகளும் புறம் எனப்பட்டனவேயன்றி வேறில்லை. மற்று அறமும் வீடும் 'அகத்துள் அகம்' என்பதே தெளிவுக்குரியது.

'அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல் ' என்றது அறத்தொடு நிற்றலை உணர்த்தும். அறநிலையை மேற்கொண்டு சிறந்ததாகிய வீடுபேற்றுக்குப் பழகுதல் என்பது இதன் கருத்து. இதில் தலைவன் தலைவி இருவரும் கூறப்படுதலின் மாதர்க்கு வீட்டு நிலை கூறாத சிலருடைய கொள்கை போன்றவை, தொல்காப்பியக் கொள்கையல்ல என்பது தேறி உணர்தற்குரியது.

இவ்வாற்றால் தமிழ் மொழியில் கூறப் பெறுவன அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற் பொருள்களுமே எனவும், அவற்றின் பாலுணர்ச்சியோடு கூடிய வாழ்க்கைத் தொடக்கமாகிய பொருள்வழி இன்பம் என்பதிலிருந்தே அறநெறி கூறத் தொடங்கிப் பாலுணர்ச்சி குன்றிய அறத்தையும் வீட்டையும் உணர்த்தும் முக்கிய பொருட் பேறுடையதாகித் தமிழ் திகழ்கின்றது! ஆதலால் தமிழ் என்பது அறமேயாதல் தெளிந்து துணியப்படும்.

---

1. தொல். பொருள். இளம்பூரணம்

2. கடவுள் வாழ்த்து

வள்ளுவர் பெருமான் சிந்தித்து, சிந்தித்து அந்தச் சிந்தனைகளின் அடிப்படையில் தமது நூலை 'திருக்குறள்' என்னும் தமிழ் மறையை அமைக்கின்றார். அந்த அரிய வான்மறை இயற்கை நுட்பங்களை யொட்டியே உலகியல் வகையில் வாழ்க்கை இயலாக அமைகின்றது. இயற்கை யுலகம் அண்டம்' எனவும் 'பிண்டம்' எனவும் இருவகையில் இயக்கம் கொண்டுள்ளது. அண்டத்திலுள்ள நலங்களைப் பிண்டங்கள் பெற்று உயிர் வாழ்க்கைக்கு உதவுகின்றன.

மண், நீர், தீ, காற்று, வானம் என்பவை எல்லார்க்கும் தெரிய மிகவும் பருமனான இயற்கைப் பொருள்கள். இவற்றின் கூட்டே அண்டமாகவும் பிண்ட மாகவும் உள்ளது.

அண்டங்கள் ஒன்றையொன்று அண்டிக் கொண்டிருக்கின்றன. கதிரவன் என்னும் அண்டத்தைப் பூமி, செவ்வாய், புதன் முதலான எத்தனையோ அண்டங்கள் அண்டிச் சுழன்று கொண்டுள்ளன. அங்ஙனமே வானத்தில் காணப்பெறும் எண்ணிக்கையில் அடங்கா அண்டங்கள் விண் மீன்கள் எனப்படும் அண்டங்களெல்லாம் ஏதோ ஓர் இயைபில் ஒன்றையொன்று நெருங்கி அதாவது அண்டிச் சுழன்று கொண்டுள்ளன.

அண்டங்கள் ஒன்றோடொன்று அண்டிக் கொண்டிருப்பது போலவே அவற்றினின்றும் பிண்டுவந்த

பிண்டங்களும் அண்டங்களோடு தொடர்புற்றிருக்கின்றன. அண்டிக் கொண்டிருப்பதால் 'அண்டம்' எனவும், அண்டத்தின் இயற்கைப் பொருள்களினின்றும் 'பிண்டு' தனிப்பட்டு உருவாகி இருப்பதால் 'பிண்டம்' எனவும் பெயர் பெற்றன.

இங்ஙனம் உலகியற்கையானது அண்டபிண்டங்களாக அமைந்திருப்பதற்கு ஏதாவது 'காரணம்' இருக்க வேண்டும். அண்டம் என்னும் உலகுகளின் நலங்களைப் 'பிண்டம்' என்னும் உடம்புகளின் புலன்கள் ஏற்று உயிர் வாழ்க்கைக்கு உதவுதலே காரணமாதல் வேண்டும்.

அண்டபிண்டங்கள் அத்தனையும், நிலம், நீர் முதலிய ஐந்து இயற்கைப் பொருள்களாலும் நுட்ப மூலங்களாலும் அமைந்தவை. நுட்பமூலங்கலாவன சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐவகை நுண்பொருள்கள்; இவற்றைத் தந்மாத்திரைகள் என்று சாத்திரங்கள் சாற்றும். சுவையிலிருந்து நீரும், ஒளியிலிருந்து தீயும் ஊறு என்பதிலிருந்து காற்றும், ஓசை என்பதிலிருந்து வானும், காற்று என்பதிலிருந்து மண்ணுமாக ஐம்பூதங்கள் தோன்றும் எனவும் அவை விளக்கும்.

பிண்டத்தின் நுட்பங்களை அறிதல், அண்டத்தின் நுட்பங்களை அறிதலைவிட மேலானது. காரணம் பிண்ட நுட்பங்களின் மூலமாகத்தான் அண்ட நுட்பங்களை மக்கள் அறிய வேண்டும். அதோடு அண்ட நுட்பங்களின் வகைகளை அறிந்து கொள்ளும் வாய்ப்பு அப்பிண்டத் திலுள்ள உயிர்கட்கு எளிதில் இயலும். அதிலும், மாந்தரின் உடம்புகள், உலகியல் நுட்பங்களை அறிந்து கொள்வதற்குப் பின்னும் எளிதாக உள்ளன. மற்ற உயிர்களின் பிண்டங்களை விட மாந்தர் உடலாகிய பிண்டங்கள் மாந்தரின் சிறப்பு அறிவு நிலைக் கேற்றபடி இயற்கையமைப்புகள் பொருந்தியுள்ளன.

இந்த இயற்கையமைப்புகளில் மண், நீர் முதலிய அறியாமைப் பொருள்களையும், சிற்றறிவுடைய உயிர் களாகிய அறிவுப் பொருள்களையும் உடையதாய் இருப்பதை இயற்கையை ஆராயும் எவரும் எளிதில் அறிந்து கொள்வர்.

இதற்குமேல் இந்த அறியாமைப் பொருள்களையும் அறிவுடைய உயிர்களையும், உடம்பும் உலகமுமாய் ஒன்று சேர்த்து இயங்க விட்டவர் யார்? ஏன்? என்னும் எண்ணங்கள் அறிவுடையோர்பால் இயல்பாக எழும். ஏனென்றால் அறிவுப் பொருள் இல்லாமல் எந்த அறியாமைப் பொருளும் இயங்கு வதில்லை; உருவாவதில்லை.

மேலும் ஆய்ந்து முடிவு காணும்போது இவற்றிற்கு இயல்பாகவே, பேரறிவிற் சிறந்த தலைவன் ஒருவன் இருக்கவேண்டும் என்னும் துணிவு ஏற்பட்டு விடும். அதற்கு மேல் அந்தத் தலைவனுடைய இயல்புகள் எப்படி இருக்கும்? அவற்றால் சிற்றறிவுடைய உயிர்கட்கு எப்படிப் பயன் உண்டாகின்றது? என்றெல்லாம் தெளிவுகளும் பிறக்கும்.

இந்த உண்மைகளை விளக்குவதற்கு வேறு பல உண்மைகளைத் தேடினார் வள்ளுவ பெருமான். இறுதியில் 'அ' என்னும் 'அகரம்' அவர் தம் சிந்தையில் எழுந்தது.

மனித உடலில் அற்புதமாக அமைந்திருக்கும் ஓர் உறுப்பு அவன் தொண்டையில் அமைந்திருக்கும் குரல் நாண் (Vocal cord). இது குருதியோட்டம் இல்லாதது. இதிலிருந்து பிறக்கும் ஒலியே உலகிலுள்ள பலமொழிகளாக வளர்ந்து உலக நாகரிகத்திற்குத் தாயகமாக விளங்குகின்றது. இந்த ஒலிகளுள் சிறந்தது 'அ' என்ற அகரம் ஆகும். வாயைச் சிறிது திறந்தவுடன் இயல்பாகப் பிறக்கும் முதல் ஒலி அது. அதுவே

பின்னர் மூச்சை இயக்கும் வகையாலும் நா, இதழ் முதலியவற்றைப் பலவாறு மாற்றி இயக்குவதாலும் ஆ, இ,க முதலிய பல ஒலிகள் பிறக்கின்றன. இவற்றின் தொடக்கத்தில் அடிப்படையாக அகர ஒலி இருப்பதோடு அல்லாமல் அது இவற்றில் எல்லாம் கலந்தும் நிற்கின்றது. இதனை நன்கு உணர்ந்து தெளிந்த வள்ளுவர் பெருமான் கடவுளுக்கும், உலகிற்கும் உள்ள தொடர்பு இத்தகையதே என்று குறிப்பிட்டுச் சிறப்பித்தார். உலகம் கடவுளையே முதலாகக் கொண்டுள்ளது. இதனை எண்ணியே கீதையிலும் கண்ணபெருமான் 'நான் அகரமாக இருக்கின்றேன்' என்று சொல்லிப் போந்தார்.

அறிவுடைய உயிர்கள் உலக இயற்கையில் ஆண், பெண் என இருபாலாக எல்லா உயிர்வகைகளிலும் இருப்பதனால், மூலமான முதற்கடவுளாகிய பேரறிவுப் பொருளும் ஆண் பெண் இயல்பில் அம்மையப்பராகவே இருக்க வேண்டும் என்னும் தெளிவும் ஏற்பட்டுவிடும்.

இந்த இயற்கை நுட்பங்களையெல்லாம் நன்கு உணர்ந்து தெளிந்த வள்ளுவப் பெருமான்,

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. (1)

என்ற முதற்குறளால் விளக்கினார். இதில் உவமையைப் பன்மையாகக் கூறி கருத்தை ஒருமையாகக் காட்டி இருப்பது போல அமைந்துள்ளது. உலகங்கள் பல என்பதையும் அது விளக்கிக் கொண்டுமுள்ளது. உலகம் வான்வெளியில் பலவாக உள்ளன என்று முன்னும் புதுமை அன்று; இந்த அறிவியல் காலமாகிய பின்னும் (இன்று) புதுமை அன்று.

உவமைகள் கருத்துவிளக்கத்திற்காக மட்டும் வருவதல்ல. பல கருத்துகளை ஆசிரியர்கள் ஓர் உவமையின்

வாயிலாகத் தொகுத்துரைத்தலும் உண்டு. 'எழுத்தெல்லாம்' என்று உவமையில் வந்ததனால், கருத்தில், 'உலகு' என்னும் சொல் உலகெல்லாம் என்றுதானே பொருள்படும்! அப்படியானால் 'முதற்று' என்னும் ஒருமை வினைமுற்று அங்கே பொருந்தாது. 'முதற்றே' என்னும் சொல் முதற்று + ஏ என்று பிரிக்கப்படுதலும் அதனால் பொருந்துவதில்லை. 'முதல்+தே' என்று பிரிப்பதானால், எடுத்துக்காட்டிய பன்மைக்குப் பொருந்தும். உலகுகள் எல்லாம் ஆதிபகவனை முழுமுதற் கடவுளாக உடையன என்பது அதற்குப் பொருள். 'முதற்று' என்னும் சொல்லை இச்சிறப்புக் கருதியே **வள்ளல் பெருமான் இராமலிங்கஅடிகளும்** 'முதல் + தே' என்று பிரித்துக் காட்டினார்கள். முன்னோர் சொற்கள் பலவற்றுக்கு வடலூர் வள்ளலார் கொடுத்துள்ள விளக்கங்கள் இலக்கண நுட்பதிட்பங்களுடன் புதுமைப் பொலிவும் உடையன. புலமையாற்றலாகவும் புத்திவல்லமையாகவும் மட்டும் இதனைக் கொள்ளலாகாது. உண்மையின் விளக்கமாகவே கொள்ள வேண்டும்.

மேலும் இங்கு 'அகர முதல' என்பதில் அகரம் என்னும் உவமையும் 'பகவன்' என்னும் பொருளும் ஒருமையாய் வந்தன. 'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரத்தின் எல்லாக் குறள்களும் கடவுளை ஒருமையிலேயே குறிக்கின்றன. கடவுள் ஒருவர் என்பதே வள்ளுவர் பெருமானின் உறுதியான கருத்து.

'கடவுள் வாழ்த்து' என்ற அதிகாரத்தில்

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழார் எனின் (2)

என்பது இரண்டாவது குறள். நூல்கள் பலவற்றைக் கற்கக் கற்க,

கடவுளின் தன்மையை உணர்ந்து அதனை வழிபடும் உணர்வு பெற வேண்டும். அறிவு பெறப்பெற, அறிவின் தூய்மையை எட்டி உணர்வதே சிறந்த பயனாகும்.

கடவுள் அறிவைத் 'தூய அறிவு' ('வாலறிவன்') என்று விதந்ததனால் கல்வி அறிவு ஐயந்திரிபுகளாகிய கசடுகளோடு பற்றும் பதற்றமுமுடைய அழுக்கும் கூடியது என்பது அறியப்படும். அந்த அழுக்குகள் நீங்குவதற்காகவே கடவுள் அறிவாகிற தூய அறிவில் நெடுக ஈடுபட வேண்டும். இடைவிடாமல் ஈடுபடுவதற்காகவே 'தொழார்' என்னும் சொல் அந்த இடைவிடாமைப் பயிற்சியைப் புலப்படுத்திக் கொண்டு 'தொழா அர்' என அளபெடையில் நீண்டு நின்று விளக்கு கின்றது.

கற்றவர் தாள்களைவிட வாலறிவன் தாள் பேரின்பம் பயப்பதாதலால் நற்றாள் - 'நல்லதாள்' - என்று குறிப்பிட்டார். இவையெல்லாம் செய்யுட் கருத்துகளை எப்படி எப்படி ஏற்கவேண்டும் என்னும் பொருள் நயங்களுக்கு உரியன. இத்தகைய நயங்கள் ஒவ்வொரு குறட்பாவிலும் மின்னி மின்னிக் கற்போர்க்குக் கழிபேர் உவகையை நல்குகின்றன.

மக்கள் மனம் சிறந்த ஒரு பொருளை பற்றி எண்ணத் தொடங்கினால் அந்தப் பொருளை மக்கள் வடிவில் வைத்தே எண்ண முடியும்; யாரேனும் சான்றோர் ஒருவரின் வடிவில் வைத்துதான் எண்ண முடியும். புலன்கள் ஐந்தனுள் செவியே வளர்ச்சியால் முற்போக்கு உடையது என்றாலும், ஒலி வடிவாய் எண்ணம் அமைதல் அரிது. அதற்கு கண் மனத்தொடு இயைந்து நின்று எண்ணங்களுக்கு வடிவு நல்கி நிலை பெறச் செய்து வரும் ஆற்றல் உடையது. செவி முதலியவை மூளைக்கு வேறாக அமைந்து தொடர்புபட்டுள்ளன என்றும்,

கண நரம்புகள் மூளை நரம்புகளுடன் சேர்ந்தாற்போல் தொடர்புபட்டு மிக அண்மையில் அமைந்துள்ளன என்றும், கண்நரம்புகள் மூளை நரம்புகளுடன் சேர்ந்தாற்போல் தொடர்பு பட்டு மிக அண்மையில் அமைந்துள்ளன என்றும், ஒவ்வோர் எண்ணமும் உருவம் பெற்று நிலைபெறுவதற்குக்காரணம் இதுவே என்றும் உடல் நூலோர் உணர்த்துகின்றனர்[1]. அதனால் உருவ வடிவான கடவுளை எண்ணத் தொடங்கிய மனமும் சிறந்த உருவம் ஒன்றைத் தேடிக் கொள்ளுகின்றது[2]. இந்த இயல்பை நன்கு உணர்ந்த வள்ளுவர் பெருமான் **'தொழுதல்'** என்று குறிக்கும் போது உருவவழிபாட்டைச் சுட்டும் போக்கில் 'நற்றாள்' என்று கூறியுள்ளமையும் சிந்திக்கத் தக்கது.

அன்புடன் நினைக்கின்றவர்களின் மனமே இறைவன் விளங்கும் மலராகின்றது. அந்த மலர்மேல் விளங்கும் இறைவனுடைய சிறந்த திருவடிகளை நினைத்துப் பொருந்துகின்றவர்கள் - மனத்தால் சிந்திக்கின்றவர்கள் - தியானிக்கின்றவர்கள் - உலகத்தில் நெடுங்காலம் வாழ்வார்கள்.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார் (3)

என்பது பெருமானின் பொய்யா மொழி.இறைவன் விருப்பு வெறுப்பு அற்றவன்; அவனுடைய திருவடிகளை எண்ணிப் போற்றி மகிழ்பவர்களுக்கு எப்போதும் துன்பம் இல்லை.

வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல (4)

---

1. இதனால்தொலைக்காட்சியில் செய்தி வாசிப்போரின்முக்கிய செய்திப் பகுதி வரிவடிவாலும் காட்டப் பெறுகின்றது. செய்தி வாசிப்போரின் உருவத்துடன் செய்திக்கு உரியவரின் படமும் காட்டப் பெறுகின்றது.

2. சமயநூலார் கடவுளுக்கு தமக்கு உகந்த வடிவங்களைக் கொடுத்திருப்பது ஈண்டு சிந்திக்கத் தக்கது. எ-டு சிவன், திருமால் வடிவங்கள்

என்பது வள்ளுவம். இறைவனுடைய புகழே உண்மையான புகழ்; அந்தப் புகழை விழைந்து வழிபடுபவர்களிடம் மயக்கத்தால் சேரும் நல்வினை, தீவினை என்ற இருவினைகளும் சேராமல் அகன்று ஒழியும்.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு (5)

என்பது வள்ளுவர் பெருமானின் குரல்.

இறைவன் ஐம்பொறிகளால் வளரும் அவா அற்றவன்; அவனது உண்மையான ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்து ஒழுகுகிறவர்கள் நெருங்காலம் வாழ்வார்கள்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்கம்
நெறிநின்றார் நீடுவாழ் வார் (6)

என்பது தமிழ்மறை. இறைவன் தனக்கு நிகர் இல்லாமல் சிறந்து விளங்குகின்றவன். அவனுடைய திருவடிகளை நினைந்துப் பொருந்தி வாழ்பவர்களுக்கே மனத்தில் எழும் கவலையை மாற்றுவது இயலும்; மற்றவர்களுக்கு அங்ஙனம் செய்தல் அரிது.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது (7)

என்பது மன்பதைக்கு அருளப் பெற்ற மாபெரும் செல்வம்.

இறைவன் அறக்கடலாக உள்ள அருளாளன்; அவனுடைய இணையடிகளை எண்ணிப் பொருந்துகிறவர்களுக்கே பொருளும் இன்பமும் ஆகிய வாழ்க்கைக் கடலை நீக்குவது இயலும்; மற்றவர்களுக்கு அஃது இயலாது.

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது (8)

என்பது வான்மறை வள்ளுவம். ஈண்டு 'எதிர்மறை மரபில்' எடுத்துக்காட்டுவது அக்கருத்தை நன்கு வலியுறுத்துவதாய் உள்ளது; வேறுவழி இல்லை என்று புலப்படுத்துவதாயும் உள்ளது.

இதற்கு அடுத்த குறள்மணியின் ஒளி சொல்லுந் தரமன்று .

> கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்[3]
> தாளை வணங்காத் தலை (9)

என்பது அந்த ஒளிமணி. 'தத்தமக்கு ஏற்ற புலன்களைக் கொள்ள இயலாத ஐம்பொறிகள்போல் கடவுள் தாளை வணங்காத் தலைகள் பயனில்லாதன' என்ற கருத்தினை இந்த ஒளியில் கண்டு மகிழலாம். ஐம்பொறிகள் என்பவை தலையில் உள்ளன; அப்படியானால் ஐம்பொறிகளுக்கு வேறாகத் திருவள்ளுவர், தலையை நினைவு கூர்வதனால், தலையின் பிறபகுதிகள் ஈண்டுக் குறிக்கப் பெறுகின்றன என்பது துணியப் பெறும்.

மோவாயிலிருந்து புருவம் வரையில் ஒன்றுக்கு மேல் ஒன்றாக ஓர் அறிவு, ஈரறிவு என்னும் முறையில் ஐம்பொறிகளும் அமைந்துள்ளன.[4] புருவ நடுமுதல் தலை உச்சியும் உச்சிக்குமேல் தலை முடியும் உள்ள வரையில் தலையின் பகுதிகள் அடங்கும். வணங்காத்தலை என்பது அப்பகுதிகளை

3. எண்குணத்தான் எண்குணங்களைச் சைவர்கள் சிவபெருமானுக்கும் வைணவர்கள் திருமாலுக்கும் ஏற்றிக் கூறி மகிழ்வர்.

4. மேவாய், ஓரறிவாகிய தொட்டறிவுக்கு (தொப்புல அறிவுக்கு) இடம்; ஈரறிவாகிய சுவைக்குரிய நாக்கு மேவாய்க்கு மேலே தான் உள்ளது. மோப்பறிவாகிய மூன்றாவது அறிவுக்குரிய மூக்கு, நாக்குக்கு மேலிடமாகவே உள்ளது; நான்காவது அறிவாகிய பார்வைக்குரிய கண்கள், அதற்குமேல் அமைந்திருக்க வேண்டும்; அங்ஙனமே அமைந்திருத்தலை அனைவரும் அறிவர்; ஐந்தாவது அறிவாகிய கேள்விக்குரிய காதுகள், கண்களுக்கு மேலிடமாகிய நெற்றிப் பகுதியில் முயல், குதிரை முதலிய சில சிற்றுயிர்களுக்கு அமைந்திருத்தல் வெளிப்படை; மனிதர்க்கு அதற்கு மேலும் ஒரு நுட்பம் கொண்டதாய், மோவாய் அடி எலும்பும் கண்களின் மேல் எலும்பாகிய புருவ எலும்புகளும் சென்று கூடும் கன்னத்தில் முறையே காதுகளின் அடியும், நுனியும் அமைந்துள்ளன. மற்ற நான்கறிவுபற்றிய கேள்விகளையும் காதுகள் பெறுவதோடு, ஏனைத் தலைப்பகுதிகளைப்பற்றிய கேள்விகள் பலவும் பெறவேண்டும் என்பது குறிப்பு. ''கற்றிலனாயினும் கேட்க (414) என்னும் முதன்மைக்குரிய தலைமைப்பாடு உடையவை செவிகள்'' 'செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள், அவியினும் வாழினும் என்' (420) என்பதையும் உன்னுக!

எண்ணியே கூறிய வள்ளுவர் பெருமானின் குறிப்பாகும். பொதுவாக உவமைகளை விடக் கருத்துகள் முக்கியமானவை. கருத்தை விளக்கவே உவமை ஓரளவு உதவியாய் உள்ளது. ஆகவே ஐம்பொறிகளைவிடப் புருவ நடு முதல்[5] மேலுள்ள தலையின் பகுதிகள் முக்கியம் என்பது கருதப்பெறும். அப்பகுதிகள் எவை எவை? அவை என்ன காரணத்தால் முக்கியம்? அம்முக்கியத் தன்மைக்கு ஏற்ப அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பனவெல்லாம் '**வணங்குதல்**' என்ற செயலில் அடங்கும். அற்புதம்! அற்புதம்!

கடவுளை வணங்கும் ஈடுபாட்டினால் 'நீடுவாழ்வது (3), வினைகள் சேராமற் போவது (5), மனக்கவலை அற்று இருப்பது (7), உலகச் சிக்கல்கள் தாக்காமல் ஒழிவது' முதலிய நலங்கள்பல உண்டாவதோடு மனித்தப் பிறவியின் ஒரே நோக்கமாகிய பெரிய பயன் ஒன்றையும் மக்கள் பெற முடியும். அதனை வேறு எதனாலும் அடைய முடியாது என்று முடிந்த முடிபாக வள்ளுவர் இறுதிக் குறளில் (10) எடுத்துக் காட்டுகின்றார். அது பிறவி நீங்குதலேயாகும். பற்பல கொள்கையாளர்கள் இவ்வுண்மையைக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டு மென்பது அப்பெருமானின் 'பிறவிப் பெருங்கடல்' (10) என்ற குறட்பாவில் பிறவியில் வந்த மனிதர்க்கு இனிப் பிறவாமை பெறுவதே கடமை என்பதை அறிவுறுத்துகின்றது. வேண்டுங் கால் வேண்டும் பிறவாமை (362) என்றார் அப்பெருமான். அதற்கு 'இறைவன் அடிசேரவேண்டும்' (10) என்பது அப்பெருமான் கூறும் அறிவுரை! அப்படியானால் கடவுள் என்பது பிறவாமை உடையது என்பது தானே பெறப்படும்.

---

5. இதனை நினைவுகூரும் வகையில் ஆண்களும், பெண்களும் அவ்விடத்தில் பொட்டு இட்டுக் கொள்வர் போலும்!

அதோடு பிறப்பு இறப்பு உடையவர்கள் யாராக இருந்தாலும் அவர் கடவுள் அல்லர் என்பதும் அறியப்படும்.

'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரத்தின் எல்லாக் குறள்களும் கடவுளை ஒருமையிலேயே குறிக்கின்றன. கடவுள் ஒருவர் என்பதே வள்ளுவர் பெருமானின் உறுதியான கருத்து. கடவுளுக்கு அடுத்து இரண்டாவதாகத் துதிக்கப் பெறுவோர், எலலா நிலைகளிலும் ஆசிரியரால் பன்மையிலேயே குறிக்கப் பெறுகின்றனர்; அவர்கள் உயிர்கள். இதிலிருந்து உற்று நோக்கினால் 'கடவுள் ஒருவரே; அவர் பிறப்பு இல்லாதவர்' என்பதும் 'அவருக்கு இரண்டாவதாக உள்ளவர்கள் எவ்வளவு பேராற்றல் உடையவராகப் பெரிய அவதாரங்களாகப் பெரிய குருமார்களாகப் பெரிய தேவர்களாக எவராக இருந்தாலும் அவர்கள் எல்லாரும் உயிரினங்களே; பிறப்பு, இறப்புகளில் உழலுபவர்களே' என்பதும் திட்டமாகத் துணியப்படும். இறைவனைச் சார்ந்து தம் பிறப்பு இறப்புகளை நீக்கிக் கொள்ளும் உயர்ந்த தெய்வ நிலையை அவர்கள் எல்லாரும் பெற வேண்டும்' என்பதும், 'அங்ஙனம் பெற்றுவிட்ட வர்களே மேல் நிலையில் நிலைத்து வாழ்பவர்கள்' என்பதும் உடன் தெளியப்படும். இந்த அடிப்படை உண்மைகளை வள்ளுவர் பெருமான் விட்டுக் கொடுக்காமலும் விளக்குகின்றார். அதே நேரத்தில், பலரும் ஏற்கும் முறையில் சிறப்புப் பெயர்களை வெளிப்படையாகக் கூறாமல், ஆயினும் புலப்படும் குறிப்புப் பொருள்களில் வைத்து, எல்லாக் கொள்கையாளர்க்கும் பொதுமை தோன்ற இனிமையாகவும் ஏற்கும் முறையிலும் தெருட்டுகின்றார்.

தமக்குச் சிறந்த மாளிகைகளை அமைத்துக் கொள்

வதைப் போலவே இறைவனுக்கும் பெரும் கோவிலை எழுப்பி யுள்ளனர். அருளாளர்களால் பாடல்கள் பெற்றபிறகு - மங்களாசாசனம் அடைந்தபிறகு - திருக்கோயில்களின் அமைப்பு முறை பெருகிவிட்டதைக் காணலாம். பிற்காலத்தில் மக்களிடையே பக்தி குறைந்து, கோயில் பராமரிப்புக் குறைந்து விடுமோ என்ற கருத் தினாலோ வேறு என்ன காரணத்தாலோ கற்கோயிலை எழுப்பிச் சிறப்பித்துள்ளனர். மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக் கோயில், இராமேசுவரம் இராமநாதர் கோயில், தஞ்சைப் பெரிய கோயில், கங்கை கொண்ட சோழேச்சுரம் போன்ற கோயில்களைக் காண்போர் தற்கால நவீன முறையில் பயிற்சி பெற்ற பொறியாளர்கள் மூக்கில் விரலை வைத்து வியந்து மயக்கமுறும்படி அமைந்திருப்பதை நினைந்து பார்க்கலாம்.

மக்களுடைய பக்தி உண்ணும், பருகும் உணவுப் பொருள்களை பால், தயிர், தேன், பஞ்சாமிர்தம் போன்ற வற்றை அபிடேகப் பொருள்களாக்கியிருப்பதுதான் பகுத்தறிவுடன் சிந்திப்பவர்கட்கு விளங்காப்புதிர்களாகவே உள்ளன. நாட்டில் ஆயிரக்கணக்கான பெரிய சிறிய கோயில்களில் அபிடேகப் பொருள்களாக வீணாவதைக் காண அருள் நெஞ்சு பொறுக்க முடியாத நிலையை உண்டாக்குகின்றது. இவற்றை நைவேத்திய மாகப் படையல் பொருள்களாக்கி பக்தர்கட்கும் ஏழைப் பெருமக்களுக்கும் வழங்கலாமே என எண்ணத் தோன்று கின்றது.

திருப்பதியில் வழங்கும் இலட்டுப் பிரசாதம் போல், அந்த அளவு சிறப்பும் திறமும் இல்லாத போதிலும் இலட்டுப் பிரசாதம் வழங்கும் முறை முருகன் பெருமான் கோயில்

கடைப்பிடிக்கப் பெற்று வருகின்றது. முருகப் பெருமானுக்குப் பிடித்தவை தேனும் தினைமாவும் (வள்ளித் திருமணத்திற்குப் பிறகு!). இப்பெருமான் திருக்கோயிலில் தேனும் தினை மாவையும் பேரளவில் தயாரிக்கச் செய்து பிளாஸ்டிக் உறை போன்றவற்றில் போட்டு, ஒரு விலை வைத்து வழங்கினால், முருகப் பெருமான் பக்தர்களும், வேறுபக்திஉலகங்களும் வியப்புடன் போற்றி மகிழும். திருமுருகன் தேவஸ் தானங்கள் இதனை ஆழ்ந்து சிந்தித்துச் செயற்படுத்த முன் வருமா? முருகப் பெருமான் அருள் நோக்கு இருப்பின் இதுவும் நடைபெறும்; இன்னும் எத்தனையோ புதுமைகளும் நடைபெற வழிகள் அமையும்.

3. வான்சிறப்பு

இயற்கையில் கடவுள் தன்மையைக் கண்டு போற்றுவது உயர்ந்த நெறி; உலக நெறி. எச்சமயத்தார்க்கும் உரிய பொது நெறி. இங்குக் குறிப்பிடும் 'வான்' என்பது ஐம்பெரும் பூதங்களில் ஒன்றாகக் குறிப்பிடப் பெறும் 'வான்' அன்று; இது வேறு. ஆண் பெண் கூறாக சமயவாதிகள் கருதும் அம்மையப்பராக - உள்ள இயற்கையின் ஒரு கூறு மழை; இறைவனின் கருணை அது; அம்மையின் அன்பு ஆற்றல். இந்த ஆற்றல் வான்மழையாகக் காலந்தோறும் நீர் பொழிந்து உலகை உய்விக்கின்றது. அம்மை தண்மை வடிவு உடைய வராதலால் தண்மைச் சான்றோர்க்காக மழை தண்மையாய்க் குளிர்ந்து பொழிகின்றது; உலகுக்கும் பேராதரவாயும் உள்ளது.

மழையின் இயக்கங்கள் வியக்கத்தக்கன. அவை மாந்தர் கைக்கு அடங்காதன; ஆயினும் அது அவர்களின் மன வாக்கு காயங்களின் நேர்மைக்குப் பரிவு கொள்கின்றது; தகுதியாய்ப் பெய்கிறது; மேலுள்ள தனித்தன்மை வல்லமைப் பொருள் ஒன்றின் ஆணைப்படி அஃது இயங்குகின்றது. இந்த வான் மழையில் என்ன ஆற்றல் உள்ளது என்று நன்கு ஆராய்ந்து பார்த்து 'அமிழ்த ஆற்றல்' உள்ளதென்று தேர்ந்து 'வான் சிறப்பு' என்ற அதிகாரத்தை,

வான்நின்று உலகம் வழங்கி வருதலான்
தான்அமிழ்தம் என்றுஉணரற் பாற்று(2)

என்று தொடங்குகின்றார். இதனால் மழையின் அருமைப் பாடு விளக்கம் அடைகின்றது.

இக்காலத்தில் 'அறிவியல் ஆற்றலால் செயற்கையாய் மழை பெய்விக்கலாம், பரவலாக நாட்டில் மழை வளத்தை உண்டாக்கலாம், வறுமையைப் போக்கலாம்' என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இந்த நல்லெண்ணத்தை நன்றி யறிதலுடன் உலகம் போற்றும், பாராட்டும் என்பதில் ஐயம் இல்லை. ஆனால் அந்தச் செயற்கை மழையில் அமிழ்த ஆற்றல் கூடுவதற்கு வழி இல்லை.

மழையை அமிழ்தம் என்று கூறுவதற்கு ஒரு காரணமும் தெளிவிப்பார். மழையினால் உலகம் நெடுங் காலமாக நிலை பெற்று வருகின்றது. 'அமிழ்தம்' என்பது எதனையும் அற்றுப்போகாமல் நீள வாழவைக்கும் தன்மை யுடையது. உலகம் அங்ஙனம் நீண்டு நிலை பெற்று வருதலால் மழையை அமிழ்தம் என்று துணிய வேண்டியதாக உள்ளது என்பது அவர் கூற்று. மழையை அவ்வப்போது பெற்றும், பயிர்களில், காய்கறிகளில், குடிநீரில் அமிழ்தத் தன்மை அடைந்துதான் மண்ணுலகம் நீள நடைபெற்று வருகின்றது.

மழை இல்லாவிட்டால் பசி வருத்தும் (3). உழவர் உழார் (4). எல்லாம் அழியும் (5). புல்லும் இராது(6). கடலின் இயலும் குறையும்(7). அருள் வழிபாடும் வள்ளண்மை நோன்புகளும் சிறப்பு ஒழுக்கங்களும் நிலைபெறா(8). மழையின் தன்மையை உடன்பாட்டால் இரண்டு குறளில் (11,12) கூறிய பெருமான் ஏனைய எட்டுக்குறளில் (13-20) மழை இல்லாவிட்டால் ஏற்படும் வறட்சி நிலையை எதிர்மறையில் விளக்குகின்றார்.

நீரின்றி அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்
வான்இன்றி அமையாது ஒழுக்கு (20)

என்பது வள்ளுவம். இதனால் மழையின் தலைமைப்பாடும் விளங்கும்.

ஒரு பொருளுக்குத் தலைமை கூற வேண்டுமானால் அந்தப் பொருள் இன்றி மற்றப் பொருள்களால் காரியம் ஆகாததாய் இருக்க வேண்டும். அதனைத்தான் 'இன்றி அமையாது' என்னும் தொடர் புலப்படுத்துகின்றது. அப்பொருள் இன்றி வேறு எப்பொருளாலும் காரியம் அமையாது என்பது கருத்து. 'வான்சிறப்பு' என்பதில் 'சிறப்பு' என்னும் சொல் இந்தத் தலைமையை, இந்த இன்றியமையாமையை உணர்த்துவதே யாம். இவ்வாறு வான் சிறப்பு என்று அதிகாரத் தலைப்பு அமைந்ததன் கருத்தை 'வான் இன்று அமையாது' என அதன் இன்றியமையாமையைத் தேற்றி, அதன் தலைமைப்பாட்டை இனிது விளக்கி நிற்கின்றது.

இன்றொரு கருத்தையும் ஈண்டுச் சிந்தித்தல் தகும் உலக இயற்கையில் கெடுப்பவர் ஒருவராகவும் தடுப்பவர் ஒருவராகவும் இருக்கக் காண்கின்றோம். அங்ஙனமே, கெடுத்து நோய் உண்டாக்கும் பொருள் ஒன்றாகவும் தடுத்து நோய் தீர்க்கும் மருந்து வேறு ஒன்றாகவும் உள்ளன. கெடுக்கும் தீவினை வேறு ஆகவும் எடுக்கும் நல்வினை வேறு ஆகவும் இருப்பதையும் காண்கின்றோம்.

ஆனால் அருள் என்ற ஒன்றே கெடுக்கவும் எடுக்கவும் தலைமையான அதிகாரம் உடையதாய், கீழ்க் குறிப்பிட்ட நல்வினை தீவினை முதலியவற்றிற்கு அப்பாற் பட்டதாய் ஆற்றல்மிக்குத் திகழ்கின்றது! உரிமை என்பதும்

இந்தத் தலைமைப் பாடுதான். கெடுக்கும் உரிமை உடைய வர்க்கு எடுக்கும் உரிமையும், எடுக்கும் உரிமை உடைய வர்க்குக் கெடுக்கும் உரிமையும் இருந்தால் மட்டும் தான் அது முழு உரிமை ஆகும்.

இத்தகைய முழு உரிமை ஆண்டவன் அருளுக்கு மட்டுமே உண்டு ; வேறு எதற்கும் இல்லை.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை (15)

என்பது வள்ளுவம். ஈண்டு வள்ளுவர் பெருமான் **'எல்லாம்'** என்னும் எஞ்சாமைச் சொல்லையும் இட்டு மழைக்கு முழு உரிமை திரட்டிச் சிறப்புத் தருதலால், அம்மழையை ஆண்டவன் அருளே என்று பெரியோர் போற்றுவர். **திருப்பாவை, திருவெம்பாவை, திருமந்திரம்** முதலிய அருள் நூல்களில் அம்மையை - அருள் சக்தியை -ஆற்றலை - உருவகம் செய்து போற்றுதலாலும் இவ்வுண்மையை மேலும் தெளியலாம்.

4. நீத்தார் பெருமை

'நீத்தார்' என்பதற்கு ஒழுக்கத்தால் நீத்தார் என்பது பொருள். ஒருவர் ஒழுக்கமுடையவராய் இருந்தால் அவர் விரைவில் நீத்தாராகி விடுவர். 'நீத்தார்' என்பவர் அழுக்கு நீத்தார்; தூயோர் என்பது கருத்து. வள்ளுவர் பெருமான் குறிப்பிடும் நீத்தார் என்பவர் நடையால் சிறந்து உள்ளம் துறந்தவர் என்பது தெளியப்படும். உள்ளபடியே அவருக்குத் தான் உலகத்தில் பெருமை உண்டு.

சிலர் கடவுள் மாட்சியைப் பெருமை என்று கூறுவர்; அது பொருத்தமன்று. காரணம், அவர் எக்காலத்தும் ஒரே தன்மையில் இருப்பவர். சிறுமையிலிருந்து பெருமைக்கு உயர்பவர் அல்லர். ஆகவே அடியார்கட்கு மட்டுமே பெருமை கூறுவது பொருந்தும். சிறுமையிலிருந்து பெருமைக்கு உயர்பவர்கள் அவர்களே. வள்ளுவர் பெருமான் அந்த இயற்கை நிலை புலம்பட நீத்தார்க்குப் பெருமை கூறினார். அவர் பெருமை அளவுபடாதது.'நீத்தார் பெருமை' என்னும் தொடர் பொருளழகு மிக்கது; கருத்துப் பிழையும் அற்றது !

வள்ளுவர் பெருமான் இந்த அதிகாரத்தில் நீத்தார் என்பவரைத் துறந்தார்(2) அறம் பூண்டார்(3), ஓரைந்தும் காப்பார், (4) ஐந்தவித்தார்(5), பெரியர் (6) ஐந்தின்வகை தெரிவார் (7), நிறைமொழிமாந்தர்(8), குணக்குன்று (9), அந்தணர் (10) என்றெல்லாம் கருத்து விளக்கம் தந்து வேறு வேறு பெயர்களால் வழங்கியிருப்பது ஆழ்ந்து சிந்தித்தற்குரியது.

(1) **துறந்தார் பெருமை**[1]: துறத்தல் - பற்று நீங்குதல், பொருளைத் துறத்தல் அன்று. துறந்தார் - பற்று நீங்கினவர்கள். இவர்களுடைய பெருமையை 'இறந்தாரை எண்ணிக் கொண்டற்று' என்ற தொடரில் அடங்கியுள்ள உவமையால் விளக்குவர் வள்ளுவர் பெருமான். 'இறந்தார்' என்ற சொல்லில் உயர்திணை, அஃறிணை உயிர்கள் அனைத்தும் அடங்கும். உலகம் தோன்றியது முதல் இறந்தவர்களின் எண்ணிக்கை அளவுபடாதது. இவர்களில் பறவைகள், விலங்குகள் இவற்றையும் சேர்த்துக் கொண்டால் எண்ணிக்கையின் அளவு மேலும் அளவுபடாமல் நிற்கும். அங்ஙனமே துறந்தவர்களின் பெருமை அளவுபடாமல் விரிந்து நிற்கும். ஒன்று, இரண்டு என்று எண்ணிப்பார்ப்பது மட்டும் பொருளன்று. அவர் பெருமை உணர்வில் புலப்படும்படி இடைவிடாமல் மக்கள் வியந்து எண்ணிக் கொண்டிருப்பதையும் கருதிக் கொண்டிருப்பதையும் நினைவூட்டும்.

(2) **'அறம் பூண்டார்'** (3): இங்கு 'இருமை' என்ற சொல் இம்மை மறுமைகளைக் குறிப்பதுடன் நன்மை - தீமை, அறிவு - அறியாமை, உயர்வு - தாழ்வு - பிறப்பு - இறப்பு முதலாக இரண்டிரண்டாக வரும். இம்மையான வாழ்க்கைக் கூறுகளை யும் குறிக்கும். இங்ஙனமே மறுமையையும் சிந்திக்கலாம். இப் பிறவி மறுபிறவி என்னும் இம்மை மறுமைகளின் இயல்புகளை நன்றாகத் தெரிந்தவர்களே இப்பிறவியில் அவற்றிற்கேற்றபடி பொருத்தமாகக் கடமைகளைச் செய்ய முடியும். ஈண்டு 'அறம்' என்னும் சொல் கடமையை உணர்த்துகிறது. இங்ஙனம் கடமை யை மேற்கொண்டவர்களின் பெருமை உயர்ந்தது.

---

1. பாயிரத்தின் நான்கு அதிகாரத் தலைப்புகளும் இத்தகைய கருத்தழகு மிக்க தொடர்கள். காரணம் நூல்முழுவதும் கூறும் கருத்துகளுக்கு ஒளிகாட்டிக் கொண்டிருப்பவை.

(3) ஐந்து என்பது (4) ஐம்பொறிகளைக் குறித்தது. இவற்றை யானைகளாக உருவகம் செய்கின்றார் ஆசிரியர். யானைகளை அங்குசத்தால் அடக்குவதுபோல ஐம்புலன் களையும் மன உறுதியால் அடக்க வல்லவர்கள் முத்தி வாழ்விற்கு வித்து ஆவார்கள். இவர்கள் பெருமையும் அளவிடற்கரியது.

(4) **ஐந்தவித்தான்** ஆற்றலுக்கு (5) இந்திரன் சான்றாக வந்தமை ஓர் இயற்கைக் கருத்தை உட்கொண்டது[2]. இங்கு இந்திரன் என்றால் மழை என்பது பொருள். இந்திரன் மழையை இயக்கும் தேவன்; கடவுள். அந்த அதிகாரத்துக்கு கருவாக அவன் அமைந்தவன். ஐந்தவித்தான் ஆற்றலுக்கு மழையே சான்று என்பது அத்தொடரின் கருத்து.

ஐந்தவித்தானும் முயன்று மழை பெய்வித்தல் அவ்வளவு சிறந்ததன்று. ஐந்தவித்தார் அவர் இயல்பில் இருக்க, அவர் ஆற்றலுக்கு மழை தானே பெய்யுமானால் மட்டுமே அவர் ஆற்றலுக்கு அது சிறந்த சான்றாகும். 'ஆற்றல்' என்னும் சொல் இயல்பில் செயலாற்றலை உணர்த்தும்.

---

2. சிலர் அகலிகையின் கதையை உணர்த்துவதாகக் கருதுவர். இது தவறு. திருக்குறளில் கதை விளக்கங்கள் எங்கும் இல்லை. திருக்குறள் இராமாயணத்துக்கு முந்திய நூல். மேலும் அந்தக் கதையினால் சாபம் இடுதல் வருகிறது. சாபம் இடுதலால் ஆற்றல் குறையும். ஆற்றல் வளத்தலோ அளவில் இருத்தலோ அமையாது. ஆற்றல் குறையாமல் இருக்க வேண்டுமானால் அந்த ஆற்றலால் இயல்பாகவே சுற்றுச் செயல்கள் நடைபெற வேண்டும். நல்லார் ஒருவர் உளரேல் அவ் கருத்தின்றியே எல்லாருக்கும் பெய்யும் மழைபோல இயற்கைச் செயல்கள் நடைபெற வேண்டும்.

(5) **செயற்கரியசெய்வார்** (6): புலனடக்கம் உடையவர்களே செயற்கரிய செயல்களைச் செய்து வாழ்வார்கள். அவர்களே பெரியோர். புலனடக்கம் இல்லாதவர்கள் புலன் ஈர்க்கும் வழியில் சென்று அலைந்து ஆற்றலை இழப்பதால் அரிய செயல்களைச் செய்ய மாட்டார்கள் ; அவர்கள் சிறியோர்.

(6) **'ஐந்தின்வகை தெரிவார்'** (7): உலகம் என்பது என்ன என்று பூதங்கள் ஐந்தையும் அவற்றின் கூறுபாடுகளையும் ஆராய்ந்து தத்துவ ஆராய்ச்சி செய்ய வேண்டும். சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று இயற்கையாகவே உலகம் உணரப்படுதலால், அவையே உலக அநுபவத்திற்குக் காரணம் என்று அவற்றின் வகைகளை ஆராய்கின்ற உயிர்களுடைய (விஞ்ஞானிகளுடைய) அறிவில் உலகம் அடங்கும். இவ்வாறு கருதுவது இயல்பு. ஆனால் வள்ளுவர் கருத்து வேறு; அது நீத்தாரிடத்தே உள்ளது என்பது அவர் துணிவு.

(7) **நிறைமொழி மாந்தர்** (8): ஒரு மனிதரின் தகுதி அவர் வாக்கால் தெளியப்படும். நீத்தார் பெருமையும் அத்தகையது; அவர் வாக்குகள் மற்றவர்களுக்கு வேதமாகும். ஒருவர் வாக்கு வேத மொழியாய் மற்றவர்களால் பின்பற்றப் படுகின்றது என்றால் அந்த வாக்கினையுடையவர் நீத்தாராக இருந்தால் மட்டுமே இயலும்.

(8) **குணக்குன்று** (9): குணம் குன்றுபோல் தேங்கி நிற்கும். இவர்களிடத்தில் தோன்றும் வெகுளி மறுகணமே மாறிவிடும் என்பதே கருத்தாதல் வேண்டும். குணம் இருப்பதன் இயல்பு இது. பிறரைச் சினந்து கூறி வதைப்பதன்று; வெகுளி எழுவதும் அவர் தேவைக்காக என்பதும் பொருந்தாது; காரணம்

அவர்கள் குணசாலிகள். பிறரை ஆற்றலால் திருத்தும் பொருட்டே அது தோற்ற மளிக்குமேயல்லது வேறில்லை; கெடுக்கும் பொருட்டன்று.

(9) **அந்தணர் (10):** இங்கு அந்தணர் என்னும் பெயரை அறவோர் என்று வேறு ஒரு பெயராலும் குறிப்பிடுதல் கவனிக்கத் தக்கது. திருக்குறள் ஓர் அறநூல் அல்லவா? எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான் அறவோர் ஆகின்றார். இதிலிருந்து ஓர் அழகிய உண்மையை நாம் உன்னி அறியலாம். எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுதலே அது. எவ்வுயிரினிடத்தும் வேற்றுமை காட்டாமல் செந்தண்மை பூண்பதே அந்தண்மை. அதனை உடையவரே அந்தணர். இதகைய அறச்செய்கை அல்லாதவர், தன்னலப் பற்று அறாத வர் 'நீத்தார் அல்லாதவர் அந்தணர் ஆகார். செந்தண்மை என்பது தண்மையை எவ்வுயிர்க்கும் நடுநிலையாக ஆள்பவர் என்பதை உணர்த்தும். செம்மை, இங்கே நடுநிலைமை. இக்காரணங்களால் அந்தண்மையின் தெய்விக அழகு இனிது தெளியப்படும்.

அந்தணர் என்போர் அறவோர்;மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டுஒழுக லான் (30)

'தம் உணர்வு சற்றுமின்றி அருட்பெருமையில் திளைப்பவரே நீத்தார்' என்பது இரத்தினச் சுருக்கம்.!

5. அறன் வலி உறுத்தல்

திருக்குறள் ஓர் அறநூல்; அருமறைக் கருத்துகள் நிறைந்தது. அறத்தின் வீறு நூலெங்கும் பிரதிபலிக்கும் வேகத்தைத் தருவதற்காக பாயிரமான இப்பகுதியில் அறம் நன்கு வலியுறுத்தப் பெறுகின்றது. இதனால் அதிகாரத்தின் தலைப்பும் அறன் வலியுறுத்தல் என்ற திருநாமமும் பெறுகின்றது. அறம், பொருள், இன்பம் இவற்றில் அறம் வீறு மிக்கது. இப்பண்பே அறத்துப்பாலை நூலின் தொடக்கத்தில் முன்னிறுத்தும் கட்டாயத்தையும் பெற்றது.

அறமே வாழ்க்கைக்கு வேண்டிய சிறப்பையும் தரும்; செல்வத்தையும் நல்கும்; ஆகையால் அறத்தை விட உயிர்க்கு ஆக்கம் தருவது இதைத் தவிர வேறொன்று இல்லை.

சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு (31)

இதில் 'செல்வம்' என்பது பொருள் குறித்து வருதலால் 'சிறப்பு' என்பது அருளைக் குறித்தது என்று கொள்ள வேண்டும். தலைமைப்பாடு என்று பொருள் கொண்டால் அருள் தலைமை என்பது கருத்தாகும். தம்மைப் பார்த்து மற்றவர் விடுக்கும் வினாவிற்கு வள்ளுவர் பெருமான் தாமும் ஒரு வினாவை விடுக்கின்றார். 'அறத்தினூங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு?' வினா வினாலேயே விடை சொல்லும் முறை இது. 'அறத்தை விட ஆக்கம் உலகில் வேறு எது உளது?'

என்பது அவர்தம் வினா வினாவிற்கு விடையாக உள்ள இக்குறட்பாவில் அப்படிக் கேட்பதற்கு ஏற்ற பின்னணி இல்லாமல் இல்லை. செல்வம் வேண்டுமா? செல்வாக்கு வேண்டுமா? சிறப்பு வேண்டுமா? இப்பிறப்பில் மட்டுமின்றி எப்பிறப்பிலும் இவை வேண்டுமா? பிறப்பே அற்ற பெருவாழ்வு வேண்டுமா? என்னென்ன எவ்வெப்போது தேவையோ எல்லாவற்றையும் அறவொழுக்கம் ஒன்றே தரும். அப்படியானால் அதைவிட ஆக்கம் தருவது உயிர்க்கு வேறு என்ன இருக்க முடியும்? என்பது அவர் தருகின்ற முதல் தெளிவு.

மக்களில் .சிலர் அறமும் செய்யாமல் மறமும் செய்யாமல் சும்மா இருந்தால் ஒரு தொல்லையும் இல்லை என்று கருதுவர். அறம் செய்யாதவர்கள் சும்மா இருக்க முடியாது[1]. யாரும் அறமோ மறமோ ஏதாவது ஒன்றில் ஈடபடவே நேரும். அறத்தைச் செய்யாமையால் மட்டும் தீங்கு வரும் என்பதில்லை. அறத்தை மறந்திருந்தாலே தீங்குதான் என்பது ஒருதலை (32).

மறவாமல் செய்ய வேண்டும் என்றால் அறத்தை இயன்ற அளவிலாவது இடைவிடாமல் வாய்ப்புள்ள போதெல்லாம் செய்து வரவேண்டும் என்பது தானே பெறப்படும்.

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல் (33)

என்பது வான் மறை வள்ளுவம். 'செய்தால் சரியாகச் செய்ய வேண்டும்; இல்லை என்றால் சும்மா இருக்கவே வேண்டும்'

---

1. எவரும் சும்மா இருக்க முடியாது என்பதற்குத் தாயுமான அடிகளின் 'கந்துக மதக் கரியை' தேசோமயானந்தம் (1 -8) என்ற பாடலை நினைவுகூர்ந்து மகிழலாம்.

என்றும் 'நானும் எப்போதாவது உதவி செய்யாமல் இல்லை, திரும்பத் திரும்பச் செய்ய வேண்டுமென்றால் எனக்கு ஒத்துவராது' என்றும், 'ஒவ்வொரு வாய்ப்பிலும் இயன்ற போதெல்லாம் நம்மால் கவனிக்க முடியாது' என்றும் நொண்டிச் சாக்குகளாக (Lame Excuses) சொல்லப்பட்டு வரும் கருத்துகளுக்கு இக்குறட்பா மறுப்பாக உள்ளது. சாக்கு போக்குகள் வள்ளுவர் பெருமானுக்குப் பிடிப்பதில்லை; அவர் அவற்றை விரும்புவதும் இல்லை. வாழ்வில் ஒவ்வொரு நொடியும் பயனுள்ளதாய் இருப்பதே முக்கியம்; அது, தனக்கும் நன்மை. பிறர்க்கும் நன்மை!

அறம் என்பது யாது? செயலா? சொல்லா? எண்ணமா? என்பது ஒரு வித ஐயம். வள்ளுவர் பெருமான் இம்மூன்றும் அடங்கியதேயாகும் என்ற கருத்துடையவர். இம்மூன்றனுள்ளும் செயலுக்கும் சொல்லுக்கும் எண்ணமே அடிப்படையாதலால், எண்ணத்தின் தூய்மை முதன்மையானது. ஆகையால் மனத்தில் மாசு இல்லாத தன்மை பெற வேண்டும்; அறம் அவ்வளவே. மனம் மாசு நீங்காமல் செய்யும் செயலும், சொல்லும் சொல்லும் வீண் ஆரவாரமானவை; அறம் அல்ல.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற (34)

என்பது வள்ளுவம். இதனைச் சோம்பல் உடையோர் தமக்குச் சாதகமாக அணைத்துக் கொண்டு செயலின்றி இருந்து விடுகின்றார்கள். ஆனால் திருவள்ளுவர் இந்த அதிகாரம் முழுமையும் அறம் என்பதைச் செயல் முகத்தில் வைத்தே வற்புறுத்துகின்றார். இதற்கு உள்ளொன்று புறமொன்றாக இல்லாமல் இரண்டும் ஒத்திருக்க வேண்டும் என்பதற்காக அறச்

செய்கை என்பது மன அழுக்கு இல்லாமல் நடந்து கொள்வது என்றுஒரு முக்கியத்துவமும் கூறினார். 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்' என்பதில் அறன் என்று வரும் சொல் செய்கை என்னும் பொருளுக்கு உரியது. முன் குறளில் (33) கூறிய 'அறவினை' மன அழுக்கு அற்றிருக்க வேண்டும் என்பது கருத்து.

பொறாமை, அவா, வெகுளி, இன்னாச் சொல் இந்த நான்கையும் கடிந்து நடப்பது அறமாகும்.

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம் (35)

என்பது பொய்யா மொழி. இங்கும் 'அறம்' என்ற சொல் 'அறச்செய்கை'யை உணர்த்தும். அதனால் அதன் வினைச் சொல் நடைபெறுவது என்னும் கருத்தில் 'இயன்றது' என வந்தது. 'அறம்' என்பதற்குச் செயல் முகமே தேவை என்றாலும் அதற்கு மனமும் தூய்மையாய் இருக்க வேண்டும் என்னும் கருத்தை வற்புறுத்தவே 'மனத்துக் கண்' (34) என மனமும் 'இன்னாச் சொல்' (35) எனச் சொல்லும் இரண்டு குறள்களில் நினைவூட்டப் பெற்றன. மனமும் சொல்லும் செயலுக்குத் துணையாவன. செயல் இல்லை என்றால் நினைவும் சொல்லும் உருவாகப் பயன்படுவதில்லை. நினைக்க மட்டும் வல்லவர் களாகவும், சொல்ல மட்டும் திறன் படைத்தவர்களாகவும் இருந்தால் அந்நினைவும் சொல்லும் பிறரைச் செயலுக்கு ஊக்காது. செயலில் சென்று முடியாத நினைவாலும், சொல்லாலும் யாருக்கு என்ன பயன்? அதனாலேயே அறத்தை **'அறவினை'** என்று வள்ளுவர் பெருமான் செயலுக்கேற்பப் பெயர் கொடுத்தார். அன்றியும் 'செல்லும்வாயெல்லாம்

என்றும் 'நானும் எப்போதாவது உதவி செய்யாமல் இல்லை, திரும்பத் திரும்பச் செய்ய வேண்டுமென்றால் எனக்கு ஒத்துவராது' என்றும், 'ஒவ்வொரு வாய்ப்பிலும் இயன்ற போதெல்லாம் நம்மால் கவனிக்க முடியாது' என்றும் நொண்டிச் சாக்குகளாக (Lame Excuses) சொல்லப்பட்டு வரும் கருத்துகளுக்கு இக்குறட்பா மறுப்பாக உள்ளது. சாக்கு போக்குகள் வள்ளுவர் பெருமானுக்குப் பிடிப்பதில்லை; அவர் அவற்றை விரும்புவதும் இல்லை. வாழ்வில் ஒவ்வொரு நொடியும் பயனுள்ளதாய் இருப்பதே முக்கியம்; அது, தனக்கும் நன்மை, பிறர்க்கும் நன்மை!

அறம் என்பது யாது? செயலா? சொல்லா? எண்ணமா? என்பது ஒரு வித ஐயம். வள்ளுவர் பெருமான் இம்மூன்றும் அடங்கியதேயாகும் என்ற கருத்துடையவர். இம்மூன்றனுள்ளும் செயலுக்கும் சொல்லுக்கும் எண்ணமே அடிப்படையாதலால், எண்ணத்தின் தூய்மை முதன்மையானது. ஆகையால் மனத்தில் மாசு இல்லாத தன்மை பெற வேண்டும்; அறம் அவ்வளவே. மனம் மாசு நீங்காமல் செய்யும் செயலும், சொல்லும் சொல்லும் வீண் ஆரவாரமானவை; அறம் அல்ல.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற (34)

என்பது வள்ளுவம். இதனைச் சோம்பல் உடையோர் தமக்குச் சாதகமாக அணைத்துக் கொண்டு செயலின்றி இருந்து விடுகின்றார்கள். ஆனால் திருவள்ளுவர் இந்த அதிகாரம் முழுமையும் அறம் என்பதைச் செயல் முகத்தில் வைத்தே வற்புறுத்துகின்றார். இதற்கு உள்ளொன்று புறமொன்றாக இல்லாமல் இரண்டும் ஒத்திருக்க வேண்டும் என்பதற்காக அறச்

செய்கை என்பது மன அழுக்கு இல்லாமல் நடந்து கொள்வது என்றுஒரு முக்கியத்துவமும் கூறினார். 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்' என்பதில் அறன் என்று வரும் சொல் செய்கை என்னும் பொருளுக்கு உரியது. முன் குறளில் (33) கூறிய 'அறவினை' மன அழுக்கு அற்றிருக்க வேண்டும் என்பது கருத்து.

பொறாமை, அவா, வெகுளி, இன்னாச் சொல் இந்த நான்கையும் கடிந்து நடப்பது அறமாகும்.

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம் (35)

என்பது பொய்யா மொழி. இங்கும் 'அறம்' என்ற சொல் 'அறச்செய்கை'யை உணர்த்தும். அதனால் அதன் வினைச் சொல் நடைபெறுவது என்னும் கருத்தில் 'இயன்றது' என வந்தது. 'அறம்' என்பதற்குச் செயல் முகமே தேவை என்றாலும் அதற்கு மனமும் தூய்மையாய் இருக்க வேண்டும் என்னும் கருத்தை வற்புறுத்தவே 'மனத்துக் கண்' (34) என மனமும் 'இன்னாச் சொல்' (35) எனச் சொல்லும் இரண்டு குறள்களில் நினைவூட்டப் பெற்றன. மனமும் சொல்லும் செயலுக்குத் துணையாவன. செயல் இல்லை என்றால் நினைவும் சொல்லும் உருவாகப் பயன்படுவதில்லை. நினைக்க மட்டும் வல்லவர் களாகவும், சொல்ல மட்டும் திறன் படைத்தவர்களாகவும் இருந்தால் அந்நினைவும் சொல்லும் பிறரைச் செயலுக்கு ஊக்காது. செயலில் சென்று முடியாத நினைவாலும், சொல்லாலும் யாருக்கு என்ன பயன்? அதனாலேயே அறத்தை **'அறவினை'** என்று வள்ளுவர் பெருமான் செயலுக்கேற்பப் பெயர் கொடுத்தார். அன்றியும் 'செல்லும்வாயெல்லாம்

செயல்'(33) 'இயன்றது அறம்' (35) 'அறம் செய்க'(36) 'செயற்பாலது அறனே'(40) என்றெல் லாம் ஆசிரியர் அறத்தைச் செயல்முகமாக்கினார். 'அறம் நினைக்க' 'அறம் சொல்க' என்றெல்லாம் சொல்லாமல் 'அறம் செய்க' எனச் செய்கை வகையில் எடுத்துக் காட்டினார். ஔவைப் பாட்டியும் 'அறம் செய விரும்பு' (ஆத்திசூடி) எனச் செயல் வடிவில் அறிவுறுத்து தல் ஈண்டு நினைவு கூர்தற்குரியது[2].

அறம் செய்வதில் தயக்கமோ காலம் தாழ்த்தவோ ஒத்தி வைத்தலோ கூடாது 'இப்போது இளமைப் பருவம். ஆகையால் அறத்தைப் பற்றிக் கவலை வேண்டா; பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்று புறக்கணிக்கக் கூடாது. இளமை முதற்கொண்டே அறம் செய்ய வேண்டும்; அவ்வாறு செய்யும் அறமே. அழிவு வருங்காலத்தில் அழியாத துணையாக நின்று காக்கும்.

அன்றறிவாம் என்னாது அறம்செய்க; மற்றுஅது
பொன்றுங்கால் பொன்றாத் துணை (36)

என்பது வள்ளுவர் வாய்மொழி.

அறம் என்ற சொல்லுக்கு 'நன்று' என ஒரு பெயர் உண்டு. 'வீழ்நாள் படாமை நன்று ஆற்றின்' (38) என்னும் குறட்பாவில் இது குறிக்கப்பெறுகின்றது. இதிலிருந்து நோக்கினால் நற்செய்கைகளைத்தான் அறம் என்பது என்னும் கருத்து தெளியப் பெறும். அறம் அழியாதது; இதைப் 'பொன்றாத் துணை'(36) என்பர் வள்ளுவர் பெருமான். காரணம், அவ்வழியாமையோடு செய்தவனை நாடி ஒரு நெறிக் கொண்டு எக்காலத்தும் தன் பயனைத் தந்து இன்பம் பெருக்கி வரும்

2. பாரதத்தில் 'கன்னன் கதையை' நினைவு கூரலாம்.

இந்த இயக்கம்; அதற்கு இறைவன் இயக்கத்தால் கிடைக்கின்றது[3]. அறத்தை இதனால் அறத்தாறு (37) என்னும் நெறிப் பெயரால் வள்ளுவர் பெருமான் ஓர் எடுத்துக் காட்டுடன் விளக்குவர்.

வாழ்க்கையில் அறியாமை காரணமாகக் கொள்ளப் படும் உயர்வு தாழ்வுகளை வைத்து அறத்தை அளந்தறியக் கூடாது. அகத்தே எண்ணும் எண்ணங்களின் தூய்மையாலும் நெஞ்சின் இன்ப துன்ப உணர்வுகளாலும் அறத்தை அறியக் கூடுமே அல்லாமல், புறத்தே உள்ள உயர்வு தாழ்வுகளால் அறிய முடியாது. ஆகையால் பல்லக்கைச் சுமப்பவன், ஊர்பவன் இவர்களிடையில் வைத்து, அறஞ்செய்யாத காரணத்தால் சுமக்கின்றான் என்றும், இவன் அறஞ்செய்த காரணத்தால் ஊர்கின்றான் என்றும் அறத்தின் பயனை அளந்து கூறவேண்டா; சுமப்பவன் இன்புறுகின்றான் எனவும், ஊர்கின்றவன் துன்புறுகின்றான் என்றும் கூறமுடியாது. இன்ப துன்ப உணர்வுகளை நெஞ்ச நிலையால் அறிய முடியுமே அல்லாமல் இத்தகைய வேறுபாடுகளால் அறிய முடியாது. அரியணை மேலிருந்து அழுது கலங்குவாரும் உண்டு. எளிய வாழ்வில் நடைபாதையில் வாழ்வார் அமைதியாக இன்புறு வதும் உண்டு. வாழ்க்கைக் கடமைகளில் எது தன்னலங் குறைந்ததாய்ப் பிறர்க்கு நன்மை மிகுந்ததாய் உள்ளதோ

---

3. சிவப்பிரகாசம் - 34.

அதுவே உயர்ந்தது[4]. இன்பம் நல்குவது. எது தன்னலம் மிகுந்ததாய்ப் பிறர்க்கு நன்மை குறைந்ததாய் உள்ளதோ அதுவே தாழ்ந்தது; துன்பம் விளைவது. ஆகையால் புறத் தோற்றத்தைக் கண்டு அறியாமையால் காண்பிக்கும் உயர்வு தாழ்வுகளைக் கொண்டு அறத்தின் பயனை அறிந்தறியக் கூடாது.

> அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
> பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை (37)

என்பது உலகுக் கெல்லாம் ஒளி காட்டும் ஒளி விளக்கு.

உலகத்தில் மக்கள் பலப்பல வகைகளில் இன்பம் காணுதல் உண்டு. செல்வத்தால் அறிவால் இன்பங்கள் காண்பது மட்டுமின்றி, காமத்தால் கள்ளால் சூதால், இன்னும் இவை போன்று பல்வேறு தீமைகளாலும் இனம் காண்பதை அறிவோம். பிறரைத் தண்டித்தலில் கூட இன்பப் படுவதும் உண்டென்று வள்ளுவர் பெருமானே 'ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம்' (156) என்று கூறுவார் இங்ஙனமெல்லாம் வாழ்க்கையில் இன்பம் காண்பதற்கு மக்கள் பலவாறாக

---

4. பல்லக்கைத் தாங்கிச் செல்வோரும் மனிதரே அதில் ஏறிச் செல்வோரும் மனிதரே. இருவரும் ஒருவழியில் பிறந்தவரேயாவர். இருவரும் தொழில் முறையில் ஈடுபட்டவரே ஆவர். அறநெறி தொழிலிடைப் பொதுவாய் இலங்குவது. அறநெறி பல்லக்கு தாங்கலில் சுருங்கியும் அதில் செல்கையில் பெருகியும் நிற்பதோ? இல்லை. பல்லக்கைச் சுமந்து செல்வோரும் அறநெறி நின்றால் அறவோர் ஆகலாம். ஆகையால் அறவோர் ஆகும் வாய்ப்பு இருவருக்கும் உண்டு. ஒருவர்க்கு மட்டும் அவ்வாய்ப்பு இல்லை. அறத்தாறு ஒரு சாரார் பக்கம் சாயும் தன்மையுடையதன்று (திரு.வி.க. அவர்களின் திருக்குறள் விரிவுரை, காண்க) இப்புதுக் கோணச் சிந்தனை உளங் கொள்ளத் தக்கது.

முயல்கின்றனர். இவை அத்தனையும் இவைபோல்வன பிறவும் தருவன தக்க இன்பம் அல்ல; சிறுமை இன்பங்களே. இவை நிலையுள்ளனவும் அல்ல. 'அறத்தான் வருவதே இன்பம்' என்பது வள்ளுவரின் அசைக்க முடியாத முடிபு.

அறம் ஒன்றே மனச் சான்றை மகிழ்விக்கும்; அந்த மனச்சான்றின் மகிழ்ச்சியே உண்மையான இன்பமாகும். மனச்சான்று ஒருவனைச்சுடும்போதும் (293) குற்றங் காட்டும் போதும் (272) ஒருவன் கண்ணுக்கும் செவிக்கும் மூச்சிற்கும் நாக்கிற்கும் உடம்பிற்கும் இன்பமாக என்னென்ன தேடித் திரியினும் அவை இன்பம் ஆகா; அவற்றால் மனம் அமைதி யுறாமல் மேன்மேலும் அலைந்து வருந்திக் கொண்டே இருக்கும். ஆகையால் அறத்தால் வருவதே உண்மை இன்பமாகும். மற்றவை எல்லாம் போலி இன்ப மாகும். புகழும் இல்லாதவையாகும்.

அறத்தான் வருவதே இன்பம்;மற் றெல்லாம்
புறத்த புகழும் இல (39)

என்பது பொய்யா மொழி.

அறத்தாற்றால் வரும் இன்பம் இந்த அளவோடு மட்டு மின்றி வாழ்நாள் வழிஅடைக்கும் தடைக்கல்லாகவும் நின்று எல்லாத் துன்பங்களையும் உள்ளடக்கிய பிறவித் துன்பத்தையே மாற்ற வல்லதாகிய பேரின்பம் பயப்பதாக உள்ளது என்பதும் வள்ளுவர் பெருமானின் கருத்து. அதனால் தான்,

செயற்பாலது ஓரும் அறனே, ஒருவற்கு
உயற்பாலது ஓரும் பழி (40)

என்ற இறுதிக்குறட்பாவில் 'செய்யத்தக்கது அறனே; தவிரத்

தக்கது பழியே' என்று அவர் முடித்த முடிவு உரைத் தருளினார். 'செய்யத்தக்கது' என்றதனால் அறன் என்பது அறச் செய்கையை உணர்த்தும் என்பது தெளிவு. அதற்கு எதிர்ச் செய்கையே அதாவது விட்டு நீங்கத் தக்கதே பழி எனவும் இக்குறளில் வருகிறது. 'பழி' என்பது இவற்றால் பழிச் செய்கையாகும்.

அறத்துக்கு எதிர்ச்சொல்லாகப் 'பழி' என்பதைப் பெருமான் நிறுத்தியதால், அறத்தால் **'புகழ்'** வரும் என்பது தானே புலப்படும். அதனால் அதன் எதிர்ச் செய்கையால் **'பழி'** வரும் என்பதும் உடன் புலப்படும்[5].

---

5. ஒரு காலத்தில் திருச்சி மாவட்ட வாரியத் தலைவராக இருந்த திரு. இராஜா சிதம்பரம் என்ற பெரியார் 'பையன்' என்பதற்குப் பெண்பால் சொல் என்ன என்று கேட்டார். சொல்ல முடியவில்லை. சொல் இல்லை. தமிழில் உள்ள அண்ணன், தம்பி என்ற சொற்களுக்கு ஏற்ற ஆங்கிலச் சொற்களும் இல்லை. Elder Brother, Younger Brother என்ற சொற்களை உண்டாக்க வேண்டும். வடமொழியிலும் இல்லை. மூத்த சகோதரன், இளைய சகோதரன் என்று சொற்களை உண்டாக்க வேண்டும். இங்ஙனமே பல்வேறு வண்ணங்களை விளக்கும் சொற்கள் எம் மொழியிலும் இல்லை. எம்மொழியிலும் எல்லாவற்றையும் விளக்கும் சொற்கள் இல்லாத குறை உண்டு. கத்திரிப்பூ கலர் சேலை, இலைப் பச்சை சேலை என்று சொற்களை உண்டாக்கிக் கொள்ள வேண்டிய நிலைதான். இத்துடன் இவை நிற்க.

6. வாழ்க்கைத் துணைநலம்

அன்புடன் வாழ்வதே இல்வாழ்க்கையின் பண்பு. அறத்தைப் போற்றி வாழ்வதே இல்வாழ்க்கையின் பயன் (45)[1] அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை. (49)[2]. மற்றவர் களையும் நல்வழியில் வாழச் செய்து தானும் அறநெறி யிலிருந்து தவறாமல் வாழவல்லது இல்வாழ்க்கை. ஆகையால் தாம் மட்டிலும் நன்மை அடைவதற்காகத் தவம் செய்வோரின் (துறவற) வாழ்க்கையைவிடப் பிறர் நலம் கருதிய இல்வாழ்க்கையே சிறந்தது.

ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து (48)[3]

என்பது வள்ளுவர் பெருமானின் வாய்மொழி; பொய்யா மொழி.!

இல்லறம் சிறப்பது ஆதலின் வாழ்க்கைத் துணை நலமாக இருக்கும் பெண்ணைப் பொறுத்தது. 'இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை' என்பது பாட்டியின் வாக்கு. அவள் இல்லத்தரசியாக இருப்பதனால் 'இல்லாள் - இல்லத்தை ஆள்பவள்' எனக்குறிக்கப்பெற்றாள். இதுபோல் கணவனைக் குறிக்கும் சொல் இல்லை. அவனைக் குறிக்க இல்வாழ்வான் என்ற ஒரு சொற்றொடர் உள்ளதேயன்றி சொல் இல்லை. அப்படி ஒரு சொல்லை விரும்பி 'இல்லான்' என்று

1. இல்வாழ்க்கை
2. மேலது - 9
3. மேலது - 8

போட்டுக் கொண்டால் விபரீதப் பொருளைத் (ஒன்றும் இல்லாதவன்) தந்துவிடும்.

இல்லாளின் சிறப்பை இல்லவள் மாண்பானால் இல்லது என்னை? மாணாக்கடை உள்ளது என்னை? (53)[4] என்று ஒரு குறட்பா ஓர் உண்மையை நமக்குப் புலப்படுத்துகின்றது. இல்லாளின் குணநலம், பொருள் நலங்களை எந்த வேளை யிலும் எந்த நிலையிலும் இயக்கிப் பெருக்கிப் பயன் செய்ய வல்லதாய் உள்ளது. இதனால்தான் வள்ளுவர்பெருமான் 'பெண்ணின் பெருந்தக்க யாவுள?'(54)[5] என்ற வினா எழுப் பினார். வாழ்க்கைத்துணையாகப் பெண்ணை எடுத்ததே இச்சிறப்பைப் புலப்படுத்தும். ஈண்டுக் குறிப்பிட்ட குறளின் அஃறிணை முடிவு முக்கியமாய்க் குணநலனை நினைந்து எழுந்தது. பெண்ணின் என்பதற்குப் பெண்மையை விட என்பது பொருள்.

ஒருவருக்கு வாய்க்கும் மனைவி இல்லறத்திற்குத் தக்க நல்ல பண்பு உடையவளாக இருக்கவே வேண்டும். தன்னைத் துணையாகக் கொண்ட கணவனுடைய வருவாய்க் குத் தக்க வாழ்க்கை நடத்த வேண்டும். அத்தகையவளே நல்வாழ்க்கைத் துணை.

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (51)[6]

என்பது பொய்யாமொழி. இவ்வாறு இல்ல றத்திற்கு ஏற்ற பண்பு மனைவியிடத்தில் இல்லையானால், அந்த இல்வாழ்க்கை வேறு என்ன சிறப்பு பெற்றிருந்தாலும் பயன் இல்லை.

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித்து ஆயினும் இல் (52)

4. வாழ்க்கைத் துணை நலம் - 3
5. மேலது - 4
6. மேலது - 1

என்பது வான்மறை வள்ளுவம்.

இல்வாழ்வானுக்குத் துணையாக நிற்பதேயன்றிப் பெண்ணுக்குத் தனிச் சிறப்பும் உண்டு. கற்பு என்னும் உறுதி உண்டாகப் பெற்றால் பெண்ணை விடப் பெருமையுடைய நிலை வேறு இல்லை.

பெண்ணின் பெருந்தக்க யாவுள? கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின் (54)

என்பது வள்ளுவர் வாக்கு. சீதாப்பிராட்டியின் கற்பைப்பற்றி அண்ணல் அநுமன் வாக்கினால் இரண்டு பாடல்களை ஈண்டு நினைவு கூர்ந்து மகிழலாம்.

விற்பெருந் தடந்தோள் வீர!
வீங்குநீர் இலங்கை வெற்பின்
நற்பெருந் தவத்த ளாய
நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற்பிறப்பு என்ப தொன்றும்
இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும்
களிநடம் புரியக் கண்டேன் [7]

என்பதையும்,

சோகத்தாள் ஆய நங்கை
கற்பினால் தொழுதற்கு ஒத்த
மாகத்தார் தேவி மாரும்
வான்சிறப்பு உற்றார் மற்றைப்
பாகத்தாள் அல்லள் ஈசன்
மகுடத்தாள் பதுமத் தாளும்
ஆகத்தாள் அல்லள் மாயன்
ஆயிரம் மோலியாளால் [8]

7. கம்பரா. சுந்தர. திருவடிதொழுத படலம் - 62.

8. மேலது - மேலது - 67

என்பதையும் சந்தர்ப்பத்தை நோக்கி எண்ணிப் படித்து மகிழலாம்.

பெண்கள் நிறை என்னும் பண்பினால் தம் நெஞ்சத்தை நெறியில் நிறுத்திக் காத்துக் கொள்ளும் காப்பு மிகச் சிறந்த முறையாகும். இதனை நோக்க மதில் முதலியன அமைத்துக் காப்பவர்களின் காவல் முறை பயனற்றதாகும்.

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை (56)

என்பது பொய்யாமொழி. இந்தப் பண்பினால் தன்னையும் காத்துக் கொண்டு, தன்னைத் துணையாகக் கொண்ட கணவனையும் காத்து, இருவரும் ஒருமனத்தோடு நடத்தும் இல்வாழ்க்கையின் நன்மை மிக்க புகழையும் காத்துச் சோர்வு இல்லாமல் வாழ்கின்றவளே பெண் என்னும் சிறப்புக்கு உரியவள்.

தற்காத்துக் கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்(57)

என்பது வான்மறை வள்ளுவம்.

இல்லாளின் சிறப்பினால் கணவனுக்கு இவ்வுல கில் ஏறுபோல் பீடுநடை உண்டாதலும் (59), கணவனது அன்பைப் பெற்ற பெண்டிர் மேல் உலகத்தில் பெருஞ் சிறப்புப் பெறுதலும் (58) இரண்டு குறட்பாக்களில் நுவலப்பெற்றுள்ளன. ஒருவரிடத்தில் ஒருவர் அன்புடையவரானால் இருவருக்கும் இவ்வுலகத்தில் நலம் உண்டு என்று வள்ளுவர் பெருமான் கூறாமல், கணவனுக்கு இவ்வுலகிலும் மனைவிக்கு மேல் உலகிலும் நலமுண்டு என்று கூறுவது அவர் ஏதோ ஒருவர் பக்கமாகப் பேசுகின்றார் என்பதுபோல் தோன்றும் அப்படியல்ல;

பெண்ணின் மாட்சியே இரண்டு குறள்களிலும் வந்துள்ளன. கணவன் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பெண்டிரின் பெருஞ்சிறப்பு ஒரு குறளிலும் (51), புகழ்க்குரிய அறக் கடைமைகளைப் புரியும் இல்லாளின் மாண்பு மற்றொரு குறளிலும் (53) குறிக்கப் பெற்றுள்ளன. இருவருக்கும் இவ்வுலகியில் நலம் இருப்பதோடு மனைவியின் மாண்பு சிறப்பால் மேல் உலகத்திலும் நலம் விளைவிப்பதாய் உள்ளதென்று உண்மை கூறியவாறாம்.

அங்ஙனமாயின் கணவனுக்கு மேல் உலகப் பேறு இல்லையோ என்று ஐயுற வேண்டியதில்லை "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும், தெய்வத்துள் வைக்கப்படும்" (50) என்பதால் அவன் வானுறையும் தெய்வத்துள் ஒருவனாக இடம் பெறுவான் என்று பிறிதோரிடத்தில் கூறப் பெற்றுள்ளது. இங்கே கணவன் - மனைவி என இருவரையும் ஒருங்கு குறிப்பிடும்போது அவ்விருவரில் பெண்டிரின் பெருஞ்சிறப்பு விளக்கப் பெற்றது.

மனைவியின் குணத்தை 'மங்கலம் என்ப மனை மாட்சி' (60) என்பதில் 'மங்கலம்' என்னும் சொல்லால் வள்ளுவர் பெருமான் சிறப்பிப்பார். 'மங்கலம்' என்பதை இயற்கை அழகு என்று சிலப்பதிகார உரை ஆசிரியர் அடியார்க்கு நல்லார் கூறுவார்[9]. அஃது அழியாத வாடாத தன்மை! அத்தகைய மங்கல இயற்கை அழகுக்கு மேலும் அழகு ஊட்டுவதாகிய அணிகலன் போன்றது மக்கட்பேறு என்பவற்றையெல்லாம் அநுபவித்து மகிழ்கின்றோம்.

---

9. சிலப்-மங்கல வாழ்த்து

7. தாயும் நூலாசிரியரும்

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் (69)

இந்தக் குறளின் பொருளை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இதில் உள்ள பொருளை இரண்டு பகுதிகளாகப் பிரித்து நோக்க வேண்டும். அவை (1) தாய் குழந்தையைப் பெறுதல் (2) பிறந்த குழந்தை வளர்ந்து சான்றோனாகப் புகழ் பெறுதல் என்பவை.

(1) தாய் குழந்தையைப் பெறுதல்: குழந்தை தாயின் கருப்பையிலிருந்து வெளி வருதலைச் சிந்திக்க வேண்டும். இதுதான் 'பிரசவ வேதனை' என்பது. உடற் கூற்றுப்படி இதனை விளக்கத் துணிந்தால் பல பக்கங்களாக விரியும். சுருக்கமாக சில செய்திகள் ஈண்டு தரப் பெறுகின்றன.

பிரசவ வேதனையின் கால அளவு குழந்தையின் பருமன், தாயின் இடுப்பெலும்புக் கட்டின் அளவுகள், கருப்பைத் தசையின் சுருங்கும் ஆற்றல், தாயின் பொதுவான உடல் நிலை முதலிய பல்வேறு கூறுகளைப் பொறுத்தது[1].

பிரசவங்கள் பல்வேறு வகையில் நடைபெறு கின்றன. தொண்ணூற்றாறு சதவிகிதம் பிரசவங்களில் தலை உதயமே

---

1. இந்த ஆசிரியரின் 'இல்லற நெறி' பக்- 201-207. பகுதியில் விளக்கப் பெற்றுள்ளது.

(Head - presentation) நிகழ்கின்றது. கருப்பையில் குழந்தையின் தலை, கீழாகத்தான் இருக்கும்; கால்களும் கைகளும் வளைந்தோ மடிந்தோ இருக்கும். தலைகீழ் நிலையில் இருப்பதனால் அதுவே பிறப்பின் பொழுது முதலில் வருவது இயல்பாகும். தலை வட்டமாகவும், உறுதியாகவும் இருப்பதால், அது கருப்பையின் வாயினை விரியச் செய்யவும் துணை செய்கின்றது. எனினும் சில சமயம் குழந்தை வேறு நிலையிலும் இருந்து முதலில் முகம், கை, அல்லது கால், ஆசனம் என்ற முறையில் உதயம் ஆவதும் உண்டு. இத்தகைய பிரசவங்கள் 'அடிப்புறப் பிரசவங்கள்' (Breech deliveries) என வழங்கப் பெறுகின்றன.

பிரசவ வேதனையின்றிக் குழந்தை பிறப்பதுதான் இயல்பு. சிறுநீர் கழித்தல், மலங்கழித்தல் நீர் கழிந்த பிறகு இன்ப உணர்ச்சி ஏற்படுவதுபோல் குழந்தை பிறந்தவுடன் இன்ப உணர்ச்சி ஏற்பட வேண்டும். பிரசவ வேதனையின்றிக் குழந்தை பிறப்பதுதான் இயல்பு. இயல்பாக நடைபெற வேண்டிய ஒருநியதிக்கு மக்கள் சிரமப்பட வேண்டியதில்லை. உண்மை யில் பழங்கால மக்களும், இன்று விவசாய மக்கள் இனத்தைச் சேர்ந்த பெண்களும் பிரசவத்தைச் சிரமம் எனக் கருதுவ தில்லை. உறையிலிருந்து வாளை உருவுவது போன்று குழந்தை எளிதாக அவர்கட்குப் பிறந்து விடுகின்றது.

பெரும்பாலான பெண்களுக்குப் பிரசவம் சிரம மாகவே முடிகின்றது. இதனால் 'பிரசவ வேதனை' என்ற சொற்றொடர் மக்கள் வாக்கில் தாண்டவமாடுகின்றது. கருப்பை, பிரசவப் பகுதி, குழந்தை இவை மூன்றில் ஏதேனும் ஒன்றில் கோளாறு ஏற்பட்டாலும் பிரசவம் மிகவும் சிரமமாக முடிகின்றது.

கொப்பூழ்க்கொடி யோனிக் குழலையொட்டி அமைந்தாலும், இடுப்பெலும்புக்கட்டு குறுகிக்குழந்தையின் தலை வெளிவர முடியாமல் இருந்தாலும், குழந்தையின் தலை மேலாகவும் ஆசனம் கீழாகவும் இருந்தாலும் பிரசவத்தில் சிரமம் இருக்கும். முன்னதாக இந்த நிலைகளை மருத்துவப் பரிசோதனைகளால் உறுதி செய்து சிசேரியன் என்ற அறுவை செய்து குழந்தையை எடுத்து விட வேண்டும். சில சிரமமான பிரசவத்தில் 'ஃபோர்செப்ஸ்' என்ற ஆயுதத்தைக் கொண்டும் பிரசவத்தை நிறைவேற்றலாம். இது 'ஆயுதம் பிரசவம்' என்பது. இத்தனை நிலைகளையும் தாண்டி குழந்தைப் பிரசவம் ஏற்பட்டு குழந்தை நன்னிலையில் இருந்தால் தாய் பிரசவ வேதனையை மறந்து உவப்பாள்; மகிழ்வாள்.

இந்தக் குழந்தை நன்முறையில் வளர்ந்து நற்கல்வி பெற்று நல்ல பதவிகளில் அமைந்து உலகோர் மெச்சும் வகையில் பணியாற்றி 'சான்றோன் ' என்று கேள்விப் பட்டால் குழந்தையை பெற்றெடுத்தபோது அடையும் மகிழ்ச்சியைவிட அதிக மகிழ்ச்சியடைவாள்; பெரிதும் உவப்பாள்.

இந்த அநுபவம் பெண்களுக்கு மட்டும்தான் உண்டு. எல்லாப் பெண்களுக்கும் உண்டு. ஆண்களில் சிலருக்கு மட்டிலும் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. சிறுகதைகள் எழுது வோர், நாவல் எழுதுவோர் ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவோர் ஆகியோர் தம் படைப்புகள் அச்சில் வெளியானதைக் கண்ட தும் மகிழச்சியடைவார்கள். கருவுற்ற பெண் கருவுறுவதற்குக் காரணமான புணர்ச்சியில் மகிழ்வதைப்போல, மேற்குறிப்பிட்ட எழுத்துகளைப் படைப்போரும் தாம் எழுதுவதற்குரிய பொருள்களைத் திரட்டும்போது மகிழ்ச்சியடைவார்கள். அவை உருவம் பெற்று கதைகளாகவோ, நாவல்களாகவோ, ஆய்வுக்

கட்டுரைகளாகவோ அச்சில் வெளியாகும்போது கட்டாயம் அவர்கட்கு ஆனந்தம் ஏற்படத்தான் செய்யும். இந்தப் படைப்புகளை வாசகர்கள் படித்து மகிழ்ச்சி அடைதலைக் கேள்வியுறும் போதும் இவை அறிஞர்களின் மதிப்புரைகளாக செய்தித் தாள்களிலும் பருவ இதழ்களிலும் வெளிவருவதைப் பார்க்கும் போதும் படைப்பாளர்க்குப் பெருமகிழ்ச்சி ஏறப்படும். தன் மகனைச் 'சான்றோன்' எனக் கேட்ட தாய்க்கு ஏற்படும் மகிழ்ச்சியைப் போல் அவள் பெரிது உவப்பதைப் போல் படைப்பாளர்களும் பெரு மகிழ்ச்சி அடைவார்கள், பெரிதும் உவப்பார்கள் என்பதற்கு ஐயம் இல்லை. அன்றாட அநுபவத் தில் இவற்றைக் கண்ணுறலாம்.

1950-60 ஆண்டுகளில் நான் காரைக்குடியில் அழகப்பர் ஆசிரியர்க் கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் என் நண்பர் டாக்டர் திருவேங்கடாச்சாரியார் எழுதிய இராமநாதபுரம் அரசர்களைப்பற்றிய நூல் ஒன்றினை இராமநாதபுரம் அரசர் பள்ளியில் வெளியிட்டார். அந்த வெளி யீட்டுரையில் எழுத்தாளர்கட்கும் ஈன்ற பொழுதில் பெரிது வக்கும் அநுபவத்தைப்பற்றி **முதன் முதலாகக்** குறிப்பிட் டேன். இதனைக் கேட்டு மகிழ்ந்த பாரிகாதை எழுதிய பேராசிரியர் இரா. இராகவய்யங்கார் திருக்குமாரர் இராமாநுச அய்யங்கார் (அப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றிக் கொண்டி ருந்தவர்) உடனே எழுந்து ஓடிவந்து என்னைக் கட்டி அணைந்த வண்ணம் "என் தந்தையார் கூட இந்த நுட்பமான கருத்தை ஒரு நாளும் எடுத்துக் கூறவில்லை; தாங்கள் இதனைக் காட்டிய போது எங்களுக்கெல்லாம் மட்டற்ற மகிழச்சி ஏற்படுகின்றது" என்று தம் பாராட்டுதலைத் தெரிவித்து மகிழ்ந்தார். அதன் பிறகு இக்கருத்தை இரண்டு மூன்று

இடங்களில் நூல்களை வெளியிடும் பொறுப்பு வரும் போதெல்லாம் இவ்வநுபவத்தைக் குறிப்பிட்டதுண்டு. அவையிலிருந்தோர் பலர் இக்கருத்தைப் பாராட்டியதைக் கண்டு நானும் மகிழ்ந்தேன். இங்ஙனம் 'வள்ளுவர் குறளில்' புதிய கருத்தும் தென் படுகின்றது என்று முதன்முதலாகக் கூறிய எனக்கும் மகிழ்ச்சி ஏற்படச் செய்கின்றது.

இன்னும் இரண்டு கருத்துகள்: 'கேட்டதாய்' என்பதற்குப் பரிமேலழகர் 'பெண்ணியல்பால் தானாக அறியாமையின்' என்று வலிந்து பொருள் கொண்டிருப்பது தவறு. 'பேதமை என்பது மாதர்க் கணிகலம்' என்ற பிற்காலத்தார் கொள்கை போன்றது இது. இருவர் கருத்தும் தவறு; ஏற்புடைத் தன்று. பெண்குலத்தையே இழிவுபடுத்துவதாகவும் அமை கின்றன. வள்ளுவர் பெருமானுக்கும் உடன்பாடு அன்று என்று கொள்ளுதலே ஏற்புடைத்தாகும்.

மக்கட்பேறு இல்லாத தசரதனுக்கு அப்பேறு ஏற்பட்டதால் மகிழ்ச்சி தந்தது. அதைவிடப் பெருமகிழ்ச்சி ஏற்படுவதைக் கம்பநாடன் கூறுவதையும் காண்போம். 'தீங்கிழை இராவணன் செய்த தீமைதான், ஆங்கொரு நரையதாக அணுகிற்றாம்'[2] என்று கூறுவார். கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபொழுது காதோரத்தில் நரை மயிர் ஒன்றைக் காண்கின்றான் தசரதன். தனக்கு முதுமை வந்துவிட்டதாக உணர்கின்றான். இராமனிடம் அரசுப் பொறுப்பைத் தந்துவிட்டுத் தான் ஒதுங்கிக் கொள்ள நினைக்கின்றான். உடனே மந்திரக் கிழவர்களையும் தந்திரத் தலைவர்களையும் கூட்டித் தன் கருத்தைத் தெரிவிக் கின்றான். நாராயண மூர்த்தி வந்து அவதரித்ததனால் அரசன் கவலை

2. கம்பரா. அயோத்: மந்திரப் -3

கொள்ள வேண்டியதில்லை என்றும் அரசைத் தாங்கும் இராமன் அதைச் சிறப்பாகக் காப்பான் என்றும் கூறி இராமனுடைய குணநலன்களையெல்லாம் எடுத்துரைக் கின்றார் வசிட்டர்[3]. தசரதனுக்குப் பெருமகிழ்ச்சி உண்டாகின்றது. இதனைக் கம்பநாடன்,

> **மற்ற வன்சொன்ன வாசகம்**
> **கேட்டலும் மகனைப்**
> **பெற்ற வன்றினும் பிஞ்ஞகன்**
> **பிடிக்கும் பெருவில்**
> **இற்ற வன்றினும் எறிமழு**
> **வாலவன் இழுக்கம்**
> **உற்ற வன்றினும் பெரியதோர்**
> **உவகையின் ஆயினான்** [4]

என்று காட்டுவான். பன்னெடுங்காலமாக மகப்பேறு இல்லாது அப்பேறு உண்டான பிறகு தசரதனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை விடவும், இவ்வயைத்து மன்னர் எவராலும் நாணேற்ற முடியாத சிவதனுசு தன் மகன் நாணேற்றும் போது ஒடிந்து விட்டது என்ற செய்தியைக் கேட்ட போது ஏற்பட்ட மகிழ்ச்சியைக் காட்டிலும் இருபத் தொருதலை முறையாகச் சத்திரியர்களைக் கருவறுத்து நின்ற பரசுராமன் தன் மகனிடம் தோல்வியடைந்த நாளில் தனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியைக் காட்டிலும் அதிகமாக மகிழ்ச்சி ஏற்பட்டது என்று கூறுவதைக் கண்டு மகிழலாம்.

3.மேலது -மேலது - மேலது -36-43

4. மேலது. மேலது- மந்திரப் -44

8. மக்கள் செல்வம்

வங்கியில் இலட்சக்கணக்கான பணம் இருப்பு உள்ளவர்களைச் 'செல்வர்' என வழங்குகின்றனர். பழத் தோட்டம், தென்னந்தோப்பு, நஞ்சை புன்செய் உள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் உள்ளவர்களையும் 'செல்வர்' என்றே கூறுகின்றனர். இவர்களையும் இவர்கள் போன்றவர் களையும் 'செல்வம்' உள்ளவர்கள் 'செல்வச் செழிப்புள்ள வர்கள்' என்றும் பேசுகின்றனர். குழந்தைகள் பெற்று இல்லறம் நடத்துபவர்களையும் 'மக்கள் செல்வம்' உடையவர்கள் என்று பொதுமக்கள் பேசுகின்றனர். சிலர் தம் மக்களின் பெயர் களையும் 'செல்வம்' என்று இட்டு வழங்குகின்றனர். எல்லாப் பெயர்களும் பொருள் குறிப்பன வாதலால் பெற்றோர்கள் தம் பிள்ளையை 'செல்வம்' என்று வழங்குகின்றனர். உண்மையில் அவனோ அவளோ 'செல்வம்' தானே!

வள்ளுவர்பெருமான் குழந்தைகளை 'மக்கட்பேறு'[1]

---

1. 'வாழ்க்கைத் துணை நலம்' என்ற அதிகாரத்தின் (6) இறுதிக் குறள் 'மங்கலம்' என்ப மனைமாட்சி மற்றதன் நன் மக்கட்பேறு' என்பது. இதன் பரிமேலழகர் உரையில் இதனால் வாழ்க்கைத் துணைக்கு ஆவதோர் அணிகலம் கூறி, வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது' என்று இருப்பதலால் அடுத்த அதிகாரத்தின் பெயர் 'மக்கட் பேறு' (7) என்று இருக்க வேண்டியது முறை. ஆனால் அதற்கு 'புதல்வரைப் பெறுதல்' என்ற தலைப்பு தரப்பெற்றுள்ளது. 7-ஆம் அதிகாரத்தின் தொடக்க உரையில் தென்புலத்தார் கடன் புதல்வர்களைப் பெறுதலானும் அல்லது...' என்ற தொடர்காணப் பெறுவதால் 'புதல்வரைப் பெறுதல்' என்ற தலைப்பு இட்டனர் போலும்! எனினும் 'மக்கட்பேறு' என்ற பெயரே அதிகாரத்தின் சரியான 'தலைப்பு' ஆகும்.

என்றே வழங்குகின்றார். இச்சொல்லிலும் 'வீடுபேறு' என்பதிலும் 'பேறு' என்ற சொல் 'செல்வம்' என்ற சொல்லை விட அற்புதமான பொருள் தருவதை அறிந்து மகிழ்கின்றோம்.

இன்றைய உலகில் பெரும்பாலும் மக்கள் ஆண் பிள்ளைகளையே விரும்புகின்றார்கள். இவர்கள்தாம் இறந்தால் கொள்ளிவைப்பதற்கும் திவசம் கொடுப்பதற்கும் ஆண் மக்களே தகுந்தவர்கள் என்று கருதுபவர்கள். இவர்கள் பெண்பிள்ளைகள் தம் பெற்றோர்பால் - தாய், தந்தை என்று வேறு பிரிக்காமல் - காட்டும் அன்பையும் பரிவையும் பாசத்தையும் நேசத்தையும் அறியாத அறிவற்ற பிறவிகள்!

'மக்கற்பேறு' அதிகாரத்தில் அன்னைக்கு அருமருந் தனையமகன் செய்யும் உதவி யாது என்று தெரிவிக்காமல் அப்பனுக்கு மட்டும் அம்மகன் செய்யும் உதவி இன்னது என்று தெரிவிக்கின்றாரே ஆசிரியர் வள்ளுவர் என்றும், இதனால் அப்பெருமான் ஆண்பிள்ளைகட்கே முதன்மை தருவதாக அமைகின்றதே என்றும், ஒரு சிலர் தவறாக எண்ணுகின்றனர். அத்துடன் **'மக்கள்'** என்னும் பொதுமையிலிருந்து **'மகனை'** மட்டிலும் தனித்தெடுத்துச் சிலகுறள்களில் ஆண் பிள்ளை கட்கே மேன்மை காட்டுகின்றார் என்றும் கருதுவர். இது தவறு: பெருந்தவறு. இவர்கள் இவ்வதிகாரத்தை நன்கு கற்று வள்ளுவர்பெருமானின் உள்ளத்தின் நுட்பத்தை அறியாத வர்கள் என்றே கருத வேண்டும்.

வள்ளுவத்தை ஆழ்ந்து நோக்கினால் அப்பெரு மான் அப்படியொன்றும் ஆண்மக்களுக்கு மட்டுமே சிறப் பளிக்க வில்லை என்பது புலனாகும். மக்கட்பேறு என்ற அதிகாரத்தில் ஏழு குறள்கள் (1,2,3,4,5,6,,8) 'மக்கள்' என்று பொதுச் சொற்களையே பெற்றுள்ளன. விவரம் :

அறிவறிந்த,
மக்கள் பேறு அல்லபிற (1)

'பழிபிறங்காப்
பண்புடை மக்கள் பெறின் (2)

'தம்பொருள் என்ப தம் மக்கள் (3)

'தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ் '(4)

'மக்கள் மெய்தீண்டல் (5)

தம்மக்கள்
மழலைச் சொல் கேளாதவர் (6)

தம்மில்தம் மக்கள் அறிவுடைமை' (8)

என்பவற்றில் இதனைக் காண்க. மற்ற மூன்று குறள்களில் மட்டும் 'மகன்' என்ற ஆண்பாற் சொல் வந்துள்ளது. விவரம்:

'தந்தை மகற் காற்றும்'(7)

'ஈன்ற பொழுதில் பெரிது
உவக்கும் தன் மகனை (9)

'மகன் தந்தைக்கு ஆற்றும்'(10)

என்பவற்றில் இதனைக் காண்க.

ஆண்மக்கள் பெண்மக்கள் என்ற இருபாலாருள் ஆண்மக்கள் தம் உடல்வலிமையால் புறம் உலாவிச் செயல்புரியும் இயல்பினர்; பெண்மக்கள் தம் உளவலிமை யால் இல்லத்தில் இருந்து துணை புரிபவர்கள். இவ்வாற்றால் நிகழ்ச்சி ஆடவருடையது; சிறப்பு மகளிருடையது. காரணம், உடல் வலிமையைவிட உள்ளத்தின் வலிமையே சிறப்பும் நுட்பமும் இயற்கையான செயலாற்றலும் மிக்கது என்பது

தெளிவு. இதனால் இயல்பாகவே மகளிருள் பெரும்பாலோர் கற்பு வலிமையும் சான்றாண்மைக்குணமும் மிளிர்பவர் களாய்த் திகழ்கின்றனர்.

கல்விக்கும் சான்றாண்மைக்கும் மிக்க முயற்சிகளை மேற்கொள்ளவேண்டிய பேருழைப்பு ஆண்மக்களுக்கே பெரும்பாலும் தேவையாயுள்ளது. அஃதுடன் ஓர் ஆண் மகனது கல்வி நிறைவுக்குத் தந்தையின் முயற்சிகள் இன்றி யமையாதவை[2]. சான்றாண்மை வளர்ச்சிக்குத் தாயின் துணை சாலவும் வேண்டப்பெறுபவை. இந்த இயற்கையைத் தெளிவிப் பனவே 'தந்தை மகனுக்கு ஆற்றும் நன்றி'(7) எனவும், 'தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்'(9) எனவும், 'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி'(10) எனவும் மகனைச் சுட்டிக் காட்டிக் கொண்டு வரும் குறள் பாக்களாகும் என்பதை ஓர்ந்து அறிய வேண்டும்.

'மக்கள்' என்னும் சொல்லைப் பன்மையாகக் கொண்டு 'ஆண் மக்கள்' என்றே பொருள் கொள்ளலாகாதோ? என வினவலாம். அது பொருந்தாது. ஏன் எனில்: அகவலிமையில் சிறந்த பெண்மகளை வள்ளுவர் பெருமான் கருதவே இல்லை என்று ஏற்பட்டு விடும். இஃது அசம்பாவிதம் அல்லவா? ஆண் பெண் இருபாலராய்க் குழந்தைகள் பிறக்கும் இயற்கை நிலைமைக்கும், இருபாலராய் இயைந்து வாழ்க்கை நடத்தும் உலகியல் இன்றியமையாமைக்கும் ஒவ்வாமல் வள்ளுவர் பெருமான் 'மறைநூல்' இயற்றுவது பொருந்தாது அல்லவா?

'மக்கட்பேறு' அதிகாரத்தில் வரும் கருத்துகள், முறைமைகள் முதலியவற்றில் ஆழ்ந்து கருத்தைச் செலுத்தி

---

2. 'தந்தையொடு கல்வி போம்' என்ற பொன்மொழியை நினைவு கூர்க.

நோக்கினால் உண்மைகள் சிலபுலனாவதற்கு உதவி செய்யும். ஆண் பெண் இருபாலாருக்கும் அறிவும் வேண்டும். குணமும் வேண்டும் ஆயினும் ஆண்மக்களுக்கு அறிவுச் சிறப்பு மிகுவதும் பெண்மக்களுக்குக் குணச் சிறப்பு மேம்படுவதும் இயல்பாய் உள்ளன. இஃது இறைவன் கட்டளை போலும்!

'வாழ்க்கைத் துணை நலம்' (அதி.6) என்னும் தலைப்புத் தொடரில் 'நலம்' என்னும் நன்மைப் பண்பு சேர்க்கப்பட்டிருப்பதும், அந்த அதிகாரம் முழுவதும் இல்லத் தரசிக்குக் குணநலங்களே கூறப்பெற்றிருப்பதும் இறுதிக் குறளில் 'மங்கலம் என்ப மனைமாட்சி' எனத் தெள்ளத் தெளிவாகப் பண்பு நலம் பகரப் பெற்றிருப்பதும், அந்தப் பண்பு நலத்தின் நன்கலனாகவே 'நன்மக்கட்பேறு' நவிலப் பெற்றிருப் பதும் மேலுண்மைகளை அரண் செய்வதாக அமைகின்றன. மேலும் அறிவைவிடக் குணத்துக்கே வள்ளுவர்பெருமான் சிறப்புக் கூட்டுவதும் தெளிவாகிறது. 'அரம் போலும் கூர்மையரேனும் மரம் போல்வர், மக்கட் பண்பு இல்லாதவர்' (997)[3] என்ற குறளை யும் ஈண்டுச் சிந்திக்கலாம்.

கீழ்க் கூறிய காரணங்களால் 'அறிவறிந்த மக்கட் பேறு' சிறந்தது என்பதை, ஒரு பிறவியில் பெறுகின்ற பேறாக முதல் குறளிலும் (61) 'பண்புடைய மக்கட்பேறு' சிறந்தது என்பதை எழுமை ஏழு பிறப்புக்கும் உதவும் பேறாக இரண்டாம் குறளிலும்(62) வள்ளுவர்பெருமான் எடுத்துக் காட்டியுள்ளமை நம் கவனத்திற்கு உரியது. 'வாழ்க்கைத் துணைநலம்'(அதி.6) அதிகாரத்தில் **'புகழ் புரிந்தஇல்'** (49)[4] என இல்லத்தரசியைச் சிறப்பித் திருத்தலும் ஈண்டு நினைவு கூர்ந்து

---

3. பண்புடைமை - 7

4. வாழ்க்கைத் துணைநலம் - 9

மகிழத்தக்கது. 'பழிபிறங்காதஇல்' என்பது அதன் கருத்து என்பது சிந்திக்கத் தகும். இதனால் 'அறிவும்' பண்பு மிக்க வாழ்க்கைக்குச் சிறப்பளிக்கக் கூடிய இருபாற் குழந்தைகளையும் 'மக்கள்' என்னும் பொதுப் பெயரால் அப்பெருமான் விதந்து கொண்டு செல்லுதலைச் சிந்திந்து உணர்தல் வேண்டும்.

'மக்கட் பேறு' அதிகாரத்தில்,

தந்தை மகற்குஆற்றும் நன்றி, அவையத்து
முந்தி இருப்பச் செயல் (67)

"தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்உயிர்க்கு எல்லாம் இனிது" (68)

"ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்" (69)

"மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்" (70)

என்ற நான்கு திருக்குறள்களைச் சிந்தித்து ஆய்வோம்.

இந்த நான்கில் முதலாவதில் தந்தை தன் மகனைக் கல்வி கேள்விகளில் அறிவுடையளவனாய் விளங்கும்படி செய்தலைப் பற்றி பேசப்பெறுகிறது. இந்த அறிவு முயற்சி மகனுக்கு மட்டும் கூறுவதாகக் கொள்ளுவதற்கு இல்லை; மகளுக்கும் உண்டு. அஃதுடன் தாய்க்கும் இதில் கடமை இல்லாமல் இல்லை. அவரவர் இயல்பின் பணி செய்யும் கடமை இருவர்க்கும் உள்ளது. இவ்வுண்மை இதற்கடுத்த இரண்டாவது குறளிலேயே கண்டுகொள்ளும்படி திருவள்ளுவர் பெருமான் பெற்றோர் இருவரையும் கருத்தில் கொண்டு. 'தம்மின் தம்மக்கள் அறிவுடைமை' என்று பன்மையில் பகர்ந்து நம் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் விளக்கியுள்ளமை கண்டு தெளியலாம்.

"அப்படியில்லை, 'தம்மின், தம்' என்னும் **பன்மைகள்** தந்தையர் பலரைக் குறிக்கும் பன்மையாகவோ, அல்லது தந்தை ஒருவரையே குறிக்கும் மரியாதைப் பன்மையாகவோ வந்திருக்கலாம் என்று கருதினால் இந்த அதிகாரத்தின் பின் இரண்டு குறள்களில் ஈண்டு **மூன்றாவது நான்காவது** குறள்களில் தன் மகனை எனவும் (69) 'இவன் தந்தை' (70) எனவும் ஒருமையில் கூறியிருப்பது பொருளற்றதாய்ப் போய் விடும் என்பதையும் சிந்தித்தல் வேண்டும். 'தம்மின் தம்மக்கள் அறிவுடைமை' (68) என்பது **பெற்றோர்** எனப்படும் **ஆண் பெண்** இருவரையும் குழந்தைகளாகிய **ஆண் பெண்** இருவரையும் குறிப்ப தென்றே கொள்ளலாம்; அப்படித்தான் கொள்ளவும் வேண்டும். குறள்களின் கருத்தைத் தனித்தனி யாகப் பிரித்து நோக்காமல் குறள்களின் கருத்து **வள்ளுவர் பெருமான் ஒருவரின்** கருத்து எனக் கொண்டு சிந்திக்க வேண்டும். ஒருவரே மாறுபட்ட கருத்துகளைக் கூறார் என்பது நாம் அறிய வேண்டிய உண்மை.

"தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய் உவக்கும்" எனத் தாயின் சொல்லாக வைத்துக் கூறியது உண்மையில் தாய்க்கு மகன் செய்த கடமையே ஆகும். பிறர் புகழும் வாயிலாக, பாராட்டும் வாயிலாக, போற்றும் வாயிலாகத் **தாய் மகிழும்படி மகன் சான்றோனாய்** உயர்ந்து நடந்து மகிழ்விக்கின்றான் என்பதே இதன் பொருள் என்பதை ஓர்ந்து உளங்கொள்ளுதல் வேண்டும். இக்கருத்தை வள்ளுவர் பெருமான் தாயின்மீது வைத்துக் கூறியது குணசாலியாகத் தன் மகனை வளர்க்கும் பொறுப்பு தாய்க்கு இருப்பதைக் காட்டும் பொருட்டு இவ்வாறு கூறினார் எனக் கொள்ளல் ஏற்புடைத்து. தாயின் கடமை, மகன் கடமை **இரண்டும்** 'ஈன்ற பொழுதின்'

என்ற ஒரு குறளில் வைத்தது. தாய்-மகன் உறவிலுள்ள சிறப்பு ஒருமை கருதியதாகும் என்னும் நுட்பத்தையும் நுணுகி அறிதல் வேண்டும். 'தந்தை மகனுக்கு ஆற்றும் கடமையும் மகன் தந்தைக்கு ஆற்றும் கடமையும், தனித்தனிக் குறளில் வைத்தது இருவர்க்கும் உரிய அறிவு முயற்சிகளின் விரிவு கருதி என்னும் நுட்பத்தையும் தெரிந்து கொள்ளல் வேண்டும். ஆதலால் தந்தைக்கு மக்கள் செய்யும் கடமை கூறியதுபோல் தாய்க்கும் கூறவில்லையே என்று கருதுதல் பொருந்தாது. மேலும் இருகுறளால் அறியக் கூடிய உண்மை மற்றொன்றும் உள்ளது. அஃது என்ன? 'சான்றோன் எனக் கேட்ட தாய்' என்றலால் மக்களின் அறிவு நலத்தை விடக் குண நலத்தைத் தாய் விரும்புதல் தெரிகின்றது என்பதை அறிய முடிகின்றது. ஏனென்றால் குணநலத்தால் சிறந்தவரே சான்றோர் ஆதலின்; 'குணநலம் சான்றோர் நலனே' (982)[5] என்ற குறளின் தொடர் இவ்வுண்மையை ஒளிவிட்டுக் காட்டும். இக்கூறியவற்றால் பெற்றோர் மக்களை ஆண் பெண் வேற்றுமை கருதாது செல்வமாகப் போற்றுகின்றனர் என்ற உண்மை அறியப் பெறும்.

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ் (64)

'மக்கள் மெய்தீண்டல்'(65)

என்பனபோல் பொதுவாக **'மக்கள்'** என்றே கூறியுள்ளமையால் இஃது உறுதிப்படும்.

5. சான்றாண்மை - 2

9. வாழை நல்கும் படிப்பினை

அருட்செல்வர்கள் படைத்த மறைகளும் அறிஞர்கள் படைத்த நூல்களும் ஆகியவை யாவும் உலக இயற்கையின் வடிப்புகளேயாகும். ஆகவே எல்லாப் பொருள்களும் உள்ளுறையாக அமைந்து ஏதோ ஒரு வகையில் மக்களுக்கு அறிவுரை நல்கும் வழிவகைகளாவும் அமைகின்றன.

அன்பிலார் எல்லாம் தமக்குஉரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு (72)[1]

அன்பில்லாதவர்கள் எல்லாப் பொருள்களையும் தமக்கே பயன்படுத்திக் கொள்வர்; அன்புடையவரோ தம் உடம்பை யும் பிறர்க்குப் பயன்படுத்துவர்' என்பது இக்குறள் மணியின் விளக்கமாகும். இதனை இயற்கையில் தோன்றியுள்ள வாழை மரம் ஒன்றை எடுத்துக் கொண்டு விளக்குவோம்.

'வாழ்' என்னும் முதனிலையிலிருந்து 'வாழை என்னும் அழகிய பெயரைப் பெற்றுள்ளது அம்மரம். வாழ்வது வாழை என்பதனால்தான் குலைதள்ளிய வாழை மரங்களை, வாழும் வகைக்குத் திருமணம் கூட்டும் இல்வாழ்க்கை மணவிழாக்களிலும் திருவருள் கூட்டும் ஞானவாழ்க்கை கடவுள் விழாக்களிலும் மங்கலமாக நிறுத்தி அணிசெய்விக்கும் மரபு நம் நாட்டில் எங்கும் காணப் படுவதைச் சிந்திக்கலாம்.

வாழை மரம் உலகப்பொருள்களில் ஒன்றாக இருப்பினும், அதற்குத் தனிச் சிறப்புகளும் உள்ளன. 'தனித்தனி

1. அன்புடைமை - 2

முக்கனி பிழிந்து' என்ற வள்ளலார் வாக்கினுள் 'முக்கனி' களிலும் சிறந்த முதன்மைக் கனிவளம் உடைய மரம் அது. அதனை '**ஞானமரம்** என்றும், 'ஞானத்தினும் **சன்மார்க்கமரம்**' என்றும் 'அறத்துக்கு ஒரு மரம்' என்றும் கூறும் ஒரு மரபும் உண்டு. திருக்கழுக்குன்றத்தின் தலமரம் வாழையே. வடலூர் வள்ளலார் அடியார் மரபுக்கு இதனை உவமானமாகக் கொண்டு 'வாழையடி வாழையென வந்ததிருக் கூட்டம்' என்று அருளிச் செய்திருப்பதையும் ஓர்ந்து உளங் கொள்ளலாம்.

வாழைமரம் குலைவிடுகிற வரையில் வாழ்கிறது; பின்னர் அது வீழ்கிறது அதனால் குலை விடுவதற்காகவே அது அடுக்கடுக்காய் இலைவிட்டு வந்ததாகத் தெரிகின்றது. அந்த உயரிய நோக்கம் நிறைவேறியவுடன் வாழை தன் கடமை தீர்ந்து விட்டதாகக் கருதுகின்றது; தான் தோன்றி வளர்ந்த முயற்சி வெற்றியுற்றதாகவும் துணிகிறது. தன் உயிர் வாழ்க்கையை முடித்துக் கொள்ளத் தயார் நிலையில் உள்ளது.[2]

இங்ஙனம் வாழ்வின் ஒரே நோக்கமாய், ஒரே தடவையாய், ஒரே குலையை வழங்கி விட்டு உயிர் விடுகின்ற இந்நிகழ்ச்சியில் உள்ளத்தை உருக்கும் தன்மையுள்ள உண்மை ஒன்று பொதிந்து கிடக்கின்றது.

௨.'வாழைக்குத் தான் ஈன்றகாய் கூற்றம்' என்பது ஔவைப்பாட்டியின் வாக்கு. குலை தள்ளியவுடன் அதனை மக்கள் வெட்டிவிடுகிறார்கள். காய் அதன் கூற்றமா (எமனாய்) விடுகின்றது. இந்த ஒரே குலையைத்தன் கன்றுகளுக்காகவோ ஒ சிறிதும் வைக்காமல் முழுவதையும் பிறர்க்காகவே - உலகுக்காகவே - வழங்கி விடுவதுதான் அந்தப் பேருண்மை. இறுதியில் தன் உடலின் நடுத்தண்டையும் பிறர்க்கே உரியதாக்கி விட்டு மறைந்து விடுகின்றது. கீழ்க்காட்டிய குறளில் உள்ள 'என்பும் உரியர் பிறர்க்கு' என்னும் உயரிய பண்புக்கு எடுத்துக்காட்டாய் அமைகின்றது. வாழைக்கன்றுகளும் தம் தாய் வழியையே பின்பற்றுகின்றன. வாழையின் வாழ்க்கையில்தான் 'மரபுவழி' (heredity) சிறிதும் பிசகாமல், வழுவாமல், ஒழுங்காய் நடைபெற்று வருகின்றது.

10. நன்றி மறவாமை

திருக்குறளை ஓர் உயர்ந்த மணிகள் வைக்கப் பெற்றுள்ள ஒரு பெட்டகத்திற்கு ஒப்பிடலாம். தங்க நகைகள் செய்வோர் அவற்றில் தத்தம் பொருளாதார நிலைக்கேற்றவாறு இரத்தினங்களைப் பதித்து அழகு செய்வர். நகைகளில் பதிக்கப் பெற்றுளள மணிகள் தம் ஒளியைப் பிரகாசிக்கச் செய்து தங்கள் நகைகளின் மதிப்பை உயர்த்துகின்றன. இவ்வொளி புறவொளியாகும்.

பெரும்புலவர்கள் தம் இலக்கிய நகைகளைப் படைக்கும் போது கதைகளில் அல்லது காவியங்களில் ஆங்காங்குள்ள சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு, காவிய மாந்தர்களின் தேவைக் கேற்றவாறு திருக்குறள் மணிகளைப் பதித்து அழகு செய்வர். இம்மணிகள் தாம் விடும் கருத்தொளிகளினால் காவியத்தின் அல்லது கதைகளின் அழகினைப் பெருக்கு கின்றன. இந்த ஒளி அக ஒளி; உள் ஒளி. இந்த ஒளிபடிப்போர் உள்ளத்திற்கு வழிகாட்டி அவர்தம் பண்பாட்டையும் ஒழுக்கத்தையும் பெருமையுறச் செய்கின்றன.

திருக்குறளில் இல்லாத பொருளே இல்லை என்று சொல்லி விடலாம். வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாப் பொருளும் இதில் அமைந்துள்ளன.

எல்லாப் பொருளும் இதன்பால் உளஇதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்[1]

1. திருவள்ளுவமாலை - 29

என்று மதுரைத் **தமிழ்நாகனார்** என்ற சங்கப்புலவர் ஒருவரே குறிப்பிட்டிருப்பது ஈண்டு அறிதற்பாலது. இதனால்தான் எவர் வேண்டுமானாலும் இதன் குறள் மணிகளைத் தம் விருப்பப்படியெல்லாம் கையாண்டிருப்பதைக் காணமுடிகின்றது. சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

செய்ந்நன்றியறிதல்: இப்பண்பு தமிழனின் தலைசிறந்த பண்பு. பிறர் தனக்குச் செய்த நன்றியை மறத்தலாகாது என்பதுதான் அது. இப்பண்பை வள்ளுவர் பெருமான் ஒரு தனி அதிகாரத்தில் பலவிதமாக விளக்குகின்றார். அனைத்திற்கும் சிகரமாகத் திகழ்வது,

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு (110)

என்ற குறள் மணியாகும். பெரிய அறங்களைச் சிதைத்தவர்க்கும் கழுவாய் உண்டு. ஆனால் ஒருவர் செய்த உபகாரத்தை மறந்தவர்க்குக் கழுவாய் இல்லை என்பது இதன் கருத்து. பெரிய அறங்களைச் சிதைத்ததற்கு ஆன் முலை அறுத்தல், மகளிர் கருவினைச் சிதைத்தல், குரவர் தப்பிய கொடுமை முதலிய பாதகங்களைச் சான்றுகளாகக் காட்டுவார்.

கம்பராமாயணம்: இக்கருத்துடைய குறளைக் கம்பன் மிகச் சிறப்பாகத் தனது நூலில் கையாண்டுள்ளான். கார்காலம் கழித்து தனது வானரச் சேனையைக் கொண்டு சீதை இருக்கும் இடத்தைக் கண்டறிவதாகச் சொன்ன சுக்கிரீவன் தான் குறிப்பிட்ட காலத்தில் வரவில்லை. இராமன் சினங் கொள்ளுகின்றான். நிலையினை அறிந்து வருவதற்குத் தம்பி இலக்குவனைக் கிட்கிந்தைக்கு அனுப்புகின்றான். சீறும் சினத்துடன் வரும் இலக்குவன் மகளிர் கூட்டத்துடன் வந்து சந்தித்த தாரையால் மனம் மாற்றம் அடைகின்றான்.

தாமரை வதனம் சாய்த்துத்
தனுநெடுந் தரையில் ஊன்றி
மாமியர் குழுவின் வந்தான்
ஆம்என மைந்தன் நின்றான் [2]

என்றபடி ஆய்விடுகின்றான். அவன் சினமும் தணிந்து விடுகின்றது. இலக்குவனின் சினந்தணிந்தமை கண்டு அநுமன்மெதுவாக அவன் அருகில் வருகின்றான். இலக்குவன் அவனை நோக்கி,

அந்தமிழ் கேள்வ நீயும்
அயர்ந்தனை யாகும் அன்றே[3]

என்று கேட்கின்றான். அதனைச் செவிமடுத்த சொல்லின் செல்வன், செய்ந்நன்றி கொன்றவர்கட்கு அப்பாவத்தை ஒழிக்கும் வழிகூட உளதா? என்று கேட்கின்றான். தாய், தந்தை, குரு, அந்தணர், பசு, பெண் இவர்களைக் கொன்றவர்கள் யாவருமே கழுவாய் தேடிக் கொள்ளலாம். செய்த உதவியை மறந்தவர்கட்கு உய்யும் வழியே இல்லை என்று உணர்த்து கின்றான். அநுமன் வாய்மொழியாகக் கவிஞன்,

சிதை(வு)அகல் காதல் தாயைத்
தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவிஅந் தணரை ஆவைப்
பாலரைப் பாவை மாரை
வதைபுரி குநர்க்கும் உண்டாம்
மாற்றலாம் ஆற்றல்; மாயா
உதவிகொன் றார்க்குஒன்று ஏனும்
ஒழிக்கலாம் உபாயம் உண்டோ?[4]

---

2. கம்பரா. கிட்கிந். கிட்கிந்தைப் - 48
3. மேலது -61
4. மேலது - 62

என்று கூறுகின்றான். 'எந்நன்றி கொன்றார்க்கும்' என்ற திருக்குறள் தொடருக்கு 'சிதைவு அகல்.... வதைபுரிகு நர்க்கும்' என்ற கம்பனின் பாடல் பகுதி விளக்கம்போல் அமைந் திருப்பதைக் காண்கின்றோம் அன்றோ?

'குறிப்பறிதல்' என்ற பண்பு நாடாளும் அரசனுக்கு மிகவும் இன்றியமையாதது என்பதை யாவரும் அறிவர். முகத்திலிருந்து அகத்திலுள்ளவற்றை அறிந்து கொள்ள முடியும் என்பதை வள்ளுவர்,

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம் (706)[5]

(கடுத்தது - மிக்கது)

என்ற குறள் மூலம் புலப்படுத்துவார். தன்னை அடுத்த பொருளின் நிறத்தைப் பளிங்கு காட்டுவது போல ஒருவரது உள்ளக்கிடக்கை முகத்தில் பிரதிபலிக்கும். இதனைக் காட்டும் முறையைக் காண்போம். சீதாப் பிராட்டியை இராமனிடம் கொண்டு விட்டு விடும்படி வீடணன் பலவிதங்களில் கூறியும் இராவணன் பிடிவாதமாக இருக்கவே, அவன் இராமனிடம் அடைக்கலம் புகுந்து விடுகின்றான். மாற்றார் பக்கத்திலிருந்து வந்தவனை ஏற்றுக் கொள்ளலாமா என்ற ஆராய்ச்சி (ஜனநாயக முறைப்படி) நடைபெறுகின்றது. சுக்கிரீவன் சாம்பவான் முதலியோர் 'கூடாது' என்று ஒரு முகமாக முடிவு கூறுகின்றனர். அநுமன் 'ஏற்றுக் கொள்ளலாம்' என்ற உறுதியான முடிவு கூறி அதற்குரிய காரணங்களையும் தெரிவிக்கின்றான். 'வீடணன் முகத்திலிருந்தே அவன்' உள்ளத்தை அறிந்து கொள்ளலாம், என்று கூறும் மாருதி,

---

5. குறிப்பறிதல் - 6

'உள்ளத்தின் உள்ளதை உரையின் முந்துற
மெள்ளத்தம் முகங்களே விளம்பும் ஆதலால்'
கள்ளத்தின் விளைவெலாம் கருத்தில்இருள்ஆம்
பள்ளத்தின் அன்றியே வெளியில் பல்குமோ?[6]

என்று தெரிவிக்கின்றான்., கீழ்க்குறிப்பிட்ட குறட்பாவின் கருத்து எவ்வளவு நயமாகப் பாடலில் பெய்யப் பெற்றுள்ளது என்பதை அநுபவித்து மகிழ வேண்டும்.

திருக்குகுறளில் 'கூடாநட்பு'(83) என்ற அதிகாரத்தில் உள்ள

தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து (828)

என்ற குறள் (8) அற்புதமானது. பகைவரின் சொல்வணக்கத் தையும் கைகூப்பலையும் நம்பலாகாது[7]. இக்கருத்து கம்பராமா யணத்திற்கு முற்பட்ட இலக்கியமாகிய சீவகசிந்தாமணியில் எங்ஙனம் எடுத்தாளப் பெற்றுள்ளது என்பதைக் காட்டுவேன்.

கனகமாலையை விட்டுச் சீவகன் தன் நண்பர் களுடன் தண்டாரண்யத்தில் தவப்பள்ளியிலுள்ள அன்னை விசயையைக் காண்கின்றான். தண்டாரண்யத்தை நோக்கி வரும்போது நந்தட்டன் பதுமுகனிடம் அவன் எவ்வாறு விசயனுக்கு மெய்காப்பாளனாக இருந்து அவனைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறுகின்றான். பகைவர்களைத் தெளிவது அருமை என்று கூறும் முகத்தான்,

தொழுததம் கையின் உள்ளும்
துறுமுடி அகத்தும் சோர
அழுதகண் நீரின் உள்ளும்
அணிகலத்(து) அகத்து மாய்ந்து

6.கம்பரா. யுத்த. வீடணன் அடைக் - 91.

7. முத்திநாதன் கதையில் (பெரிபுரா) இது நன்கு தெரியும்.

பழுதுகண் அரிந்து கொல்லும்
படையுடன் ஒடுங்கும் பற்றாது
ஒழிகயார் கண்ணும் தேற்றம்;
தெளிகுற்றார் விழிகுற் றாரே[8]

என்று கூறுகின்றான் .

கம்பராமாயணத்தில் ஒரு நிகழ்ச்சி: வேள்வி காத்தற் பொருட்டு இராமலக்குமணர்களைப் பெற்றுக் கானகத்தை நோக்கி விசுவாமித்திரன் வருங்கால் ஒரு சோலை குறுக்கிடுகிறது. அதன் வரலாறு கூறுபவனாய் மாவலிகதையைக் கூற நேரிடுகின்றது. இந்திரனிமிருந்து வலியக் கவர்ந்த வான் மண்களைத் திரும்பப் பெற்றுத் தருவதற்காக வாமனனாக வருகின்றான் திருமால்[9]. வாமனன் மூவடிமண் வேண்டிப் பெறவந்தபோது, மாவலியின் குருவாகிய சுக்கிரன் தடுத்தான் தன் சீடனுக்கு எவ்வித தீங்கும் நேரிடக்கூடாது என்ற கருத்தால். அதற்கு மறுமொழி கூறும் பாங்கில் மாவலி கூறுவது:

வெள்ளியை யாதல் விளம்பினை மேலோர்
வள்ளிய ராக வழங்குவ தல்லால்
எள்ளுவ என்சில இன்னுயி ரேனும்
கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால் [10]

'உன்னிடம் இப்பொழுது யாசகனாய் வந்தவன் மாயவனாதலால்

8. சீவகசிந்தா. 189 (விமலை -3) சோர - ஒடுங்கும்படி; அணிகலம் - ஆபரணம்; ஒடுங்கும் - மறைந்திருக்கும்; பழுது - குற்றம்; கண் அரிந்து - கூடா நட்பினைத் தன்னிடத்தை இல்லாதபடி நீக்கி.

9. என் அருமை நண்பர் கோவை G.D, நாயுடு அவர்கள் சொன்னது: திருமால் சரியான வடிவத்துடன்தான் வந்தான். யாசிக்கப் போகிறோமே என்ற எண்ணத்தால் அவன் உள்ளம் சுருங்கிற்று. அதனால் உடலும் சுருங்கி வாமனனானான். 'ஏற்பது இகழ்ச்சி' என்ற கருத்தையொட்டித் திரு நாயுடு அவர்களின் கருத்து அமைந்தது என்று கருதலாம்.

10. கம்ப. பாலகா. வேள்விப் படலம் - 29

அவன் கேட்டதைக் கொடுத்தல் கூடாது; என்னபயனாயின் எதனைக் கேட்டாலும் கொடுப்பது வள்ளல்கட்கு உரிய குணமாதலால் அதுவும் அங்கீகரிக்கப்படமாட்டாது' என்றான். 'தனது உயிர் போவதாயினும், கொடுத்தல் நல்லது, இரத்தல் கூடாது' என்பது இதன் கருத்து; இந்நீதியை 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து, கெடுக உலகியற்றி யான்' (1061)[11] என்ற திருக்குறளைக் கொண்டு அறியலாம். நல்லது கூறுவார் தீயதும் உடன் கூறினார். "நல்லாறு எனினும் கொளல் தீது; மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று' (222)[12] என்ற குறள் இங்கு பொதிந்திருப்பது கண்டு மகிழத்தக்கது.

தொடர்ந்து பேசும் இன்னொரு பாடல்:

எடுத்தொருவ ருக்கொருவர் ஈவதனின் முன்னம்
தடுப்பது நினக்கழகி தோதகவில் வெள்ளி
கொடுப்பது விலக்குகொடி யோய்உனது சுற்றம்
உடுப்பதுவும் உண்பதுவும் இன்றிவிடு கின்றாய். [13]

என்பதால் கொடுப்பதை விலக்குபவனது சுற்றம் உடுப்பதும் உண்பதும் இன்றிக் கெடும். எனவே அவன் கெடுதல் சொல்லப்படாமலே அருத்தாபத்தி பிரமாணத்தால் கொள்ளப்படும். பிறர்பேறு பொறாமை, தன் பேற்றையே யன்றித் தன் சுற்றத்தின் பேற்றினையும் இழப்பிக்கும் என்பதாம்.

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும் (166) [14]

என்ற குறட்பாவின் கருத்துப் பொதிந்துள்ளது இப்பாடலில். 'ஈவதனின் முன்னம்' என்றது தடுத்தலின் விரைவு தோன்ற நின்றது.

11. இரவு அச்சம் - 2
12. ஈகை - 2
13. கம்பரா. பால. வேள்விப் படலம்- 33
14. அழுக்காறாமை - 6

நளன் கதையில் ஒரு காட்சி: 'தமயந்தியின் இரண்டாம் சுயம்வரம்' என்ற செய்தி கேட்டுக் குண்டினபுரத்திற்கு வருகின்றான் ருதுபர்ணன். நளன் அப்பொழுது அவனுக்குத் தேரோட்டி; சமையல்காரனாகவும் செயல் புரிபவன். கார்க் கோடகன் என்ற பாம்புக்கடியில் உருமாறி இருந்தவன். தமயந்தி உருமாறியுள்ள தேர்ப்பாகனைச் சோதிக்க தன்பிள்ளைகளுடன் தோழி யொருத்தியை அனுப்புகின்றாள்.

பிள்ளைப் பாசம் எவரையும் விடாது. நளன் தன் பிள்ளை களைக் கண்டதும் செய்த செயல்களை உணர்த்தும் பாடல்:

மக்களைமுன் காணா மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா - மக்காள்நீர்
என்மக்கள் போல்கின்றீர் யார்மக்கள் என்றுரைத்தான்
வன்மக் களியானை மன் [15].

என்பது நளன் மறைந்தொழுகும் நிலையிலிருந்தும் தன் பிள்ளைகளைக் கண்டமாத்திரத்தில் தன்னிடத்தே அடக்கொணா அன்பு எழுந்ததால் தன்னையும் மறந்து மனநடுங்கிப் பெருமூச்செறிந்து; அவர்களை வாரியெடுத்துத் தோளோடு சேர்க்கின்றான். இந்நிலையில் தன்னிலைமைபற்றிய எண்ணம் அவனுக்கு உதித்தபடியால் அவன் தன்னை மறைத்துக் கொள்ள வேண்டி அன்னியன் போல நடிக்கின்றான். அப்பிள்ளைகளை நோக்கி, "நீங்கள் யாருடைய பிள்ளைகள்? என் குழந்தைகள் போன்று இருக்கின்றீர்களே?" என்று உரைக்கின்றான். இங்குக் கூறியவாறு அன்பு எந்நிலையிலும் வெளிப்படும் என்பதை.

'அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்'(71)[16]

என்ற குறட்பாவினாலும் இதனை உணரலாம்.

15. நளவெண்பா - கலிநீங்குகாண்டம் - 376
16. அன்புடைமை - 1

11. வாழையும் வள்ளுவமும்

இயற்கை மனிதனுக்குப் புகட்டும் பாடம் சொல்லும் தரம் அன்று; அனைத்தும் அதில் அடங்கி இருக்கும் அற்புதம் அளவிடப்படாதது. மனிதன் காணும் கனவுகள், கற்பனைகள், அவன் வடித்த நூல்களின் உள்ளுறை ஆகிய அனைத்தும் உலக இயற்கையின் வடிப்புகளேயாகும். ஊன்றி நோக்கினால் அவை எல்லாப் பொருள்களின் உள்ளுறையாகவும் காட்சியளிக்கும்; பாடம் புகட்டி அறிவு தெருட்டும் வழிவகை களாகவும் திகழும் என்பதும் தெளிவாகும்.

வாழை ஏனை எல்லா உயிர்களையும் விட ஆறறிவும் அற உணர்வும் உடைய மக்கள் இனத்திற்குப் பேருதவியாக இருத்தலால் உயர்ந்த இனத்துடன் சேரும் அருகதை உடையதாகத் திகழ்கின்றது. இத்தகைய பெருந் தகுதியை இயற்கையிலேயே பெற்றுள்ள வாழை மரம் மக்கள் இனத்திற்கு வேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருளுக்கும் உள்ளுறையாகத் திகழ்வதையும் குறிப்பாற் புலப்படுத்துகின்றது. இவற்றினை 'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு'[1] என்ற தொல்காப்பியம் கூறும் நிரல்படி சிந்திப்போம்.

இன்பத்திறம்: வாழையின் தோற்றமே இன்பத்தின் உள்ளுறையாகும். அது வழுவழுப்பாய், ஒழுங்காய், நீண்டு பசிய இலைகளை உடையதாய் மிக அழகாய் அழகிய நங்கையைப்போல் காட்சி அளிக்கின்றது. அதன் அழகு கண்டார் கண்ணைக் கவரும் திறத்ததாய்த் திகழ்கின்றது.

---

1. தொல் - பொருள் - அகத்திணை.

காரைக்குடி வாழ்விலும் (1950-60) திருப்பதி வாழ்விலும் (1960-77) சென்னை வாழ்விலும் (1981 முதல்) வீட்டருகில் வாழைமரங்களை வளர்த்து தோப்புபோல் ஆக்கி அதன் அழகைக் கண்டு களிக்கும் அடியேனுக்கு இது நன்கு தெளிவாகத் தெரியும்.

வாழையைத் 'தகையணங்கு உறுத்தல்' என்றே சொல்லி விடலாம். கைபுனைந்தியற்றா வாழைத் தோப்பின் அழகினை, தனிப்பட்ட வாழை மரத்தின் வனப்பினை - இவற்றின் காட்சிகளை என்னென்றுரைப்பது! இல்லங்களிலும் தோட்டங்களிலும் இவற்றைக் கண்ணுறும்போது நம்மனத்தில் கிளர்ந்தெழும் இன்பநிலையை எவ்வாறு கழறுவது? 'தகையணங்குறுத்தல்' (காமத்துப்பால் - அதி -1) என்பதிலுள்ள குறள் பாக்களைப் படிக்கும்போது நம்மனத்திலும் எழும் காட்சி உணர்வுகளும், வாழையைக் காணும்போது உண்டாகும் உணர்வுகளும் ஏறக்குறைய ஒன்றாக இருப்பதை ஒருவாறு உணரலாம். வாழைத்தோப்பினுள் நுழையும்போது அதன் மட்டையைத் தடவுதல், விரியும் நிலையிலுள்ள குருத்திலையை நீவிப் பார்த்தல், போன்ற செயல்களால் இதனை அறியலாம். 'மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம்' (குறள் 65) என்ற மொழிக்கேற்ப தொட்டுணர்வுக்கு இதமாக இருப்பதை உணரலாம். இவையே வாழையின் இன்பத்திறன்!

பொருள்திறன்: வாழையில் கிடைக்கும், தண்டு, இலை, பூ, காய், கனி முதலியவை அனைத்தும் வாழையின் பொருள் அதிகாரம்; வாழையின் எல்லாப்பொருள்களும் மக்களுக்குத் தேவைப்படுகின்றன. தன்னுடைய பொருள்கள் அனைத்தையும் தனக்காகவோ தன் கன்றுகளுக்காகவோ ஒரு சிறிதும் வைத்துக் கொள்ளாமல், முழுவதையும், பிறர்க்காகவே,

அஃதாவது உலகுக்காகவே, வழங்கி விடுவது அதன் ஒப்பற்ற தனிச்சிறப்பாகும்.

மக்கள் தேடும் தேட்டங்கள் வாழையைப்போல் முற்றிலும் பிறர்க்குப் பயன்படுவதில்லை; பிறர் நலங்களுக் கென்றே தேடப் பெறுவதும் இல்லை. பக்கங்களிலே சூழ்ந் திருந்து, குலைவரையில் கன்றுகள் தாவிவளர்ந்து, காலமெல் லாம் காத்திருந்தாலும், தாய் இறுதியாகத் தள்ளும் ஒரே குலை கூடத் தமக்குப் பயன்படாமல் பிறர்க்குப் போய் விடுகின்றதே என்று சிறிதும் கவலை கொள்ளாமல் வஞ்சினத்திற்குத் தலை காட்டாமல், தாய் வாழையைப் போலவே கன்றுகளும், தாய்வழியை அவ்விடுதலையைக் கடைப் பிடிக்கின்றன. 'குலத்தளவே ஆகுமாம் குணம்' என்ற மொழிக்கு எடுத்துக் காட்டுகளாகத் திகழ்கின்றன அதன் கன்றுகள்!

தாளாற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு (குறள் 212)

என்று வள்ளுவமே கூறும் பற்றற்ற பான்மையை - பண்பை - முற்றும் துறந்த முனிவர்கள் சிலர் பக்கம்தான் காண முடிகின்றது. ஆறறிவு படைத்த மக்கட் பிறப்பினர் அனை வரிடமும் காணப் பெறுவது குதிரைக் கொம்புதான்.

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர் (குறள் 348)

என்ற பொய்யாமொழிக் கிணங்க வாழையைத் தவிர மற்றையவர் மயங்கி வலைப்பட்டவராகவே பெரும்பாலும் காணப்பெறுவதை ஓர்ந்து நோக்கினால் உணரலாம்.

கீழ்க் குறிப்பிட்ட குறளில் (212) "பொருளெல்லாம்... வேளாண்மை செயதற் பொருட்டு" என்பதில் வரும் 'எல்லாம்' என்ற சொல் பொருள் பொதிந்தது. இதில் உள்ள எஞ்சாமைக்

குறிப்புக்கு வாழையைத் தவிர வேறு எடுத்துக் காட்டு காண்டல் அரிது. வாழையின் பொருள் எல்லாம் வேளாண்மையில் - அதாவது பயன்படுதலில் - சற்றும் இழுக்கில்லாதவை. அடியிலுள்ள வேர்க்கிழங்கு, வாழைப் பட்டை, நார், வாழைத்தண்டு, வாழை இலை, சருகு, பூ, காய், கனி முதலிய அனைத்தும் தலை சிறந்த நிலைகளில் பயன்படுகின்றன. பட்டையின் சாறு கூட மருந்துக்குப் பயன்படுகின்றது. அதன் உலர்ந்த சருகு கூட உண் கலனாகவும் தொன்னைகளாகவும் உதவுகின்றது! வாழையில் பயன்படாத பொருள் எதுவுமில்லை. முற்றிலும் பயன்பட்டு வாழை இங்ஙனமே பொருள்திறனை புலப்படுத்துகின்றது.

அறத்திறம்: வாழையின் அறத்திறமோ உள்ளத்தை உருக்கி ஒருங்கே கொள்ளை கொள்ளுகின்றது. அறத்தின் திறம் என்பது இங்கு ஒழுங்குமுறை: அதுவும் கரவற்ற ஒழுங்கு முறை. சில மரங்களில் ஒழுங்கு முறையே இருப்பதில்லை. அவை முடிச்சுகளும் மொக்கைகளும் மலடுகளும் உடையவை. வாழையில் பெரும்பாலும் அக்கரவுகள் இல்லை. வளத்துக்கு ஏற்றபடி வஞ்சனை இல்லாமல் வளர்ந்து குழந்தைகள் போல் இல்லங்களில் ஆடி அசைந்து குழைவாய் விளங்குவன. (அடியேன் காலையிலும் மாலையிலும் இந்தக் காட்சியைக் கண்ணுற்று அநுபவித்து மகிழ்கின்றேன்) வாழையின் ஒவ்வொரு பகுதியிலும் இவ்ஒழுங்கு சிறப்பு மேம்பட்டுத் திகழ்கின்றது.

அடியில் தோன்றும் கன்றுகள் தம் தாய் வாழையைச் சுற்றி அணைவன போல் வளைத்துக் கொண்டு அதன் ஆதரவிலும் அரவணைப்பிலும், அதன் மடியிலேயே அவ்வளவு ஒழுங்கில் வளர்ந்த நிலையில் எழுகின்றன; மட்டைகளும் அப்படியே உரிக்க உரிக்க மட்டையாய் வளைந்து கவ்விப் பற்றிய அடுக்கு ஒழுங்கில் அமைந் துள்ளன. தொட்டுணர்வுக்கு இதமாக வழுவழுப்பிலும் மென்மையிலும் மேம்படுத்தித்

திகழ்கின்றன. பக்க வளைவுகள் இல்லாமல் வாழை இலைகளின் வளைவு ஒழுங்கும் அடுக்கு ஒழுங்கும் மிக்கு மரத்தைச் சுற்றி ஒவ்வொன்றாகவும் ஒன்றன்பின் ஒன்றாகவும் முதலில் வெண்குருத்தாய்ச் சுருண்டு தோன்றுகின்றன; பின்பு பசிய மடல் விரித்து அவ் ஒருங்கிலேயே எல்லாம் எழுகின்றன.

வாழைப்பூ, மரத்துக்கு ஒரே பூ. அந்த ஒன்றை, வள்ளுவர் பெருமான் திருக்குறள் நூல் ஒன்றை மட்டும் நன்றாய்ச் செய்தளித்ததுபோல் வாழையும் நன்றாய்ச் செய்து வழங்குகிறது. பூவின மட்டைகளும் (இதழ்களும்) அடுக்கடுக்காய் ஒவ்வொன்றாய்ச் சுற்றிலும் பெட்டி திறப்பது போல் திறந்து விரிந்து உள்ளிருக்கும் காய்களாகப் பெருக்கும் இதழ்வரிசைகளை வெளிப்படுத்துகின்றன. ஒவ்வோர் இதழும் ஒவ்வோர் காய். இதழ்கள் காய்களாய்ப் பெருத்து வரிசை வரிசையாய் சீப்பு ஒருங்கில் திகழ்ந்து கண்டோரை மகிழ்விக்கின்றன. சீப்புகள் வரிசையொழுங்கில் அமைந்து வாழை மரத்தில் குலையாய்த் தொங்குவதைக் காண்பதே மனத்திற்கு இன்பமாய் உள்ளது.

மரத்தைவெட்டி இறுதியாக வாழையின் தண்டை உரித்தெடுத்து விட்டால் 'வெள்ளி உருளை' என்னும்படி நேர்மை யொழுங்கில் காட்சி அளிப்பதே அற்புதம்! இந்த நேர்மையை எந்த மரத்திலும் நாம் காண முடியாது. இத்தண்டை வைத்துக் கொண்டு நேர்கோடுகளே வரை யலாம்! வாழை இங்ஙனமெல்லாம் வளைவு ஒழுங்கு, அடுக்கு ஒழுங்கு, வரிசை ஒழுங்குகளோடு நேர்மை ஒழுங்கிலும் மேம்பட்டு அறத்திறம் என்னும் ஒழுங்குமுறையில் தன்னிகரற்று விளங்குகின்றது. ஒரு பேரறிவின் பதிவு வாழையின் பொருள்களில் பதிந்திருந்தாலல்லாமல் இத்தனை ஒழுங்கு முறைகளை அதனிடத்தில் கண்டு களிக்க முடியுமா?

'தனித்தனி முக்கனி பிழிந்து' என்ற வள்ளல் பெருமான் வாக்கில் காணும் வாழை, மா, பலா என்னும் முக்கனி மரங்களைக் கூர்ந்து நோக்கினால் அவற்றில் வாழையை நீக்கி ஏனை இரண்டும் இவ்வொழுங்குகளில் சரியாக அமையா திருப்பதைக் காணலாம். இவற்றில் பட்டைகளோ, கிளைகளோ, இலைகளோ காய்களோ எவையும் இவ்ஒழுங்கில் எழுவ தில்லை. அடுத்து மாவின் பழம் மட்டிலும் செம்மையாய் அமைந்து உண்பதற்கும் இனிமையாய் உள்ளது. பலாச் சுளைகள் உண்பதற்கு இனிமையாக இருப்பினும், பலாப் பழங்கள் நல்ல அமைப்பில் இருப்பதில்லை. சிலவற்றில் ஒரு பகுதி ஒடுங்கியும் ஒரு பகுதி சிறுத்தும் ஒரு பகுதி பெருத்தும் காணப்படுவதுண்டு. பழங்கள் முள்ளோடு பிசினும் உடை யவை; சுளைகளை எடுத்து உண்பதற்குள் போதும் போதும் என்றாகிவிடும். வாழையின் காய்களிலோ பழங்களிலோ இத்தகைய முடக்குகளை, இடர்களைக் காண்பதரிது. முக்கனி மரங்களில் பலாவை விட மாவும் மாவை விட வாழையும் சிறந்தன. வேறு மா வகைகளிலும் செடி வகைகளிலும் இவ் ஒழுங்கு முறைகளில் சிற்சில ஏறக்குறை யவாவது காணப் பெற்றாலும் வாழையின் ஒழுங்குமுறை அத்தனையும் நிறைவாகக் காண்பது அரிது!

அங்ஙனமே, பொதுவாக மக்கள் வாழும் இடங்களில் இல்லங்களில் சென்று பார்த்தால், அவர்கள் பேரறிஞர்களாக இருப்பினும்கூட, அவர்கள் தெருக்கள், இல்ல வரிசைகள், இல்லத்தில் புழங்கும் பொருள்கள், நூல்கள் முதலியன பெரும்பாலும் ஒழுங்கு முறையில் இருப்பதில்லை. அறவொழுங்கு அவர்களிடையே வீறுபெறுவதில்லை. சான்றோர் சிலரிடமே அரிதில் அதனைக் காணமுடிகின்றது.

மனிதர்களில் ஞானியர் இருப்பது போல மரங்களில் ஞானமரம் வாழை.

வீட்டுணர்ச்சி: வாழை மரத்தில் வீட்டுத் தன்மை அமைந்திருப்பதை எண்ணுந்தோறும் வியப்பினை விளைக்கின்றது. 'வீடு' என்பது விடுதலை; பற்று விடுதலை 'பற்று' என்பதை ஒரே சொல்லால் சொன்னால் 'தன்னலம்' என்று சொல்லிவிடலாம். இவ்விடுதலை வாழையில் அமைந்திருப்பது மிக நன்றாகத் தெரிகின்றது. தெளிவும் ஆகின்றது.

வாழையின் எல்லாப் பொருள்களும் நன்முறையில் பயன்பட்டு விடுதலை பெறுகின்றது. விடுதலையே **வீட்டுணர்ச்சி** என்பது. வீட்டுணர்ச்சி மிக்கது வாழை. இதனால் வாழைமங்கல முடையதாய் நிலைத்த இல்லறப் புகழும், அந்நிலையே பேராத இற்கை யுடையதாய்ச் 'சென்றேபுகும் கதி' யின்றித் தான் நின்று வளர்ந்த இடத்திலேயே நிலை கொண்ட துறவறத்து வான் புகழும் பெற்றுச் சிறந்து திகழ்ந்து அடியார் மரமாய வாழை வீடு பேறுடையளதாகின்றது. வீட்டுணர்ச்சி வாழையிற்காணப பெறுவதைப்போல் வேறு எங்கும் எதனிலும் காணப் பெறுவதில்லை.

இங்ஙனமெல்லாம் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கையும் வாழையில் உள்ளுறையாகச் சான்றோர் கண்டு மகிழ்கின்றனர். வள்ளுவத்திலும் அறம், பொருள் இன்பம் மூன்றும் நூலிலும் வீடு பேறு பாயிரத்திலும் உள்ளனவாகப் பெரியோர் எடுத்துக் காட்டியிருத்தலையும் அறிவோம். எனவே வாழையும் வள்ளுவமும் நாற்பொருள் பயப்பனவாய் அமைகின்றன எனபதை நாம் அறிந்து தெளிகின்றோம்.

12. ஈத்துவக்கும் இன்பம்

வறியார்க்குஒன்று ஈவதே ஈகை; மற்றுஎல்லாம்
குறிஎதிர்ப்பை நீரது உடைத்து (221)[1]

அற்புதமான குறள். ஈகையை இன்னதென எடுத்துக்காட்டும் இணையற்ற வாக்கு. பிறருடைய வறுமைத் துன்பத்தைக் கண்டு வாளா இராமல் தம்மால் இயன்ற உதவியைச் செய்து அத்துன்பத்தைத் தீர்க்க முயல்வதே கடமை; அதுவே ஈகை எனப்படும். ஈகை என்ற பெயரால் பொருளுடையார்க்கே மேன்மேலும் தந்து உதவுவதால் பயன் இல்லை. அஃது ஈகையும் ஆகாது. வறியவர்க்குத் தம்மால் இயன்ற ஒன்றை ஈவதே ஈகை ஆகும். வறுமை அற்ற பிறருக்குப் பொருள் கொடுத்தல் ஈகை அன்று ; அது பயன் நோக்கிக் கொடுத்து வாங்கிக் கொள்ளும் முறை ஆகும்.

ஒருவர் வழங்கும் பொருளைப் பெற்று அதனால் வயிறு வளர்த்து வாழும் வாழ்க்கை நல்ல வாழ்க்கை அன்று. அவ்வாறு வாழ்வதற்குக் காரணமான வறுமை ஒழிய வேண்டும். இதனை வள்ளுவர் பெருமான் 'நல்குரவு' (அதி. 105) என்பதில் விளங்க உரைத்துள்ளார். வறுமை எய்தினும் பிறர் உதவியைப் பெறாமல் வாழ்வதே சிறந்தது என்பதை 'இரவச்சம்' (அதி. 107) என்பதில் விளக்கியுள்ளார் அப்பெருமான். வறுமையற்ற ல்லுலகம் ஒன்று ஏற்பட வேண்டும் என்று விரும்புவது றிக்கோள் நோக்கம். ஆயின் அதுவரை வறியவர்கள் வாழ்

1. ஈகை - 1

வது எவ்வாறு என்பதைப் பரிவுடன் எண்ணிய எண்ணங்களை 'இரவு' (அதி.106) என்பதிலும் தெரிவித்து, அங்ஙனம் இரப்பவர்க்குக் கொடுத்து உதவ வேண்டும் என்ற கருத்தையே ஈண்டு ஈகை (அதி.23) என்ற தலைப்பில் கூறியுள்ளார் என்பது உளங்கொள்ளத்தக்கது.

இன்னொரு செய்தியையும் அப்பெருமான் நமக்குக் கூறுவார்.

நல்லாறு எனினும் கொளல்தீது; மேலுலகம்
இல்எனினும் ஈதலே நன்று (222)[2]

பிறரிடம் 'கொடு' என்று கேட்டு அவர் ஈவதைக் கொள்வது நல்ல வழி என்று எவராவது போற்றிக் கூறினாலும் அது வேண்டா; அது தீமையானதேயாகும். பிறருக்குப் பொருள் தரும் கையால் மேலுலகம் கிட்டாமல் போகும் என்று சொல்லி எவராவது தடுத்தாலும், அதையும் பொருட்படுத்தற்க; ஈவ்தே நல்லது என்று கொள்க.

பொருள் வேண்டுவோர் நம்மிடம் வந்து 'ஐயா ஏதாவது கொடுங்களேன்' என்று முகம் சுருங்கி இரக்கின்ற காட்சிக்கு இடம் இல்லாதபடி அவர் தம் முகக் குறிப்பறிந்து கொடுத்து உதவுதல் சிறந்தது.

இலன்என்னும் எவ்வம் உரையாமல் ஈதல்
குலன்உடையான் கண்ணே உள (223)[3]

என்பது அவர்தம் திருவாய் மொழி. அவ்வறியவன் தன் துன்பத்தை வாயால் கூறிக் கேட்பதற்கு முன்ன கொடுத்தல் சாலச் சிறந்தது. சீரிய உயர்ந்த பண்புடையவர்களிடத்தில் இத்தகைய ஈகைக் குணத்தைக் காணலாம். இத்தகைய பண்புடையவர் களை உலகம் போற்றும்; அறிஞர்களும் போற்றுவார்கள்.

---

2. மேலது -2
3. மேலது -3

இரக்கும் காட்சி ஒன்றுதான் துன்பமுடையது என்று கருதுதல் வேண்டா; இரந்து கேட்கப் பெற்று இரப்பவரின் முன்னே நிற்கும் காட்சியும் துன்பமுடையதேயாகும். 'என்னைப் போன்ற மனிதன் ஒருவன் வந்து நின்று யாசித்து கேட்கின் றானே, இதுவா உலகம்?' என்று உணரவல்லவர்க்கே அதுவும் துன்பமுடையது என்பது தெரிய வரும். அந்தத் துன்பம் தீருவது என்றோ? இதனை எண்ணிப் பார்க்கும்போது நம் மனத்தில் தோன்றும் வேதனையை அளவிட்டுச் சொல்ல முடியாது. இரப்பவரின் துன்பம் தீர்ந்த பின்னர்தான் இதுவும் தீரும். வள்ளுவர் பெருமான் கூறுகிறார்:

இன்னாது இரக்கம் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு (224)[4]

என்று. இதனை எண்ணி எண்ணி உணர்தல் வேண்டும்.

தவத்தை மேற்கொள்வோரின் ஆற்றல் பசித் துன்பத்தைப் பொறுப்பதன் பொருட்டே என்பது ஈண்டுச் சிந்தித்தற்குரியது. ஆனால் அவர்கள் தம் பசியைப் பொறுப் பதற்கே பாடுபடுகின்றனர். இஃது ஒருவகையில் சுயநலத்தின் பாற் படுகின்றது. ஆனால் ஈகைக் குணமுடை யோர் தம் பசியைத் தீர்த்துக் கொள்வதுடன் பிறருடைய பசித் துன்பத் தையும் தாம் கொடுக்கும் பொருளால் மாற்றும் ஆற்றல் பெற் றுள்ளார்கள். இதனை ஓர்ந்து உணர்ந்தால் தவம் செய்வோரின் ஆற்றலும் பொருள் கொடுத்து உதவும் ஈகையாளரின் ஆற்றலுக்கு அடுத்த நிலையில் உள்ளது என்பது தெளிவாகும். பொய்யாமொழி அருளிய பெருமான் கூறுவார்:

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின் (225)[5]

4. மேலது - 4
5. மேலது- 5

என்று. இந்த அருள்வாக்கை மனத்தில் அசை போட்டு அநுபவிக்க வேண்டும்.

ஒருவர் தம்மிடம் உள்ளவற்றைப் பலர்க்கும் பகுத்துக் கொடுத்தால் உண்ணப்படும் வறியவனைப் பசி என்னும் கொடிய நோய் அணுக முடியாது. இங்ஙனம் உதவாமல் தம்மிடம் உள்ள செல்வத்தைப் பெருக்குவதற்காகச் சிக்கனமாக வாழ்க்கையைத் தாம் மட்டிலும் தனிமையாக உண்டு உடுத்து வாழ்வது வாழ்வாங்கு வாழ வேண்டிய வாழ்க்கை அன்று மற்றவரிடம் சென்று இரந்து வயிறு வளர்க்கும் வாழ்வை விட இது மிகக் கொடியது; விரும்பத் தகாதது. இரப்பவர்கள் வறுமையில் வாடி இரக்கின்றனர்; பொருள் பெற்றவுடன் மகிழ்கின்றனர். கொடுப்பவர்களோ செல்வம் இருந்தும் வாடுகின்றனர்; இவர்கட்கு மகிழ்ச்சி என்பது ஒருநாளும் இல்லை; அடைய வழியும் இல்லை; ஆகையால் இரக்கும் வாழ்வைவிட இவர்களது வாழ்வு துன்பமயமானது. இக்கருத்து களை மருந்து மாத்திரைகள் போல,

> **பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்**
> **தீப்பிணி தீண்டல் அரிது (227)** [6]

என்றும்,

> **இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய**
> **தாமே தமியர் உணல் (229)**[7]

என்றும் செவ்விதின் உரைத்தருளுவார் வழிகாட்டும் வள்ளுவப் பெருந்தகை.

ஈவதில் ஒரு தனி இன்பம் உண்டு. இந்த இன்பம் சிறு குழந்தைகட்குத் தெரியும். அதனால் சில சமயம் அவர்க

6. மேலது - 7

7. மேலது - 9

தம்மிடம் உள்ளவற்றைப் பிறர்க்குக் கொடுப்பதை ஒரு விளையாட்டாகக் கொண்டு மகிழ்வர்கள். தம்மிடம் உள்ள பொரி, பொட்டுக் கடலை போன்றவற்றைக் காக்கைகட்கு எறிந்து தந்து மகிழ்வதைக் காண்கின்றோம் அல்லவா? என் நல்லூழின் காரணமாகப் பத்தாண்டுகள் (1950-60) காரைக் குடியில் வள்ளல் அழகப்பர் பயிற்சிக் கல்லூரியில் பணியாற் றும் பேறு பெற்றேன். அப்போது 'ஈத்துவக்கும் இன்பத்தை' அவ்வள்ளல் முகத்தில் தோன்றியதைக் கண்டு மகிழ்ந்ததுண்டு. தம்மிடம் பொருள் இல்லாத போது கூட 'அதற்கும் இதற்கும்' என பல இலட்சம் வெண்பொற் காசுகளைத் தருவதாக அறிவிப்பு செய்து மகிழ்வார். விரைவில் அதனைச் சம்பாதித்து ஈவதை உலகமே அறியும். தாம் குடியிருந்த இல்லத்தையே மகளிர்க் கல்லூரிக்கு மகிழ்ந்து ஈந்ததை என் கண்ணாரக் கண்டேன். என்னிடம் கூட அந்த இரக்கப் பண்பு தொற்றிக் கொண்டிருப்பதை அடிக்கடி உணர்கின்றேன்.

இரக்கம் அற்ற செல்வர்க்கு இத்தகைய இன்பம் ஒன்று இருப்பது தெரிவதில்லை. அவர்கள் தமது செல்வத்தை ஈயாமல் வைத்திருந்து பிறகு வருந்தும்போது கூட இந்த இன்பத்தை நினைப்பது இல்லை. இக்கருத்தை,

> **ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை**
> **வைத்திழக்கும் வன்க ணவர். (228)**[8]

என்று புரிய வைத்துள்ளதைக் காண்கின்றோம்.

இந்த இன்பம் அறிவில்லாதவனிடம் இருத்தல் முடியாது. அவன் மனம் மகிழ்ந்து ஒரு பொருளைக் கொடுத்தல் அருமை. ஒருவேளை அங்ஙனம் மகிழ்ந்து கொடுப்பானே

---

8. மேலது - 8

யானால் அது வேறொன்றும் இல்லை. பொருளைப் பெறுகின்றவனின் நல்வினை என்றே கொள்ள வேண்டும்.

அறிவிலான் நெஞ்சுவந்து ஈதல் பிறிதுயாதும்
இல்லை பெறுவான் தவம் (842)[9]

என்பது பொய்யா மொழி. யான் பழகின பன்மொழிப்புலவர் வே. வேங்கடராஜுலு ரெட்டியாரும் வைணவ சீலர் பு. ரா. புருஷோத்தம நாயுடு அவர்களும் என்னிடம் இக்குறளை அடிக்கடிக் கூறும் பழக்கத்தை நினைவு கூர்கின்றேன்.

சாவது போன்ற துன்பம் வேறு ஒன்று இல்லை என்பதை எல்லோரும் அறிவர். கற்றவர் கல்லாதவர் ஏன் நடைபாதையில் உறங்கும் ஏழையர் கூட நன்கு அறிவர். வாழ்க்கை வெல்லம் போன்று இனியது. ஆனால் வறியவர்க்கு ஈந்து உதவாதபோது சாவதே இனியதாகி விடும். இக்கருத்தின் ஒளியை,

சாதலின் இன்னாதது இல்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை (230)[10]

என்ற குறள் மணியில் காணலாம். இந்த ஒளியை அறவோர் மட்டிலுமே அறிவர்; அஃது அவர்தம் இயல்பே யாகும்.

---

9. புல்லறவாண்மை - 2
10. ஈகை - 10

13. அறிவியல் நோக்கு

வள்ளுவர் பெருமான் ஒரு சிறந்த அறிவியல் நோக்குடையவர். பல குறள்மணிகளில் இந்நோக்கு ஒளிவிடுகின்றது. நிலையாமையை வற்புறுத்தி உறுதிப்படுத்தும்.

நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாளது உணர்வார் பெறின் (334)

என்ற குறள் மணியில் இந்நோக்கு ஒளிர்வதைக் காணலாம். உரை மன்னர் பரிமேலழகர் இதனைத் தம் உரையில் அடியிற் கண்டவாறு விளக்குவார்

"காலம் என்னும் அருவப் பொருள் உலகியல் நடத்தற் பொருட்டு ஆதித்தன் முதலிய அளவைகளால் கூறுபட்டதாக வழங்கப்படுவதல்லது தானாகக் கூறுபடாமையின் 'நாள் என ஒன்றுபோல்', என்றும் அது (நாள்) வாள் என்று உணரமாட்டாதார் 'நமக்குப் பொழுது போகா நின்றது' என்று இன்புறுமாறு நாளாய் மயக்கலின் 'காட்டி' என்றும், இடைவிடாது ஈர்தலால் 'வாளின் வாயது' என்றும், அஃது ஈர்க்கின்றமையை உணர்வார் அரியராகலின் 'உணர்வார்ப் பெறின்' என்றும் கூறினார். உயிர் என்னும் சாதி ஒருமைப் பெயர் உடம்பின்மேல் நின்றது, ஈரப் படுவது அதுவே யாகலின். வாள் என்பது ஆகுபெயர். இனி இதனை 'நாள்' என்பதொரு பொருள் போலத் தோன்றி உயிரை ஈர்வதொருவாளாம் என்று உரைப்பாரும் உளர் (மணக் குடவர்)".

போத்தல்களில் வரும் பாகு போன்ற சர்ப்பத்தை நீர் விட்டு. இளக்கி எல்லோரும் இன்பமாகப் பருகும் பானம் போலாக்கிப் பருகுவதுபோல், நாமும் இதில் சொற்களைப் பெய்து இளக்கிப் படித்து அநுபவிப்போம்.

அருவப் பொருள்: காலம் என்பது ஓர் அருவப் பொருள். கண்ணுக்குப் புலனாகாததும் ஏனைய புலன் களாலும் உணர முடியாததும் ஐம்பூதங்களில் ஒன்றாகிய ஆகாயம் போல் கண்ணுக்குப் புலனாகாததுமான[1] ஒரு திரவியம். இதனை எந்த வித அளவுகருவிகளாலும் கூறுபடுத்த முடியாது.

இன்றைய அறிவியலறிஞர்கள் பூமி சூரியனை ஒரு முறை சுற்றி வரும் காலத்தை 360 நாள்கள் 6 மணி 9 நிமிடம், 9.54 விநாடி என்று குறிப்பிடுகின்றனர். இதனையே நாம் ஆண்டு என்கின்றோம். பூமியும் தன் அச்சில் ஒரு தடவை சுழன்று வரும் காலத்தை 23 மணி 56 நிமிடம் 41 விநாடி என்று குறிப்பிடுகின்றனர். இதனையே நாம் நாள் என வழங்கு கின்றோம். பூமியைச் சந்திரன் ஒரு முறை சுற்றி வரும் காலத்தை 29 நாட்கள் 44 நிமிடம் 2.8 விநாடிகள் எனக் குறிப்பிடுகின்றனர். இதனை நாம் மாதம் என்கிறோம். மேலும் நாளை வைகறை, விடியல், நண்பகல், மாலை யாமம், எற்பாடு என்று ஆறு கூறிட்டுச் சிறு பொழுது என்றும், இங்ஙனமே ஆண்டை கார் (ஆவணி புரட்டாசி), கூதிர் (ஐப்பசி, கார்த்திகை) முன்பனி (மார்கழி, தை) பனி பின (மாசி, பங்குனி) இளவேனில் (சித்திரை, வைகாசி) முதுவேனில் (ஆனி, ஆடி) என்று ஆறு கூறிட்டுப் பெரும்பொழுது என்றும் வழங்குவர். இன்னும் பகல் இரவு என்ற காலத்தை 60 நாழிகை என்று கணக்கிடுவர். மணிப்பொறி

1. நீர், நெருப்பு, காற்று ஆகிய நான்கும் ஏதோ ஒரு புலனால் அறியப் பெறுபவை; உணரப் பெறுபவை.

கண்டறிந்த பின்னர் நிமிடம் விநாடி என்ற கீழ்க்கணக்குகளும் எழுந்தன. இதுவரையிலும் அறிவியலுக்கு உட்பட்ட கணக்குகள்; இந்தக் கணக்கில் பொருளை. நேராக எண்ண லளவை, முகத்தலளவை முதலியவற்றால் அளப்பது போன்று காலம் நேராக ஓர் அளவு கருவியால் அளக்கப் பெறவில்லை என்பது கருத்தில் இருத்தத்தக்கது.

இதற்குமேல் மெய்ப்பொருள் அறிஞர்கள் குறிப்பிடும் கணக்கையும் காண்போம். இவர்கள் கால தத்துவத்தைச் சாற்றுவதையும் தெரிந்து கொள்வோம். நிமிடம் பதினைந்து கொண்டது காஷ்டை; காஷ்டை முபபது கொண்டது கலை கலை முப்பது கொண்டது முகூர்த்தம்; முகூர்த்தம் முப்பது கொண்டது நாள்; நாள் முப்பது கொண்டது மாதம்; மாதம் இரண்டு கொண்டது இருது; இருது மூன்று கொண்டது அயனம்; அயனம் இரண்டு கொண்டது ஆண்டு.... "பிரார்த்தம்". இப்படி மனித ஆண்டு 360 கொண்டது ஒரு தேவயாண்டு; தேவயாண்டு 12,000 கொண்டது ஒரு சதுர்யுகம். 71 சதுர்யுகம் கொண்டது ஒரு மந்வந்தரம். 14 மந்வந்தரம் கொண்டது 100 சதுர்யுகம். இது நான்முகனுக்கு ஒரு பகல். 2000 சதுர்யுகம் நான்முகனுக்கு ஒருநாள். இந்த நாட்களால் மாதம் வருடங்களைப் பெருக்கி அந்த வருடங்கள் 100 ஆனால் நான்முகன் ஆயுள் முடியும். இதற்குப் 'பரம்' என்று பெயர்.

இங்ஙனம் பல்வேறு வடிவினவாகத் தோன்றக் கடவதாய், ஆதி அந்தம் அற்றதாய், இறைவனுடைய உலகப் படைப்பு அளிப்பு அழிப்பு ஆகிய அலகிலா விளையாட்டுக் கருவியாய் இறைவனுடைய சரீரமாக அமைந்து (சரீர - சரீரபாவனை) இருப்பது கால தத்துவம். இவ்வாறு

காலதத்துவத்தின் கூறுகளைப் பராசர பகவான் விஷ்ணு புராணத்தில் பேசுவர். ஆதியும் அந்தமும் இல்லாத இக்கால நியமத்திற்கு உட்பட்டே இக்கர்மலோகத்திலுள்ள மாறுபாடு கள் எல்லாம் எம்பெருமான் சங்கற்பத்தினால் நடைபெறுகின்றன. காலம் நித்திய விபூதியில் (பரமபதத்தில்) நித்தியம். இந்த லீலா விபூதியில் (இவ்வுலகில்) அநித்தியம்; அதாவது பரமபதத்தில் காலம் நடையாடாது. இறப்பு எதிர்வு நிகழ்வு என்ற நிலைகள் அங்கு இல்லை. ஆனால் முன்பின் என்ற அளவிற்கு வேறு பாடு உண்டு. ஆயினும் அதன் சம்பந்தம் இன்றி அனைத்தும் இறைவனது சங்கற்பத்தினால் மட்டும் நடைபெறுகின்றன வாகும். இந்த உலகில் இஃது அநித்தியமாதலால் இறப்பு எதிர்வு நிகழ்வு என்ற பேச்சு உண்டு. இந்தக்கால தத்துவம் இறைவனது படைப்பின் பரிணாமங்கட்குக் காரணமாய் இருப்பது.

இதன் விளக்கம் ஆழ்வார்களின் பாசுரங்களில் காணப்பெறும். காணாமல் மாயமாய் மறைந்த வைதிகன் பிள்ளைகளைக் கண்ணன் மீட்டுக் கொடுத்த குறிப்பினால் ஒருவாறு தெளிவாகும்.

> **தப்பின பிள்ளைகளைத் தனமிகு சோதிபுக**
> **தனியொரு தேர்கடவித் தாயொடு கூட்டிஎன்**
> **அப்ப! (பெரியாழ்.திரு. 1:6:7)**

என்றும்,

> **பிறப்பகத்தே மாண்டொழிந்த**
> **பிள்ளைகளை நால்வரையும்**
> **இறைப்பொழுதில் கொணர்ந்து கொடுத்**
> **தொருப்படுத்த வுறைப்பன் மேலது 4.8.2**

என்றும் பெரியாழ்வார் பாசுரங்களிலும்;

இடரின்றி யேயொரு நாளொரு
போழ்தில்எல் லாவுல கும்கழிய
படர்புகழ்ப் பார்த்தனும் வைதிக
னும்உடன் ஏறத்திண் தேர்கடவி
சுடரொளி யாய்நின்ற தன்னுடைச்
சோதியில் வைதிகன் பிள்ளைகளை
உடலொடும் கொண்டு கொடுத்தவன்
(திருவாய் 3.10.5)

என்ற நம்மாழ்வாரின் அருளிச் செயலிலும் இக் குறிப்புகள் காணப்பெறுகின்றன.

வரலாறு இது: ஓர் அந்தணனுக்கு நான்கு குமாரர்கள். முதல் பிள்ளை பிறந்து பூமியைத் தொட்டதும் காணப் பெறவில்லை; மாயமாய் மறைந்தது. இரண்டாவது மூன்றாவது பிள்ளைகளின் நிலைகளும் அங்ஙனமே. பெற்றவளும் கூட முகத்தில் விழிக்கப் பெறாதபடி இன்னவிடத்திற்குப்போயின என்று தெரியாமல் காண வொண்ணாதவாறு மூன்று பிள்ளை களும் போயின வாகையாலே நான்காவது பிள்ளையைக் கருவுயிர்க்கும் காலத்தில் அந்த அந்தணன் கண்ணபிரான் அருகில் வந்து "இந்தப் பிள்ளையையாயினும் பாதுகாத்துத் தந்தருள வேண்டும்" என்று வேண்டினான். அப்படியே செய்வதாகக் கண்ணபிரானும் முறுவலித்து வாக்குத் தந்து கருவுயிர்க்கும் காலத்தில் வந்து தெரிவிக்குமாறு கூறினன்.

கருவுயிர்க்கும் காலமும் வந்தது. அந்தணன் வந்து கண்ணனை வேண்ட அவன் அன்று ஒரு வேள்வியில் தீட்சிதனாக இருக்க வேண்டியதால் கருவுயிர்க்கும் இடத்திற்கு வர முடியாத நிலையில் இருந்தான். அருகிலிருந்த பார்த்தன்,

"இது சாதாரண விஷயம் நான் சென்று காப்பாற்றுவேன்" என்று உறுதி தந்து அந்தணனையும் கூட்டிக் கொண்டு கருவுயிர்க்கும் இடத்திற்கு வந்தான். வந்தவன் கருவுயிர்க்கும் இல்லத்தைச் சுற்றிக் காற்று கூட நுழைய வொண்ணாதவாறு சரக்கூடு அமைத்துக் காத்திருந்தான். அன்று பிறந்த பிள்ளையும் வழக்கப்படி மாயமாய் மறைய அந்தணன் சினங்கொண்டான். பார்த்தனை இடைமறித்து, 'அதமனே, உன்னாலேயன்றோ என் பிள்ளை போம்படி ஆயிற்று. கண்ணன் எழுந்தருளிக் காப்பதை நீயன்றோ தடுத்தாய்?' என்று நிந்தித்து அவனைக் கண்ண பிரானருகே இழுத்துக் கொண்டு வந்தான். கண்ணன் அது கண்டு முறுவலித்து, 'அவனை விடு; உனக்குப் பிள்ளையை நான் கொண்டு வந்து தருகின்றேன்' என்று அருளிச் செய்து அந்தணனையும் தன்னுடன் கொண்டு தேரில் ஏறிப் பிரார்த்தனைத் தேர் செலுத்தச் சொல்லி, அத்தேருக்கும் இவர்களுக்கும் திவ்விய ஆற்றலைத் தன் சங்கற்பத்தால் கற்பித்து அகில உலகங்களிலும் தேடியும் குழந்தை கிடைக்க வில்லை.

இறுதியாக வைகுண்டத்திற்கு அவர்கள் வருகின் றனர். விரஜை நதிக்கு இக்கரையிலேயே தேரை நிறுத்திப் பார்த்தனையும் பார்ப்பனனையும் இறக்கி அங்கேயே இருக்கச் செய்து, தான் மட்டிலும் தன் நிலமான பரமபதத்தில் புகுந்து பார்க்க அங்கு மூன்று நாச்சிமார்களும், (பெரிய பிராட்டியார், பூமிப் பிராட்டியார், நீளாதேவி) நான்கு குழந்தைகளும் பிறந்த நிலையிலேயே இருக்கக் கண்டு மகிழ்ந்தான்.

தேவிமார்கள் மூவரும் சொன்னது: "தாங்கள் அவதாரப்பணிகள் முடிந்து சோதிக்கு எழுந்தருளும்போது பூவுலகிலிருந்த திருமேனியைத் துறந்து இங்குள்ள திவ்விய

மேனியுடன் திரும்புவீர்கள். எங்கள் சுவாதந்திரத்தைக் காட்டுவதற்காகவும், சௌலப்பியம் சௌசீல்யம் முதலிய திருக்குணங்களுடன் நிறைந்த இம்மானிடத்திருமேனியுடன் இங்கு எழுந்தருளி இங்குள்ளார் அதனைக் கண்டு களிக்கவும் வாய்ப்புகள் தரும்பொருட்டே நாங்கள் மூவரும் இந்த உக்தியைக் கையாண்டோம்'' என்று கூறி குழந்தைகள் நால்வரையும் ஒப்படைத்தனர். காலம் நடையாடாத தேசமாகையால் எவ்வித வளர்ச்சியுமின்றி குழந்தைகள் நால்வரும் பிறந்த மேனியுடனேயே இருந்தனர்.

இந்த நிலவுலகிற்கு வந்ததும் முதல் குழந்தை மூன்று வயது, இரண்டாவது குழந்தை இரண்டு வயது, மூன்றாவது குழந்தை ஒரு வயது, நான்காவது குழந்தை பிறந்தநிலை என்று இருந்தனர் இங்குக் காலம் நடையாடுவதாகையாலே.

14. மழித்தலும் நீட்டலும்

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின் (380)

'கூடாவொழுக்கம்'(28) என்ற அதிகாரத்தில் வரும் இக்குற ளை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

துறவிகள் இரண்டுவிதமான கோலங்களை மேற் கொள்ளுகின்றனர். அவை தலையை மழுங்ககச் சிறைத்து, மொட்டையாக்கிக் கொள்ளல், தாடி வளர்த்து தலையில் முடியைச் சடையாக்கிக் கொள்ளல் என்பவை யாகும். முன்னதை தருமையாதீன வழி என்றும், பின்னதை திருவா வடுதுறை ஆதீனவழி என்றும் சிலர் வேடிக்கையாகப் பேசுவதைக் கேட்டதுண்டு. இரண்டு கோலங்களையும் வேடங்கள் என்கின்றார் பரிமேலழகர். தவநெறிக்குப் பொருந் தாதவை என்று கடிந்து அவற்றை நீக்கிவிடின் இந்த இரண்டு வித கோலங்களும் தேவையற்றவை என்று கூறுவர் வள்ளுவப் பெருந்தகை. உலகியலை ஓட்டி வாழ்கின்ற வர்களும் தாடியில் பல்வேறு வகைக் கோலங்களை மேற்கொள்ளுகின்றனர். மீசையில் பலவகை இருப்பன போலவே தாடியிலும் பலவகையைக் காண்கின்றோம். நவநாகரிகவகைகளில் இவையெல்லாம் அவரவர் விரும்பும் கோலங்கள் போலும். துறவிகட்குக் கூடாதவை இன்னவை என்று பட்டியலிட்டுக் காட்டிய பிறகு அனைத்திற்கும் மகுடம் போல் இக்குறள் அமைகின்றது.

சடையாக்கிக் கொள்ளல்: இதுபற்றிய ஒரு சிறு விளக்கம் - நேரில் கண்டது. விளக்கிக் காட்டப் பெற்றது. (1950-60) காலத்தில் காரைக்குடியில் அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பேராசிரியர் பணி. என் காரைக்குடி வாழ்வில் கம்பனடிப்பொடி சா. கணேசன் முதுபெரும் புலவர் ராய. சொக்க லிங்கம் (ராய. சொ.) சீர்திருத்தச் செம்மல் சொ. முருகப்பா (சொ.முரு.) தவத்திரு குன்றக்குடி அடிகள் (முன்னவர்) இவர் களின் கூட்டுறவால் என் சிந்தனை, புலமை, உலகியலறிவு, சமய ஆர்வம் ஆகியவற்றில் வளர்ச்சி ஏற்படக் காரணமாயிற்று[1].

ஒரு சமயம் குன்றக்குடி சென்றிருந்தபொழுது மடத்தில் தூத்துக்குடியிலிருந்து வந்த வக்கீல் ஒருவரையும், போர்த்துறையில் ஓய்வு பெற்று வந்த ஒருவரையும் குட்டித் தம்பிரான்கள் நிலையில் சந்திக்கும் வாய்ப்பு நேரிட்டது. முன்னவர் சற்று மந்தமதியினர் என்றும், பின்னவர் கூர்த்தமதி யினர் என்றும் அவர்களுடன் பழகியதால் தெரிந்து கொள்ள முடிந்தது. இருவரும் அப்போது கிராப்புத் தலையர்களாக இருந்தனர்.

இரண்டு மாதம் கழிந்து மீண்டும் குன்றக்குடி மடத்திற்குப் போக நேர்ந்தது. இருவர் தலைகளிலும் சடைகள் காணப்பெற்றன. வியப்பினால் தூண்டப் பெற்று 'இஃதெப்படி நேர்ந்தது?' என்று வினவினேன். போர்த்துறைக் குட்டித் தம்பிரான் 'இது தெரியாதா?' என்று கூறிய வண்ணம் என்னை இட்டுக் கொண்டு ஒரு தனியறைக்குச் சென்றார். அங்கே சிறு சிறு துண்டு உரோமங்கள், பசை முதலியவற்றைக் காட்டி அவற்றைக் கொண்டு சடைமுடி வளர்க்கும் முறையையும் செயல் முறையில் விளக்கிக் காட்டினார்.

1. துறையூர் வாழ்க்கையில் (1941-50) தந்தை பெரியாருடன் நெருங்கிய கூட்டுறவு ஏற்பட்டதுபோல

உடனே ஒரு புதிய ஒளி என் உள்ளத்தில் எழுந்தது. அவ்வொளியால் அடியிற்காணும் கம்பராமாயணப் பாடல் ஒன்றுக்கு விளக்கம் தென்பட்டது.

ஆழிசூழ் உலகம் எல்லாம்
பரதனே ஆள நீபோய்த்
தாழ்இருஞ் சடைகள் தாங்கித்
தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப்
புண்ணிய நதிகள் ஆடி
ஏழ்இரண்டு ஆண்டின் வாஎன்று
ஏவினன் அரசன் என்றான்[2]

இதில், 'தாழ் இருஞ்சடைகள் தாங்கி' என்பதன் பொருள் தெளிவாகத் துலங்கியது. சடைமுடியுடன் கைகேயியின் சேடியர் தந்த மரஉரியைத் தரித்துக் கொண்டு தெருவில் செல்லுதலை ,

துன்னெடுஞ் சீரையும்
சுற்றி மீண்டும் அப்
பொன்னெடுஞ் தெருவிடைப்
போதல் மேயினான் [3]

என்ற பாடல் அடிகள் காட்டுகின்றன. இவற்றை நோக்கும்போது இரவோடு இரவாக இராமன் தலையில் சடைகள் வளர்க்கப் பலர் துணைபுரிந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகின்றது.' நீட்டல்' என்பதற்குக் குன்றக்குடியில் போர்த்துறைக் குட்டித்தம்பிரான் காட்டிய ஒளியால் இப்போது விளக்கம் தெளிவாயிற்று.

2. கம்பர். அயோத். கைகேயிசூழ்வினை - 107.
3. மேலது - மேலது நகர் நீங்கு - 188.

15. ஊழ்

வள்ளுவர் பெருமான் வான்மறையில் 'ஊழ்' என்பது ஒரு தனி இயல்! ஒரே அதிகாரம் ஒரே இயலாய் உள்ளது. காரணம் இம்மறையில் உள்ள எல்லாப் பகுதிகளின் எல்லா அதிகாரங்களுக்கும் உரியவர்களை, அது, இறைவன் சார்பில் இயக்கிவரும் தனி நிலைமைக்குரியது.

கடவுள் எப்படித் தனியனோ அப்படியே ஊழும் ஒரு தனி நிலை உடையது. இறைவன் மறை பொருளாய் இருந்து எல்லாவற்றிற்கும் காரணமாய் விளங்குவதுபோல ஊழும் மறைபொருளாய் நின்று உலகோர் இயக்கங்கள் எல்லாவற்றிற்கும் காரணமாய் விளங்குகின்றது. இறைவன் முறைமை தவறாதவன். அறவோன் ஊழும் முறைமை தவறாதது அத்திறன் படைத்தது. அவனன்றி ஓரணுவும் அசையாது என்றொரு முதுமொழி உண்டு. ஊழ் அன்றியும் ஓரணுவும் அசைவதில்லை.

நாலடியாரில் இதன் இயல்பு,

சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
உறுகாலத்து ஊற்றாக ஆமிடத்தே ஆகும் (110)

எனவும்

உறற்பால நீக்கல் உறுவார்க்கும் ஆகா (104)

எனவும்,

வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால
தீண்டா விடுதல் அரிது (109)

எனவும் வருபவற்றை ஈண்டுச் சிந்திக்கலாம்.

வள்ளுவர் நூலின் அறத்துப் பாலில் முதல் அதிகாரம் தனிமுதற் பொருளாகிய கடவுளைப் பற்றிய தென்றால், அதன் இறுதி அதிகாரம் தனி நிலைத் திறனாகிய ஊழைப் பற்றியது!

படைப்பில் ஒரு முறையான ஆட்சி இருந்து வருகின்றது. மண்ணிலும் விண்ணிலும் நிகழும் மாறுதல்கள் நெடுங்காலமாகவே ஒருவகை ஒழுங்குக்கு உட்பட்டு நடந்து வருகின்றன. ஞாயிறும் திங்களும் விண்மீன்களும் கோள் களும் ஒழுங்காக இயக்கியும் இயங்கியும் வருகின்றன. காற்றும் மழையும் தட்பமும் வெப்பமும் மற்றவைகளும் ஒழுங்கு பெறவே அமைந்து வருகின்றன. ஓரறிவுயிர்கள் முதல் ஆறறிவுள்ள மக்கள் வரையில் பலவகை உயிர்களும் உடம்பெடுத்துப் பிறப்பது முதல் இறப்பது வரையில் எல்லாம் ஒருவகை ஒழுங்கு முறைக்கு உட்பட்டே நடந்து வருகின்றன. இந்த ஒழுங்கான ஆட்சி முறையை - ஊழை -ஆராய்ந்து அறிவது அருமை. ஆனால் உண்டு என்று உணர்வது எளிது. வள்ளுவர் பெருமான் இந்த அதிகாரத்தில் மக்கள் வாழ்க்கை யில் அதற்கு உள்ள ஆற்றல் தோன்ற விளக்கிக் கூறுகின்றார்.

நன்மை பெறுவதற்குக் காரணமாக ஊழ் செயற்படும்போது அது **ஆகூழ், ஆகலூழ், நல்வினை** என்று வழங்கப்பெறும். ஒருவர் நன்மை இழப்பதற்குக் காரணமாக ஊழ் அமையும் போது அது **போகூழ், இழவூழ், தீவினை** என்று கூறப்பெறும். கைப்பொருள் மிகுதற்குக் காரணமான ஊழால் முயற்சி உண்டாகும். கைப்பொருள் அழிவதற்குக் காரணமான ஊழால் சோம்பல் தோன்றும்.

ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி (371)

என்பது வள்ளுவர் வாக்கு.

பொருள் இழப்பதற்குக் காரணமான ஊழ் அறிவைக் கெடுத்துப்பேதையாக்கும்; பொருள் சேர்வதற்குக் காரணமான ஊழ் அறிவை விரிவாகும்.

பேதை படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை (372)

என்பது பொய்யாமொழி. ஊழால் இயங்காத உயிர் ஒன்று கூட இல்லை. இறைபதிவு பெற்ற ஊழாதலால் முடிவில் அது, எல்லா உயிர்க்கும் செம்மை கூட்டுவதாகவே இருக்கும். 'எல்லாம் நன்மைக்கே' என்னும் பழமொழி இக்கருத்தால் எழுந்ததாகக் கருதலாம். தீயூழால் தொடக்குற்று இடர்ப்படுகின்றவர் அது நன்மைக்கே என்னும் முடிவில் அமைதியாய் அதனை நுகர்ந்து கழித்தல் வேண்டும்.

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவது எவன் (379)

என்பதன் கருத்து இதுவேயாகும்.

ஒருவர் பொருள் திரட்டும் நோக்கத்தோடு நுட்பமான நூல் பல கற்றாலும் அவனுக்கு ஊழால் உள்ளதாகிய அறிவே முன்னிற்கும்.

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும் (373)

என்பது வள்ளுவம். இக்கற்றறிவால் ஊழை மாற்றிவிட முடியாது. இறைவலிமை சேர்ந்த செயலாதலால் மற்றவல்லமை

களால் ஊழை எதிர்க்க இயலாது; இறைவலிமை கொண்டுதான் ஊழ்வலியை ஓரளவாவது குறைத்துக் கொள்ள இயலும்.

உலகத்தில ஊழால் ஏற்பட்டுள்ள அமைப்பு இருவகையாக உள்ளது. செல்வம் பெறுவதற்குரிய அமைப்பு வேறு; அறிவுடையவராக விலங்குவதற்கு வேண்டிய அமைப்பு வேறு. இதனை,

இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு (374)

என்ற பொய்யாமொழி விளக்கி நிற்கும். ஆதலின் செல்வம் சேர்ப்பதற்கு அறிவின் துணை போதாது.

செல்வம் சேர்ப்பதற் கென்று முயற்சி எடுத்தால் ஊழ் காரணமாக நல்ல முயற்சிகள் எல்லாம் தீமையாய் முடிதலும் உண்டு. தீயமுயற்சிகள் யாவும் நன்மையாக முடிதலும் உண்டு.

நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு (375)

என்பது இக்கருத்தை விளக்கும் வள்ளுவம். ஊழால் உரிமை யல்லாத பொருள்கள் எவ்வளவு வருந்திக் காப்பாற்றினாலும் நில்லாமல் போகும். ஊழால் தமக்கு உரிய பொருள்கள் எங்காவது கொண்டு போய்ச் சொரிந்தாலும் தம்மை விட்டுப் போகாமல் நிற்கும்.

பரியினும் ஆகாவாம் பால்அல்ல ; உய்த்துச்
சொரியினும் போகா தாம் (376)

என்பது இக்கருத்திற்கு ஒளி காட்டும் அற்புத வள்ளுவம்.

ஒன்றை நாம் கருத்தில் இருத்துதல் வேண்டும். இங்கு செல்வம் சேர்ப்பதற்கு ஊழின் துணை இருந்தாலன்றி முடியாது

என்றும், ஊழின் துணை இல்லையானால் உள்ள அறிவும் செல்வம் சேர்க்கப் பயன்படாது என்றும் கூறினாரேயன்றி அறிவு வளர்ச்சிக்கு ஊழ்வேண்டும் என்று இயம்பவில்லை. செல்வம் சேர்த்தல் நுகர்தல் முதலிய வற்றில் ஊழ்தலையிடுவது போல் அறிவு ஒழுக்கம், அடக்கம், அவாவின்மை முதலிய நற்பண்புகளைப் பெறுவதில் ஊழ் தலையிடுவதில்லை.

செல்வம் சேர்த்தல், நுகர்தல் முதலியவை புற வாழ்க்கைப் பகுதிகள்; அறிவு, அடக்கம், ஒழுக்கம் முதலியவை அகவாழ்க்கைப் பகுதிகள். புறவாழ்க்கைப் பகுதியில் ஊழின் துணையிருந்தாலன்றி நினைத்தவாறு பெற முடியாது. அகவாழ்க்கைப் பகுதியில் ஊழ் அவரவர்க்கு உரிமை கொடுத் துள்ளது. அகவாழ்க்கையில் வேண்டிய வேண்டியாங்கு எய்தலாம்.

வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்(265)

என்ற குறள் மணியின் ஒளியில் இக்கருத்தைக் கண்டு மகிழலாம்.

இந்த உலகில் இதுகாறும் அறிவுடையவராக விரும்பி முயன்றவர் அறிவு பெறாமல் இருந்தது இல்லை. அடக்கம் உடையவராக வாழ முயன்றவர் அதைப் பெறாததும் இல்லை. ஒழுக்கம் போற்றி வாழ முயன்றவர் விரும்பிய வாறு அதைப் பெறத் தவறியதும் இல்லை அவா அறுக்க வேண்டும் என்று உண்மையாக முயன்றவர் முயற்சியின் பயனைப் பெறாததும் இல்லை. இவ்வாறே மற்ற நற்பண்புகளை விரும்பிப் பாடுபட்ட வர்கள் அவற்றை யடைந்து முன்னேறியுள்ளனர். ஆனால் செல்வம் பெற வேண்டும் என்று விரும்பிப் பாடுபட்டவர்கள்

அனைவரும் செல்வம் பெறவில்லை. பாடுபட்டவர்களில் ஒருசிலரே செல்வம் பெற்றுள்ளனர். பாடுபடாமல் செல்வத்தைப் பற்றிக் கனவு காணாமலிருந்த சிலரும் பெற்றுள்ளனர். பெற்ற செல்வத்தை நுகர்வதிலும் இவ்வாறே கருதியவாறு பொருள் களை நுகர வேண்டும் என்று விரும்பிய எல்லோரும் நுகர்வு பெறவில்லை. அவர்களுள் சிலரே பெற்றுள்ளனர். பொருள் நுகர்வு பற்றி எண்ணாமல் வாழ்ந்தவர்கள் எதிர்பாராமல் பெற்று நுகரவும் முடிந்துள்ளது. ஆனால் அறிவு ஒழுக்கம் முதலிய துறைகளில் உண்மையாக முயன்றும் பெறாததும் இல்லை; முயலாதவர் பெற்றதும் இல்லை. இவ்வாறு ஆராய்ந்தால், புற வாழ்க்கைத் துறைகளில் ஊழின் அமைப்புக்கு ஏற்றவாறே எல்லாம் நடத்தலையும், அகவாழ்க்கைத் துறைகளில் ஊழ் மக்களுக்கு உரிமை கொடுத்திருத்தலையும் காணலாம்.

இவ்வாறு புறவாழ்க்கையில் உரிமை கொடுக்காமலும் அகவாழ்க்கையில் உரிமை கொடுத்தும் ஆளும் ஊழின் ஆட்சி முறை மிகப் பொருத்தமானதே ஆகும். ஒருவர் அறிவையோ, ஒழுக்கத்தையோ, மற்ற நற்பண்புகளையோ வளர்த்துக் கொள்வதால் மற்றவர்களுக்குத் தீமை இல்லை. பகலவன் ஒளியை ஒருவன் எவ்வளவு பயன்படுத்திக்கொண்டாலும் அதனால் மற்றவர்களுக்குக் குறை இல்லை; இடர் இல்லை. அது போன்றதே அக வாழ்க்கைத் துறை. ஆகையால் அங்கு முயற்சிக்கு ஏற்றவாறு சிறப்புத் தேடிக் கொள்ள உரிமை இருப்பது பொருந்தும். ஆனால் ஒருவர் செல்வத்தைத் தேடுவதிலோ நுகர்வதிலோ அளவு கடந்து சென்றால் அதனால் மற்றவர்களுக்குக் குறைவு ஏற்படச் செய்கின்றார். ஒரு தோப்பில் உள்ள பழங்களை ஒருவர் மட்டும் மிகுதியாகப் பெறமுயன்றாலும் மற்றவர்களின் பங்கு குறைவதால்

பொதுவாழ்க்கைக்கு இடையூறே ஆகின்றது. அது போன்றதே புறவாழ்க்கைத் துறை. ஆகையால் எல்லோருக்கும் பொதுவாக ஆட்சிபுரியும் ஊழ் அங்கு யாவர்க்கும் உரிமை இல்லாமல் வைத்திருப்பதும் பொருந்தும்.

இறைவனது படைப்பு எவ்வாறு அமைந்துள்ளது என்று ஆராய்ந்தாலும் இதுபோல் உரிமை உள்ள பகுதியும் உரிமை இல்லாப் பகுதியும் ஒவ்வொன்றில் இருத்தல் காணலாம். மக்கள் உடம்பை எடுத்து ஆராய்ந்தாலும் இதைக் காணலாம். உடம்புக்கு மிக மிக இன்றியமையாத உறுப்புகளாகவும் மிக விரைவில் கெடக்கூடியவையாகவும் கெட்டால் உயிர்வாழ்க்கை அழிவு செய்யக் கூடியவைகளாகவும் உள்ள இதயம், நுரையீரல், கல்லீரல், மூளை முதலியவற்றை[1] 'மக்கள் பொறுப்பில் விடாமல் அவர்களுக்கு எட்டாநிலையில் படைப்பு அமைந்துள்ளது. கை, கால் முதலியவற்றை மட்டுமே மக்கள் பொறுப்பில் காக்கவும் உரிமை கொடுத்து அமைந்துள்ளது[2]. ஊழின் ஆட்சி முறையும் இத்தகையதே. இதை உணர்ந்தால் மக்கள் அறிவு ஒழுக்கமே முதலியவற்றைத் தேடி ஓயாமல் உழைக்க வேண்டும் என்பதும் செல்வத்தையும் நுகர்வையும் தேடி அளவு கடந்து அலையாமல் கடமையை மட்டும் செய்து அமைய வேண்டும் என்பதும் தெளிவாகும். வள்ளுவர்

1. இவை உள்ளுறுப்புகள் ஆகும். உடலுக்குள்ளே இருப்பவை. இவை முற்றிலும் தசைகளாலானவை. ஆங்கிலத்தில் Organs என்று பெயர். எலும்பே இவற்றில் இல்லை. இவையும் ஒன்றுடன் ஒன்று இணைந்து இயங்கும். ஒன்று கெட்டாலும் ஏனையவற்றின் இயக்கத்தில் கோளாறுகள் நிகழும். இயக்கத்தையே கெட்டழிக்கும்.

2. இவை எலும்புகள் அடங்கிய பகுதிகள். ஆங்கிலத்தில் Limbs என்று பெயர். கை போனாலும் கால் இயங்கும். கால் போனாலும் கை இயங்கும். உயிருக்கு ஆபத்து இல்லை.

பெருமான் இங்குக் கூறுவது இந்தக் கருத்தேயாகும் அறிவு ஒழுக்கம் முதலியவையும் ஊழின்படியே அமையும் எனின் அவர் அறிவு ஒழுக்கம் முதலியவற்றைப் பெற்று வாழ்தல் கடமை என்று அறிவுறுத்தியிருக்க மாட்டார். ஆகையால் பொன் பொருள் பதவி முதலாகிய செல்வமும் அவற்றை நுகர்தல் முதலியவையுமே இங்குக் கூறப்பெறுவன ஆகும். இத்துடன் இவை நிற்க.

புலன்களால் இன்பம் நுகர்வதற்கு உரிய பொருள் களைத் தேடிய அளவிலேயே இன்பம் நுகர முடியும் என்று எண்ணலாகாது. ஊழின் அமைப்புக்கு ஏற்றபடியே நுகர முடியும். நுகர்வுப் பொருள்களைக் கோடிக் கணக்காகத் தொகுத்து வைத்தவர்களுக்கும் ஊழ் வகுத்தபடியல்லாமல் நுகர முடியாது. உணவுப் பொருள்களையும் உடை முதலிய பிற பொருள்களையும் நிறையச் சேர்த்து வைத்துச் செல்வராக விளங்கியும். பசியின்மைமுதலிய காரணங் களால்[3] சிலர் நுகர முடிவதில்லை. அவ்வாறு நுகர்தல் இல்லாதவர்கள் அந்தப் பொருள்களால் ஒரு பயனும் பெறாதவர்கள் ஆகின்றார்கள்.

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது (377)

என்பது வள்ளுவம் இதில் 'வகுத்தான்' என்பது ஊழை மட்டுமே குறிப்பதன்று. ஊழின் மூலமாய் இயங்கும் இறைவனையே குறிக்கின்றது இறைவனையன்றி ஊழ், தன்னளவில் செயற்படக்கூடிய அறிவுடைய பொருளன்று. இவண் குறிப்பிட்ட பொருள்களை அவர்கள் துறந்து விடலாம். ஆனால்

---

3. கஞ்சத் தனமும் ஒரு காரணம். சருக்கரை கூடாது. உப்பு கூடாது, எண்ணெய்ப் பொருள் கூடாது என்ற நிலைகள் கொடுமையினும் கொடுமை.

செல்வம் சேர்ப்பதற்கும் நுகர்தல் இல்லாமல் இருப்பதற்கும் ஊழ்வினை காரணமாக இருப்பதால் அவர்கள் அவ்வாறு துறக்க முடிவதில்லை. ஊழால் வரவேண்டிய துன்பங்களை இவ்வாறு தாக்காமல் நீங்குமானால் அவர்கள் துறப்பார்கள். ஆனால் ஊழ் ஆட்சி விடாது.

துறப்பார்மன் துப்புரவு இல்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின் (378)

என்பது பொய்யா மொழி.

ஊழால் இன்ப துன்பங்களும் அமைகின்றன. புறவாழ்வில் செல்வம், நுகர்வு, முதலியவற்றை அமைப்பது போலவே, அகவாழ்வில் பிறருக்கு நன்மை செய்தோர் நன்மை அடையுமாறும், தீமை செய்தோர் தீமைகளடையு மாறும் ஊழே அமைகின்றது.

அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை; அதனை
மறத்தலி னூங்கில்லை கேடு (32)

என்பது வள்ளுவம் அகவாழ்வில் அறத்தைப் போற்றி வளர்க்க உரிமை கொடுத்த ஊழ் அதற்கேற்ப நன்மை தீமை விளையும் முறை பிறழாமல் ஆட்சி புரிந்து வருகிறது. அதாவது அறநெறி போற்றி வாழ்ந்தால் நன்மை விளையுமாறும் அறநெறி புறக் கணித்து வாழ்ந்தால் தீமை விளையுமாறும் அமைந்துள்ளது.

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு (204)

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும் (319)

என்ற குறள் மணிகளை நோக்க இவை புலனாகும். அறத்தைப் போற்றவும் புறக்கணிக்கவும் மக்களுக்கு உரிமை உள்ளதே

யன்றி அதனால் விளையும் நன்மை தீமைகளை மாற்றிவிட உரிமை இல்லை. ஆகையால் விதைத்தது விளையும் என்று உணர வேண்டும். விளையும்போது தாம் விதைத்தது இன்னது என்று உணர்ந்து திருந்த வேண்டும். அறத்தின் சிறப்பையும் ஊழின் வலியையும் உணர்ந்து தெளிய வேண்டும்.

இங்ஙனம் உணராமல் நன்மை விளையும் போது நல்லவை என்று உணர்கின்றவர்கள், தீமை விளையும்போது அல்லது படுவது ஏன்? நன்னெறியால் நன்மையும், தீ நெறியால் தீமையும் விளையுமாறு செய்யும் ஊழின் வலியை உணர்வதே கடமையாகும்.

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவது எவன்? (379)

என்ற வள்ளுவம் இக்கருத்தை வலியுறுத்துகின்றது. ஊழைவிட வலிமை மிகுந்தவை எவை உள்ளன? அதனைக் கடந்து கொள்ள வேறொரு வழியைத் தேடினாலும் அப்போதும் அதுவே முன்வந்து ஆட்சி புரியும். ஆகவே அதன் ஆட்சி வலிமையை உணர்ந்து அந்நெறியைப் போற்றி வாழ்வதே கடமையாகும்.

ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று
சூழினும் தன்முந் துறும் (380)

என்பது வள்ளுவம். இக்கருத்தைத் தொடர்ந்து பிறிதோரிடத்தில் (ஆள்வினையுடைமை அதி. 62) வள்ளுவர் பெருமான் இதற்கு "முறிவு" தருகின்றார்.

ஊழ்வினையும் ஆள்வினையும்: ஊழ்வினையில் தெய்வத்தின் செயல் மிகுதி; உயிர்களின் செயல் திறமும்

ஓரளவு இருக்கும். ஆள்வினையில் மக்களின் செயலூக்கம் மிகுதி; ஊழ்வினைக்குக் காரணமான உயிரின் செயலூக்கமும் மிகுதி. ஊழ்வினைக்குக் காரணமான உயிரின் செயல்கள் முன் நடந்தவை ஆள்வினை இப்போது நடப்பது. முன் செய்த வினையின் பயனை நுகர்ந்து கழிப்பதற்காகப் பிறவி அமைந்தது. இப்போது செய்யும் ஆள்வினைகள் பற்றற்றன வாய் இருந்தால் அவை ஊழாகவும் மாறா; அவற்றிற்காகப் பிறவியும் உண்டாகா. பற்றுள்ளனவாய் இருப்பின் முன் ஊழோடு மேலும் சேர்ந்து கொள்ளும்.

ஊழ்வினை உறுத்து வரும்போதாவது அறிவு திருந்தி இனிச் செய்யும் செயல்களைப் பற்றற்றனவாகச் செய்ய உறுதி கொள்ள வேண்டும்; அவ்வாறு செய்து வந்தால் அம்முறைமை முன் ஊழின் வலிமையையும் குறைத்து இனியும் ஊழ்உண்டாகாதபடி செய்து விடும். மற்றொன்று சூழினும் தான் முந்துறும் (380) என்பதில் 'மற்றொன்று' என்பது 'ஆள்வினை' என்னும் முயற்சி. ஆயினும், முன் ஊழ்வினை யின் தாக்குதலை இப்போது செய்யும் பற்றற்ற செயல்களால் ஓரளவாவது உறுதியாகக் குறைத்துக் கொள்ள முடியும்.

> **ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றி**
> **தாழாது உஞற்று பவர் (620)**

என்ற குறட்பாவில் 'ஊழையும்' என்பதிலுள்ள உம்மை அதன் வலிமையைப் புலப்படுத்துகிறது. 'உப்பக்கம்' என்பது 'எதிர்ப்பக்கம்'; உறுத்து வரும்போது நன்முயற்சிகளால் (ஆள்வினைகளால்) அதன் வேகத்தைச் சிறிது தணித்துத் தாக்குதல் அணுகி விடாதபடி இடை நடுவே நிறுத்தி எதிர்த்துக் கொண்டிருக்க முடியும். அதற்கே முயற்சியை மக்கள்

இடைவிடாமலும் தளராமலும் ஓவாது செய்ய வேண்டியுள்ளது. ஆதலால் எந்நிலையிலும் மக்கள் நன் முயற்சிகளோடு ஊக்கமாய்ச் செயலுறுவது கடமை. விதியின் வலிமையை நினைத்துக் கொண்டு வாளா இருத்தல் ஆகாது. 'விதியையும் மதியால் வெல்லலாம்' என்ற முன்னோர் மொழியை நினைவில் இருத்தி எடுத்த பிறப்பில் ஏற்று கொண்ட வினை வலியைக் குறைக்கவும், இன்னும் ஏற்க வேண்டியவினைச் சுமைகளை அடியோடு மாய்க்கவும் நன்முயற்சிகளை உலைவின்றித் தாழாமல் மேற்கொண்டு நாளும் உழைத்து வர ேண்டும்.

மக்கள் முயற்சியாளராய் இருப்பதொன்றே இறை யருளின் துணை பெறும். அருள் வலிமை துணை நின்றால் ஊழ்வலிமை குன்றிவிடும். எடுத்த பிறவியின் ஏன்று கொண்ட ஊழ் மட்டுமே திருவருட் பதிவு ஏறினமையால் வலிமைமிக்கது; இந்த ஊழ் ஒரு பிறவிக்கு மட்டும் ஏன்ற ஊழ். 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்ற விடத்து வரும் 'ஊழ்' இந்த ஏன்ற வினையைக் குறிப்பது தான்; ஏற்க வேண்டிய ஊழோ அளவு காண முடியா; அவற்றை யெல்லாம் நுகர்ந்து கழிப்பதற்கு எத்தனையோ பிறவிகள் எடுத்துத் தீர வேண்டும். ஆனால், அளவில் அவை மிகுதியே தவிர, வலிமையில் மிகுந்தவை அல்ல. ஏனென்றால் இன்னும் அவற்றில் திருவருள் வலிமை சேரவில்லை.

ஆதலால் ஏன்ற ஊழின் வலிமை ஆள்வினைக்கு இரங்கும் அருள் துணையில் ஓரளவு குறைத்துக் கொள்ள முடியும் எனவும், இனி ஏற்க திருவருள் வலிமை சேர்ந்த தாகலின் பற்றற்ற ஆள்வினையால் அடியோடு அழிந்துவிட முடியும் எனவும் தெளிந்து கொள்ளலாம்.

16. எண்ணும் எழுத்தும்

'எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்' என்பது ஔவைப் பாட்டியின் அருள்வாக்கு இது.

> **எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
> **கண்என்ப வாழும் உயிர்க்கு. (392)**

என்பது 'கல்வி' அதிகாரத்தில் (40) வரும் குறளினின்றும் பிறந்தது. ஈண்டு உயிர்க்கு எண், எழுத்து ஆகிய இரண்டும் வற்புறுத்தப் பெறுகின்றது. இவை இரண்டிலும் 'எண்' முதலில் குறிப்பிடப் பெற்றிருப்பதால் அதன அருமை மேலும் வற்புறுத்தப் பெறுகின்றது.

அன்றாட வாழ்வில்: அன்றாட வாழ்வில் எண்தான் முதலிடம் பெறுகின்றது. அதனால்தான் அதற்கு அப்பெருந் தகை முதலிடம் அளித்து முதலாவதாகக் குறிப்பிட்டார் என்று கருதலாம். குறளின் அதிகார எண்கள், பேருந்து எண்கள், காவலர் எண்கள், பள்ளி கல்லூரிகளில் மாணாக்கர் களின் எண்கள், வங்கிக் கணக்கு எண்கள், வீட்டு எண்கள் வருமான வரிக் கணக்கு எண்கள், சாலைப் பெயர்களின் எண்கள் போன்றவற்றில் ஆட்கள், இடங்கள் இவற்றின் பெயர்களை விட எண்களே முதலாவதாக இடம் பெறுகின்றன. கற்றவர்கள், கல்லாதவர்கள் உட்பட பாரிமுனை, அண்ணாசதுக்கம், அடையாறு முதலான இடங்களைக் குறிப்பிடாமல் பேருந்து

எண்களையே சொல்லி வினவுகின்றனர். இங்கெல்லாம் பெயர்களை விட எண்களே முதலிடம் பெறுகின்றன என்பதை அறிகின்றோம். வங்கிகளிலும் பெயர்களைவிட எண்களையே கூறுமாறு கேட்கின்றனர். என் ஆசிரியப் பெருந்தகை அருள் தந்தை ஜெரோம் டிசௌசா (1936-39) பல ஆண்டுகள் கழித்துப் பார்க்கும் போது Are you not subbu with number 306 (பி.எஸ்சி வகுப்பில் எண் இது) என்று கூறியதை வியப்புடன் நினைவு கூர்கின்றேன். ஆகவே எல்லாவற்றிலும் பெயர்களை விட எண்களே சிறப்பிடம் பெறுவதைக் காண முடிகின்றது.

எண்ணின் சிறப்பு: ஈண்டு ஒன்று முதல் தொடங்கி வரும் எண்கள் சிறப்பிடம் பெறுவதை நோக்குவோம்.

ஒன்று : 'கடவுள் ஒருவர்' 'ஒன்றே என்னின் ஒன்றேயாம்' என்பது கம்பன் வாக்கு

இரண்டு : துவைதம். இது வைணவ தத்துவங்களில் ஒன்று. துவைதம் இரண்டு. இரட்டை மணி மாலை (நூலின் பெயர்)

மூன்று: மும்மூர்த்திகள் - நான்முகன் சிவன் திருமால். மும்மலங்கள் - ஆணவம், கன்மம், மாயை. பதி, பசு, பாசம் சைவதத்துவம். சித்து, அசித்து, ஈசுவரன் வைணவதத்துவம். முத்தி நிலைகள் - சாலோகம், சாமீப்யம், சாரூபம். இறைவன் நிலைகள் - அருவம், உருவம் அருவுருவம் (சைவம்) மூவகைக் காரணங்கள் முதற் காரணம், துணைக்காரணம், நிமித்த காரணம், திருமந்திரம், துவையம், சரமசுலோகம் (வைணவம்). மும்மணிக் கோவை நூலின் பெயர்.

நான்கு: நால்வர் - சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர். நான்மறை - இருக்கு, யசுர், சாமம் அதர் வணம். நால்வகை நெறிகள் - அன்பு நெறி, மகன்மை நெறி,

தோழமை நெறி, நன்னெறி (சைவம்); சரியை, கிரியை யோகம், ஞானம்; அறம் , பொருள் இன்பம் வீடு (குறிக்கோள்) என்பவை. நான்மணிமாலை (நூலின் பெயர்).

ஐந்து: ஐந்தெழுத்து மந்திரம் (சிவாய நம); பஞ்சபாண்டவர்கள், பஞ்ச சம்ஸ்காரம் (தாபம், புண்ட்ரம், நாமம், மந்திரம், யாகம்); ஐம்பொறிகள், ஐம்புலன்கள் கன்மேந்திரி யங்கள், ஞானேந்திரியங்கள்; ஐம்பெரும் பூதங்கள், ஐம்பெருங் குழு, பஞ்சலிங்கம் (அப்பு முதலியன,) பஞ்சாங்கம் - கரணம் திதி, நட்சத்திரம், முதலியன; ஐந்திணை விளக்கும் நூல். பஞ்ச வேள்விகள் - தேவ, பூத, பிதுர், நர, பிரம்மவேள்விகள்); பரம், வியூகம், விபவம் அந்தர்யாமி, அர்ச்சை இறைவன் நிலைகள் (வைணவம்)

ஆறு: அறுசுவை (இனிப்பு, உவர்ப்பு, கார்ப்பு, கைப்பு, துவர்ப்பு, புளிப்பு, ஆறு சமயம் (சைவம், வைணவம் சாக்தம், சௌரம் காணபத்தியம், கௌமாரம்) என்ற சமயங்கள். ஆறுபகைகள் - காமம், குரோதம், மதம், மோகம், உலோபம், மாச்சரியம் இவை உட்பகைகள்; மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை, இவை புறப்படை கள்); முருகனது ஆறுபடை வீடுகள்; ஆறு முகம்.

ஏழு: ஏழுமலையான். ஏழு குல பர்வதங்கள் (இமயம், மந்தரம், கைலாயம், வடவிந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி என்பவை) ஏழு உலகங்கள் (பூ, புவ, சுவ, மக, ஜந, தப, சத்திய என்பவை) மேல் ஏழு உலகங்கள், அதல, விதல, சுதல, நிதல, தராதல, ரசாதல, மகாதல கீழ் ஏழு உலகங்கள். சப்தரிஷிகள் (அத்திரி, வசிட்டர், காசியபர், கௌதமர், பரத்வாசர், விசுவாமித்திரர், சமதக்னி என்பவர்கள்). சப்த தாண்டவம் - ஆனந்தத் தாண்டவம், சந்தியா தாண்டவம், கௌரிதாண்டவம்,

திரிபுரதாண்டவம், காளிதாண்டவம், முனிவர் பொருட்டு நடித்த தாண்டவம், சங்காரத் தாண்டவம் என்பன. ஏழு தீவுகள் (சம்பு, பிலட்சம், குசம், கிரௌஞ்சம், சாகம், சான்மலி புட்கரம் என்பன); ஏழுநரகங்கள் - அள்ளல், இசௌரவம், கும்பிபாகம், வடாசலம், செந்துத்தானம், பூதி, மாபூபதி என்பன. ஏழு நாகங்கள் - தக்கன், காமன் , காலன், வசு, வாசுகி, அனந்தன், கபிலன் என்பன. ஏழு நகரங்கள் (அயோத்தி, மதுரை மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்பன). ஏழு மேகங்கள் (சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்கரித்தம், துரோணம் காளமுகி, நீலவருணம் என்பன). சப்தவிடங்க தலம் (திருவாரூர், திருநாகைக்காரோணம், திருநள்ளாறு, திருமறைக் காடு, திருக்காறாயல், திருவாய் மூர், திருக்குவளை என்பன).

எட்டு: எட்டெழுத்து மந்திரம் (ஓம் நமோ நாராயணாய). எட்டு குலபர்வதங்கள் (இமயம், மந்தரம், கைலாயம், விந்தியம், நிடதம் ஏமகூடம், நீலம், கந்தமாதனம் என்பன. எட்டுத்திக்குகள் (கிழக்கு, தென் கிழக்கு, தெற்கு, தென் மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு என்பன). எட்டுத்திக்குப் பாலகர்கள் (இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன் ஈசானன் என்பவர்கள்). எட்டு வசுக்கள் - அனலன், அனிலன் , ஆபத்சைவன் , சோமன் தரன், துருவன், பிரத்யூஷன், பிரபாசன் ஆகியோர்). எண்வகை சித்திகள் (அட்டமா சித்திகள் - அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன. எட்டு யானைகள் (அட்டதிக்கஜம்) - ஐராவதம், புண்டரிகம், வாமனம், குமுதம், அஞ்சம், புட்பதக்தம், சார்வ பௌமம், சப்ரதீபம் என்பன. எட்டுத் தொகை(நூல்கள்): நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு கலித்தொகை, புறநானூறு, பரிபாடல், பதிற்றுப்பத்து என்பன. எண் சுவை (நகை, அழுகை, இழிவரல்,

மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன). எண்பேராயம் (கரணத்தியலவர், கருமாதிகாரர், கனகச் சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானை வீரர், இவுளி மாந்தர் என்பவர்கள். எண்சுவடி.

ஒன்பது: ஒன்பது வாசல் (உடலிலுள்ள ஒன்பது துவாரங்கள்), ஒன்பது கோள்கள் (நவக்கிரகங்கள்) - ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, இராகு கேது என்பவை. நவரசங்கள் - சிருங்காரம், கருணம், வீரம், ரௌத்திரம் பயானகம், பீபத்சம், அற்புதம், சாந்தம் ஆகியவை. நவவிதசம்பந்தம் தந்தை தனயன்; இரட்சிப் பவன் இரட்சிக்கப் படுபவன், அடிமை அடிமை கொள்பவன், நாயகன்; நாயகி; சொத்து - சொத்துக் குரியவன், அறிபவன் - அறியப்படுபவன், சரீரம் சரீரத்தை உடையவன், தாங்குகிறவன்-தாங்கப்படும் பொருள், அநுபவிக்கிறவன் - அநுபவிக்கும் பொருள் என்ற உறவுகள். நவமணிகள் (இரத்தினங்கள்) கோமே தகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைரம், வைடூரியம் என்பன. நவமணி மாலை - வெண்பா ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்ற ஐந்து வகைப் பாக்களும் தாழிசை, துறை, விருத்தம் என்ற மூவினப்பவினங் களும் ஒன்பது பாட்டுகள் பொருந்திய வகையினையுடையது

பத்து: பதிகம் - பத்துப் பாடல்களைக் கொண்டது. பதிற்றுப் பத்து (நூல்), பத்துப்பாட்டு, தசகம் - பத்துப் பதிகங்களையுடைய ஒரு பகுதி (திருவாய் மொழி, திருமொழி போன்றவை)

பதினொன்று: ஏகாதச உருத்திரர்கள், ஏகாதசி (பதினொன்றாம் திதி)

பன்னிரண்டு: பன்னிரு ஆழ்வார்கள். பன்னிரு திருமுறைகள். பன்னிரண்டு லக்னம் (இராசி மண்டலம்)

பதின்மூன்று: மேனாட்டு மூடப்பழக்கப்படி கெட்ட எண்.

பதிநான்கு: பதிநான்கு சாத்திரங்கள் (சைவம்) திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபாஇருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை வெண்பா, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறிவிளக்கம், சங்கற்ப நிவாகரணம் என்பவை. பதிநான்கு உலகுகள் (கீழ் ஏழு; மேல் ஏழு)

பதினாறு: மார்க்கண்டன் வயது, பதினாறு பேறுகள் (மாடு செல்வம், மனை, மனைவி, மக்கள், கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், நிலம், நீர், வயது, வாகனம், பொன், பொருள், போகம், புகழ் என்பன. 'கலையாத கல்வியும்' என்று தொடங்கும் அபிராமி அந்தாதிப் பாடலில் இவை குறிப்பிடப் பெற்றுள்ளன.

பதினெட்டு: ஆடிப் பதினெட்டு. பகவத்கீதையில் 18 அத்தியாயங்கள். பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பதினெண் சித்தர்கள், பதினெண்கணத்தவர் (அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாசயவாசியர், போகபூமியோர் ஆகியோர்)

இருபது: இருபா இருபஃது - முன்னர் வெண்பா வையும் பின்னர் ஆசிரியப்பாவையும் முறையாக வைத்து அவை ஒன்றோடொன்று சொல்லால் தொடர்நிலை நீங்காத வகையில் பாடப் பெறுவது.

இருபத்தைந்து: வெள்ளி விழா ஆண்டு. ஆண்டு விழா கொண்டாடப்பெறும். திருக்குறள் இன்பத்துப்பால் அதிகாரத் தொகை இருபத்தைந்து.

இருபத்தாறு: வைணவ தத்துவம், மனம், மெய், வாய் கண் செவி மூக்கு என 6 வாக்கு, கால், கை, எருவாய், கருவாய் என

கன்மேந்திரியங்கள் 5; தந்மாத்திரைகள் 5; பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என பூதங்கள் 5; பிரகிருதி, மகாந், ஆங்காரம் என 3 ஆக மிச்ர தத்துவம் 24; ஆன்மா ஒன்று; பரமான் மா ஒன்று ஆக வைணவ தத்துவம் 26.

முப்பத்தாறு: உலகம் 36 தத்துவங்களாலானது (சைவம்) ஆன்மதத்துவம் 24 வித்யாதத்துவம் 7 சிவதத்துவம் 5 ஆக இவை 36.

நாற்பத்தெட்டு: கோயில் சமய சடங்குகளில் மேற் கொள்ளப் பெறும் மண்டலக் கணக்கில் பயன்படும் எண் 48.

ஐம்பது: பொன் விழா ஆண்டு. ஆண்டு விழா கொண் டாடப் பெறும்.

அறுபது: மணிவிழா ஆண்டு - ஆண்டுவிழா கொண் டாடப் பெறும்.

அறுபத்து மூன்று: நாயன்மார்களின் தொகை. பெரிய புராணம் 63 நாயன்மார்களின் வரலாறு.

அறுபத்து நான்கு: சிவபெருமானின் திருவிளை யாடல்களின் தொகை. பரஞ்சோதி திருவிளையாடல் புராணம் (இலக்கியம்)

எழுபது: முத்து விழா ஆண்டு - ஆண்டு விழா கொண்டாடப்பெறும்

எழுபத்தைந்து: பவளவிழா ஆண்டு - ஆண்டுவிழா கொண்டாடப்பெறும்.

எண்பது: சதாபிஷேகம் என வழங்கப் பெறும் பெருமங்கலப் பெருவிழா ஆண்டு - ஆண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பெறும்.

தொண்ணூற்றாறு : தத்துவங்கள் 36; தாத்து விகங்கள் 60 ஆக சைவ தத்துவங்கள் 96.

நூறு: சதகம் 100 பாடல்களைக் கொண்டது. இலக்கியங்கள் பெரும்பாலும் 100 பாடல்களைக் கொண்டு அமையும் எ-டு அந்தாதி இலக்கியங்கள்.

நூற்று எட்டு: ஆழ்வார் பெருமக்களால் மங்களா சாசனம் செய்யப்பெற்ற 108 திவ்விய தேசங்கள்.

நூற்று முப்பத்து மூன்று: திருக்குறள் அதிகாரங் களின் எண்ணிக்கை - 133.

சில சமயம் அவசியங்களின் நிமித்தம் நாட்டில் கலகங்கள் நேரிடாதவாறு

நூற்று நாற்பத்து நான்கு: அமைதி காப்பதற்காக அரசு அவ்வப்போது பிறப்பிக்கும் ஆணை கிரிமினல் சட்டம் 144 பிரிவின்படி நடைபெறுவது.

இருநூற்று முப்பத்தேழு: தேவார வைப்புத்தலங் களின் தொகை. பதிகங்கள் அமையாமல் பாடல்களில் தலங் களின் பெயர்கள் வைக்கப்பெற்றிருப்பது - 237.

இருநூற்று எழுபத்து நான்கு: தேவாரப் பாடல்கள் பெற்றதிருத்தலங்களின் எண்ணிக்கை - 274

நானூறு: குறுந்தொகை, நற்றிணை, நெடுந்தொகை (அகம்), புறம் இவை 400 பாடல்களைக் கொண்டவை.

ஐந்நூறு: ஐங்குறுநூறு 500 பாடல்களைக் கொண்டது.

ஆயிரத்தெட்டு: இறைவனின் திருநாமங்கள்

இங்ஙனம் எண்களைச் சொன்னாலே போதும். அவை குறிக்கும் பொருள்கள் உடனே மனத்தில் தட்டுப் படும் (விடுபெற்றவையும் சில இருக்கலாம்). இதனால் வள்ளுவப் பெருந்தகை எண்ணுக்கு முதலிடம் தந்தமை துணியப்படும்; தெளியவும் படும்.

17. செவியுணவு

'கல்வி' என்ற அதிகாரத்தில் (40) கல்வியின் இன்றியமையாமையை வற்புறுத்திய வள்ளுவர் 'கேள்வி' என்ற அடுத்த அதிகாரத்தில் (41) 'கல்லாமையால்' நேரிடும் இழிநிலைகளைக் காட்டி எதிர்மறையால் கல்வியை வற்புறுத்துவர். அடுத்து வருவது 'கேள்வி' (42) என்ற அதிகாரம் கற்பதற்கு வாய்ப்பில்லாதவர்கள் கற்றறிந்தவர் கூறுவதைக் கேட்டலாலும் கல்வியின் பயனை எய்தலாம் என்பதை விளக்குவது. இதில்,

> **செவிக்குஉணவு இல்லாத போழ்து சிறிதளவு**
> **வயிற்றுக்கும் ஈயப் படும் (412)**

என்ற குறள் வருகின்றது. இதில் கேள்விச் செல்வத்தை ஆசிரியர் வற்புறுத்துவதைப் பரிமேலழகர் ஆசிரியர் கூறுவதன் உயிர் நாடியை நன்கு உணர்ந்து அற்புதமாக விளக்குவர். அவ்விளக்கத்தை ஈண்டுக் காண்போம்.

உரையாசியர் கூறும் சிறப்புரை: "சுவை மிகுதியும் பிற்பயத்தலும் உடைய கேள்வியுள்ள பொழுது உணவு வெறுக்கப்பெறுதலான் 'இல்லாத போழ்து' என்றும், (உணவு) பெரியதாய வழி தேடல் துன்பமேயன்றி, நோயும் காமமும் மிகுதலால் 'சிறிது' என்றும், அது (உணவு) தானும் பின்னிருந்து கேட்டற் பொருட்டாகலான் 'ஈயப்படும்' என்றும் கூறினார். 'ஈதல்' வயிற்றது இழிவு தோன்ற நின்றது.

இதனை விளக்குவோம். இதற்கு முந்திய குறளில் 'கேள்வி'யை 'செவிச்செல்வம்' என்று போற்றினார். மக்களால் அதிகமாகப் போற்றப் பெறுவது 'செல்வம்'. இல்லறத்தின் பயனாகிய மக்கட்பேற்றை 'மக்கட்செல்வம்' என்று கூறுவதை ஈண்டு நினைத்தல் தகும்.

வள்ளுவர் குறளை ஆழ்ந்து நோக்கிப் பொருள் காணும் போது,

தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால் [1]

என்ற பாடல் நினைவிற்கு வரும். ஒரு சிறு புல் நுனியில் தினையளவுள்ள நீர்த்துளியில் ஒரு பனைமரம் தென்படுவது போல், குறளின் ஒரு சிறு பதத்தில் பெரும் பொருள் காணப்படும் என்ற கருத்து நினைவில் எழும். இதை நினைவில் கொண்டு மேற்காட்டப் பெற்ற குறளில் உள்ள சொல்லையும் சொற்றொடரையும் நோக்குவோம்; இப்படி நோக்கிதான் மேற்குறிப்பிட்ட பரிமேலழகரின் உரை அமைந்தது.

(1)'இல்லாதபோழ்து' ஒருவர் கம்பராமாயணத்திலுள்ள வாலிவதைப் படலம், விராடன்வதைப் படலம், இராமன் கானகம் ஏக வேண்டும் என்ற சிற்றன்னையின் சூழ்ச்சியைக் கேட்டவுடன் இலக்குவனுக்கு எழுந்த சினம் அதனை அடக்க இராமன் மேற்கொண்ட முயற்சி போன்ற பகுதிகளை ஜகவீர பாண்டியன், உலக ஊழியனார் போன்ற பெரும் புலவர்கள் ஆற்றும் சொற்பொழிவில் உள்ளத்தைப் பறிகொடுத்து ஆழ்ந்து அநுபவிக்கும்போது பசிதோன்றுவதில்லை. பசியை மறந்து சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டே இருப்பவர்களைக் காண்கின்றோம். இஃது இலக்கியச் சுவையில் ஈடுபட்டோர் நிலை.

---

1. திருவள்ளுவமாலை 5 (கபிலர் பாடல்)

பதி பசு பாசம் என்ற சைவ சித்தாந்த தத்துவம் பற்றியோ, சித்து அசித்து, ஈசுவன் என்ற வைணவ சித்தாந்த (விசிட்டாத்வைத) தத்துவம்பற்றியோ அவ்வவ் தத்துவ அறிஞர்களின் விரிவுரைகள் நடைபெறுகின்றன. சமய உணர்வு மிக்கோர் இந்த விரிவுரையில் ஈடுபட்டு உள்ளத்தைப் பறி கொடுத்துத் தம்மை மறந்த நிலையில் கேட்டு அநுபவிக் கின்றனர். இவர்கட்கும் பசிமறந்த நிலை ஏற்படுகின்றது. இது 'பிற்பயத்தல்' என்ற குறிக்கோள் நிலையில் உள்ளோர் நிலை.

(2) சாதாரணமாகப் பசிக்காக உணவு உண்ணப் படுகின்றது. சிலர் அறுசுவை உண்டியை நுகர விழை கின்றனர். பல்வேறு இனிப்பு வகைகள், பல்வேறு சுவை நீர் வகைகள் முதலியவற்றில் இவர்கள் மனம் பாய்கின்றது. இவற்றால் உணவுவகை பெரிதாகின்றது. 'பெரிதாய வழியாக' அமைகின்றது.

(அ) இதற்குப் பொருட் செலவு அதிகமாகும்; இதற்குப் பொருள் தேட வேண்டும். அலுவல் நேரம் போக, மேலும் சில மணி நேரம் வேறு பணிகளில் ஈடுபட்டு உழைக்க வேண்டும். இதனால் உழைப்புத் துன்பம் ஏற்படுகிறது. சிலர் குறுக்கு வழியாக கையூட்டு போன்ற முறைகளையும் கையாள நேரிடுகின்றது. இது காவலர் கவனத்திற்கு வந்து பிடிபட நேர்ந்தால் வழக்கு நடைபெறல், அதனால் தண்டனை அநு பவிக்க நேரிடல் போன்ற துன்பங்களைச் சந்திக்க நேரிடும். இவை அதிமாகப் பொருள்தேடலால் ஏற்படும் துன்பங்கள் ஆகும்.

(ஆ) இவ்வாறு தேடப்பெற்ற பொருளைக் கொண்டு பேருண்டி கொள்வார்களேயானால் - அஃதாவது மாறுபாடுள்ள உணவை உண்பார்களேயானால் உடலுக்கு ஊறுபாடு ஏற்படும் 'மிகினும் குறையினும் நோய் செயும்'.

துவரப்பசிக்காமல் உண்ணும் சந்தர்ப்பங்களும் நேரிடும். இவற்றால் ஏற்படும் நோய் இருவகைப்படும்.

(i) **செரிமானம் ஆகாமை** ஒன்று. இதனால் ஏற்படும் விளைவுகள் வாந்தி, பேதி. வாந்தியால் வரும் துன்பத்தையும் பேதியால் (கழிச்சலால்) நேரிடும் தொல்லைகளையும் நாம் நன்கு அறிவோம்.

(ii) செரிமானம் ஆகி சத்து உடலுக்கு ஏறினால் 'காமம்' என்ற நோய் தலை தூக்கும். இந்திரிய சேட்டைகள் நேரிடும். ஒரே மங்கையுடன் முறையுடன் அதிகமாகச் சிற்றின்பம் நுகரின் இருவரும் 'நரம்புத் தளர்ச்சி' நோயால் தாக்குற நேரும். பல மங்கையருடன் அளவு மீறி சிற்றின்பம் நுகரின் புகழ் கெடும்; பால்வழி நோய்களால் தொல்லைப் பட நேரும்.

(iii) 'சிறிது' 'அளவோடு' என்ற கருத்தில் பொருள் கொள்ள வேண்டும். அடிக்கடி அவி உணவிற் கொப்பதாய செவி உணவை விழைந்து அதில் நாட்டம் கொள்ளும் பொழுது அதற்குத் தடையாகப் பசி நோக்கக்கூடாது என்பதற்காகவே அளவோடு உணவு கொள்ளவேண்டும்.

(iv) 'ஈதல் ஈயப்படும் என்பதிலுள்ள 'செயல்' இது. ஈதல் வயிற்றது இழிவு தோன்ற நின்றது. உயர்ந்த குறிக்கோளுடைய மனம் செவியுணவை நுகரும்பொழுது வயற்றில் பசி வருவது பிச்சை கேட்பது போல உள்ளதாகக் கருதுகின்றார். அதனால் 'ஈயப்படும்' என்றார். நன்னூலி லுள்ள,

ஈதா கொடுவெனும் மூன்றும் முறையே
இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்புரை [2]

2. நன்னூல் - சொல் - பொதுவியல் - நூற் 56.

என்ற நூற்பாவை நினைந்து சொல்லியதாகும். 'ஈ' என்பது இழிந்தோன் உயர்ந்தோன்மாட்டு இரக்கும் சொல்லாம் 'தா' என்பது ஒப்போன் ஒப்போன் மாட்டு இரக்கும் சொல்லாம்; 'கொடு' என்பது உயர்ந்தோன் இழித்தோன் மாட்டு இரக்கும் சொல்லாம். ஈண்டு மனம், வயிறு என்ற இரண்டும் உயர்ந்தோன், இழிந்தோன் என்ற இருவர்க்கும் ஒப்ப நின்றன. 'மனம்' உயர்ந்த குறிக்கோளை யுடைய இலக்கியம் தத்துவம் இவற்றை நுகர்ந்து கொண்டிருக்கும்பொழுது வயிற்றில் ஏற்படும் பசியைப் போக்க வயிறு 'எனக்கு உணவு ஈ' என்று பல் இளித்துக் கொண்டு உணவு கேட்கும் பிச்சைக்காரன் நிலையில் உள்ளது. அதனால்தான் 'ஈதல் வயிற்றது இழிவு நோக்கி நின்றது' என்றார் என்பதை அறிய வேண்டும்.

நளவெண்பாவில் ஒரு பாடல். சுயம்வரம் மண்டபத்தில் ஒவ்வொரு அரசனாக தமயந்திக்கு அறிமுகப்படுத்திக் கொண்டு வரும் தோழி அவந்தி நாட்டரசனை அறிமுகம் செய்யும் போக்கில்,

வண்ணக் குவளை மலர்வவ்வி வண்டெடுத்த
பண்ணில் செவிவைத்த பைங்குவளை -உண்ணாது
அருங்கடா நிற்கும் அவந்திநா டாளும்
இருங்கடா யானை இவன்.[3]

என்ற பாடல் அமைகின்றது. நடுப் பகலில் கடுமையான வெயிலில் அலைந்து திரிந்த எருமைக் கடா ஒன்று ஒரு குளத்திற்கு வருகின்றது. அத்தடாகத்தில் நீலோர்ப்பல மலர்களுடன் கூடிய கொடியை விரும்பி நீரில் இறங்கு கின்றது. கொடியை வாயால் பற்றி இழுத்தவுடன் அதில் தேன் எடுக்க

3. நளவெண்பா - சுயம்வரக்காண்டம் - 141.

மொய்த்துக் கொண்டிருந்த தேனீக்கள் கூட்டம் 'ஞொய்' என்ற ஒலியுடன் பறக்கின்றன அந்த இனிய இசையொலியைச் செவிமடுத்த எருமைக்கடா அதன் சுவையில் ஈடுபட்டுக் கொடியை 'மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல்' சிலையுருவம்போல் நின்று விடுகின்றது. இவ்வாறு ஐயறிவுள்ள எருமைக்கடாவும் இசையில் ஈடுபடும் நாட்டின் தலைவன் இவன் - பெரிய ஆண் யானையைப் போன்றவன் - என்று தோழி அவந்தி நாட்டு அரசகுமாரனை அறிமுகம் செய்து வைக்கின்றாள். இதனால் அவந்தி நாடு நீர் வளமும் நிலவளமும் மிக்க சோலையால் செழித்திருக்கும் என்பதும் பெறப்படுகின்றது. எருமைக்கடாவே இசையில் மிக்க விருப்பமுடைய தாயுள்ளது என்று கூறியதலால் அந்நாட்டி லுள்ளார் இசைச் செல்வத்தில் அளவற்ற அவாவுடையவர் களாக இருப்பர் என்பதும் சொல்லாமல் அமைகின்றது. ஈண்டு எடுத்தல் உயர்த்துதல்; உயர்த்திப் பாடுதலை உணர்த்தியது. அவந்தி - மாளவ தேசம்.

18. பெரியாரின் துணை

வள்ளுவர் பெருமான் அருளிய முப்பாலில் பொருட்பால் இவ்வுலக வாழ்வு - பொதுவாழ்வு - சீருடன் அமைய ஒருகலங்கரை விளக்குபோல, ஒரு துருவ மீன் போல வழிகாட்டிக் கொண்டிருப்பது. அதில் ஓர் இடம் 'பெரியாரைத் துணைக் கோடல்' என்ற அதிகாரம் ஆகும். நம் காலத்தில் வாழ்ந்த தந்தை பெரியார்ரைப் போல ஒருவரை அல்லது பலரை நினைந்து இவ்வதிகாரத்தை அமைத்திருக்க வேண்டும் எனச் சிந்திக்கத் தோன்றுகின்றது. இல்லையா?

நமது வாழ்வில் அறத்தின் பெருமையை உணர்ந்த வர்களாகவும் தம்மை விட அநுபவம் முதிர்ந்தவர்களாகவும் உள்ள பெரியோர்களின் துணைவேண்டியது மிகவும் இன்றியமையாதது. 'மாசற்றார் கேண்மை' மிக மிக அவசியமானது; முக்கியமானது.

சர்.எ.எல். முதலியாருக்குப் பிறகு ஈடும் எடுப்பும் அற்றவாறு செயற்பட்ட தாமரைச் செல்வர் நெ.து. சுந்தர வடிவேலு அவர்களும், மக்கள் தலைவர் - முதல் அமைச்சர் காமராஜ் அவர்களும், தந்தை பெரியார் அவர்களின் ஆசியையும் ஆலோசனையும் பெற்றவர்கள். அவர்கள் இருவரின் மனமும் தூய்மை யுடையதாக இருந்தது. அறிஞர்களின் பாராட்டையும் பொது மக்களின் புகழ் மாலைகளையும் பெற்றார்கள் அவர்கள். காரணம், தந்தை

பெரியாரின் மாசற்ற கேண்மை இருந்தமையால், எள்ளளவும் சயநலமின்மை வலிய வந்த முதலமைச்சர் பதவியையும் ஆளுநர் பதவியையும் வேண்டாவென ஒதுக்கியமையால் அறியலாம். பொது நல நோக்கும் பகுத்தறிவுச் சிந்தனையும் உண்மையிலேயே பெரியார் என்று போற்றத் தக்கவராகத் திகழ்ந்தார்.

அறத்தின் பெருமையை உணர்ந்தவர்களையும் தம்மைவிட பட்டறிவு முதிர்ந்தவர்களாக உள்ளவர்களையும் அறுதியிட்டு அவர்களுடைய துணையை முறை அறிந்து கொள்ள வேண்டும்.

அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன்அறிந்து தேர்ந்து கொளல் (441)

என்பது வள்ளுவம். அடுத்த குறளில் (442) "உற்றநோய் நீக்கி உறாமை முற்காக்க" வல்ல தன்மையினாரைத் துணை கொள்ள வேண்டும் என்கின்றார். 'உற்ற நோய்' என்பதற்குப் பரிமேழலகர் 'தெய்வத்தானாதல் மக்களானாதல் வரும் துன்பங்கள் என்று சுட்டுவார். தெய்வத்தால் வரும் துன்பங்கள்: மழை இன்மை யினால் வருபவை, காற்று, தீ, பிணி என்றவற்றால் வருவன என்று விளக்கி அவற்றை நீக்கும் முறைகளையும் உறுதிப் படுத்துவர். கடவுளரையும் தக்கோரையும் நோக்கிச் செய்யும் சாந்திகளால் நீக்கப்பெறல் வேண்டும் என்று விளக்குவார். மக்களால் வரும் துன்பங்கள் பகைவர், கள்வர், சுற்றத்தார், வினை செய்வார்[1] இவர்களால் வருவன. அவை சாம, பேத, தான, தண்டங் களாகிய நால்வகை உபாயங்களுள் ஏற்றவற்றைக் கொண்டு போக்குதல். முற்காத்தலை விளக்கும் முறை தெய்வத்தால் வருவனவற்றை உற்பாதங்களால் அறிந்து

1. பில்லிருனியம், ஏவல் முதலியவற்றால் செய்விப்பவை.

அச்சாந்திகளால் காத்தல் ஆகும். மக்களால் வருவனவற்றை அவர் குணம், இங்கிதம் (குறிப்பால் நிகழ்தல்) ஆகாரம் (குறிப்பின்றி நிகழ்வன) செயல் என்பவற்றால் அறிந்து தக்க உபாயங்களால் காத்தல்.

ஒருவர் எல்லாவற்றையும் தாமே கண்டு ஆராய முடியாது. ஆராய்ந்து கூறவல்ல அநுபவம் மிக்க பெரியவர் களை நாடி அவர்களின் ஆராய்ச்சியைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். ஆகையால் அவர்கள் அவருக்குக் கண் போன்றவர்கள்; அவ்வாறு தக்க பெரியோர்களிடத்தில் கலந்து ஒழுகவல்ல தலைவனுக்கு ஒரு தீங்கும் வராது. அவருடைய பகைவர்களும் அவருக்கு ஒரு தீங்கும் செய்ய முடியாது.

சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல் (445)

தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்தது இல் (446)

என்பது வள்ளுவர்பெருமானின் வாய்மொழிகள்.

அறிவால் ஆராய்ந்து கூறவல்ல பெரியார்கள் பல வகைப் படுவர். சிலர் தலைவன்மேல் கொண்ட அன்பினால் நன்மை யை மட்டுமே கண்டு கூறவல்லவர்கள்; ஆகையால் அவர் தம் ஆராய்ச்சி முறைஉடையது அன்று; ஆகையால் பயன் தராது. சிலர் தலைவனிடம் உள்ள அச்சத்தால் அவனிடம் தீமையைக் கண்டதும் எடுத்துக் கூற துணிவற்றவர்களாக இருப்பர்; அவர் களால் தலைவன்திருந்த முடியாது; அதனால் அவர்களுடைய துணை இருந்தும் பயன் இராது; இன்னும் சிலர், தலைவனிடம் நன்மை இருந்தாலும் அதனை மறைத்துத் தீமையை மட்டுமே

பெருக்கிக் கூறுவர்; அவர்களாலும் பயன் இல்லை[2]. வேறு சிலர் தலைவன் யார் என்ற கவலையே இல்லாமல், பொது நன்மையையே கருத்தில் கொண்டு நன்மை தீமைகளை நடுநிலையிலிருந்து எடுத்துக் கூறி, தவறு கண்டபோது கடிந்து திருத்த முயல்வர். இத்தகைய அநுபவம் மிக்க பெரியவர்களின் துணை இருந்தால் அந்தத் தலைவனைக் கெடுக்க வல்ல பகைவர் ஒருவரும் இரார். அங்ஙனம் இடித்துக் கூறித் திருத்தும் பெரியவர்களின் துணை இல்லாத தலைவன் கெட்டழிவான். தீமை செய்யும் பகைவர் இல்லாவிடினும் அவன் எளிதில் கெடுவான்.

இடிக்குத் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர் (447)
இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும் (448)

என்பவை அப்பெருமானின் பொன்மொழிகள்.[3]

இங்கிலாந்து முதலிய சில நாடுகளில் அறிஞர்களின் பேச்சுரிமைக்கும் எழுத்துரிமைக்கும் சிறிதும் தடை இல்லை. சில நாடுகளில் பேரறிஞர்களும் வாழ்வு இல்லாமல் நாடு கடத்தும் நிலை இருந்து வருகின்றது. இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற காலத்தில் **பெர்னாட்ஷா எச்.ஜி. வெல்ஸ்** என்னும் அறிஞர்கள் இருவரும் இங்கிலாந்தில் இருந்து கொண்டே அரசாங்கத்தின் பலவகை முயற்சியைக் குறை

2. இக்காலத்தில் உலகிலுள்ள எல்லா நாடாளுமன்றங்களிலும் எதிர்கட்சியில் உள்ளவர்கட்கு இதுவே கடமையாக உள்ளது. இந்த முறை பொய்க்குப் பொய்யே மருந்தாக ஆள்வோரின் பொய்க்கு எதிர்ப்போரின் பொய்யே வளர்வதாக இருப்பதால், இதிலும் உண்மை இல்லை. இன்று தொலைக் காட்சியில் இவர் தம் வண்டவாளங்களை நேரில் காணலாம்.

3. இவையாவும் அரசனுக்குக் கூறியவையாக இருப்பினும் இல்லத் தலைவர்கள், கட்சித் தலைவர்கள் முதலிய அனைவர்க்கும் பொருந்தும்.

கூறியும், அமைச்சர் குழுவைக் கடிந்தும் பேசினார்; எழுதினார் ஆயினும் அவர்களை அரசாங்கம் கண்டிக்கவும் இல்லை; தண்டிக்கவும் இல்லை; எவ்விதத்திலும் தலையிடவும் இல்லை. அதற்கு மாறாக மற்ற நாடுகளில் தடுக்கப்பட்ட அறிஞர்கட்கும் நாடு கடத்தப் பெற்ற சான்றோர்கட்கும் புகலிடம் அளித்து வந்தது இங்கிலாந்து. முஸ்ஸோலினி (இத்தாலி) ஆட்சியிலும், ஹிட்லரின் ஆட்சியிலும் (ஜெர்மனி) அறிஞர்களும் அறிவியலறிஞர்களும் சொல்லொணாத் துன்பம் அநுபவித் தனர். ஜெர்மனியிலிருந்து நாடுகடத்தப் பெற்ற யூதர்கட்கு அமெரிக்கா புகலிடம் அளித்தது. அங்கு அவர்கள் யுரேனியம் அணுகுண்டு, புளூட்டோனியம் அணுகுண்டு நீரிய அணுகுண்டு கண்டறியக் காரணமாக இருந்தனர்.

உலகத்தைக் காக்கவல்ல பெருநூல்கள் படைத்த அறிஞர்கள் பலதடைகளுக்கு ஆளாயினர்;அதனால்தான் உலகத்து வல்லரசு மண்ணாய் மறைந்தன; மறைந்தும் வருகின்றன. சில அரசுகளின் கொடுமையான ஆட்சியின் காரணமாக பல்வேறு தீவிரவாதிகளின் இயக்கங்களும் உருவாகியுள்ளன என்பதையும் நாம் சிந்திக்கவேண்டும். இவற்றின் செயற்பாடுகள் கட்டுக்கடங்காமல் போய் கொண்டிருப்பதையும் காண்கின்றோம்.

பொது நன்மையை நாடும் சான்றோர்களின் அறிவுச் செயல்கட்குத் தடை ஏற்படுத்துவது பெருங்குற்றம் என்பதை நாம் உணர்ந்து சிந்திக்க வேண்டும்; உலகம் உணர வேண்டும். பன்னூறு ஆண்டுகட்கு முன்னரே வள்ளுவப் பெருந்தகை இந்த உண்மையை உணர்ந்து, அவர்களின் துணை நாடாளும் தலைவனுக்குக் கட்டாயம் வேண்டும் என வற்புறுத்திக் கூறியுள்ளதை நாம் எண்ணி மகிழ வேண்டும். வள்ளுவன் தன்னை உலகினுக்குத் தந்து வான் புகழ் பெற்றது தமிழ்நாடு என்பதையும் சிந்திக்க வேண்டும்.

19. பணியாளர் தேர்வு

நாம் மக்களாட்சியின் கீழ் உள்ளோம். வாக்குரிமை உள்ள நமக்கு அரசின் நடைமுறையினையும் ஓரளவு அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது. அரசன் (மக்களாட்சியில் முதல் அமைச்சன்) எல்லாக் கடமைகளையும் தானே செய்ய முடியாது. ஆகையால் பலரைத் தனக்குத் துணையாக நியமித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு நியமிப்பதற்கு முன் அவர்கள் தக்கவர்களா அல்லரா என்று ஆராய்ந்து அறிய வேண்டும். இதுவே தெரிந்து தெளிதல் (அதி. 51) என்பது. புதியவராக நியமிக்கப்பட்டவருக்கு வழங்கப்பெறும் ஈராண்டு அல்லது மூவாண்டு காலத்தைத் தகுதி ஆய்வுக் காலம் (Probational period) என்று வழங்குவதோடு ஒத்தது இது.

வள்ளுவர் இவ்வதிகாரத்தின் ,

அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கும்
திறந்தெரிந்து தேறப் படும் (501)

என்ற முதற் குறட்பாவிலேயே நான்கு முறைகளைக் குறிப்பிடுகின்றார். உரையாசிரியர் பரிமேலழகர் வடநூல் ஒன்றாகிய சுக்கிர நீதியை அடிப்படையாகக் கொண்டு இம்முறைகளை 'உபதைகள்' என்று குறிப்பிட்டு விளக்குவார்.

அறஉபதை : புதியவராக நியமிக்கப் பெற்றவர் அறத்தில் நம்பிக்கையுடையவரா? அதில் உறுதி உடையவரா?

என்பதை ஆராய வேண்டும். சுக்கிர நீதியில் உள்ள குறிப்பு புரோகிதரையும் அறவோரையும் அனுப்பி இவ்வரசன் (முதல் அமைச்சன்) அறம் வழுவியவன் இவனை நீக்கி அறனும் உரிமையும் உடையவன் ஒருவனை வைத்தற்கு எண்ணினம்: இதுவேயாவர்க்கும் இயைந்தது. நும் கருத்து என்ன என்று சபதத்துடன் சொல்லுவித்தல்.[1]

பொருளுபதை: சேனைத் தலைவனையும் அவனோடு இயைந்தாரையும் அனுப்பி இவ்வரசன் (முதலமைச்சன்) உலோபத் தன்மையுடையவன் (கஞ்சப் பிரபு). இவனைப் போக்கி கொடையும் உரிமையும் உடையான் ஒருவனை வைத்தற் கெண்ணினம். இதுதான் யாவர்க்கும் இயைந்தது. நும் கருத்து என்ன என்று சபதத் துடன் சொல்லுவித்தல்.[2]

இன்ப உபதை: தொன்று தொட்டு இவன் மனைவி யுடன் நன்கு தொடர்பு கொண்டு பழகிய சந்நியாசினியை (தவமுது மகள்) விட்டு அவளால் அமைச்சன் மனைவியருள் (உரிமையுள் இன்னாள்) நின்னைக் கண்டு காதலுற்றுக் கூட்டுவிக்க என்னை விடுத்தாள். அவளைக் கூடுவையாயின் நினக்குப் பேரின்பமேயன்றிப் பெரும்பொருளும் கைகூடும் எனச் சொல்லுவித்தல்.[3]

---

1. முதலமைச்சனே தந்திரமாக இவ்வாறு செய்யத் தூண்டுதல்
2. இக்காலத்தில் மாநிலக்காவல் நிலைய விசாரணை அமைப்பும் மத்திய காவல் நிலைய விசாரணை அமைப்பும் உள்ளன.
3. இது நடைபெறக் கூடிய செயலா என்று கருதலாம். இக்காலத்தில் நடைபெறும் பல்வேறு வகைத்தில்லு முல்லு களை நினைத்துப் பார்த்தால் இது ஒரு சிறிய விஷயம் என்பது தோன்றும்.

அச்ச உபதை: ஒரு நிமித்தத்தின் மேலிட்டு ஓரமைச்சனால் ஏனையோரை அவன் இல்லின்கண் அழைப்பிவைத்து, இவர்கள் ஏதோ சூழ்ச்சியின் பொருட்டுக் கூடினர் என்று அவர்களைச் சிறையில் இட்டு, ஒருவனால் இவ்வரசன் (முதலமைச்சன்) நம்மை வஞ்சித்துக் கொல்லு விப்பதற்கு ஆலோசிப்பதனால், நாம் (சிறையிலிருந்து தப்பி) அதனை முற்படச்செய்து நமக்கினிய அரசன் (அமைச்சன்) ஒருவனை வைத்தல் ஈண்டையாவர்க்கும் இயைந்தது, நின் கருத்து என்ன எனச் சொல்லுவித்தல்.

இந்த நான்கு முறையினாலும் ஒருவனது மனம் மாறவில்லை என்று தெரிந்த பிறகு, அவன் எதிர்காலத்திலும் மனம் மாறான் என்ற கருத்தளவையால் தெளியப்படும்.

ஒருவனுடைய அறிவை ஆராயும்போது அடிப் படையான ஓர் உண்மையை மறத்தல் ஆகாது. எல்லாம் அறிந்தவரும் ஏதும் அறியாதவரும் இந்த உலகில் இல்லை. அதனால் சிறந்த அறிஞரிடத்திலும் சிறிது அறியாமை இருப்பது இயல்பு.

அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு (503)

(வெளிறு - வெண்மை (அறியாமை))

என்பது பொய்யா மொழி.

இந்த உண்மை விளங்கினால் ஒருவரை ஆராய்வது எளிதாகும். அவன் எவ்வகையில் அறியாமையுடையவன் என்பதையும், எவ்வகையில் அறிவு தெளிந்தவன் என்பதை யும் ஆராயலாம். இல்லையானால் வெறுப்பின் காரணமாக

ஒருவனிடம் அறியாமையை மட்டும் காண நேரிட்டு, அறிவுப் பகுதியைக் காணாமல், அவனுக்கு ஒன்றும் தெரியாது என்று ஒதுக்க நேரும். வெறுப்பின்றி அன்பு வளர்ந்த இடமாக இருப்பின், அவனுடைய அறிவுப் பகுதியை மட்டிலும் கண்டு அறியாமையைக் காணாமல் ஆராய்ச்சியில் குறையுற வேண்டி வரும். பிறகு அவனையே தேர்ந்தெடுத்தால், அதனால் தலைவனுக்கே அறியாமை வந்து சேரும்; தலைவன் தன் பொறுப்பும் கடமையும் உணராத அறியாமையுடையவன் எனக் கொள்ள நேரும் (507)

ஒருவனை நல்லவனா? கெட்டவனா? என்றும் ஆராய்ந்து காண்டலும் வேண்டற்பாலது. ஆனால் அவ்வாறு காணும்போது, முழுதும் நல்ல குணமே இருக்க வேண்டும் என்றும், சிறதும் குற்றம் இருத்தல் ஆகாது என்றும் ஆராய்வதால் பயன் இல்லை. ஏன்எனில், உலகில் குணமே நிறைந்து குற்றம் சிறிதும் இல்லாதவர்களையும் காண முடியாது. குற்றமே வடிவாய்க் குணம் சிறிதும் இல்லாத வர்களையும் காண முடியாது[4]. குணமும் குற்றமும் எல்லோரி டமும் கலந்தே உள்ளன. ஆகையால் இரண்டை யும் சீர் தூக்கி ஆராய்ந்து குணம் மிக்கிருந்தால் அவரைக் கொள்ள வேண்டும். குற்றம் மிக்கிருந்தால் அவரைத் தள்ள வேண்டும். தவிர்த்தல் வேண்டும். கொள்ள வேண்டும் ஒவ்வொரு வரிடமும் குணம் குற்றம் இரண்டும் கலந்தே இருக்கும். ரோசாமலரில் முள் இருப்பதுபோல், ஆகையால் குணம் நாடும்போதே குற்றமும் உடன் ஆராய வேண்டும்.

---

4. பாரதத்தில் தருமனிடம் குற்றமும் சிறிது இருந்தது; துரியோதனனிடம் குணமும் சிறிது இருந்தது. இவற்றை நினைவு கூர்க.

வேறு ஒரு வழியும் உண்டு. பேச்சிலும் உண்மை காணாத நிலையில் அவர் புரியும் செயல்களில் உண்மை பளிச்சிடும். ஆகையால் அவருடைய இயல்பு இன்னது என்று ஆராய்வதைவிட்டு, அவர் செய்த செயல்களை எண்ண வேண்டும், ஆராய வேண்டும். அந்தச் செயல்களால் அவருடைய பண்பு விளங்குவது உறுதி. ஏன் என்றால் ஒருவரது பெருமையையோ சிறுமையையோ அவர் செய்யும் செயல்களே பொன் உரைக்கும் (கட்டளைக்) கல் போல் மதிப்பிட்டுக் காட்ட முடியும்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் (505)

என்பது இருப்பூர்திகள் செல்லும் முறைகளை எடுத்துக் காட்டி விளக்குவது போன்ற வள்ளுவர் வாய்மொழி.

20. நாகரிக ஏணி

உயிர்களின் படைப்பு ஏணியில் உச்ச எல்லையில் இருப்பவன் மனிதன். அவன் அறவாழ்வு வாழ்ந்து மேலும் படிஏணியில் உயர வேண்டும் என்ற எண்ணத்தில் வள்ளுவர் பெருமானின் சிந்தையில் சிந்தனையில் எழுந்தது திருக்குறள் என்னும் தெய்வப் பனுவல். அந்தப் பனுவல் பகரும் நாகரிகத்தை அளந்தறியும் கருவி **கண்ணோட்டம்.** அந்தக் கண்ணோட்டத்து உள்ளது உலகியல் (573)

கண்ணோட்டம் என்பது என்ன? அது பழகிய வரிடத்தில் நெகிழ்ந்து நடக்கும் பண்பாகும். இப்பண்பு மக்களின் வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பது. அன்றியும் மிகச் சிறந்த அழகாகவும் திகழ்வது. இப்பண்பு மனிதனிடம் இருப்பதால்தான் உலகியல் சிறப்பாக நடைபெறுகின்றது. இங்ஙனம் பழகியவரிடத்தில் நெகிழ்ந்து ஒழுகும் பண்பு இல்லையாயின் ஒருவரை ஒருவர் சீறுவதும் வெறுப்பதுமே வாழ்க்கையாக அமைந்து விடும். புலியும் மற்றக் கொடிய விலங்குகளும் வாழும் காடு போலவே நாடும் மாறித் தோன்றிய நிலை ஏற்பட்டு விடும். ஆகையால் உலகத்தில் சமுதாய அமைப்பிற்கே கண்ணோட்டம் அடிப்படையாக இருப்பது புலனாகின்றது.

கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையால் உண்டுஇவ் வுலகு (571)[1]

1. கண்ணோட்டம் - 1 (58 -வது அதிகாரம்)

என்பது வள்ளுவம். இது பொருளதிகாரத்தில் அமைந் திருக்கும் பொன்னனைய கூறுடையது.

ஒருவரை ஒருவர் நோக்கும் பார்வையிலேயே உள்ளத்தின் நெகிழ்ச்சி புலப்படும். இஃது அன்புலகின் ஒரு கூறில் அடங்குவது. இந்தக் கண்பார்வையால்தான் அன்பு கொண்டு பழக முடிகின்றது. மக்கட்குப் பிறவியிலேயே இக்கண்ணோட்டம் அமைந்துள்ளது. இதன் காரணமாகவே மக்கள் நூற்றுக்கணக்காகவும், பல்லாயிரக் கணக்காகவும் சேர்ந்து பழகவும் கூடி வாழவும் முடிகின்றது. விமானப் போக்குவரத்து வசதிகள் ஏற்பட்ட பிறகு கண்டங்களுக்கு அப்பாலுள்ள நாடுகளில் அமைந்துள்ள சமுதாயங்களுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்புகளும் ஏற்படுகின்றன. அமெரிக்கா, இரஷ்யா, சீனா, பிரிட்டன், ஐரோப்பிய நாட்டு மக்கட் சமுதாயங்களுடன் இந்திய சமுதாயங்கள் உறவு கொண்டு வருவதையும் கண்டு மகிழ்கின்றோம்.

பகையும் பூசலும் பெருக்குவது மக்களுக்கு இயல் பான பண்பு அன்று. யாரோ சிலர் தன்னலம் கொண்டு தலைமை பெற்று மற்றவர்களை ஏய்த்துத் தூண்டினால் பகையும் போரும் அவ்வப்போது நேரிடுகின்றன. தன்னலம் உள்ளவர்கட்குத் தலைமை இல்லாமல் செய்ய வல்ல அறிவும் ஆற்றலும் மக்களிடம் ஏற்படுமானால் போருக்கு வழி இல்லாமல் போய்விடும். போருக்கு ஆள் திரட்ட ஒரு தலைவன் முயன் றால், மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருந்து போர்செய்ய மறுத்து விடுவார்கள்; தலைவன் வற்புறுத்தினால், அவனுடைய தலைமையை ஒழித்து, போர் வேண்டா என்று அமைதியை நாடும் ஒருவனையே தலைவனாக்கிக் கொள்வார்கள். நாட்டுப் பற்று, சமயப் பற்று என்று பலவாறு கவர்ச்சியூட்டும்

பெயர்களைச் சொல்லி வெறியூட்டுகின்ற உணர்ச்சியாளர் களுக்கும் தந்திரக்காரர்கட்கும் இரையாகாமல் விழித்துக் கொள்வார்கள். ஆகவே எப்படியும் மக்கள் பண்பை அழிக்க முடியாது. மக்கள் வாழ்க்கை இந்த அடிப்படை கொண்டே அமைந்துள்ளது.

புலி முதலிய கொடிய விலங்குகளின் வாழ்க்கை இப்படி அமையவில்லை. ஒன்றை ஒன்று காணும்போது உறுமுகின்றது; வலிய விலங்குகளைக் கண்டால் ஓடி ஒளிகின்றது; வலிமை குன்றிய விலங்குகளைக் கண்டால் துரத்தி அவற்றைக் கொல்லுகின்றது. இஃது இவ்விலங்கு களின் இயல்பு. அவ்வளவு ஏன்? தம் வயிற்றில் பிறந்த குட்டிகளையும் அவை வளர்ந்த பிறகு அவற்றைக் கண்டு உறுமுகின்றன; பகைக்கின்றன. இதனால் இக்கொடிய விலங்குகளிடம் பத்துப் பதினைந்தாகவோ நூறு இருநூறாகவோ குழுக்களாகக் கூடி வாழும் தன்மை அமையவில்லை. அவை தம் இனத்தையும் போற்றுவ தில்லை; பிற இனத்தையும் அழிக்காமல் விடுவ தில்லை; இதன் பயனாக இக் கொடிய விலங்குகள் வளர்ந்து பெருகாமல், விருத்தியடையாமல், வரவரக் குன்றியும் குறைந் தும் வருகின்றன. இறைச்சியுண்ணும் இக் கொடிய விலங்கு களின் பண்பு இவ்வாறு அமையக் காண்கின்றோம்.

ஆனால் புல் தழைகள் முதலியவற்றை உண்ணும் மான் முயல் முதலிய மற்ற தீமையற்ற உயிர்கள் எவ்வளவோ அழிவுகட்கும் இடையிலும் பெருகி வாழ்ந்து வருவதைக் காண்கின்றோம். இவை இருபது முப்பதாகக் கூடி வாழ் கின்றன; கவலையற்றுக் காற்றிலும் ஒளியிலும் கலந்து விளையாடி மகிழ்ச்சியுடன் வாழ்கின்றன. இவை புலி சிங்கங்களைப்போல் குகைகளிலும் கற்பாறைகளின் இடுக்கு

களிலும் ஒதுங்கிப் பதுங்கி பகலில் தலைகாட்ட அஞ்சி அடைபட்டுக் கிடப்பதில்லை; வெட்டவெளியில் வாழ்ந்து மகிழ்கின்றன. மக்கள் வாழ்க்கையும் இப்படித்தான். இவர்களது உடல் அமைப்பையும், செரிமானக் கருவிகளின் அமைப்பையும் நோக்குமிடத்து மக்கள் இயல்பாகவே மரக்கறி உண்பவர்கள் எப்படியோ சிலர் இறைச்சி யுண்பவர்களாக மாறி வெறியுடன் அதனை உண்டு மகிழ்கின்றனர். வள்ளுவர் பெருமானின் கொல்லாமை, புலால் மறுத்தல் அறிவுரைகளும், வள்ளல் பெருமானின் சீவகாருணிய ஒழுக்க அறிவுரைகளும் இவர்கள் போக்கை மாற்ற முடியவில்லை.[2]

மக்கள் பிறரோடு பழகிக் கண்ணோட்டம் உடையவர்களாய் இயைந்து வாழ்வதையே பண்பாகக் கொண்டிலங்குகின்றனர். அதனால்தான் நூறாயிரக் கணக்காகக் கூடிவாழ்வதும், பெரிய பெரிய சமுதாயம் அமைத்து வாழ்வதும் குடியரசு அமைத்துக் கொண்டு வாழ்வதும் இயல்வனவாக உள்ளன. தந்திரமும் தாந்திரமும் உடைய சிலர் சூழும் கேடுகளுக்குச் சில சமயம் இரையாகிப் போர் முதலியவற்றால் மக்கள் அழிவுற்றாலும், அந்தக் கண்ணோட்டப் பண்பு அழிவுபடவில்லை. சமுதாய அமைப்பும் குலையவில்லை. இவ்வளவு சிறந்த மக்கட் பண்பை வள்ளுவர் பெருமான் 'கழிபெருங் காரிகை' (மிகச் சிறந்த அழகு) எனப் போற்றுகின்றார்.

மேலும் அப்பெருமான் கூறுவன: கண்ணோட்டம் இருப்பதால்தான் உலகியல் அழியாமல் உள்ளது என்றும், அப்பண்பு இல்லாதவர் பூமிக்குச் சுமையேயன்றி வேறு பயன்

2. மனிதனுடையசெரிமானக் கருவிகளைக் உண்ணும் வாய் முதல் எருவாய் ஈறாகக் கூர்ந்து நோக்கினால் மனிதன் மரக்கறி உணவுக்குரியவன் என்பது தெளிவாகும்.

இல்லை என்றும் இயம்புகின்றார் (572). இவ்வளவு சிறப்புடைய நெகிழ்ச்சி கண்ணில் புலனாவதால் கண்ணைச் சிறப்பித்து 'கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம்' என்றும் அஃது இல்லாத கண் 'நோய் தரும் புண்ணே' என்றும் புகல்கிறார்(575). இவ்வாறு பயனற்ற கண்களையுடைய வர்கள் கணுவையுடைய மரம் போன்றவர் என்றும் கழறு கின்றார் (576).

இங்ஙனமெல்லாம் கூறிய வள்ளுவர் பெருமான் ஆட்சிப் பொறுப்பிலுள்ள தலைவன் கண்ணோட்டம் உடை யவனாக இருக்க முடியுமா? என்பதைத் தெளிவிக்கின்றார். பொதுக் கடமைகளைத் தான் மேற்கொண்டிருக்கும்போது பழகியவர்களும் சில சமயங்களில் இடையூறு செய்ய முற்படுவர், அவர்கள்மேல் சினங் கொண்டு மாறுபடலாம் என்று தோன்றும். ஆனால் பழ்கியவர்களாக இருப்பதால் மனம் இயல்பாக நெகிழ்ந்து நிற்கும். இடையூறு செய்கின்றவர் களிடத்திலும் கண்ணோட்டம் உடையவனாக இருக்கலாம். ஆனால் தான் மேற்கொண்ட கடமை கெடாதவாறு காத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு செயற்பட வல்லவர்கட்கு இந்த உலகம் உரிமையானதாகும் என்பது அப்பெருமானின் கருத்து ((578).

சிலசமயம் இடையூறு செய்கின்றவர்கள் அளவு மீறிச் செய்வதுண்டு. தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களை ஒறுக்கவும் முடியும். ஆனால் அப்போதும் பழகியவர்கள் என்ற காரணத்தால் பொறுமையைக் கடைப் பிடித்துக் கண்ணோட்டம் உடையவனாக இருப்பதே சிறந்த பண்பாகும் என்று கருதுகின்றார் வள்ளுவர் பெருமான் (579).

தனக்கே இடையூறு செய்கின்றவர்கள் தன்னுடன் பழகியவர்களாக இருந்தால் தான் தலைவன் என்ற உயர்நிலை

யில் இருந்தாலும் பொறுத்துக் கண்ணோடுவது நல்லது என்பது வள்ளுவர் பெருமானின் கருத்து. பொதுக் கடமைகளை மேற்கொண்டு செய்யும் போது தன்னைப் போன்ற அறிவும் ஆற்றலும் உடைய சிலர்க்குப் பொறாமை ஏற்படுவதும், அதனால் அவர்கள் இடையூறு செய்வதும் இயற்கை. அப்பொழுதெல்லாம் தலைவன் சினங்கொண்டு தண்டிக்க முயல்வது கூடாது; தன் பொதுக்கடமை கெடாதவாறு காத்துக் கொள்வது மட்டும் போதும். நாளடைவில் இடையூறு செய்பவர்கள் பொறாமை மாறி அன்பு கொண்டு திருந்தக் கூடும். ஏன்எனில்,அவர்கள் கொண்ட பொறாமைக்குக் காரணம் தன் செல்வாக்கும் உயர்நிலையுமே அல்லாமல், தனிப்பட்ட முறையில் தன்மீது அவர்கட்குப் பகையும் காழ்ப்பும் இல்லை. தானும் அந்தத் தலைமைப் பொறுப்பைத் தன் நன்மைக்குப் பயன்படுத்தாமல் பொது நன்மைக்குப் பயன்படுத்திச் செருக்கின்றி வாழ்ந்தால் இடையூறு செய்கின்றவர்கள் தம் தவற்றினை உணர்ந்து அன்பு கொள்ளத் தலைப் படுவார்கள். ஆதலின் அவர்களிடத்தில் கண்ணோட்டம் கொள்வதே தலையாய பண்பாகும். ஒருக்கால் அவர்களில் சிலர் திருந் தாமல், மேன்மேலும் பொறாமையே கொண்டு, அன்பு துறந்து, தன உயிருக்கே உலை வைப்பவர்களானால், அப்போதும் கண்ணோட்டமே சிறந்தது என்கின்றார் வள்ளுவர் பெருமான். இதனை நன்கு விளக்கும் பொருட்டு, பழகியவர்கள் தனக்கு நஞ்சு இடுவதைக் கண்ணால் கண்டும் கண்ணோட்டத்தால் மறுக்க முடியாமல் அதனை உண்டு அமைதியுறுவதே நல்லது என்று நவில்வார்.

பெய்க்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் (580)

என்பதில் இதனைக் காணலாம்.

இங்ஙனம் அமைதி அடைவது நல்லது என்று மட்டும் அப்பெருமான் கூறுவில்லை. அதற்குமேலும் கூறுவதுதான் அற்புதம். அது விரும்பத்தக்க நாகரிகம் உடையவர்களின் செயல் என்பதாகவும் குறிப்பிடுகின்றார். அப்பெருமான் நாகரிகம் என்ற சொல்லைக் குறிப்பிடும் போது மனப்பண் பாட்டையே கருதுகின்றார். நாகரிகம் பற்றி பெரும்பாலோர் கொண்டிருக்கும் கருத்துக்கு இது முற்றிலும் வேறுபட்டது.

உண்பதிலும் உடுப்பதிலும் உறையுள் அமைப்பதி லும் பிறவற்றிலும் பெற்றுள்ள மாறுதல்களையே முன்னேற்றம் என்று எண்ணி, அவற்றையே 'நாகரிகம்' என்று பெரும் பாலோர் போற்றுகின்றனர். ஆனால் வள்ளுவர் பெருமானும் மற்றச் சான்றோர் பெருமக்களும் புறவாழ்வில் நிகழும் மாறுதல்களை நாகரிகமாகக் கருதவில்லை. அகவாழ்வில் ஏற்படும் நல்ல பண்புகளையே - நெஞ்சின் உயர்நிலைகளையே - அவர்கள் நாகரிகத்தின் கூறுகளாகக் கொள்ளுகின்றனர். வள்ளுவர் பெருமான் கருத்துப்படி உயர்வகையான பல்லடுக்கு மாளிகை யில் வாழ்வது நாகரிகம் அன்று; தாம் மாடி வீட்டில் வாழ்ந்தாலும் பொத்தல் குடிசைகளில் வதியும் மக்களோடு பழகி, பழகிய காரணத்தால் கண்ணோட்டம் உடையவர்களாக வாழ்வதே நாகரிகம்.

பகட்டான ஆடை அணிகளை அணிந்து ஒய்யார மாகத் திரிவது நாகரிகம் அன்று; தம்மொடு பழகிய வர்கள் கந்தல் உடுத்துக் கிடந்தாலும் அவர்களைத் தம்மைப் போல் மதித்து நெஞ்சம் நெகிழ்வதே நாகரிகம். அறுசுவை உணவு உண்டு களிப்பது நாகரிகம் அன்று; தம்மொடு பயின்றவர்கள் உப்பிலாக் கூழ் குடிப்பவர்களாயினும் அவர்களைத் தம்போல் மதித்து, உள்ளம் உருகி இயைவதே நகரிகம். இந்தப் பண்பு

எல்லா மக்களிடத்திலும் ஓரளவு அமைந்துள்ளது. ஆனால் புறவாழ்க்கையின் போக்கு இந்த நெஞ்சப் பண்பாகிய நாகரிகத்தை வளரவொட்டாமல் நெருக்கி அடக்குகின்றது.

இந்த அடக்கு முறையையெல்லாம் தகர்த்தெறிந்துவிட்டு இந்த நாகரிகம் முதிர்ந்த நாகரிகமாக நிற்கும்போது பிறர்வருந்தாமல் வாழட்டும் என்று அதற்காக அவர்கள் இட்ட நஞ்சையும் உண்டு தன் உயிர் வேதனை தெரியாமல் அவர்கள் வாழட்டும் என்று அமைதியும் பூண்டு மகிழ்கின்றார்கள். அவர்களிடம் வெறுப்போ சினமோ கொள்ளாமல் அவர்களைத் தண்டிக்காமல் இருக்கும் பண்பு, அவர்களை விட்டுத் துறக்காமல் மேலும் அவர்களோடு பழகும் பழக்கம், அவர்கள் தம்மைக் கொல்லச்சூழ்ந்து நஞ்சு இடுவதைக் கண்டும் பொறுத்திருக்கும் பொறையுடைமை, அதை எடுத்து உண்ணத் துணியும் துணிவு, துணிந்து உண்ட பின்பும் தன் உயிர் வேதனையை அவர்கட்குப் புலப்படுத்தி அதனால் அவர்கள் வருந்தும்படியாகச் செய்யக் கூடாது என்று தம் துன்பத்தைத் தமக்குள் அடக்கிக் கொண்டு அமையும் போக்கு. இவற்றை ஒவ்வொன்றாக எண்ணிப் பார்க்க, மனப்பண்பாடு என்னும் நாகரிகம் படிப்படியாக வளர்ந்து நாகரிகத்தின் கொடு முடியை எட்டுகின்றது. கண்ணோட்டமே அதனை அளந்தறியும் அற்புதக் கருவியாகவும் அமைந்து மன்பதைக்கு என்றும் அழியாக் கலங்கரை விளக்காகவும் திகழ்கின்றது.

21. பேச்சாற்றல்

நாம் வாழும் காலம் மக்களாட்சி நிலவி வரும் காலம். தேர்தல் மூலம் அரசியலில் புக விழைவார்க்கு இன்றியமையாத திறன் பேச்சாற்றல். வள்ளுவர் பெருமான் இதனை அமைச்சியலில் விளக்குவதால் இதன் இன்றி யாமை மேலும் தெளிவாகும்; உறுதியும் ஏற்படும்.

நல்ல தேர்ந்தெடுத்த சொற்களால் நன்மை உண்டாகும்; தீய சொற்களால் தீமை ஏற்படும். ஆக்கமும் கேடும் சொற்களால் வருவனவாக உள்ளமையால் பேசும் போது சொற்களை ஆளுவதில் விழிப்பாக இருத்தல் வேண்டும்; சோர்ந்திருந்து கேட்டிற்கு இடம் தரல் ஆகாது.

ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு(642)

என்பது வள்ளுவம். சொல்வன்மையை 'நாநலம்' என்று போற்றியுரைப்பர் (641). தமிழகத்து அரசியல் வானில் தமிழிலும் ஆங்கிலத்திலும் பேச்சாற்றலால் ஒரு துருவமீன் போல் திகழ்ந்தவர் அறிஞர் அண்ணா. தமிழில் அடுக்கு மொழிப் பேச்சைத் தொடங்கி வைத்தவர் அண்ணா. முதன் முதலாக மக்கள் மன்றத்தில் பேசிய பேச்சைத் தொகுத்து வெளியிட்ட பெருமையுடையவர் பண்ணுருட்டி இராமச்சந்திரன்; அந்நூலைச் சென்னையில் நடைபெற்ற இரண்டாம் உலகத்

தமிழ் மாநாட்டில் இலவசமாக வழங்கிப் பெரும் புகழ் பெற்றவர் எம்.ஜி. ஆர். அவர்கள்.

ஒருவர் பேசும்போது கேட்பவர்களைப் பிணித்துக் கவரக் கூடிய தன்மையை நாடவேண்டும்; கேளாதவர்களும் கேட்கவேண்டும் என விரும்பக்கூடியதாக அமைய வேண்டும்; அதுதான் சிறந்த நாநலம் மிக்க சொல் வன்மையாகும்.

கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல் (643)

என்பது புத்தொளிகாட்டும் வள்ளுவம். இத்தகைய பேச்சுக்கு அறிஞர் அண்ணாவே ஒரு கலங்கரை விளக்காகத் திகழ்கின்றார்[1]. சமயச் சொற்பொழிவாளர்களின் திலக மாகத் திகழ்பவர் தவத்திருவாரியார் சுவாமிகள். இந்த நூற்றாண்டில் சமயக் கருத்துகளைத் தம் பேச்சாற்றலால் மக்கள் மனத்தில் விதைத்து அவர்களிடையே மனத்தூய்மையையும் ஏற்படுத் தியவர் காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள். வைணவ சமயக் கருத்துகளை மக்கள் மனத்தில் விதைக்கவும் பெரும்பங்கு கொண்டவர்கள். தந்தை பெரியாரின் பேச்சாற்றல் சொல்லுந்தர மன்று. அவர் மக்கள் மனத்தில் பகுத்தறிவுக் கருத்துகளைத் தூவி அவர் களிடையே சிந்திக்கும் ஆற்றலை வளர்த்தவர்.

1. நான் துறையூர் உயர்நிலைப்பள்ளியில் தலைமையாசிரியனகப் பணியாற்றிய காலத்தில் (1941-1950) 1948 வாக்கில் 'ஆற்றோரம்' என்ற புகழ்மிக்க பொழிவை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்தியபின் அண்ணா ஒருவாரத்தில் துறையூர் திரும்பிய போது பள்ளியில் அதே சொற்பொழிவை நிகழ்த்தச் செய்து கடல் போல் திரண்டு வந்த துறையூர் பெருமக்களுக்கு அறிமுகம் செய்தமையை இப்போது நினைவு கூர்கின்றேன்.

இத்தகைய சொல்வன்மை உடையராய், சோர்வு இல்லாதவராய், அவையோர்க்கு அஞ்சாதவராய் இருந்தால் அவரோடு மாறுபாடு கொண்டு வெல்ல எவராலும் முடியாது.

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது (647)

என்பது இப்பண்புடையவரைக் காட்டும் பொய்யா மொழி[2]. சொல்லினை ஒழுங்கு படக் கோத்து இனிமையாகச் சொல்லவல்லவர்கள் வாய்த்தால், உலகம் அவர்கள் ஏவும் தொழிலை விரைந்து கேட்டு நடக்கும். இக்கருத்தை விளக்கும் வள்ளுவம்,

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின் (648)

என்பது.மணிக்கணக்காகப் பலவகை ஆற்றல் தோன்ற விரிவாகப் பேசுவதே பேச்சுத் திறமை என்று நினைக் கின்றனர்; அது தவறு. உலகத்தில் மிகப்பெரிய செயல்களைச் செய்தவர்கள் எல்லோரும் பெரும் பேச்சாளர்கள் அல்லர்; பெரும் பேச்சுவேறு; சொல் வன்மை வேறு. பயனற்ற பெரும் பேச்சு வீண் முயற்சியே தவிர நன்மை சிறிதும் விளைக்காது. ஆகையால் குற்றமற்ற சில சொற்களைச்சொல்லிப் பயன்பெறும் வழியைத் தெளிய வேண்டும். இந்தத் தெளிவு இல்லாதவர்களே பல சொற்களைச் சொல்ல விரும்புவார்கள்.

பலசொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற
சிலசொல்லல் தேற்றா தவர் (648)

என்பது இக்கருத்துக்கு ஒளி காட்டும் வள்ளுவம்.

கல்வி என்பது கற்றவர் மட்டும் பயன் பெறுவதற்காக

---

2. சொல்வன்மை (அதி.85) - 7

அன்று; மற்றவர்கட்டும் எடுத்துச் சொல்லி உணர்த்த வேண்டும். 'தாம் இன்புறுவது உலகு இன்புறக்' (399) காண வேண்டும் என்பதே உண்மையாகக் கற்றவர்களின் நோக்கம். ஆகவே கற்றவற்றைப் பிறர்க்கு உணர்த்தும் திறமை வேண்டும். இஃது எவ்வாறு வரும்?

ஒரு நூலைக் கற்கும் போது தெளிவாகக் கற்று உணர்ந்ததால், அந்தத் தெளிவு நெஞ்சில் இருந்தால், அது வேண்டியபோது வெளியிடக் கூடியக் கல்வியாகும். உள்ளத்தின் தெளிவு எப்போதும் உரைப்பதில் புலனாகும். எண்ணத் தெரிந்தவர்களுக்குப்பேசவும் தெரியும். எண்ணத்தில் குறை இருந்தால்தான், உள்ளத்தில் தெளிவு இல்லாமல் இருந்தால்தான் பிறர்க்கு உணர்த்த முடியாத நிலை இருக்கும். ஆகையால் எண்ணிக் கற்கவேண்டும்; தெளிவாகக் கற்று உணர வேண்டும்; அப்போதுதான் தாம் கற்றவற்றைப் பிறர் உணருமாறு விரித்து உரைக்க முடியும்; அவ்வாறு சொல்ல முடியாவிட்டால், கொத்துக் கொத்தாகப் பூத்து நிற்கும் மணம் கமழாத மலர்களைப்போல் அவர்கள் பயனற்றவர்களே.

இணர்ஊழ்த்தும் நாறா மலர்அனையர் கற்றது
உணர விரித்துரையா தார் (650)

என்பது இவர்களைச் சுட்டி நிற்கும் வள்ளுவம். ஆங்கில அறிஞர் ஒருவர் பேச முயன்று , I Conceive. I Conceive . . . என்று பலமுறை சொல்ல முயன்று. . .but nothing was delivered என்பதாக எப்போதோ எங்கோ படித்தது நினைவுக்கு வருகின்றது.

22. அவைக் குறிப்பறிதல்

நாம் இருப்பது மக்களாட்சி நடைபெறும் காலம். மேடைப் பேச்சுக்கு முக்கியத்துவம் உள்ள காலம். திருவள்ளுவர் கூறும் கருத்துகள் இக்காலத்துக்கு முக்கியத் துவம் வாய்ந்தவை.

வள்ளுவர் பெருமான் தம் நூலில் (அவையறிதல் - அதி.72) குறிப்பிடும் கருத்துகள் அறிஞர்கள் கூட்டத்திற்கு பொருந்துவனவாக உள்ளன. ஒரு பொருளை எடுத்து விளக்க வேண்டுமாயின் யாருக்குச் சொல்லுகின்றோம் என்று ஆராயாமல் பேசுவது கூடாது. அதனால் ஒரு பயனும் இல்லை. ஆகையால் சொற்களின் தொகுதியை அறிந்த தூயவர்கள் மன்றத்தின் (கூடியிருப்போர் நடுவே) தன்மையை அறிந்து கொண்டு அதற்கேற்றபடி ஆராய்ந்து சொல்ல வேண்டும். அதுவே எல்லாச் சொற்களையும் பயன்படுத்த அறிந்தவர் களின் கடமையாகும்.

அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர் (711)

என்பது வள்ளுவர் காட்டும் வழி. இவ்விடத்தில்,

கேட்பாரை நாடி கிளக்கப்படும் பொருட்கண்
வேட்கை அறிந்து உரைப்பர் வித்தகர்[1]

என்ற பழமொழியினையும் சிந்திக்கலாம்.

---

1. பழமொழி - 400 (4)

சொற்களை வழங்கும் முறை அறிந்தவர்கட்கும் ஒரு கடமை உண்டு; அஃதாவது அவர்கள் மன்றத்தில் கூடியிருப் போரின் செவ்வியை (பொருத்தமான நேரத்தை) ஆராய்ந்து நன்றாக உணர்ந்த பிறகே பேச வேண்டும்.

இடைதெறிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர் (712)

என்பது பொய்யாமொழி. இவ்விடத்தில்,

நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நன் மரம்

என்ற முன்னோர்வாக்கையும் சிந்திக்கலாம்.

அறிவுமிக்கவர்களின் நடுவில் தாமும் அறிவு மிகுந்தவர்களாகப் பேச வேண்டும்; அறிவு குறைந்த வர்களின் முன் தாம் ஒன்றும் அறியாதவர்கள் போல் இருக்க வேண்டும்.

ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல்; வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல் (714)

என்பது வள்ளுவம். தம்மைவிட அறிவு முதிர்ந்தவர்களின் கூட்டத்தில் முந்திரிக் கொட்டைபோல் முந்திக் கொள்ளாமல் அடக்கமாக இருத்தல் வேண்டும். அவ்வியல்பே நல் இயல்புகள் என்று நவிலப் பெற்றவைகள் அனைத்திலும் மிக்க நல்லியல்பாகும்.

நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு(715)

என்பது வள்ளுவர் வாக்கு.

கற்றவர்கள் தம்மைப்போல் கற்றவர்களின்

கூட்டத்தில் பேசுவது மிகவும் பயனளிக்க வல்லது. குற்றம் நீங்கச் சொற்களை ஆராயவல்ல அறிஞர்களின் கூட்டத்தில் கற்றறிந்தவர்களின் கல்வி விளக்கம் பெறும்

கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல்தெரிதல் வல்லார் அகத்து (717)

என்பது பொய்யாமொழி. இவ்விடத்தில்,

புலம்மிக் கவரைப் புலமை தெரிதல்
புலம்மிக் கவர்க்கே புலனாம்[2]

என்ற பழமொழியின் பாடற் பகுதி சிந்திக்கத் தக்கது.

சொல்வதை நுட்பமாக உணர வல்லவர்களிடம் பேசுவது தானே வளரும் பயிர் உள்ள பாத்தியில் நீர் சொரிவதைப் போன்றது; அதனால் அந்தக் கல்வி மேன்மேலும் வளர்ந்தோங்கும்.

உணர்வது உடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரித் தற்று (718)

என்பது வள்ளுவர் பெருமானின் வாக்கு.

பேரவையிலும் பெருங்கூட்டத்திலும் அஞ்சாமல் பேசுவது ஒரு தனித்திறமையாகும். நம் காலத்தில் வாழ்ந்த தந்தை பெரியாரிடம் இப்பண்பைக் கண்டு அடியேன் வியந்ததுண்டு. போர்க்களத்தில் அஞ்சாமல் போர் செய்யும் திறமையை விட, அவைக் களத்தில் அஞ்சாமல் பேசும் திறமை சிறந்தது. பகைவர்களை எதிர்த்துப் போர்க் களத்தில் சாகத்

---

2. மேலது (பழமொழி)

துணிந்தவர் உலகில் பலர் உளர். ஆனால் அறிஞாகள் கூட்டத்தில் அஞ்சாமல் ஒன்றைச் சொல்ல வல்லவர் சிலரே யாகும்.

பகையகத்துச் சாவார் எளியர்; அரியர்
அவையக அஞ்சாத வர் (723)

என்பது வள்ளுவர் வாக்கு. தந்தை பெரியாரிடம் இத்தகைய பண்பைக் கண்டு அறிஞர்கள் பலர் போற்றிப் புகழ்ந்தவர் களுள் **ரா.கி.** என்று வழங்கும் **கல்கி** நம் நினைவுக்கு வருகின்றார். கல்கியவர்களும் எவர்க்கும் அஞ்சாதவர்.

இங்ஙனம் அஞ்சாமல் பேசி மறுமொழி சொல்லும் வல்லமை பெறுவதற்காகக் கற்க வேண்டிய முறைப்படி கற்கவேண்டிய அளவு அறிந்து நூல்களைக் கற்க வேண்டும். அவ்வாறு நூல்களைக் கற்ற பின்னரும் நுண்ணிய அறிவுடையவர்களின் கூட்டத்தில் பேச அஞ்சினால் அந்தக் கல்வியால் பயன் இல்லை (725). அஞ்சாமை இல்லாதவர் கட்கு வாளோடு தொடர்பு இல்லாதது போல், இவர்கட்கும் நூலோடு தொடர்பு இல்லை (726). பகைவர்களின் எதிரே போர்க்களத்தில் நிற்கும் பேடியின் கையில் அகப்பட்ட கூரிய வாளும் அவைக் களத்தில் அஞ்சுகின்றவர் கற்ற நூலும் ஒன்று தான் (727). இத்தகை யவர்கள் கல்லாதவர்களை விடத் தாழ்ந்தவர்களே யாவர் (729).

23. பணப்பெருக்கம்

ஆசைகளில் பலவகை உண்டு. பண்டையோர் மண்ணாசை, பெண் ஆசை, பொன்னாசை என்ற மூன்றில் அனைத்தையும் அடக்குவர். சிற்றூர்களில் ஏழைகட்கு ஈடு (நிலம்) மேல் செல்வர்கள் கடன் கொடுத்து, அந்த ஏழைகள் அசலும் வட்டியும் திருப்பித் தராத நிலையில் ஈட்டுக் குரிய நிலத்தை தம் பேருக்குக் கிரயம் எழுதிக் கொள்வார்கள். அரசியல்வாதிகள், உயர் அதிகாரிகள் தில்லு முல்லுகளாலும் கையூட்டு முறைகளினாலும் சம்பாதித்த பணத்தை பூமி வாங்கி பூமித்தாயைக் களங்கப்படுத்துவர். இது மண் ணாசையைச் சேர்ந்தது. பெண்ணாசையையுடையவர் பல் வேறு ஒழுக்கச் சீர்கேடுகள் புரிந்து கற்பழிப்பு, பருவம் எய்தாத மகளிர்க்குப் பங்கம் விளைவித்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டு அழியாப் பழிகளைச் சுமந்து சமூகத்தினால் இழித்துப் பேசப் பெறுவர். பொன்னாசை என்பது பணத்தாசையால் மக்கள் செய்யும் இழி செயல்கள் சொல்லி முடியாது. வங்கிக் கொள்ளை, வங்கியிலுள்ளோரே புரியும் தில்லுமுல்லுகள், பதவிகளில் உள்ளவர்கள் புரியும் பல்வேறு இழிசெயல்களால் திரட்டும் பணம் முதலியவற்றை நாம் அன்றாட நிகழ்ச்சிகளாகக் காண்கின்றோம்.

பணம்பணமென் றனுதினமு படுபேயாய்ப்
பறந்தோடிப் பரித பித்துக்
கணம்தெரியா துழல்கின்றார் காலன்வரு
கணம்தெரியார் கரவே சூழ்ந்து

குணம்தெரியா தழிமதியே கொண்டாடிக்
குருட்டாட்டம் கொள்ளு கின்றார்
பிணந்தெரியப் பெருநாளில் பெறுவதனை
நினையாமல் பிழைக்கின் றாரே[1]

என்பது கவிராஜப் பண்டிதர் செகவீரபாண்டியனாரின் பாடல். அன்றாட வாழ்வில் ஏழையர் முதல் மேல் மட்டம் வரையிலுள்ளோர் பலர் பணத்திற்காக பறந்தோடி அலைவதைப் பாடல் சித்திரிக்கின்றது.

பணம் சம்பாதிப்பதைப்பற்றி 'வள்ளுவர்பெருமான்' பொருள் செயல்வகை (பொருட்பால் அதிகாரம் - 76) என்ற அதிகாரத்தில் விளக்குகின்றார். 'பணக்காரன் பக்கம் பத்து பேர் பைத்தியக்காரன் பக்கம் பத்து பேர்' என்பது ஒரு பழமொழி. இன்றைய உலகில் ஒரு பணக்காரன் பக்கம் எந்தவிதக் காரணமும் இன்றி சிலர் சுற்றிக் கொண்டு அப்பணக்காரர் செல்லும் இடந்தோறும் அவருடன் கூடவே திரிவதைக் காணலாம். இதனால் அப்பணக்காரருக்குள்ள மதிப்பும் தமக்குண்டு என்ற பொய்யான மயக்கம் இவ்வாறு செய்யத் தூண்டுகின்றது என்று கருதலாம்.

எந்த விதமான நற்குணங்களும் ஓர் **'அம்மன் காசு[2]'** அளவு கூட மதிப்பில்லாதவரிடம் பணம் சேர்ந்து விட்டால் அவர்களையும் சமூகத்தில் மதிக்கத் தக்கவர்களாகச் செய்யும் சிறப்புடையது அவர்களிடமிருக்கும் பணம். ஆகையால்

1. வீரபாண்டியம் - செய் 891.

2. அம்மன்காசு - புதுக்கோட்டை அரசுக் காலத்தில் ஒரு தம்பிடி (1 ரூபாய்க்கு 192 தம்பிடி)க்கு 3 காசு வீதம் வழக்கிலிருந்த காசு. அதன் மீது 'அம்மன்' என்ற தேவதையின் உருவம் பொறிக்கப் பெற்றிருந்தமையால் 'அம்மன்காசு' என்ற பெயரால் வழங்கி வந்தது.

அந்தப் பணத்தை விட ஈட்டத்தகுந்த பொருள் வேறு இல்லை.

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள் (751)

என்பது வள்ளுவர் வாக்கு. இத்தகைய பெருமையைத் தரக்கூடிய பணத்தின்மேல் ஆசை கொண்டு அதனை எப்படித் திரட்டலாம் என்று சிலர் ஆலாய் பறந்து திரிவதைக் காணலாம். என் தாயார் பிறந்த பிரகம்பி (திருச்சி மாவட்டம் இலால்குடிவட்டம்) என்ற சிற்றூரில் ஒரு செட்டியார் குடும்பம். அவருக்குச் சமயபுரம் (திருச்சி அருகில் உள்ளது) பக்கம் ஏராளமான சொத்து இருந்தது. அவர் குடும்பத்தில் ஒருவரும் எச்சில்கையாலும் காக்கை ஓட்ட மாட்டார்கள். அவ்வளவு வள்ளல் தன்மை. அக்காலத்தில் அக்குடும்பத்தை ஊர்ப் பெருமக்கள் 'பணக்கார செட்டியார் வீடு' என்று மிகப் பெருமையுடன் பேசுவார்கள். மலருக்குள்ள ' உண்மையான மணம்' வீசுவது போல, அவரிடமுள்ள பணத்திற்குப் 'பொய்யான மணம்' வீசுவதை அக்காலத்தில் யான் காணும் மனப்பக்குவம் இல்லாவிடினும் இப்போது நினைந்து காண்கின்றேன்.

பணம் இல்லாத ஏழைகளை எல்லாரும் இகழ்வார் கள். பொதுமக்கள் அத்தகையவரை **'வெங்கன்'** என்று பெயர் சூட்டிக் கிண்டல் செய்வார்கள். பணம் இருக்கும் செல்வரை' பண இருப்பு ஒன்றையே காரணமாகக் கொண்டு ஈகைக் குணம் எள் அளவு கூட இல்லாதிருந்தும் கூட, அவருக்கென்ன குறைவு? கை நிறையக் காசு இருக்கிறது என்று சொல்லி மகிழ்வார்கள்.

இல்லாரை எல்லாரும் எள்ளுவர்;செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு (752)

என்பது வள்ளுவரின் பொய்யாமொழி.

இவ்விடத்தில் ஒன்றை உன்னிப்பாகக் கருத வேண்டும்; சிந்திக்க வேண்டும். அறிவுடையவராக வேண்டும் என்று முயன்றால் அதில் தவறுகள் நேரிடா; அறிவுடையராகத் திகழ்வதற்குச் சான்றிதழ் வேண்டும் என முயன்றால் பல்வேறு தவறுகளில் கொண்டு செலுத்தும். தேர்வுகள் எழுதாமலே சான்றிதழ்கள் பெறும் நிலைக்குக் கொண்டு செலுத்திவிடும். 'குமுதம் உளவறிகுழு' (Detective team) பத்தாயிரம் ரூபாய் தந்து காந்தி பெயரில் சென்னைப பல்கலைக்கழக Ph.D பட்டம் பெற்றதை நாடறியும் ; செய்தித்தாளில் வெளிவந்த செய்தி. அங்ஙனமே பணம் சம்பாதிக்க வேண்டும் என்று முயன்றால் கையூட்டு முதல் எத்தனையோ தில்லுமுல்லுகளில் கொண்டு செலுத்தி விடும். இவையெல்லாம் பண்டமாற்று முறை மாறி 'பண மாற்று முறை' நடைமுறைக்கு வந்தபிறகு ஏற்பட்ட அக்கிர மச் செயல்கள்.

திருவள்ளுவர் 'பொருள் செயல்வகை' அதிகாரத்தில் கூறும் கருத்துகளை அறிந்து தெளிய வேண்டுமானால் உழைப்பையே பொருளாகக் கருதும் கருத்து வேண்டும். இல்லையேல், எப்படியாவது பணம் சேர்த்தவர்க்கே உலகத்தில் மதிப்பு உண்டு என்று பொருள் தோன்றும்; அறம் ஓதிய வள்ளுவர் பெருமானே இவ்வாறு பொருளை பெரிதாகப் போற்றுகின்றாரே என்ற முரண்பாடு தோன்றும். அது தவறு; உழைத்து அற நெறியில் வந்த பொருளைப் பற்றியே அவர் இந்த அதிகாரத்தில் கூறுகின்றார் என்பதைக் கருத்தில் இருத்துதல் வேண்டும்.

இங்கும் பொருள் செயல் வகையை ஓதும்போது அறத்தை நன்கு வற்புறுத்துகின்றார். செய்யும் திறம் அறிந்து

தீமை இல்லாதவழியில் சேர்த்த பொருளாக இருக்க வேண்டும் என்பதும் அந்தப் பொருள் அறம் பயக்கக் கூடியதாகவும் இன்பம் பயக்கக் கூடிய தாகவும் இருக்க வேண்டும் என்பதும் அவர் வற்புறுத்தும் கருத்துகளாகும்.

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து
தீதின்றி வந்த பெருள் (754)

என்பது பொய்யாமொழி. மேலும் அவர் கூறுவது அருளோடும் அன்போடும் வந்த பொருளாக இருக்க வேண்டும்; அருள் இல்லாமல்ட அன்பு இல்லாமல் பொருள் சேர்ப்பது கூடாது; அவ்வாறு சேரும் பொருளை ஏற்றுக் கொள்ளாமல் தள்ளி விடவேண்டும்.

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல் (755)

என்பது அவர்தம் பொருள் பொதிந்த பொன்னுரை.' புல்லார் புரளவிடல்' என்பதை ஆழ்ந்து நோக்க வேண்டும்.

பொருள் ஈட்டும் துறையில் தூய்மை வேண்டும் என்று வற்புறுத்துவதற்காகவே அப்பெருமான் 'வினைத் தூய்மை' (அதிகாரம் - 66) யிலும் இந்தக் கருத்தை வலியுறுத் தியுள்ளார். பெற்ற தாய் பசித்துன்பத்தால் வாடுவதாக இருந்தாலும் சான்றோர் பழிக்கும் செயலைச் செய்யக் கூடாது (656) என்றும், பழியை மேற்கொண்டு ஆக்கம் பெறுவதைவிட வறுமையே உயர்ந்தது (657) என்றும், பிறர் வருந்தும்படியாக ஈட்டிய பொருள் எல்லாம் ஈட்டியவரே வருந்தும் படியாகப் போய்விடும் (658) என்றும், தீவினையால் பொருள் செய்து காத்தல் பச்சை மண்கலத்துள் நீர் பெய்து அழிய வைப்பது

போன்றதே (660) என்றும விளக்கியுள்ளதை ஈண்டு பொருந்த வைத்து உணர்தல் வேண்டும்.

அருள் நெறியை மறவாமல் பொருளை ஈட்ட வேண்டும் என்று கூறிய பெருமான் அந்தப் பொருள் அருளை வளர்க்கப் பயன்படவேண்டும் என்றும் கூறுகின்றார். அன்பு என்னும், பண்பினிடம் பிறந்து வாழ்வது அருள் என்றும் அருள் குழந்தை என்றும், அத்தகைய குழந்தையைச் செவி லித்தாய்போல் காப்பாற்றி வளர்ப்பது பொருள் என்றும் சுட்டுவார்.

அருள்என்னும் அன்புஈன் குழவி பொருள்என்னும்
செல்வச் செவிலியால் உண்டு (757)

என்பது அவர் காட்டும் சுட்டொளி வீசும் பொய்யாமொழி. இதனைப் பலமுறை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

ஒரு நாட்டில் உழைத்துத் தொழில் செய்கின்ற வர்கள் பெருகிப் பெரு வளத்தை மிகுதிப் படுத்தினால் பகைவர்கள் எதிர்க்கவும் முன்வர மாட்டார்கள். இதனால்தான் பொருளாதார நிபுணர்கள் ஒரு நாட்டைத் தொழில் மயமாக்க வேண்டும் என்று அறிவுரை கூறுகின்றனர். தொழில்சாலைகள் பெருகினால் வேலை வாய்ப்புகள் பெருகும். இத்தகைய தொழிற்சாலைகளை சிற்றூர்ப்பக்கங்களிலும் தொடங்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அப்போதுதான் அப்பக்கங்களில் வேலை வாய்ப்புகள் ஏற்படும். நாட்டுப் புறமக்களும் பொருளாதார நிலைகளில் உயர்வார்கள். தொழிற்சாலைகள் மூலம் வேலைவாய்ப்புகளை மிகுதிப்படுத்த வேண்டுமேயொழிய தலைமைச் செயலகம், மாவட்ட அலுவலகங்கள், வட்ட

அலுவலகங்களில் அதிகமாக ஆள் சேர்த்து வெள்ளை வேட்டி வேலைகளைப் பெருக்குவதைக் குறைத்துக் கொள்ள வேண்டும். அமெரிக்கா, பிரிட்டன், உருஷ்யா முதலிய நாடுகள் வல்லரசுகளாகத் திகழ்வதற்கும், வேறு பல நாடுகள் 'முன்னேற்ற மடைந்த நாடுகள்' என்று சொல்லப் பெறுவதற்கும் தொழிற்சாலைகள் பெருகியிருப்பதே காரணம். ஆட்சியிலிருப் பவர்கள் இவற்றைக் கருத்தில் இருத்தி செயற்பட வேண்டும். இப்படிச் செயற்பட்டால்தான் நாடும் பெருமிதமாகத் திகழும்; நாட்டு மக்களுக்கும் பெருமித உணர்வு தோன்றும். இவற்றையெல்லாம் உள்ளடக்கி தான்,

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரியது இல் (759)

என்ற வள்ளுவர் பெருமானின் அறிவும் அறமும் பொருந்திய திருவாக்கு எழுந்தது.

24. உணவும் மருந்தும்

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது மக்கள் அன்றாட வாழ்வில் எழுந்த வாக்கு. இது பிற்காலத்தில் இலக்கிய வாக்காக, சான்றோர் வாக்காக, மாறிவிட்டது. பொதுவாழ்வில் பணியாற்றுபவர்கள் உள்ளத்தின் உறுதியும அறிவின் தெளிவும் கெடாமல் காத்துக் கொள்ள வேண்டும் . இதற்கு முக்கியமாக வேண்டப் படுவது நாவடக்கம். உடல் கெடாமல் இருப்பதற்குக் கண்டதை உண்ணும் பழக்கத்தைக் கைவிட வேண்டும்; இது நாகரிகத்தின் விளைவாக வந்த பழக்கம்.

விலங்குகளும் பறவைகளும் இயற்கையாகவே தம் உடலுக்கு ஏற்ற உணவையும் அதன் அளவையும் அறிந்து தின்கின்றன. அவற்றின் நாக்கும் அளவறிந்து உண்ணும் கருவியாக அமைந்துள்ளது. மக்கள் நாக்கும் தொடக்கத்தில் அந்த ஆற்றல் பெற்றிருந்தது. ஆனால் பகுத்தறிவும் எண்ணும் ஆற்றலும் வளர வளர, புலன்களின் இயற்கை ஆற்றல் குன்றிவிட்டது. அன்றியும் சமைத்து உண்ணும் செயற்கை உணவு முறை வேரூன்றிவிட்டபிறகு, இயற்கை ஆற்றல் இல்லா தொழிந்தது. ஆகையால், இன்று ஏற்ற உணவையும் ஏலாத உணவையும் உணர்ந்து அறிவிக்கும் ஆற்றல் நாக்கிற்கு இல்லை. இன்று வேக உணவுகள் (Fast food) எங்கும் பரவிய பிறகு நாக்கின் ஆற்றல் குறைவதற்கு மற்றொரு காரணமாக உள்ளது.

இன்று நாக்கு இயற்கை உணர்வினால் ஆளப்படும் தன்மை குறைந்து மனிதனுடைய விருப்பு வெறுப்பினால் ஆளப்படும் தன்மை மிகுந்துள்ளது. இதனை நன்குச் சிந்தித்து உணவுக் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டிய இன்றியமை யாமையைக் கருத்தில் இருத்த வேண்டும். இதனால் 'உடல் நலம் பேணல்' தானாக அமைந்து விடும். உணவையே மருந்தாக எண்ணி உண்ணும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். பொதுவாழ்வில் ஈடுபட்டோர் நோயற்றவராக வாழ வேண்டும் என்பதும் நோய் வந்தாலும் அதனை உடனே போக்கி கொள்ள வழி காண வேண்டும் என்பதும் வள்ளுவர் பெருமானின் எச்சரிக்கையான அறிவுரை. 'மருந்து' என்ற அதிகாரத்தில்,

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு" (942)

என்று ஒரு போடு போடுகின்றார். முதல் ஏழு குறள்களும் (941-947) மருந்து வேண்டாத வாழ்க்கையை வற்புறுத்துகின்றன ஆனால் இந்த நெறி மிக மிக அரிய நெறி என்பதையும். இதனை எல்லோராலும் எல்லாக்காலங்களிலும் கடைப் பிடிக்க இயலாதது என்பதையும் உணர்ந்து அதற்குக் கழுவாயாக தீர்க்கும் முறைகளை இறுதி மூன்று குறள்களில் (948-950) தெரிவிக்கின்றார்.

பழங்காலத்து முறைப்படி ஒருவருக்கு உறும் நோய் இன்னது என்பதை நாடிபார்த்துக் காணும் முறை ஒன்றி ருந்தது. அவ்வாறு காணும்போது உடம்பில் **வாதம், பித்தம், சிலேத்துமம்** என்னும் மூன்றும் மிகாமலும் குறையாமலும் இயற்கையான அளவில் இருப்பின் நோயற்ற நிலை என்று உறுதி செய்யப் பெற்றது.

மிகினும் குறையினும் நோய்செயும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று (941)

என்ற பொய்யாமொழியில் இவண் குறிப்பிட்ட மூன்றில் ஒன்றோ இரண்டோ மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும் என்பதைத் தெரிவிக்கின்றார். இஃது ஆயுர்வேத நூலில் கண்ட உண்மை என்பதையும் சுட்டுகின்றார். நூலோர் ஆயுள் வேத நூலைப் படைத்தவர்கள். இதனை இக்கால மருத்துவ முறைப்படி 'உணவின் அளவு' என்று கொண்டு அளவுக்கு மீறி உண்டால் (மிகினும்) செரிமானம் இன்றி வயிற்றுப் போக்கோ வாந்தியோ ஏற்படலாம் என்றும், அளவு குறைந்து உண்டால் உடலுக்கு வேண்டி கலோரி வெப்பம் குறைந்து உடலில் பல்வேறு சீர் கேடுகளை உண்டாக்கும் என்றும் கூறுவதில் தவறில்லை.

முன் உண்ட உணவு எவ்வாறு அற்றது (செரிமானம் ஆனது) என்பதை ஆராய்ந்து அறிந்து, அந்த அறிவைக் கடைப்பிடித்துப் போற்றிப் பிறகு அடுத்த வேளைக்கு உரிய உணவை உண்ண வேண்டும். அவ்வாறு உண்டால் உடம்பிற்கு மருந்து என்ற ஒன்று தேவை இல்லை.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின் (942)

என்பது வள்ளுவம். இதனையே காமத்துப் பாலிலும்,

உணவினும் உண்டல் அறல் இனிது (1326)

என்று வேறொரு விதமாகக் குறிப்பிடுவர். அதனையும் ஈண்டு ஒப்பவைத்து சிந்தித்தால் மேலும் தெளிவு பிறக்கும்.

முன் உண்ட உணவு செரிமானம் ஆன பிறகு, உண்ண வேண்டியதை இன்ன அளவுதான்வேண்டும் என்று உறுதி

செய்து கொண்டு அதன் பிறகு அந்த அளவு உணவை உண்ணவேண்டியது கடமை[1]. அதுவே உடம்பைப் பெற்றவன் அந்த உடம்பை நெடுங்காலம் காத்துச்செல்லும் வழியாகும்.

அற்றால் அளவறிந்து உண்க; அஃது உடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு (945)

என்பது அற்புதமான பொய்யாமொழி. முன்னர் சொன்ன கருத்திற்கு இக்கருத்து புத்தொளிவீசி நிற்பதைக் கண்டு மகிழலாம்.

முன் உண்ட உணவு எவ்வாறு செரித்தது என்று செரிமானம் ஆன தன்மையை ஆராய்ந்து, அதனால் தெளிந்த உண்மையைக் கடைப்பிடித்து மாறுபாடு விளைவிக்காத (உடம்புக்கு ஒத்துக் கொள்கிற) உணவையே தெரிந்து உண்ண வேண்டும். அதையும் நன்றாகப் பசித்த பிறகே உண்ண வேண்டும்.

அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து (944)

என்பது வள்ளுவப் பெருந்தகையின் வான்புகழ் உண்மை. 'துவரப் பசித்து' என்பதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். 'பசித்துப் புசி' என்ற பாட்டியின் வாக்கையும் பன்முறை சிந்திக்க வேண்டும்.

இங்ஙனம் தனக்கு உகந்த மாறுபாடு இல்லாத உணவையும் தன் மனம் விரும்பும் அளவும் உண்ணமறுத்து உடலுக்குத் தேவையான அளவே உண்ண வேண்டும் . அவ்வாறு உறுதி செய்துகொண்டு உண்டால் உயிர் வாழ்க்கையில் நோயால் வரும் இடையூறு தலைக்காட்டாது.

1. செரிமானம் பற்றி பல ஆங்கில நூல்கள் வெளி வந்துள்ளன. அவற்றைப் படித்துப் பயன் பெறலாம்.

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துஉண்ணின்
ஊறுப்பாடு இல்லை உயிர்க்கு (945)

என்பது மேலும் புத்தொளிவீசி நிற்கும் வள்ளுவம் 'மறுத்து உண்ணின்' என்பது பன்முறை சிந்திக்க வேண்டியதொன்று.

உடலுக்குத் தேவையான உணவை ஆராய்ந்து தெளிந்து அந்த உணவின் குறைந்த அளவு இன்னது ஏன்று உறுதி செய்து உண்கின்றவரிடம் இன்பம் 'உடல் நலம்' தலைதூக்கி நிற்கும்; அதுபோல மனத்தின் விருப்பத்திற்கு இயைந்து அளவு மீறி மிகுதியாக உண்பவனிடம் நோய் தலைக்காட்டி நிற்கும். இரையை அளவின்றி எடுத்து அதனால் வருந்தும் விலங்கோடு ஒத்தலின் 'இரையான்' என்றார் என்பது பரிமேலழகரின் விளக்கக் குறிப்பு[2].

இழிவுஅறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய் (946)

என்பது ஆழ்ந்து பன்முறை சிந்தித்து அசைபோட்டு அறிய வேண்டிய அற்புத வள்ளுவம்.

பசித்தீயின் அளவிற்கு ஏற்றவாறு உண்ணாமல் நாவைக் கட்டுப் படுத்தாமல் 'ஒன்றையும் ஆராயாமல்' அளவு மீறி மிகுதியாக உண்டால் நோயும் எல்லை மீறித் தலைக் காட்டும்

தீயளவு அன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோய்அளவு இன்றிப் படும் (947)

என்பது வள்ளுவம். 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்ற பழமொழியை ஈண்டுச் சிந்திக்கலாம். பசியைப்

---

2. குழந்தைகள் தின்னும் பண்டம் தீனி என்பது; வயது வந்தோர் உண்பது 'உணவு' என்பது. விலங்குகள் மேய்வது 'இரை' என்பது. மனிதன் அளவின்றி உண்பதை 'இரை' என்று குறித்தார்.

'பிணி' என்றார் வள்ளலார். அந்த நோய்க்கு மருந்தாகிய உணவை வழங்குபவர் 'பசிப்பிணி மருத்துவர்' எனப்பட்டார். ஈண்டு வள்ளுவர் பெருமான் பசியை 'தீ' என்கின்றார். இந்தத் தீயின் அளவை அறுதியிட்டு அதனை அவிப்பதற்கு வேண்டிய உணவின் அளவையும் உறுதி செய்து அதனை உண்டு அத்தீயை அணைக்க வேண்டும்.

இவ்வாறு விழிப்புடன் உணவு முறைகளைக் கையாண்டு வாழ்ந்தாலும் நோய் வரத்தான் செய்கின்றது. அவ்வாறு வந்த நோயை எவ்வாறு தீர்ப்பது? அதற்கும் வள்ளுவர் பெருமான் வழி சொல்லுகின்றார். யாருக்கு? நோய் தீர்க்கும் மருத்துவருக்கு. அவர் வந்த நோய் என்ன நோய் என்று ஆராய்ந்து அந்த நோய் என்ன காரணத்தால் வந்தது என்று உறுதி செய்து அதனைத் தணிக்கும் வழி என்ன என்று உறுதி செய்து பொருத்தமான முறையைக் கையாள வேண்டும்.

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் (948)

என்பது வள்ளுவர் பெருமானின் பொய்யாமொழி.

இதற்குமேலும் மருத்துவர் செய்ய வேண்டிய வற்றைச் செப்புகின்றார். மருத்துவர் தம் சிகிச்சையைத் தொடங்குவதற்கு முன் நோயாளியின் உடல் நிலைமை 'நோயின் வலிமை' நோயாளியின் வயது முதலியவை. 'நோயின் தன்மை' நோயைத் தீர்ப்பதற்கு உரிய காலத்தின் வாய்ப்பு ஆகியவற்றை யெல்லாம் ஆராய்ந்து தெளிந்து சிகிச்சையைத் தொடங்க வேண்டும்.

உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல் (949)

என்பது மருத்துவருக்கு இன்றியமையாத வள்ளுவம்.

இங்ஙனம் 'உணவும் மருந்தும்' பற்றிய வள்ளுவர் பெருமான் வகுத்த வழி முறைகளை நாம் ஓரளவு அறிந்து தெளிந்தோம்.

25. பெரியாரை மதித்தல்

இப்பூவுலகில் சிலர் அறிவும் ஆற்றலும் மிக்கவர்களாக உள்ளனர். அவர்களை மதித்து நடக்க வேண்டும். அவர்களை அவமதித்துப் பிழை செய்வதால் வரும் இடரும் அழிவும் தாங்க முடியாதனவாக இருக்கும். ஆகையால் தம்மைக் காத்துக் கொள்ளும் முறைகளில் தலையாயது எது என்றால் ஆற்றல் உடையவர்களின் ஆற்றலை இகழாமல் நடப்பதேயாகும்.

ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை (891)

என்பது பொய்யாமொழி. அவர்களைப் போற்றி வாழ்வது மதியுடையார் செயல்.

இத்தகைய பெரியார்களைப் போற்றாமல் நடந்தால் அவர்களால் நீங்காத துன்பம் வரும். இதனை விளக்கி நிற்பது

பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும் (892)

என்ற பொய்யாமொழி. ஆற்றல் உடையவர்களுக்கு ஆற்றலற்றவர்கள் தீமை செய்தால் அது வம்பை விலை கொடுத்து வாங்குவது போலாகும். மற்றும் அது எமனை 'ஒல்லையில் வா' என்று கைகாட்டி அழைப்பது போலாகும்.

நெருப்பினால் சுடப் பெற்றாலும் ஒருவாறு தப்பி

பிழைத்துக் கொள்ளலாம். ஆனால் பெரியோர்களிடம் தீமை செய்கின்றவர்கள் உய்வதற்கு வழி இல்லை.

> எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
> பெரியார்ப் பிழைத்தொழுகு வார் (896)

என்ற வான்மறை வள்ளுவம் இக்கருத்திற்கு ஒளி காட்டி நிற்கின்றது. சிறந்த கொள்கையையுடைய பெரியோர்கள் சினம் கொள்வதில்லை; ஒருக்கால் பொது நன்மை கருதிச் சினங்கொண்டு எதிர்க்க எழுந்தால், மாநிலத்தை ஆளும் மன்னனும் இடைக்காலத்திலேயே சீரழிந்து தலைமைப் பதவி இழந்து கெட்டொழிவான்.

> ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
> வேந்தனும் வேந்து கெடும் (899)

என்பது இக்கருத்தை விளக்கும் வள்ளுவம். நகுடன் என்பான் ஏதோ நற்செயலால் இந்திர பதவி பெறுகின்றான். இப்பதவி பெற்ற அகந்தையால், செருக்கால், களிப்பு மிகுதியால் அகத்திய முனிவன் வெகுள்வதற்கு ஒரு பிழை செய்ய அம்முனிவனால் சாபம் எய்தி அப்பதத்தை இடையே இழந்தான் என்பதைப் பண்டைய புராண இலக்கியத்தால் அறியலாம்.

பெரியோர் இயல்பாக நல்லவர்கள்; தன்னலம் அற்றவர்கள்; பொறுமை மிக்கவர்கள். அவர்கள் தன்னலம் இன்மையால், பிறர் தீங்கு செய்த போதும் பொறுமையை இழக்கமாட்டார்கள்; தீங்கு செய்தவர்களுக்கும் நன்மையே செய்தொழுகுவார்கள். ஆனால் பொதுவாழ்வில் மக்களுக்கு ஏதேனும் குறை இருக்குமானால் அதனைக் களைந்து மக்களுக்குத் தொண்டு செய்ய முற்படுவார்கள். அப்போது

ஆட்சித் தலைவனோ, அமைச்சரோ, மன்றத்தினரோ, மற்றவரோ அவர்களைத் தடுக்க முற்பட்டால் "நம் கடமையை நாம் செய்கின்றோம்; இந்தப் பெரியோர் நம் கடமையில் ஏன் குறுக்கிட வேண்டும்?" என்று இகழத் தொடங்கி, அது காரணமாக அவர்கட்கு இடையூறும் செய்யத் தொடங்கி னால் அப்போதுதான் அப்பெரியோர் பொறுமை இ ழந்து எதிர்க்கத் தொடங்குவர். பெரும்பாலும் பொறுமை இழக்காத அவர்கள் ஒருகால் இவ்வாறு பொறுமை இழந்து எதிர்க்கத் தொடங்கினால், எத்தகைய பதவியில் உள்ளவர் களும் அழியவேண்டி நேரும். காரணம் என்ன? தன்னலம் இல்லாமல் பொதுத் தொண்டு செய்ய முற்பட்ட அவர்களுக்கு ஆற்றல் மிகுதி. மக்களின் நல்லெண்ணமும் அவர்கள் சார்பிலேயே திரளும். ஆகையால் அவர்களிடம் தவறாக நடந்து கொள்ளக் கூடாது என்பது வள்ளுவர் பெருமானின் அறிவுரையாகும்.

என்னுடைய வாழ்க்கையில் நேரிட்ட சில நிகழ்ச்சி களை நினைவுகூர்கின்றேன். சிறு வயது முதற்கொண்டே பொதுத் தொண்டில் அதிக நாட்டமுள்ளவன். எந்தப் பதவியில் இருந்து பணியாற்றினாலும் வருவாயில் கவனம் செலுத்தாது பொதுவாழ்வில் உள்ள வர்களின் நலத்தினையே குறிக் கோளாகக் கொண்டவன். 1937 முதற்கொண்டே வள்ளுவர் வான்மறையில் மிக்க ஈடுபாடு கொண்டவன். மனம், வாக்கு காயங்களாலும் தீங்கு செய்யாதவன். நாடோறும் உறங்குவதற்கு முன் அன்றாட நிகழ்ச்சிகளை நினைந்து பார்த்து யாருக்கும் தீங்கு செய்யவில்லை என்று உறுதி கொண்டு மனத்துக்கண் மாசிலனாக' உறங்கி வாழ்ந்து வருபவன்.

துறையூரில் (திருச்சி மாவட்டம்) உயர்நிலைப் பள்ளி

முதல் தலைமையாசிரியனாகப் பணியாற்றியபோது (1941-50) என்னுடன் பணியாற்றிய துணையாசிரியர்கள் இருவர். உள்ளூர் வக்கீல் நண்பர் ஒருவர் தூண்டுதலால் (எனக்கு நற்புகழ் குவிகிறது என்ற பொறாமையினால்) மொட்டை மனுக்கள் போட்டு தொல்லைவிளைவித்தார்கள். இறைவன்மீது பாராத் தைப் போட்டு சமாளித்துக் கொண்டேன். அவர்களில். ஒருவர் வேறிடத்தில் தலைமையாசிரியராகித் தமது 35-ஆம் வயதி லேயே மாண்டார். வக்கீல் நண்பரும் தாரம் இழந்து நிம்மதியற்ற வழ்வில் உழன்று வாழ்ந்து தமது 65 வது அகவையிலே இறந்தார்.

காரைக்குடி வாழ்வில் (1950-60) அழகப்பர் பயிற்சிக் கல்லூரியில் பேராசிரியனாகப் பணியாற்றிய காலத்தில் அவதூறு வழக்கைக் கற்பனை செய்து தொல்லை விளை வித்தார் உடன்பணியாற்றிய ஆசிரியர் ஒருவர். இறை யருள் இருந்தமையால் கம்பன் அடிப்பொடி சா. கணேசன், பெரும் புலவர் இராய. சொக்கலிங்கன் துணையாலும் நகரத்தார் பெருமக்கள் ஆசியாலும் அத் தொல்லை ஆதவனைக் கண்டபனிபோல அகன்றொழிந்தது[1]. மனத்துக் கண் மாசில்லாத வாழ்க்கையே காரணம் என்பது எனக்குப் புரிகிறது. தொல்லைக்கு மூலகாரணமாக இருந்தவர் வாழ்கின்றார். தாரம் இழந்து பல்வேறு நோய்களால் தாக்குற்று, நிம்மதியற்று வாழ்கின்றார்.

திருப்பதியில் திருவேங்கடவன் அடிவாரத்தில் அமைந்துள்ள திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையில் முதல் நிறுவனப் பேராசிரியன் துறைத் தலைவனாகப் பணியாற்றிய காலத்தில் (1960-77) என்

1. புணர்ச்சிமகிழ்தல் - 7 (111- அதி)

தன்னலமற்றப் பணியை தமிழ்நாடு முழுதும் அறியும். தமிழ்த்துறையை நிறுவ நான் 9 ஆண்டுகள் பட்ட பாட்டை தமிழகத்துத் தலைமைச் செயலகம் நன்கு அறியும். (இறையருளயால் அங்குப் பணியாற்றிய முத்துப் பிள்ளை என்பாரின் துணையால்) முயற்சி பழம் ஆயிற்று. என்னை நன்கு அறிந்த நல்லவர் ஒரு துணைவேந்தர் தேர்வுக்குழுவில் இருந்து கொண்டு பேராசிரியர் பதவி உயர்வுக்குத் தடைக்கல்லாக நின்றவர். இறுதிக்காலத்தில் புற்று நோயால் இறந்தார். அவர் குழுவில் இருந்து துணையாக நின்ற பேராசிரியர் பல்கலைக் கழகத்துணைவேந்தராக உயர்ந்து நாடு புகழ வாழ்ந்து மறைந்தார். எனக்குத் தடைக்கல்லாக நின்ற பிறிதொருவர் பதவி உயர்வுக்குப் பாடுபட்டதனால் அவரை என்னுடன் பதவியாற்ற உதவினார். இவர் வந்த நாள் தொட்டு தாமே முற்றும் கற்ற அறிஞர் என்று (தன்னையே மெச்சும் தவிட்டுக் கொழுக்கட்டை போல்) மெச்சி வாழ்ந்த அன்பர். இவர் பல ஆண்டுகள் சொல் லொணாத் தொல்லைகள் விளைவித்ததைத் திருப்பதியில் அறியாதார் இலர். இலர். தமது 58-வது அகவையில் இரத்தக் கொதிப்பினால் காலமானார். அவரது தீய எண்ணமே இரத்தக் கொதிப்புக்கு காரணம் என்று பல்கலைக் கழக வட்டாரம் பேசிக் கொண்டது.

ஓய்வு பெற்று சென்னை வாழ்க்கையில் பல்வேறு பதவிகளை ஆற்றி பல்வேறு துறைகளில் 123 நூல்களின் ஆசிரியனாக நாடெல்லாம் புகழும் நிலையில் வாழ்ந்து வருகின்றேன். சென்னையில் என் பல்கலைப் பணியில் (பொறாமை காரணமாக) இருவர் தொல்லை விளைவித்துக் கொண்டுள்ளனர். ஒருவர் ஓய்வு பெற்றார். மற்றொருவர்

பணியில் உள்ளார். இருவரும் கையூட்டு வழக்கில் சிக்கிக் கொண்டிருப்பதாக வதந்தி; முடிவு இறைவன் திருவருளில்.

என் அகவை 88. குருதியில் சருக்கரை இல்லை; குருதிக் கொதிப்பு இல்லை. தெளிவான மனநிலை. நாடோறும் 15 மணி நேரம் படிப்பு, எழுத்துப் பணி. என் இதயத்தில் வாழும் மூவரின் (விநாயகர், முருகன், ஏழுமலையப்பன்) அருளால் எல்லாம் நன்றாக நடைபெறு கின்றன. என் குடும்பத்தில் அறுவர் அமெரிக்காவில் பணியாற்றி நற்பெயருடன் வாழ்கின்றனர். மூத்தமகன் தன் துணைவியுடன் என்னையும் என் துணைவியையும் கவனித்துக் கொள்ளுகின்றான். நாங்கள் 'தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்' (குறள் 1107) என்ற நினைவுடன் மன அமைதியுடன் வாழ்கின்றோம்.

26. ஆக்கம் கருதி முதல் இழத்தல்

அறம் பொருள் இன்பங்கட்கு இடையீடாக இருப்பது சூதாட்டம். அது ஆக்கம் கருதி முதல் இழக்கும் செயலாகும்.

ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்(463)[1]

என்பது வள்ளுவம். இது பிறிதோரிடத்தில் கூறப் பெற்றதாயினும் சூதாட்டத்திற்குப் பொருத்தமான அறிவுரை யாக அமைகின்றது. வள்ளுவப் பெருமானின் அறிவுரை - அறவுரை - அவர்தம் அறநூலில் எல்லா இடத்திலும் காணப்பெறும்.

சூதாட்டம் அறிவைக் கெடுக்காவிட்டாலும் கடமையைப் புறக்கணிக்கச் செய்து விடும். ஆகவே அதுவும் பொது வாழ்க்கைக்கு இடையூறானது. தனி வாழ்க்கைக் காவது நன்மை தருவதாக அமைகின்றதா என்று ஆராய்ந்தால் அதில் (சூதாட்டத்தில்), வெற்றி உண்டு என்று கூறலாம். ஆனால் வென்று பெறும் பொருள் மேல் வரும் இழப்புக்கும், அதனால் கிளைக்கும் துன்பத்திற்கும் ஏதுவாகும். அஃது உண்மையான ஊதியம் அன்று; அதன் விளைவு தூண்டில் இரும்பை இரை என்று கருதி (தூண்டியில் வைக்கப் பெற்றிருக்கும் புழுவை இரை என்று மயங்கி) விழுங்கிய பிறகு மீன் அல்லற்படுது போல் ஆகும்.

---
1. தெரிந்து செயல்வகை (அதி. 47)-1

வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டில்பொன் மீன்விழுங்கி யற்று (931)

என்பது வள்ளுவர் பெருமானின் வாக்கு. இந்த உவமை நம் நெஞ்சில் தூண்டில் முள்போல் நேரே தாக்கித் தெருட்டு கின்றது.

சூதாடுபவர்கள் ஊதியமாக முன்னதாக ஒன்றைப் பெறலாம். ஆனால் பிறகு நூறு மடங்கு இழக்க வேண்டிய நிலை ஏற்படும். இதுதான் சூதாடிகளின் வாழ்வு. இவர்கள் நன்மை பெற்று வாழ வழியே இல்லை

ஒன்றெய்தி நூறுஇழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு(932)

என்பது பொய்யாமொழி.

உருளும் தன்மையுள்ள கருவி கொண்டு சூதாடு வதை ஓயாமல் ஒருவர் விரும்பினால் பொருள் வருவாய் அவரை விட்டு அகன்று வெளியே போய்விடும் என்பது வள்ளுவப் பெருந்தகையின் குறிப்பு.

உருளாயம் ஓவாது கூறின் பொருளாயம்
போஓய்ப் புறமே படும் (933)

என்பது அப்பெருமானின் பொய்யாமொழி.

பல துன்பங்களையும் அநுபவிக்கச் செய்து உள்ள புகழையும் கெட்டழிக்கவல்ல சூதுபோல் வறுமைத் துன்பத் தைத் தரவல்லது வேறு ஒன்றும் இல்லைவ என்பது அப்பெரு மான் நமக்கு வழங்கும் குறிப்பு.

சிறுமை பலசெய்து சீர்அழிக்கும் சூதின்
வறுமை தருவதொன்று இல் (934)

என்பது மின்விளக்கு போன்ற பொய்யா மொழி.

சூது என்பது பெரியம்மை (மூதேவி) தான்; அதற்கு இரையானவர்கள் வயிறார உண்ணவும் மாட்டார்கள். அல்லலும் அநுபவிப்பார்கள் (936). உள்ள காலம் எல்லாம் சூதாடும் இடத்தில் செலவாகுமானால் பெற்றுப் பழகிவந்த செல்வத் தையும் (அரசியல் பதவி முதலியவற்றையும்) கெடுக்கும்; நல்ல பண்புகளையும் கெடுத்து விடும் (937). உள்ள பொருளைக் கெடுப்பது மட்டு மல்லாமல் பொய்யை மேற்கொள்ளும் படியாகச் செய்து அருள்நெறியையும் மறக்கச் செய்து துன்பம் உறச் செய்யும் (938.) சுருங்கச் சொன்னால் சூதாட்டத் தை விரும்பி மேற்கொள்வோர்,செல்வம், மதிப்பு, கல்வி, உணவு, உடை என்னும் ஐந்தையும் இழந்து அல்லலுற வேண்டிவரும் (939)

இவற்றையெல்லாம் நமக்கு அறிவுறுத்திய வள்ளுவப் பெருந்தகை சூதாட்டத்தில் ஈடுபடாமல் மிகமிக விழிப்பாக இருந்து விலக வேண்டிய காரணம் ஒன்றையும் காட்டி எச்சரிக்கின்றார். அளவற்ற கவர்ச்சியுடையது சூது. துன்பம் படப்பட உடலுடன் வாழும் வாழ்க்கை உயிருக்கு ஆசை வளர்வது நம் அநுபவம். அதுபோல் பொருளை இழக்க சூதாடுகிறவர்க்கு சூதின்மேல் ஆசைவளரும்; இப்படிபட்ட கவர்ச்சி சூதுக்கிருப்பதால் விழிப்புடன் இருந்து விலக வேண்டும் என்பது அவருடைய எச்சரிக்கை.

இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற்று உயிர் (940)

என்பது கலங்கரை விளக்கம்போல் அவர் தந்த பொய்யா மொழி.

அமெரிக்காவில் அலெக்ஸாண்டிரியா என்ற நகரம் ஒன்று உண்டு. அங்கு பெரிய சூதாடுகளன் ஒன்று உண்டு. அது கிட்டத்தட்ட ஒரு மைல் சதுரத்திற்குமேல் விரிவானது. சில அடுக்குகளாலான பொறிகள் ஆயிரக்கணக்காக அங்கு உள்ளன. அவற்றின் முன் அமர்ந்து கொண்டு ஆயிரக் கணக்கானவர்கள் சூதாடிக் கொண்டிருப்பதைக் காணலாம். இரவு பகல் 24 மணி நேரமும் ஓய்வு ஒழிவின்றி ஆடிக் கொண்டிருப்பார்கள். சதங்களும் டாலர்களும் வைத்துக் கொண்டு ஆடும் காட்சிகள் அவை. ஒரு பொறிக்கு முன் 25 சதம் வைத்து ஆடும் காட்சி இது

50,0000

5,0000

5000 25 சதங்கள்

500

50

5

ஒருவர் 5 இருபத்தைந்து சதங்கள் ஒவ்வொன்றாகப் போட்டால், 50 இருபத்தைந்து சதங்கள், 500 இருபத்தைந்து சதங்கள் ஏதாவது ஒன்று விழலாம். நமது நோக்கம் 5 இட்சம் 25 சதங்கள் பெற வேண்டும் என்ற ஆசை. 500 இருபத்தைந்து சதங்கள் விழுவதாகக் கொள்வோம். அவற்றை ஒவ்வொன் றாகப் போட்டால் 5 இருபத்தைந்து சதங்களோ 50 இருபத் தைந்து சதங்களோ விழலாம். ஐம்பதாயிரம் 25 சதங்கள் கூட விழுவதில்லை. நான் 25 சதங்கள் போட்டு விளையாடி னேன். இதே நிலைதான். 25 டாலர்களை 25 சதங்களாக மாற்றிக்

கொண்டு ஒரு மணி நேரம் விளையாடினேன். 5 டாலர்கள் இழப்பு. 'தப்பித்தது தம்பிரான் புண்ணியம்' என்று ஆடுவதை நிறுத்திக் கொண்டேன். ஆடிப்பார்த்து விளக்கம் அடையவே இதில் இறங்கினேனே அன்றி சூதை விரும்பி அல்ல. சகுனியின் (பாரதம்) சூதாட்டத்தில் அவனது காய்கள் அவன் நினைக்கின்றபடி இயங்கி தரும புத்திரனை ஏமாற்றியது. அந்தக் காய்கள் செய்வதை இங்குப் பொறிகள் செய்கின்றன. டாலர்கள் (10,20,50) என்று வைத்து விளையாடுபவர்களும் இருந்தனர். வேறு எத்தனையோ விதமான விளையாட்டுகளும் இருந்தன. அவற்றை யெல்லாம் பார்த்து விவரங்களை அறிந்து கொள்ள நேரம் இல்லை. நாங்கள் நியூயார்க் நகரிலிருந்து சுமார் 100 மைல் தெலைவிலுள்ள இதனைப் பார்க்கச் சென்றவர்கள். திரும்ப வேண்டிய நேரம் வந்ததும் திரும்பி விட்டோம். இந்தப் பெரிய ஆடுகள்ளைச் சுற்றிலுமுள்ள 100, 200 அடித் தொலைவுகளில் பல சிறிய பெரிய சூதாடு களங்களும் இயங்கிக் கொண்டிருந்தன. பெரும்பாலும் முதியோர்களே இவற்றில் பங்கு கொண்டிருந்தனர். நடுத்தர வயதுள்ளவர்களும் இளைஞர்களும் ஓரளவு தான் பங்கு கொண்டிருந் தனர்.

இவர்கள் தங்குவதற்கும் உணவு கொள்வதற்கும் விடுதிகளும் உள்ளன. கடன் வாங்குவற்கும் (நகைகளை வைத்து) வசதிகள் இருந்தன. பெரும்பாலும் போண்டி யானவர்களைக் கேள்விப்பட்டோமேயன்றி செல்வச் செழிப் பெய்தினவர்களைக் கேள்விப்படவே இல்லை. இழத்தொறும் காதலிக்கும் சூதேபோல்' என்ற வள்ளுப் பெருமானின் உவமைத் தொடருக்கு நல்ல விளக்கம் கிடைத்தது. (ஏப்ரல், மே, ஜூன் - 2002 அமெரிக்கா சென்றிருந்த போது இந்த அநுபவம்).

27. நோயற்ற வாழ்வு

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது ஒரு பொன்மொழி. இவ்வுலகப் பொதுவாழ்வில் உள்ளத்தின் உறுதியும் அறிவின் தெளிவும் கெடாமல் காத்துக் கொள்ள வேண்டுமானால் உடலைப் போற்ற வேண்டும். 'மருந்து' என்னும் அதிகாரத்தில் (அதிகாரம் - 95) சில வழிவகைகளை வகுத்துக் காட்டுகின்றார் வள்ளுவப் பெருந்தகை. இங்கு 'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு' (942) என்று நம் கவனத்தை ஈர்க்கும் அப்பெருமான் நாம் மேற்கொள்ள வேண்டிய உணவு முறைகளையே பேசுகின்றார். முதல் ஏழு குறளில் நோயின்றி வாழ வழிகாட்டிய பிறகு, வந்த நோயைத் தக்க மருந்துகளால் உடனே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று அதற்கும் வழிகளை அமைத்துக் காட்டுகின்றார். அதிகாரத்திற்கு மருந்து என்னும் தலைப்பு கொடுத்திருந்தாலும் மருந்து வேண்டாத வாழ்வையே வற்புறுத்துகின்றார்.

'நாவடக்கம்' என்ற ஒரு பண்பு உண்டு. பேச்சில் நாவடக்கத்தைக் கடைப்பிடித்தால் உள்ளத்திற்கு நல்லது; உகந்தது. உணவில் அதைக் கடைப்பிடித்தால் உடலுக்கு நல்லது. ஆனால் இந்நெறிகள் எல்லோராலும் கடைப்பிடிக்க முடியாது என்ற குறிப்பும் அப்பெருமான் வாக்கில் உண்டு.

பழங்காலத்து மருத்துவ முறைப்படி ஒருவருடைய கையில் நாடிபார்த்து அவருக்கு உற்ற நோய் இன்னது என்று உறுதி செய்ய முடியும். அவ்வாறு காணும்போது உடம்பில் **வாதம், பித்தம், சிலேத்துமம்** என்னும் மூன்றும் மிகாமலும் குறையாமலும் இயல்பான அளவில் அமைந்து இருந்தால் நோயற்ற நிலை உறுதி செய்யப்பெறும். இம்மூன்றில் ஒன்றோ இரண்டோ மிகுந்திருந்தாலும் குறைந்திருந்தாலும் நோய் உண்டாகும் என்று கண்டார்கள்.

மிகினும் குறையினும் நோய்செயும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று (941)[1]

என்பது வள்ளுவம்.

இந்த மூன்றும் மிகாமலும் குறையாமலும் சம அளவு இருக்க வேண்டுமானால் நாம் கடைப்பிடிக்க வேண்டிய உணவு முறைகளையும் உரைக்கின்றார். வாதம் மிகுந்திருப்பதாகத் தெரிந்தால் வாயு விளைவிக்கும் பொருளை உண்ணலாகாது. பித்தம் மிகுந்திருப்பது தெரிந்தால் பித்தம் விளைவிக்கும் பொருளை உண்பதைத் தவிர்த்தல் வேண்டும். சிலேத்துமம் மிகுந்திருப்பது தெரிந்தால் கபம் உண்டாக்கும் ஈரப்பொருளை உண்ணக் கூடாது. இவ்வாறே ஒன்று குறைந்தால் அதை ஈடு செய்யும் பொருளைத் தேடி உண்ணுதல் ஆகிய இந்த முறையைக் கடைப்பிடித்தல் உண்டு. இஃது அவ்வளவு சிறந்த முறையன்று.

இதன் விளக்கம் உண்கின்ற உணவுக்கு வாதம் முதலியவை நேரிடுகின்றன என்பது மட்டும் முழு உண்மை அன்று. உண்கின்ற உணவைச் செரிக்கச்செய்து ஏற்றுக்

1. மருந்து-1

கொள்ளும் வயிற்றையும் பொறுத்தே இந்நிலைகள் ஏற்படுகின்றன. ஒருவர் உடம்பில் இனிப்பு (சருக்கரை) மிகுதியாகக் காணப்பெறுவதாக வைத்துக் கொள்வோம். அவர் இனிப்பற்ற உணவைத் தேடி உண்டாலும் சில பொருள்களை (எ-டு அரிசி மரவள்ளி போன்றவை) சருக்கரையாக மாற்றிக் கொள்ளும் ஆற்றல் வயிற்றுக்கு உண்டு. சருக்கரையாக (குளுகோசாக) மாறிக் குருதியில் சேர்ந்து உடல் உறுப்புகள் செயற்படும்போது ஆற்றல் தருகின்றது. இப்பொருள் எரிபடாமல் குருதியில் தங்கினால் நீரிழிவு நோய் உண்டாகின்றது. ஆகையால் இனிப்புப் பொருளை மட்டிலும் தவிர்த்தலால் பயன் விளைவது இல்லை. அவ்வாறே புளிப்பு உடம்பில் மிகுந்து விட்டபோது புளிப்பான பொருள்களை விட்டுவிடுவதால் பயன் விளைதல் இல்லை புளிப்பற்ற பொருளைத் தேடி உண்டாலும் அவற்றையெல்லாம் புளிக்க வைத்து புளிப்பாக மாற்றிக் கொள்ளும் ஆற்றல் வயிற்றில் உண்டாகிறது. மற்றச் சுவைகட்கும் இவ்வாறே காணலாம். சுவைகளை ஒட்டியே வாதம் முதலியனவும் அமைகின்றன என்று இவர்கள் கருதுவார்கள். அந்த முறைப்படி சுவைப்பொருளை மாற்றி மாற்றி உண்பதால் வாதம் முதலியவற்றின் மாறுபாட்டால் வந்த நோய் தீர்ந்து விடும் என்பது இவர்தம் நம்பிக்கை. இது தவறு.

விலங்குகளும் பறவைகளும் இயற்கையாகவே தம் உடலுக்கு ஏற்ற உணவையும் அதன் அளவையும் தின்கின்றன. அவற்றின் நாக்கு அளவறிந்து தின்னும் கருவியாக அமைந்துள்ளது. மக்களது நாக்கும் தொடக்கத்தில் அந்த ஆற்றல் பெற்றிருந்தது. ஆனால் பகுத்தறிவும் சிந்திக்கும் ஆற்றலும் வளரவளர புலன்களின் இயற்கை ஆற்றல் குன்றிவிட்டது. அன்றியும் சமைத்து உண்ணும் செயற்கை

முறை வேரூன்றி விட்ட பிறகு இயற்கை ஆற்றல் அழிவு பட்டது. ஆகையால் இன்று ஏற்ற உணவையும் ஏலாத உணவையும் உணர்ந்து அறிவிக்கும் ஆற்றல் நாக்கிற்கு இல்லை. இன்றும் குழந்தைகளிடத்திலும் சில வகை நோயாளி களிடத்திலும் அந்த ஆற்றல் ஒருவாறு அமைந்திருத்தலை உய்த்து உணரலாம். உடலுக்கு ஏலாத பொருள்களை அவர்கள் காரணம் இல்லாமல் விலக்கு கிறார்கள். ஆயினும் உடலுக்கு ஏலாத சில பொருள்களை விரும்பவும் செய்கின்றார்கள். உடல் கெடும் என்று பிறர் சுட்டிக் காட்டியும் கேளாமல் விரும்பு கின்றார்கள். அதனால் அந்த இயற்கை ஆற்றல் இன்று நாக்கிற்கு உள்ள அளவு போதாது நம்பத்தகாதாகவும் உள்ளது இன்று நாக்கு இயற்கை உணர்வினால் ஆளப்படும் தன்மை குறைந்து மனிதனுடைய விருப்பு வெறுப்பினால் ஆளப்படும் தன்மை மிகுந்துள்ளது.

ஆயினும் இன்றும் உடம்பில் மற்றோர் உறுப்பு அந்த ஆற்றலை இழக்காமல் காத்து வருகிறது. அது மனிதனுடைய விருப்பு வெறுப்புக்குக் கட்டுப்படாமல் வேலைசெய்து வருகின்றது. அதுதான் வயிறு (தர்மாத்மா போல் உள்ளது). அஃது ஒன்றே இன்றும் நம்பத்தகுந்ததாக உள்ளது. தக்க உணவை நன்கு செரித்து, தகாத உணவை நன்கு செரிக்காமல் தள்ளுகின்றது; மனிதன் ஆசைவயப் பட்டவனாய்த் தகாத உணவையே திணித்து வற்புறுத்து வானானால் அதற்காக அந்த வயிறு மாறி அமைவதில்லை; மனிதனுக்கு அடிமையா வதில்லை; வேலை செய்ய மறுக்கிறது. திணிப்பும் வற்புறுத்தலும் மேலும் மிகுமானால் (செரிப்புக்கு மருந்து முதலியவை உண்டு) வற்புறுத்தினால் மறுக்கும் நிலைமையும் கடந்து மானமுள்ளவர் போல் தானே கெட்டு அழிகின்றது. ஆகவே அது நன்றாக

வேலை செய்கின்றதா செரிப்பு வேலை சீராக நடைபெறு கின்றதா என்று ஆராயக் கற்றுக் கொண்டால் உடல் நலத்தைக் காத்துக் கொள்வது எளிதாகும்.[2]

முன்உண்ட உணவு எவ்வாறு செரிமானம் ஆனது என்பதை ஆராய்ந்து அறிந்து, அந்த அறிவைக் கடைப் பிடித்துப் போற்றிப் பிறகு அடுத்த வேளை உணவை உண்ண வேண்டும்; அவ்வாறு உண்டால் உடம்பிற்கு மருந்து என்று ஒன்று வேண்டியதில்லை.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின் (942)

இதற்குச் சரியான அளவுகோல் 'பசித்துப் புசி' என்பது. இதனை வள்ளுவர் பெருமானே,

அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து (944)

என்று சற்று விளக்கமாகவே அருளியுள்ளார். துவரப்பசித்து - மிகப் பசித்து என்பதை ஆழ்ந்து கருதுகின்றோம்.

இன்ன அளவு வேண்டும் என்று அறிந்து உண்பதே கடமை. அதுவே உடம்பைப் பெற்றவன் அந்த உடம்பை நெடுங்காலம் காத்துச் செல்லும் வழியாகும். இதனை,

அற்றால் அளவறிந்து உண்க அஃதுஉடம்பு
பெற்றான் நெடிதுஉய்க்கு மாறு (943)

என்ற குறள்மணியின் ஒளியில் கண்டு மகிழலாம்.

---

2. செரிமானம் பற்றி பல ஆங்கில நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றைப் படித்துப் பயன்பெறலாம்.

உடம்புக்கு ஒத்துக் கொள்ளுகின்ற (மாறுபாடு இல்லாத) உணவையும் மனம் விரும்பும் அளவும் மறுத்து உடலுக்குத் தேவையான அளவே உண்ண வேண்டும். அவ்வாறு உண்டால் உயிர் வாழ்க்கைக்கு நோயால் நேரும் இடையூறு இல்லையாகும்.

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு (945)

என்ற குறட்பாவில் இக்கருத்து பொதிந்திருப்பதைக் கண்டு உவக்கலாம்.

உடலுக்குத் தேவையான உணவு இன்னது என ஆராய்ந்து தேர்ந்து எடுத்து குறைந்த அளவு இன்னது என்று அறிந்து உண்கின்றவனிடம் இன்பம் (உடல்நலம்) நிற்கும்; அது போல மனத்தின் விருப்பதிற்கு இயைந்து அளவு மீறி மிகுதியாக உண்கிறவனிடம் நோய் குடியேறி நிற்கும்.

இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய் (946)

என்ற குறளின் ஒளியில் இக்கருத்து அடங்கியிருத்தல் காணலாம்.

பசித்தீயின் அளவிற்கு ஏற்றவாறு உண்ணவேண்டும். அங்ஙனம் உண்ணாமல் ஒன்றையும் ஆராயாமல் அளவு மீறி மிகுதியாக உண்டால் நோயும் அளவு கடந்து தலைக்காட்டும். இக்கருத்து,

தீயளவு அன்றித் தெரியான் பெரிதுஉண்ணின்
நோயளவு இன்றிப் படும் (947)

என்ற குறளில் அடங்கியிருத்தல் காணலாம். இதுகாறும் உணவு உண்டலை முறையாகக் கூறி அம்முறைகளைக் கடைப்பிடித் தால் நோய் வராமல் தடுக்கலாம் என்பதை விளக்கினார்.

இவற்றையெல்லாம் மீறி ஒருக்கால் நோய் வந்து விட்டால் அந்த நோயைத் தீர்க்க என்ன செய்ய வேண்டும் என்பதைச் சுட்டுகின்றார். வந்த நோய் என்ன நோய் என்று ஆராய வேண்டும்; அஃது என்ன காரணத்தால் வந்தது என்பதை நாடி அறிய வேண்டும்; அதனைத் தணிக்கும் வழி என்ன என்பதை அறிய வேண்டும். இதன் பிறகு அதனைப் பொருத்தமான முறை அறிந்து பிழையாமல் செய்ய வேண்டும். இதனை,

> **நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
> **வாய்நாடி வாய்ப்பச் செயல் (948)**

என்ற குறட்பாவில் கண்டு தெளியலாம்.

மருத்துவன் தன் சிகிச்சை முறையைத் தொடங்கு வதற்கு முன் நோயாளியின் உடல் நிலைமை, அதன் வலிமை, அவனது வயது முதலியவைகளையும், நோயின் தன்மையையும் அதனைத் தீர்ப்பதற்கு உரிய காலத்தின் வாய்ப்பையும் ஆராய்ந்து செய்ய வேண்டும். கால வாய்ப்பு என்பது பெரும்பொழுது, சிறு பொழுது என்பவை. இவற்றில் ஒன்றற்காவன பிறிதொன்றற்கு ஆகாமையால் இவற்றின் பொருத்த முறையை ஆராய்தல் இன்றியமையாதது.

28. மானமிகு வாழ்க்கை

வாழ்க்கையே போராட்டமானது. பறவைகள் விலங்குகள் ஆகியவை உயிர்வாழ்வதற்கு உணவு தேடுவதில் பல்வேறு வகையாகப் போராடுகின்றன. மக்கள் வாழ்க்கையில் இத்தகைய போராட்டம் இருந்தாலும் இந்த எல்லையைக் கடந்த வாழ்க்கைப் போராட்டம் ஒன்று உண்டு. அஃது என்ன போராட்டம்? வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோள்களை வைத்துக் கொண்டு அவற்றைப் போற்றி வாழப்போராடுவதே அது. இத்தகையோருக்கு உணவு முதலிய வாழ்க்கைத் தேவைகளைவிட உயர்ந்த கொள்கைகளே பெரியவையாகத் தோன்றும். இப்போராட்டம் முதிர்ந்தபோது உணவு முதலிய தேவைகளையும் பொருட்படுத்தாமல் கொள்கைகளையே போற்ற முற்படுவார்கள். அஃதாவது உயிர் வாழ்க்கையின் அடிப்படை கெடுவதாக இருந்தாலும், உயிரே நீங்குவதாக இருந்தாலும் உயர்ந்த நெறியினின்றும் பிறளமாட்டார்கள். உயர்ந்த கொள்கைகளை இழக்கும் நிலை வந்தால், அந்தக் கொள்கைகளை வாழவைத்துத் தாம் உயிர் விடுவார்கள். அவ்வாறு செய்வதால் போராட்டத்தில் வெற்றியே பெற்றுவிட்டதாக மகிழ்ச்சி அடைவார்கள். இத்தகைய உணர்ச்சியே 'மானம்' என்பது. இத்தகைய உணர்வுடன் வாழும் வாழ்க்கையே **'மானம் மிகுவாழ்க்கை'** ஆகும். இந்த உணர்வு

சிலரிடம் இருப்பதால்தான் உயர்ந்த கொள்கைகள் உலகில் நிலைபெற்று நிற்க முடிகின்றன.

மானம் உடையவர்கள் தம் உயிர் வாழ்வைப் பொருளாகக் கருதாமல் உயர்ந்த கொள்கைகளைப் போற்றி ஒழுகுவதால் மக்கள் வாழ்க்கை பெருமையுடையதாக விளங்குகிறது. உணவு முதலியபற்றிய விலங்குப் போராட் டத்திற்கு இடையே நாகரிகமும் நிலை பெற்று வாழ்ந்து வருகின்றது.

தன் தவறு பற்றித் தன் நெஞ்சமே வருத்த அதனால் உண்டாகும் உணர்ச்சியே சிறந்த மானமாகும். பிறன் பழித்தான், உதைத்தான் என்று அவற்றால் உண்டாகும் மானம் சிறந்த மானம் அன்று. தவிர, பிறன்பழி உதைத்தல் முதலியவற்றையும் பொறுக்கும் பண்பே மானம் சிறந்துள்ளவர்களிடம் காணப்படு கின்றதே அன்றி பிறர் செய்தவற்றிற்கெல்லாம் கொதித்துத் தீமை செய்ய எழும் தன்மை காணப் படுவதில்லை. இவ்விடத்தில் ஒரு நிகழ்ச்சியை நினைவு கூர்தல் பொருத்தமாகும். இராமானுசர் காலத்தில் பட்டர் என்பார் திருவரங்கப் பெருமானுக்கு அந்தரங்கக் கைங்கரியம் செய்து கொண்டிருந்தார். ஒருநாள் அவர் திரைமறைவில் சந்நிதியில் ஏதோ பணியில் ஈடுபட்டிருக் கும்போது அவர் உள்ளிருப்பதை அறியாதவர்களாய் திருவரங்கத்தைச் சார்ந்த இரண்டு வைணவர்கள் பட்டரை வாய்க்கு வந்தபடி வசைமாரி பொழிந்து கொண்டிருந்தனர். உள்ளே பணியில் ஈடுபட்டிருந்த பட்டர் இதனைக்கேட்டுக் கொண்டிருந்தார். வசைமாரி ஓய்ந்த நிலையில் உள்ளிருந்த பட்டர் திரையை விலக்கி வெளிப் போந்து அதிகமாகத் திட்டித் தீர்த்த அன்பருக்கு அரங்கனின் உடுத்துக்களைந்த பீதக

ஆடையைப் போர்த்தினார். மற்றொருவருக்குத் தாம் அணிந்திருந்த மோதிரத்தைக் கழற்றி அவர் கை விரலில் அணிவித்தார். அவர்களை நோக்கி, "'தேவரீர் இருவரும் பெரிய பெருமாள் சந்நிதியில் அடியேனின் குற்றங்குறைகளை எடுத்துரைத்தமைக்கு மிகவும் கடப்பாடுடையேன். இவற்றை இயன்றவரை போக்கிக் கொள்ள முயல்வேன்" என்று தெரிவித் தார் இது சிறந்த மானம் - பட்டருடைய மானம்.

அன்றியும், மானம் உடையவர் தன்னலம் குறைந்த வராக விளங்க வேண்டுமே அல்லாமல் தன்னலம் கருதிப் பிறர்மேல் சினமும் பகையும் கொண்டு பதிலுக்குப் பதில் தீமை செய்தல் கூடாது; அதனால் அந்தத் தன்னல உணர்ச்சியை மானம் என்று கூறுவதும் பொருந்தாது. இன்னும் ஆழ்ந்து நோக்கி ஆராய்ந்தால் மானம் என்பது தன்குடி, தன்நாடு முதலியவற்றின் பெருமையையும் உலக வாழ்க்கைக்கு அடிப்படையான உயர்ந்த கொள்கைகளின் பெருமையையும் காக்கப் பயன்படுவதே அல்லாமல் தன்னல அடிப்படை கொண்ட தன்பழி, தன்புகழ், தன் ஆக்கம், தன் கேடு என்பவற்றைப் பொருளாகக் கொள்வது அன்று. தன்னைவிட தன் குடி பெரியது, அதைவிட நாடு பெரியது, அதைவிட உலகம் பெரியது அதைவிட உலக வாழ்வதற்கு அடிப் படையான ஒப்புரவு பெரியது, என்று எண்ணுவதே மானமாகும்; அவ்வாறு உயர்வகையான மானமுடையவர்கள் செழித்தோங்கு வதை எந்த நாட்டிலும் காணலாம். ஒப்புரவு, நாடு, குடி என்பவற்றை மறந்து தன்னலம் கொண்டு மனம் பழி, தன் புகழ் என்றும் குறுகிய எல்லையில் மான உணர்வைக் கொண்டவர் கள் நாளுக்கு நாள் தேய்ந்து அழிவதை எந்த நாட்டிலும்

காணலாம். இந்த உண்மையை உணர்ந்தே வள்ளுவர் பெருமான் பொது வாழ்வைப் புகலும் பொருட்பாலில் மானத்தைப் பற்றிப் பேசுகின்றார்.

எப்படியாவது வாழ வேண்டும் என்று பலருக்கு நோக்கமாக இருந்தாலும் மானம் உடையவர்கள் அதைப் பொருட்படுத்தலாகாது. இன்றியமையாத சிறப்பை உடைய வர்களாய் இருந்தாலும் மானம் குன்றும்படியாக செயல்களைச் செய்யாமல் விட வேண்டும்.

இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல் (961)

என்பது வள்ளுவம். எப்படியாவது ஒரு நல்ல நிலையை அடையப் பாடுபட வேண்டும் என்றும், அதுவரையில் தகாத செயல் மேற்கொண்டேனும் முன்னேற வேண்டும் என்றும் முன்னேறி நல்ல நிலை அடைந்த பிறகு தகாத செயல் குறையைத் தீர்த்துவிடலாம் என்றும் உலகம் அங்ஙனம் முன்னுக்கு வந்தவர்களை பாராட்டுகின்றது என்றும் சிலர் கருதுகின்றனர். அதனால் அவர்கள் தீயவழியிலும் பொருள் சேர்த்துப் பெருஞ்செல்வர்களாக விளங்கி அதன் பிறகு அந்தக் குற்றத்தை மறைக்கப் பொருளை வாரி இறைப்பார்கள். சிலர் நற்செயல் செய்து புகழ் பெறுவார்கள்.

இக்கூறியவாறே சிலர் தகாத செயல் செய்தாவது சிறந்த பதவியைப் பெறுவார்கள். பதவி பற்ற பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று துணிந்து தீமை செய்வார்கள். பதவி கிடைத்த பிறகு அந்தப் பழியைப் போக்கிக்கொள்ள நற்செயல் களைச் செய்வார்கள். உலகம் அவர்களைப் போற்றும். ஆனால் வள்ளுவர் பெருமான் அவர்களுடைய போக்கைக் கடிகின்றார்.

இன்று எல்லாக் கட்சி அரசியல்வாதிகளிடமும் இப்பண்பைக் காணலாம். இவர்களில் பலர் சாத்தான் வேதத்தை மேற்கோள் காட்டுவது போல வள்ளுவர் வான்மறையைக் குறிப்பிட்டுப் பேசி உலகை மீண்டும் ஏமாற்றுவார்கள்.

சீர் பெற வேண்டும் என்பதற்காகவும் தகாதவற்றைச் செய்தல் கூடாது என்பதற்காகவும் உண்மையான சிறப் பையும் மானத்தையும் விரும்புகின்றவர்கள் அவ்வாறு ஒழுகுவார் கள் என்றும் தெளிவுபடுத்துகின்றார் அப்பெருமான்.

சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டுபவர் (962)

என்பது அவர்காட்டும் பொய்யாமொழி.

மானத்தைப் பற்றி இவர் கூறும் ஒரு கருத்து மறை மொழிபோல் எல்லோரும் கடைப்பிடித்துப் போற்ற வேண்டியது. எல்லோரும் மதிக்கும் நிலை வந்தபோது அந்த மதிப்பு இல்லாததுபோல் நடந்து கொள்ள வேண்டும். அப்போது அம்மதிப்பைப் பொருட்படுத்தி உயர்வோடு நடந்து கொண்டால் அது செருக்காக - அகந்தையாக - தன் முனைப்பாகக் - கொள்ளப்படும். ஆனால் மதிப்புக்கு உரிய நிலை இல்லாதபோது தாழ்ந்து நடக்கவும் கூடாது; உரிமையும் மதிப்பும் உடையவர்போல் நடந்து கொள்ள வேண்டும். ஆதலால் வாழ்வு பெருகியபோது பணிவு வேண்டும் ; சுருங்கிய போது உயர்வு வேண்டும்.

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு (963)

என்பது நடைமுறைக்காக நம் பெருமான் நல்கிய நல்ல மருந்து.

மானம் இழந்தும் உயிர்வாழ முடியும்; ஆனால் இறவாத நிலை பெற முடியாது என்பதை நாம் அறிவோம். ஆதலால் மானமும் அழிந்து உயிரும் அழிவதால் பயன் ஒன்றும் இல்லை. ஏதேனும் ஒன்றைக் காத்தல் புத்தி சாலித்தனமாகும். உயிரை நெடுங்காலம் காக்க முடியாது. அதனால் அதை இழந்தாவது மானத்தைக் காக்க வேண்டும் உடம்பை எப்படியாவது காக்க வேண்டும் என்று மானம் அழிந்து வாழும் வாழ்க்கை சாகாமல் இருப்பதற்கு மருந்தாகப் பயன்படாது என்பதை உணர்ந்தால் போதும். அவ்வாறு உணர்ந்தவர்கள் மானத்தைக் காப்பதற்காக உயிர்விட வேண்டிய நிலைமை வந்தாலும் மயிர்நீப்பின் உயிர்வாழாக் கவரிமான் போல் உயிர் விடுவார்கள்.

மயிர்நீப்பின் உயிர்வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின் (969)

என்பது இந்நிலையை விளக்க வந்த வள்ளுவம். இழிநிலை வந்தபோது உயிர் வாழாமல் இறந்த மான முடையவர்களின் சிறப்பை உலகம் தொழுது வாழ்த்தும். **"ஒளி தொழுது ஏத்தும் உலகு" (970).**

29. பண்புடையார் உலகம்

'பண்புடைமை என்பது பாடறிந்து ஒழுகல்' என்பது கலித்தொகையில் கண்ட உண்மை. பண்புடையார் இருப்பதால்தான் உலக வாழ்க்கை உண்டு என்று சொல்லக் கூடியதாய் நடைபெற்று வருகின்றது.

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மாண்புக்கு மாய்வது மன்(996)

என்பது பொய்யா மொழி. மக்கட் பண்பு என்றால் என்ன? நீதியையும் அறத்தையும் விரும்பும் தன்மை ஆகும். இவற்றை விரும்புகின்றவர்களே உலகிற்குப் பயன்படுவார்கள் அவர்களுடைய பண்பையே உலகமும் பாராட்டும்.

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு (994)

என்பது இக்கருத்தைக் காட்டும் வள்ளுவம். உலகம் தோற்றத்தால் மண்ணும் கல்லுமாய் உள்ளது. மற்ற பூதங்கள் இருப்பினும் மண்ணே அதன் புறத்தோற்றத்திற்குக் காரணமாக உள்ளது. மற்றப் பூதங்கள் இருப்பதைவிட மற்ற உயிர்கள் இருப்பதைவிட மக்கள் வாழ்வதே மண்ணுலகத்தின் சிறப்புக்குக் காரணமாக உள்ளது. மக்கட்பண்பு இல்லாமல் விலங்குகளைப் போல், மரங்களைப்போல் மககள் வாழ்க்கை நடத்தினால் ஒருவரையொருவர் கொன்று அழித்துவிட இறுதியில் வெறும் பாழான மண்ணுலகமாய்த் தோன்றி அழிந்து விடும்.

உலகம் என்பது என்ன? வெறும் மண்ணா? மண்ணில் கலந்துள்ள மற்றப் பூதங்களா?, மரம் செடி கொடியாக உள்ள மண்ணா? மூளையாகவும், நரம்பாகவும், எலும்பாகவும் உள்ள மண்ணா? பண்பு என்ற ஒன்று இல்லையானால் இந்த உலகம் எவ்வாறு தோன்றும்? மண்ணில் வளர் புழுக்களுள் மக்கள் உடல்கள் பெருவகைப் புழுக்களாய்த் தோன்றும். அந்தப் பெருவகைப் புழுக்கள் தம்மைவிட மெலிந்த (மக்கட்) புழுக் களை வருத்தியும் பொருதும் கொன்றும் வாழ்வதாகத் தோன்றும். இன்னும் கூர்ந்து நோக்கி ஆராய்ந்தால் மண்ணின் சில பகுதிகள் அசைவும் எழுச்சியும் பெற்று ஒன்று மற்றொன்றைத் தாக்கி மண்ணாய் மாய்வதாகத் தோன்றும் அன்றோ? இங்ஙனம் வெறும் மண்ணாகவோ, நரம்பு மூளை முதலிய உயர்வகை மண்ணாகவோ தோன்றாமல் உண்மைப் பெருமையுடைய உலகமாகத் தோன்றச் செய்வது நெஞ்சப் பண்பு ஒன்றேயாகும். அத்தகைய நெஞ்சப் பண்பு உடையவர் கள் ஒருசிலரேயாயினும் அவர்களால்தான் உலகம் உலகமாய் உள்ளது என்பது வள்ளுவர் பெருமானின் கருத்து. அடுத்து மக்கள் என்பவர் யார்? என்பதையும் அறிமுகம் செய்து விளக்குகின்றார் அப்பெருந்தகை.

கைகால் முதலிய உறுப்புகளால் மக்களைப்போல் இருப்பவர்கள் மக்கள் அல்லர்; அமையத்தக்க பண்பு அமைந் திருந்தால்தான் அவர்கள் மக்கள் எனத் தக்கவர்கள்.

உறுப்பொத்தல் மக்கள்ஒப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு (993)

என்ற தம் ஒப்பற்ற வாக்கால் விளக்குவர். தோற்றத்தால் மட்டும மக்களைப்போல் இருப்பதால் ஒரு சிறப்பும் இல்லை. மேலும் அரத்தின் கூர்மைபோல கூரிய மூளை பெற்றிருந்தாலும்

மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவர்கள் மரம் போனறவர் களே. மண்ணில் ஒரு பகுதி மரமாய் வளர்ந்ததைப்போல் மற்றொரு பகுதி மூளையாய் வளர்ந்ததாகவே கருதப் பெறுவர் என்று விளக்குவார்.

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர் (997)

என்பது அப்பெருமானின்பொய்யாமொழி.

ஒருவரையொருவர் இகழ்ந்து அன்பில்லாமல் நடப்பது விளையாட்டிலும் தீமையானது; துன்பமானது. அதற்கு நேர்மாறாக, பண்புடையாளர்கள் பகை உள்ள இடத்திலும் பண்போடு நடப்பதைக் காணலாம்.

நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி; பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு (995)

என்பது இதனை விளக்கும் வள்ளுவம்.

நண்பர்களாக இல்லாமல் தீங்கு செய்து வாழும் மற்றவர்களிடத்திலும் அவர்கள் பண்பு தவறாமல் நடப்பார்கள். அறிவுடையவர்கள் இந்தப் பண்பைத் துறந்து வாழ்வது பெரிய குறையாகும்.

நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றார் ஆதல் கடை (905)

என்பது வான்மறை வள்ளுவம்.,

மக்கள் ஒருவரோடு ஒருவர் பழகும்போது மனம் கலந்து மகிழ வேண்டும். இந்த மகிழ்ச்சி அடைய முடியாதவர்கள் உலகத்தில் வாழ்ந்து பயன் என்ன? இப்பரந்த பெரிய உலகம் அவர்கட்குப் பகலிலும் இருண்டு தோன்றும். உலக வாழ்க் கைக்கு அவர்கள் தகுதியற்றவர்களாகவே இருந்து தொல்லைப் படுவார்கள்.

30. ஏர்ப்பின்னது உலகம்

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம் - வீணில்
உண்டுகளித் திருப்போரை
நிந்தனை செய்வோம்[1]

என்ற பாட்டடிகளில் தொழில்களில் உழவை முதலில் வைத்துப் போற்றினார் பாரதியார். உலகம் முழுவதும் உணவுக்காக 'ஏர்ப்பினது' என்று கூறிப் போற்றுவார் வள்ளுவப் பெருந்தகை. வேறு எந்த வழிகளில் சுழன்றாலும் உலகம் முடிவில் ஏர்த் தொழிலின் பின் நிற்கின்றது. ஏரினால் விளையும் பொருளையே எதிர்பார்த்து நிற்கின்றது. அதனால் துன்பம் நிறைந்த தொழிலாக இருக்கும் உழவே தலையாய தொழில் என்பதை நாம் உணரலாம்

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை (1031)[2]

என்ற வள்ளுவத்தில் இது கூறப்பெற்றுள்ளது. உழவு செய்வது உடல் வருத்தும் தொழில் என்று கருதி அதைச் செய்ய முடியாமல் வேறு வழியில் வாழ்க்கை நடத்துகின்றவர்களையும் தாங்கிக் காப்பாற்றுகின்றவர்கள் உழவர்களே என்பது கண் - கூடு. ஆகையால் அவர்களே உலகத்தார்க்கு அச்சாணி

1. பா.க. தேசிய கீதங்கள் சுதந்திரப் பள்ளு -4
2. உழவு -1

போன்றவர்கள் என்பதை உணர முடிகின்றது. இக்கருத்தை வள்ளுவர் பெருமான் இரத்தினச் சுருக்கமாக,

உழுவார் உலகத்தார்க்கு ஆணி;அஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து (1032)[3]

என்று தம் வாக்கில் வைத்து அழகாகக் கூறுவர்.

உழவு செய்து அதனால் தாமும் உண்டு வாழ்கின்ற வர்களே உரிமையோடு வாழ்கின்றவர்கள் ஆவர்; மற்றவர் கள் பிறரைக் கைகட்டித் தொழுது வழிபட்டு வயிறு வளர்த்து உரிமை இல்லாமல் அவர்களின் பின் சென்று வருபவர்கள். உலக நிகழ்ச்சிகளைக் கூர்ந்து நோக்கி அந்த உலகியலை நன்கு உணர்ந்த வள்ளுவர்பெருமான்,

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர்; மற்று எல்லாம்
தொழுஉண்டு பின்செல் பவர் (1033)[4]

எனப் போற்றிப் பேசுவர். இவர்களை வேடிக்கையாக இக்காலத்தில் சிலர்,

டைகட்டி வாழ்வாரே வாழ்வர் மற்றுஎல்லாம்
கைகட்டிப் பின்செல் பவர்

என்று கிண்டல் அடிப்பதுமுண்டு .

இன்றைய கட்சி அரசியலில் தேர்ந்தெடுக்கப் பெற்று சட்டமன்ற உறுப்பினர்களாகி ஆள்பவர்களோடு தோளோடு தோள் போட்டு வாழ்கின்றவர்களும் மக்கள் குருதியை அட்டைபோல் உறிஞ்சி சுகவாசிகளாக வாழும் கட்சித் தொண்டர்களும் இதற்குச் சரியான எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றவர்கள்.

3.மேலது -2

4.மேலது - 3.

தம்கையால் வேர்வை சொட்ட உழைத்துத் தொழில் செய்து அதனால் கிடைத்ததை உண்டு வாழும் தன்மை உடையவர்கள் பிறரிடம் சென்று கையேந்தி இருக்க மாட்டார்கள்; தம்மிடம் வந்து இரப்பவர்க்கு அவர்கள் கேட்கும் பொருளை வஞ்சகமின்றி வழங்கி உதவுவார்கள். இக்கருத்து,

இரவார் இரப்பார்க்குஒன்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர் (1035)[5]

என்ற வள்ளுவத்தில் பொதிந்து வைக்கப் பெற்றுள்ளதைக் கண்டு மகிழ்கின்றோம்.

உழவர் வாழ்க்கை மிக மிகச் சீர்கேடடைந்துள்ள இந்தக் காலத்திலும் பிறர்க்கு உதவும் பண்பை அவர்களிடம் காணலாம். அறுவடைக்காலத்தில் கூழையோ மற்றப் பொருளையோ இரண்டு கையாலும் வாரி வழங்கு கின்றார்கள். கூழுக்குத் திண்டாடுங் காலத்திலும் தாம் குடிக் கும் கூழின் ஒரு பகுதியைக் கேட்டவர்களுக்குக் கொடுத்துப் பசிதீர்ப்பதை இன்றும் காணலாம். வெயிலில் வாடி நடந்து வரும் ஒருவருக்கு இளநீர் அளித்து அதனை அவர்கள் பருகும்போது பார்த்து மகிழும் உழவர்களை இன்றும் நாம் காணாமல் இல்லை. எதிர்காலத்தை பற்றிச் சிறிதும் கவலை இல்லாமல் சேர்த்து வைக்கும் சிக்கனம் இல்லாமல் உதவி செய்யும் பண்பு இன்னும் இவர்களிடம் உள்ளது. அதனால் கைத்தொழில் செய்து வாழும் தொழிலாளர் உலகமே இரத்தலை (கையேந்திப் பிச்சை எடுத்தலை) ஒழிக்கவல்லது என்பது வள்ளுவர் பெருமானின் சீரிய கருத்தாகும்.

---

5. மேலது - 5

உழவர் பெருமக்கள் கைத்தொழில் செய்யாமல் ஒதுங்கினால் எவரும் வாழ முடியாது. ஒரு பொருளை மனத்தால் விரும்பும் தன்மையும் விட்டு விட்டோம் என்று கூறும் துறவிகளுக்கும் அப்பொதுவாழ்வு இல்லை. அவர் களும் துறவறத்தைக் கடைப்பிடிக்க முடியாது; இச்சீரிய கருத்து,

உழவினார் கைமடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை (1036)[6]

என்ற குறட்பாவில் அடக்கிக் காட்டுவது நமக்குப் பெருமகிழ்ச்சி யைத் தருகின்றது.

உழவர்களின் பெருமையையும் சிறப்பையும் பாராட்டி மகிழ்ந்த வள்ளுவர் பெருமான் ஒரு பெரிய தொழில் நிபுணர்போல் உழவுத் தொழின் நுட்பத்தையும் பேசுகின்றார் இரண்டு குறட்பாக்களில். ஒரு பலம் புழுதி கால்பலம் ஆகும் வரைக்கும் நிலத்தை உழுது காய விட வேண்டும். அவ்வாறு காய விட்டால் ஒரு பிடி எருவும் இல்லாமலே பயிர் நன்றாகச் செழித்து வளர்ந்து அமோகமாகப் பலன் தரும். இக்கருத்து,

தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும் (1037)[7]

(க ஃ சு - கால் பலம்)

என்ற வள்ளுவத்தில் பொதிந்து வைக்கப்பெற்றுள்ளதைக் கண்டு மகிழ்கின்றோம். இன்றும் கோடை மழை பெய்த வுடன் நல்லநாள் பார்த்து நல்லேறு கட்டி உழவைத் தொடங்கும் மரபு இருந்து வருவதைச் சிற்றூர்களில் கண்டு மகிழலாம்[8]. அதன்

6. மேலது - 6 7. மேலது - 7

8. தொடக்கவிழாவன்று உழவர் பெருமக்கள் பஞ்சாங்கம் பார்ப்போர் கோயில் அர்ச்சகர் இவர்கட்கு மானியமாக விடப் பெற்றுள்ள நிலத்தை உழுது பணியைத் தொடங்குவார்கள்.

பிறகு அவரவர் நிலங்களில் உழுது நிலத்தை நன்கு காய விடுவார்கள். இப்பொழுது பயிர்களை அழிக்கவல்ல கிருமிகளும் வெய்யக் கொடுமையால் நாசமாகி விடும் என்பது இவர்கள் நம்பிக்கை.

ஏர் உழுவதைவிட எரு இடுவது நல்லது. பயிர் சிறிது வளர்ந்த நிலையில் பயிர் வளர்ச்சிக்குத் தடையாயிக்கும் களையை நீக்குதல் வேண்டும். களை காய்ந்த பிறகு பயிர்க்கு நீர் பாய்ச்சுதல் வேண்டும். இதைவிடக் காவல் காப்பது மிகவும் இன்றியமையாதது. இச்செயல் பயிர்களைப் பட்டிமேயாதபடி காப்பதற்களாகும். இத்தனைக் கருத்துகளையும்,

ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு (1038)[9]

என்ற ஒரு சிறு குறட்பாவில் (கடுகைத்துளைத்து அதில் கடல் நீரை விட்டது போல) அடக்கிக் காட்டுவது நம்மை வியக்க வைக்கின்றது. வள்ளுவர் பெருமானின் கூர்த்தமதி நம்மை வியப்புக் கடலில் ஆழ்த்துகின்றது. இது இக்காலத்து உழவுத்துறை அமைச்சருக்கும் அத்துறை அரசுச் செயலருக்கும் ஒளி காட்டும் ஒரு கலங்கரை விளக்கமாகும்.

நிலத்திற்கு உரிய உழவன் நாள்தோறும் தவறாமல் சென்று நிலத்தைப் பார்த்து வருதல் வேணடும்; அப்பொழுது தான் எவ்வப்பொழுதும் நிலத்திற்குச் செய்ய வேண்டியவை இன்னவை என்பது தெரியவரும். அவ்வாறு செய்யாமல் சோம்பலாக இருந்தால் கணவனைப் புறக்கணிக்கும் காலத் தில் ஊடுகின்ற அவனது மனைவியைப் போல அந்த நிலம் அவனை வெறுத்து ஊடி விடும்; எதிர்பார்த்த பயனைத்தராது. இதனை,

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும் (1039)[10]

9. மேலது - 8 10. உழவு - 9

என்ற குறளில் அடங்கி இருப்பதைக் காணலாம். குடும்பப் பார்வையைப்போல் நிலப்பார்வையும் அமைய வேண்டும் என்று ஒப்புமைப்படுத்திக் காட்டுவது அற்புதம்.

உழைப்புக்கேற்பப் பயன் தரவல்லது நிலம். அதனால் 'நாம் வறுமையுற்று வருந்துகின்றோம்' என்று எண்ணித் தொழில் செய்யாமல் இருப்பவரைக் கண்டால் நிலமகள் தன்னுள்ளே நகைப்பாள். இல்லக் கிழத்தியை **குலமகள்** என்று வழங்குவது போல நிலத்தை **நிலமகள்** என்று பெண்ணாக உருவகம் செய்து காட்டி விளக்குவது அற்புதம். இக்கருத்து.

இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும் (1040)[11]

என்ற குறளில் அடக்கிக் காட்டியிருப்பதைக் கண்டு மகிழ்கின்றோம்.

உழவுத் தொழில் மனித உழைப்பு இன்றி இயந்திர உழைப்பினால் நடைபெறும் காலம் வந்து கொண்டிருக்கின்றது. உழுவதற்கு இயந்திரம், விதைப்பதற்கு இயந்திரம் அறுவடை செய்வதற்கும் இயந்திரம் என்று எல்லாம் இயந்திரமயமாகும் காலம் நெருங்கி வந்து கொண்டிருக்கின்றது. தனிப்பட்ட நபர் மூலம் நடைபெறுவது நீங்கி கூட்டுறவு முறை நடைமுறைக்கு வரும் காலம் தலைக் காட்டத் தொடங்கியுள்ளது. இந்த அமைப்பில் உழவர்கள் உறிஞ்சப் பெறுதலுக்கு இடம் இல்லாமல் போகும். எதிர்காலத்தில் இந்த முறை ஏற்படுவது திண்ணம். இந்த முறை அமைந்து நடைமுறைக்கு வந்து விட்டால் 'ஏர்ப்பின்னது உலகம்' 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்னும் பொன்மொழிகளின் உண்மை தெளிவாக விளங்கும்.

---

11. மேலது - 10

31. நோயும் மருந்தும்

'காமம்' 'காதல்' என்னும் சொற்களுக்குப் பழங்காலத்தில் ஒரே பொருள் இருந்து வந்தது. இன்று காமம் வேறு, காதல் வேறு என்றாகிவிட்டது. காமம் தன்னல மானது; உடம்பே காரணமாக எழும் ஆசை. காதல் தன்னலம் அற்றது; உள்ளம் காரணமாக வரும் அன்பு.

உலகில் நன்மை தீமைகளைப் பிரிக்க முடியாதது போல் காமத்தையும் காதலையும் பிரிப்பது அருமையான தாகும். நன்மையான செயலில் சிறு தீமையும் கலந்துள்ளது. தீமையான செயலில் சிறு நன்மையும் கலந்துள்ளது.

ஒருவர் வாழ்க்கையைத் தொடங்கும் நிலையில் காமுகர், காதலர் என்று பிரித்தறிவது இயலாது. தொடக்கத்தில் ஒரே தன்மைதான் காணப்படும். வளர்ச்சியிலேயே வேறுபாடு தென்படும். ஆண் பெண் உறவு என்பது தொடக்கத்தில் ஒரு செடியாய் முளைத்து எழுவது. அப்போதே அதனிடத்து இருகிளைகள் தோன்றத் தொடங்கும். ஒருகிளை காமம்; உடல் பற்றிய கவர்ச்சி. மற்றொன்று காதல்; உள்ளம்பற்றிய கவர்ச்சி. இந்த இருசுவடுகளும் எல்லோருடைய வாழ்க்கையிலும் உண்டு.

வளரும் நிலையில் இந்த இருகிளைகளுள் ஒன்று மட்டும் செழித்து ஓங்கும்போது மற்றொன்று வளர்ச்சி இன்றி மெலிந்து நின்று பட்டு போகும். நல்ல பண்புகள் நிறைந்த

கணவனும் மனைவியுமாக இருந்தால் காதல் கிளை செழித்து வளரும் காமக்கிளை செழிக்காமல் போகும் பண்பு இல்லாதவர் களாயின் காமக்கிளையே வளர்நதோங்கும் காதல் கிளை பட்டுப்போகும்.

காதலர் வாழ்க்கையில் கண்புரியும் திருவிளை யாடல் சொல்லி முடியாது. கண்ணே பெரும்பங்கு கொண்டு விளையாடும். தலைவியின் அழகு மட்டும் அவன் பார்வை யையும் நெஞ்சையும் கவரவில்லை. உடல் அழகு மட்டும் கவரும் கவர்ச்சி உயர்ந்த கவர்ச்சி அன்று; உள்ளம் கவரும் கவர்ச்சியே சிறப்பைத் தருவது. முதலில் தலைவன் அவளுடைய உடல் வனப்பைக் கண்டு மயங்கினான் என்றாலும், அவளது உள்ளத்துக் கவர்ச்சியையே எதிர்பார்த்து நிற்கின்றான்; அதையும் பெறுகின்றான்.

காதலியிடம் இருவித நோக்குகள் உள்ளனவாகக் குறிப்பிடுகின்றார் வள்ளுவர் பெருமான்.

இருநோக்கு இவள்உண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கு;ஒன்று அந்நோய் மருந்து (1091)[1]

என்பது வள்ளுவம். ஒரு நோக்கு. காதல் நோயைத் தருவதாக அமைகின்றது. அதனை 'நோய் நோக்கு' என்கின்றார். பாம்பு படம் எடுப்பதுபோல் அந்நோக்கால் காதல் நோய் கிளர்ந் தெழுக்கின்றது. அந்நோக்கு மாறி வேறொரு நோக்காக அமைகின்றது. அது முதல் நோக்கு நல்கின நோய்க்கு மருந்தாக அமைந்து விடுகின்றது. படம் எடுத்தாடும் பாம்பு மருந்து வேரைக் காட்டினவுடன் படத்தைக் கீழே போட்டு விடுவது போல கிளர்ந்தெழுந்த காதல் நோய் அடங்கி விடுகின்றது.

1. குறிப்புஅறிதல் - 1

தலைவனைக் காணாதபோது அவனைக் கண்டு களவு கொள்கின்ற சிறுநோக்கம் தலைவியிடம் உள்ளது. அதுதான் கண்களவு கொள்கின்ற சிறு நோக்கம் (1092)/ இது காமத்தில் செம்பாகம் அன்று; 'பெரிது' என்கின்றார் வள்ளுவர் பெருமான். காதலின் நுட்பத்தைத் தம்மதி நுட்பத்தால் கூறுவது இது.

'முகதரிசனம் முக்கால் மைதுனம்' என்பது பொது மக்கள் பேச்சில் அடிபடும் பழமொழி. இதனையொட்டி அமைந்திருப்பதையும் ஈண்டு சிந்திக்கலாம். தலைவி தலைவனைக் காணாதபோது ஏதோ கருத்தை உட்கொண்டு நாணி இறைஞ்சுகின்றாள். அதுதான் அவர்களிடையே அன்பை வளர்க்கும் நீராக அமைந்து விடுகின்றது (1093). தலைவன் நோக்கும்போது தலைவி எதிர்நோக்காமல் நாணித் தலை குனிந்து நிலத்தை நோக்குகின்றாள். அவன் நோக்காதபோது அவனை நோக்கி அவள் தனக்குள் மகிழ்கின்றாள் (1094). இங்ஙனம் காதல் வாழ்வில் கண் புரியும் திருவிளையாடல் களை எண்ணி எண்ணி மகிழலாம்.

32. இனிய இன்பம் எது?

மங்கையர் மூலம் பெறும் இன்பம் இனியதா? தாமரைக் கண்ணான் உலகில் பெறும் இன்பம் இனியதா?

> **தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்**
> **தாமரைக் கண்ணான் உலகு (1103)**[1]

என்று வள்ளுவர் பெருமான் 'ஒரு போடு' போடுகின்றார். இஃது ஓர் வினாப்புதிர். இதற்கு விடைகாண்போம்.

தாமரைக் கண்ணான் உலகு வைகுந்தம். இதனைத் 'திருநாடு' என்றும் 'பரமபதம்' என்றும் **'நலம் அந்தம் இல்லதோர் நாடு'** (திருவாய் 2.8.4) என்றும் **'நித்திய விபூதி'** என்றும் வழங்குவர் வைணவப் பெருமக்கள். ஆழ்வார்கள் 'பெருநிலம்', 'பெருவிசும்பு', 'உம்பர் உலகு', 'விண்ணகம்', 'நாரணன் உலகு' 'இன்ப வீடு', 'அமரர் உலகம்', 'வானோர் கடிநகர்' என்றெல்லாம் பன்னி உரைப்பர்.

மங்கையர்மீது கொள்ளும் காமம் 'விஷயகாமம்' மாதவன்மீது கொள்ளும் காமம்; 'பகவத் விஷயகாமம்'; முன்னது சிற்றின்பம்; நாம் இந்த உலகில் நேரில் அநுபவித்துப் பெறுவது. பின்னது பேரின்பம்; கற்பனை அநுபவத்தால் காண்பது; நித்திய விபூதியில் பெறுவதாகக் கூறப்பெறுவது. அதை அநுபவித்தார் எவரும் வந்து நமக்குக் கூறியதுமில்லை; பிறர் சொல்லக் கேட்டதுமில்லை.

1. புணர்ச்சி மகிழ்தல் - 3

'தாமரைக் கண்ணான் உலகு' எனக் கூறப்பெறும் அந்த உலகில் பெறும் இன்பம் அளவிறந்து ஒப்பற்றதாக இருக்கும் பான்மையது. இங்குத் திவ்வியக் கற்பகச் சோலைகள், நானாவிதமலர்கள் நிறைந்த திவ்விய பூங்காக்கள், திவ்விய இள மரக்காக்கள், திவ்விய செய்குன்றங்கள் நீராடும் திவ்விய தடாகங்கள் முதலியவை நிறைந்து இருக்கும். இங்கு மிகவும் இடமகன்ற நிரதிசய ஆனந்த மயமான திருமாமணி மண்டபம் ஒன்று உண்டு. உபய விபூதியிலுள்ளவர்களும் ஒரு மூலையில் அடங்கும்படியாக மிக விசாலமானது. இங்குள்ள பொருள்கள் யாவும் சுத்த சத்துவத்தாலானவை[2]. இங்குக் காலம் நடையாடாது; காலை மாலை, பகல் இரவு இன்று நேற்று என்ற நிலைகள் இங்கு இல்லை. முன்-பின் என்ற நிலைதான் உண்டு. வீடுபேறு அடைதற்கேற்ற உபாயங்களைக் கையாண்டு அவன் திருவருளைப் பெற்ற முமுட்சுகள்தாம்[3] இந்த நீள் விசும்பினை அடைதல் முடியும். இவர்கள் இப்பூவுலகிற்கு த் திரும்பி வருதல் இல்லை. பிரளய காலத்தில் இவர்கட்கு அழிவு இல்லை. இறைவன் திருவுள்ளப்படி எந்த உருவத்தையும் இவர்கள் மேற்கொள்வர்.

வள்ளுவர் பெருமான் இந்தக் கற்பனையுலகில் பெறும் கற்பனை இன்பம் உண்மையுலகில் ஒரு மங்கை யினால் பெறும் இன்பத்தைவிட இனிமையுடைய தாகமாட்டாது என்று கூறி நம்மைச் சிந்திக்க வைக்கின்றார்.

---

2. சுத்த சத்துவம் - இதனாலான பொருள்கள் ஆதல், அழிதல், தேய்மானம் அற்றவை.
3. முமுட்சுகள் - மோட்சத்தில் விருப்பமுள்ளவர்கள்.

33. எது இனியது – சிற்றின்பமா? பேரின்பமா?

ஓர் இளைஞன் ஓர் இளமங்கையை மருவுதலாகிய இன்பத்தைச் 'சிற்றின்பம்' என்று வழங்குதல் மரபு. முக்தியுலகில் இறைவனுடன் கலத்தலால் பெறக் கூடிய இன்பம். 'பேரின்பம்' முன்னது அதியசய இன்பம் என்றும் பின்னது நிரதிசய இன்பம் என்றும் உரைப்பர் பரிமேலழகர். இந்த இரண்டில் எது இனியது என்பதை வள்ளுவரே கூறுவார்,

தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு (1103) [1]

என்ற குறட்பாவில் இது தலைவன் தன் பாங்கற்கு உரைப்பதாக அமைந்தது. இடந்தலைப்பாட்டின் இறுதிக்கண் சொல்லியது. அதாவது பாங்கற் கூட்டத்தின் தொடக்கத்தில் கூறியதாகும்.[2] தலைவனை நோக்கி "பேரின்பத் திற்குரிய நீ இச்சிற்றின்பத்தை விரும்புவது தகாது" என்று சொல்லியவனுக்கு மறுமொழியாக அமைந்தது. சிற்றின்பம் சிறிதும் வருந்தாமல் ஐம்புலன்களால் நுகரும் இன்பம்; இவ்வுலகில் பெறுவது; பேரின்பம் கற்பனை யுலகில் அடைவது. அந்த இன்பத்தை அடைந்தவர் யார்

1. காமத்துப்பால் - புணர்ச்சி மகிழ்தல் - 3

2. தமிழர் வாழ்க்கையை அகத்திணை, புறத்திணை என்று இரு கூறிட்டுப் பேசுவர். அகத்திணை களவு, கற்பு என்று மேலும் இரண்டு வகையாகப் பேசப் பெறும். களவியல் ஊழ் கட்டுப்பாட்டில் அடங்கியது. களவியல், இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப் பாடு , பாங்கற் கூட்டம், தோழியற் கூட்டம் என்று மேலும் விரியும். இயற்கைப் புணர்ச்சி ஊழ் கூட்டு வித்தலால் தலைவனும் தலைவியும் சேர்தல். இடந்தலைப்பாடு முன்னர் கூடிய இடத்திலேயே மறுநாளும் கூடுதல்; தலைப்படுதல் - கூடுதல். அடுத்து நிகழ்வது பாங்கன் உதவியனால் கூடும் கூட்டம். தொடர்ந்து பாங்கியர்க் கூட்டங்கள் நடந்தவண்ணம் இருக்கும்

என்பதைக் கண்டதும் இல்லை; அவரைப்பற்றிப் பிறர் சொல்லக் கேட்டதும் இல்லை. இந்த இருநிலைகளையும் அறிவியல் நோக்கில் விளக்க முயல்வேன்.

சிற்றின்பம்: மானிட உயிரணுவில் 23 இணை நிறக் கோல்கள் (Chromosomes) உள்ளன. உயிரணுக்கள் முதிர்ச்சி பெற்று முட்டையணுவாகவும் விந்தணுவாகவும் மாறுங்கால் அவை ஒவ்வொன்றிலும் 23 நிறக் கோல்கள் (உயிரணுவிலுள்ளவற்றில் பாதி) தான் இருக்கும். குழந்தைகள் பிறக்கும்போதே வமிச விருத்தியின் பொருட்டு இவை முட்டையணுவிலும் விந்தணுவிலும் இயற்கையன்னை அடக்கி வைக்கின்றாள். பெண் பூப்பெய்தும் வரையிலும் ஆண் முன் குமரப்பருவம் அடையும் வரையிலும் இவை உறங்கிய நிலையில் வாளாகிடக்கும். இப்பருவங்கள் எய்திய பிறகு இவை செயற்படத் தொடங்குகின்றன. **ஒற்றை நிறக் கோல்களாக** இருப்பவை இணைநிறக் கோல்களாக மாறத் துடித்துகின்றன. இது இயற்கை நியதி; இனப்பெருக்கத்தத்துவத்தில் இயற்கையன்னை உண்டாக்கி வைத்த இரகசியம். இத்துடிப்புதான் **காதல் உணர்வு.** மனித நாகரிகம் இதனைத் திருமணத்தில் கொண்டு செலுத்துகின்றது. திருமணத்திறகுப்பிறகு நடைபெறும் **புணர்ச்சி** தான் காதல் உணர்வு ஒன்று சேர்க்கும் தத்துவம். இதுதான் **சிற்றின்பம்** என்று மக்கள் வழங்குவது. புணர்ச்சியால் மண மக்கள் பெறும் இன்பம் **சிற்றின்பம்** அன்று; அது பெறற்கரிய **பேரின்பம்.** இயற்கை அன்னையால் ஏற்படுத்தப் பெற்ற தெய்விக உணர்வு. தெய்விக உறவும் கூட; இனப் பெருக்கத்திற் காக ஏற்படுத்தப்பெற்ற இறைவன் கட்டளை என்று கூட இத னைக் கூறலாம். இஃது இவ்வுலகில் பிறந்த ஆண் பெண் இரு வரும் இணைவதால் ஏற்படுவது. இதுவே கீழ்க்காட்டிய 'குறளிலுள்ள' 'தாம் வீழ்வார் மென்தோள் துயில்' என்ற தொடர் குறிப்பிடுவது

பேரின்பம்: இது தாமரைக்கண்ணான் உலகில் பெறுவது. அந்த உலகம் வைகுந்தம் என்று அருளாளர் பெருமக்களின் கற்பனையால் படைக்கப்பெற்ற உலகம்; யாரும் அங்கு சென்று அந்த இன்பத்தைப் பெற்று அவ்வநுபவத்தை இங்குவந்து உரைத்ததில்லை.அது வீட்டுலகம்; அங்கிருந்து எவரும் மீண்டும் இந்நிலவு லகத்திற்கு வந்ததில்லை என்பது தத்துவம். உலகப்பற்றை யொழித்து இருவினை அகன்று ஆன்மா அடையும் உலகம் அது. அதுகாலம் நடையாடாத தேசம்; பசி, தாகம், முதலியன இல்லைஅங்கு. அங்கு இரவு, பகல் என்பது இல்லை. ஆன்மா பரமான்மா அருகில் இருந்து கொண்டு அவன் அழகை அநுபவித்துக் கொண்டு இருப்பது. இந்த இன்பமே பேரின்பம் என்று அருளாளர் பெருமக்கள் நமக்கு உரைப் பது; விளக்குவது.

கீழ்க்கூறிய சிற்றின்பம் கூட ஆண் பெண், உடல்களி லுள்ள ஆன்மாக்கள் உடல் உறவால் பெற்று அநுபவிக்கும் இன்பமேயாகும். வள்ளுவர்பெருமான் தலைவன் வாயில் வைத்து இந்தக் கற்பனை உவகைக் காட்டுவார். பரிமேலழகர் குறிப்பிடும் நிரதிசய இன்பம் இது. மக்கள் உடலுறவால் தாம் நேரில் பெறும் இன்பத்துடன் 'சிற்றின்பத்துடன்' அதிசய இன்பத்துடன் வைத்து நோக்கினால் உண்மை புரியும் என்கின்றார். எது இனியது? என்பதும் புலனாகும் என்கின் றார். இந்தக் கற்பனை இன்பமும் தவயோகிகட்கு எட்டலாம். தவயோகிகள் உலகிலுள்ளவர்கள் தாம். அவர்கள் இப்பூத வுடலை விட்டு கற்பனையுலகமாகிய வீட்டுலகத்திற்கு முக்தி யுலகிற்குச் செல்லுவதை யார் கண்டது? அது கற்பனை யநுபவமே. இப்போது எது இனியது என்பதை நம்மால் உணர முடிகின்றது. வேண்டுமானால் வள்ளுவர்பெருமான் தெரிந்ததை வைத்துக் கொண்டு தெரியாததை விளக்குகிறார் என்று கொள்ளலாம்.

34. ஊடலும் கூடலும்

கூடல், ஊடல் என்பவை வள்ளுவரின் திருக்குறள் காமத்துப்பாலில் கூறப்பெறும் இரு நிகழ்ச்சிகள். முன்னது 'புணர்ச்சி மகிழ்தல்' என்ற அதிகாரத்திலும் பின்னது புலவி, புலவி நுணுக்கம், ஊடல் உவகை என்ற அதிகாரங்களிலும் விளக்கப் பெற்றறுள்ளன. இவற்றைத் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டுமானால் சுவைபற்றிய கருத்துகளை அறிந்து கொண்டால்தான் இயலும்.

அன்னாசி ரசம், திராட்சை ரசம் மாம்பழ ரசம், ஆப்பிள் ரசம், தக்காளி ரசம் இவற்றை வாங்கிப் பருகும் போது அப்பழங்களை நேரில் கண்ணால் காண்பதில்லை. மனத்தில் நினைத்துக் கொண்டு சுவையை அநுபவிக்கின்றோம். அது போலவே காதல் சுவையை அநுபவிக்கும் போது பெண்ணின் உருவம் கண் காண்பதில்லை; மனத்தில் நினைத்துக் கொண்டு சுவையை மட்டிலும் அநுபவிக் கின்றோம். திருவள்ளுவர் திருக்குறள் காமத்துப் பாலில் வரும் காட்சிகளை இப்படித்தான் அநுபவிக்க வேண்டும். அப்படி அநுபவிப்பதற்காகத்தான் அப்பகுதியைப் படைத் துள்ளார் அப்பெருமகன். கூடல் ஊடல் காட்சிகளை இப்படித்தான் அநுபவித்து மகிழ வேண்டும்.

தீயை நெருங்கினால் சுடும்; விலகினால் சுடாது. இது தீயின் இயல்பு. திருவள்ளுவர் காட்டும் தீ அற்புத மானது. அவர் பெண்ணையே தீயாக உருவகிக்கின்றார். அத்தீ அணுகுங்கால் சுடாது ; தண் என்று இருக்கும். அகன்று போகுங்கால் சுடும்.

நீங்கில் தெறூஉம் குறுகுங்கால் தண்என்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள் (1104)

என்பது பொய்யாமொழி. இப்பாடலைப் படித்து அநுபவித்து மகிழ வேண்டும். இன்ப நிலையை நினைக்கும் போதே களிப்பு உண்டாகிறது; இன்பம் தரும் தலைவன் தலைவியைக் காணுபோதோ, தலைவி தலைவனைக் காணும் போதோ மகிழ்ச்சி உண்டாகின்றது. இந்த இரண்டு வகை உணர்வுகளும் போதை நல்கும் கள் என்ற பொருளுக்கு இல்லை என்று காமத்தையும் கள்ளையும் ஒப்பிட்டுக் காட்டுவார்.

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்குஇல் காமத்திற்கு உண்டு (1281)

என்ற அவர் திருவாக்கில் இவற்றைக் கண்டு மகிழலாம்.

இன்பச் சுவையை ஒரு சிறந்த கருத்துரை கொண்டு, அவரவர் நுகர்வு பூர்வமாகவே படிமுறை உயர்வில் ஒரு விழிப்புணர்ச்சியுடன் விளக்கியிருக்கும் சுவைத்திறன் எண்ணி எண்ணி மகிழ்வதற்குரியது.

தம்மில்இருந்து தமதுபாத்து உண்டற்றால
அம்மா அரிவை முயக்கு (1107)

என்பதில் இதனைக் காணலாம். தம்இல் - தாம் உழைத்துச் சம்பாதித்துக் கட்டியவீடு (வாடகை வீடு அல்ல). தமது பாத்து தாம் உழைத்துச் சம்பாதித்த பொருள் (முன்னோர் சம்பாதித்த சொத்தில் வரும் பொருள் அல்ல). அரிவை முயக்கு பெண்ணைத் தழுவி நுகரும் இன்பம். தமது வீட்டிலிருந்து கொண்டு தாம் சம்பாதித்த பொருளால் உணவுப் பொருளை உண்ணும் போது பெற்ற இன்பம் போன்றது. இவளைத் தழுவி

நுகரும் இன்பம் இல்லறம் செய்தார் பெறும் துறக்கத் தின்பம் கூறியவாறு.

புதிதாகத் திருமணம் ஆகி முதன் முதலாக இன்ப வாழ்வில் நுழைபவர் இன்பத்தை நுகரும்போது பெறும் அநுபவம் அறிவு விளக்கம் ஏற்படுங்கால் அறியாமையின் எல்லையையும் காண்பதுபோல், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தடவையும் இன்பத்தைத் துய்க்கும் போது (புணரும்போது) இன்னும் நுகராத பகுதியின் எல்லை யினைக் காண்பது போன்ற உணர்வு தோன்றும் என்பதாகக் குறிப்பிடுக்கின்றார் வள்ளுவர் பெருமான்.

அறிதோறும் அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு (1110)

என்பது வள்ளுவம்.

இன்பவாழ்வில் காணும் **மூன்று** நிலைகளையும் குறிப்பிடுவார். **முதலாவது** புணர்தல் இனிதாவதற் பொருட்டு நேரிடும் ஊடல்; **இரண்டாவது** அந்த ஊடலை அளவறிந்து நீக்குதல்; **மூன்றாவது** அதன்பின் நடைபெறும் புணர்தல்.

அடுத்து ஊடல் நிலையைக் காண்போம். தன் னையும் நெஞ்சையும் வேறு வேறாகப் பிரித்துக் கொண்டு பேசும் இலக்கிய மரபு ஒன்று உண்டு. அதனை வள்ளுவர் பெருமானும் கையாளுகின்றார். நெஞ்சை நோக்கி தலைவியே பேசுகின்றாள். காதல் என்பது அவர் கருதிய புலவிக்கு உட்படுதல். அது அப்புலவிக்கு உடம்படுதலாகிய செயல் தனக்கு ஆகாது என்கின்றாள். '' ஒரு கருத்தைத் தாமாக அறிந்து செய்யமாட்டா தார் செய்வாரைக் கண்டாயினும் செய்வர். நீ (நெஞ்சு) அதுவும்

செய்கின்றிலை'' என்று நெஞ்சை நோக்கிப் பேசுகின்றாள் தலைவி.

அவர்நெஞ்சு அவர்க்குஆதல் கண்டும் எவன்நெஞ்சே:
நீஎமக்கு ஆகா தது (1291)

என்பது வள்ளுவம். இன்பவாழ்வில் - புதிதாக மணந்து இன்பம் நுகரும் வாழ்வில் - மூன்று நிலைகள் உள்ளன. இன்ப வாழ்வில் நுகர்ந்த நிலையில் நாளடைவில் இன்பம் குன்றுதல், அது இனிதாக அமைவதற்காக ஊடுதல், இந்த ஊடல் முதிர்ந்து உள்ள இன்பத்தையும் கெடுக்காதவாறு அளவறிந்து ஊடலை நீக்குதல் என்பவை அவை.

ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன் (1109)

என்பது வள்ளுவரின் பொய்யாமொழி.

ஊடலைப்பற்றி பல அற்புதமான அமுதமொழிகள் உள்ளன. சிலவற்றை மட்டிலும் ஈண்டுக் காட்டுவேன்.

காதலன் ஒரு மாலையைச் சூட்டிச் செல்லு கின்றான். அந்த மாலை வேற்று நிலத்து மரப்பூக்களாலானது. அதைக் காதலி கண்டதும் ஊடுகின்றாள். 'உன் காதலியாரோ ஒருத்திக்கு இநத அழகைக் காட்ட வேண்டும் என்று தான் சூட்டியுள்ளாய்' என்று ஊடுகின்றாள்.

கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று (1313)

என்பது வள்ளுவம்.

காதலன் அன்பின்மிகுதியால் 'காதலர் யரையும் விட

நாம் காதல் மிகுந்தவர்களாக உள்ளோம்' என்கின்றான். "நீ பல மகளிரைக் காதலிக்கின்றாயோ? அவருள் என்னிடம் அன்பு மிகுதியோ? என்னைப் போன்ற காதலியர் பலர் உளரோ? அதனால் யாரையும் விடக் காதல் மிகுதி என்றாயோ? அவர்கள் யார்? யாரைவிட? யாரைவிட?" என்று கேட்டு ஊடுகின்றாள்.

யாரினும் காதலம் என்றேனா? ஊடினாள்
யாரினும் யாரினும் என்று (1314)

என்பது வள்ளுவர் வாக்கு.

'இந்தப் பிறப்பில் நாம் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியோம்' என்கின்றான் காதலன். 'அப்படியா?, இந்த ஒரு பிறப்புதானா? மறுபிறப்பில் பிரியக் கருதிவிட்டாயா?' என்று ஊடிக் கொண்டே கண்ணீர் கலங்குகின்றாள்.

இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள் (1315)

என்பது பொய்யாமொழி.

'பிரிந்து சென்றபோது நின்னை அடிக்கடி நினைத்தேன்' என்கின்றான் காதலன். 'பிரிந்தவுடன் என்னை மறந்து விட்டாயோ?' என்று சொல்லி ஊடுகின்றாள் காதலி.

உள்ளினேன் என்றேன்மற்றுஎன்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள் (1316)

என்பது வள்ளுவர் வாய்மொழி

ஊடல் நீடிக்கின்றது. காதலனுக்குத் தும்மல் வருகின்றது. தும்முகின்றான். வழக்கம்போல் காதலி நூறாண்டு வாழ்க என்று தும்மல் கேட்டு வாழ்த்துகின்றாள். ஆனால்

இவ்வாறு தன் வாயால் வாழ்த்துப் பெற வேண்டும் என்றும் ஊடலை முடிக்க வேண்டும் என்றும் வேண்டுமென்றே காதலன் செயற்கையாகத் தும்மினான் என்று எண்ணுகின்றாள் காதலி. ஊடல் முடிவது போய் அது மிகுதியாயிற்று. அடுத்த நொடியில் அவள் மனத்தில் வேறோர் எண்ணம் தோன்றுகின்றது. 'யாராவது நினைத்தால்தான் ஒருவருக்குத் தும்மல் வரும் என்று சொல்வார்கள். இப்போது இவரை யார் நினைத்திருப்பார்கள்? நினைக்கும் உரிமையுடையவள் நான் ஒருத்திதான் என்று எண்ணி இருந்தேன். இன்னும் யாரோ ஒருத்தி இவருக்குக் காதலியாக இருக்க வேண்டும். அவள் நினைத்ததால்தான் இவருக்குத் தும்மல் வந்தது' என்று எண்ணிக் காதலனை நோக்கி 'யார் நினைக்கத் தும்மல் வந்தது?' என்று கேட்டு ஊடுகின்றாள். இதை உணர்ந்த காதலன் அடுத்த தும்மாலை வெளிப்படுத்தாமல் அடக்கிக் கொள்ள முயல்கின்றான். அதை அறிந்த காதலி 'தெரிந்து விட்டது, தெரிந்து விட்டது; உன் காதலி நினைக்கின்றாள் என்பது எனக்குப் புலப்படாதபடி மறைக்கின் றாய். அதனால்தான் தும்மலை அடக்குகின்றாய்' என்று சொல்லி அழுகின்றாள்.

> ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை
> நீடுவாழ் கென்பாக்கு அறிந்து (1312)
>
> வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்
> யார்உள்ளித் தும்மினீர் என்று (1317)
>
> தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்
> எம்மை மறந்திரோ என்று (1318)

என்பவை அற்புதமான வள்ளுவங்கள்.

உணவு உட்கொள்வதைவிட முன் உண்ட உணவு செரிமானம் ஆதல் இன்பம் தரும். அதுபோல காதல் வாழ்வில் மேலும் புணர்தலை விட முன்னைத் தவறுபற்றி ஊடுதல் இன்பம் தரும்.

உணலினும் உண்டது அறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது (1326)

என்பது வள்ளுவர் வாக்கு.

இன்ப வாழ்வில் ஊடுதல் இன்பம் தரும்; அதனை விட அதனை அறிந்து நீங்கி மீண்டும் புணர்தல் இன்பம் தரும்.

ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின் (1330)

என்பது வள்ளுவம். 'அகர முதல' என்று தமிழ் முதல் உயிர் எழுத்தாகிய 'அ' வில் தொடங்கி 'பெறின்' என்பதில் உள்ள தமிழின் இறுதி மெய் எழுத்தாகிய 'ன்' இல் முடிவது ஒருவகை இன்பம்; பேரின்பம். தமிழில் எந்த நூலும் இங்ஙனம் முடிந்ததில்லை.

35. மாலை அலரும் நோய்

காதல் உணர்வு என்பது இனப்பெருக்கத்திற்காக இறைவனால் வழங்கப்பெற்ற ஓர் அற்புத ஆற்றல். அஃது ஒவ்வோர் உயிரும் கருவில் உதயமாகும் போதே இறைவனால் வழங்கப் பெற்றதாகும். உயிர்களின் உடல் இரட்டை நிறக்கோல்களால் (Double Chromosomes) ஆனது என்பது அறிவியல் உண்மை. உயிரணுக்கள் உடலாக உருப்பெறும் பொழுதே இந்த உடல் இரட்டை நிறக்கோல்களால் உருப்பெறு கின்றது. அப்பொழுதே அடுத்த உயிர் உற்பத்தியாவதற்கும் வழிவகுக்கப் பெறுகின்றது. ஆண் உயிராகும் விரைகளிலும் பெண் உயிராகும் சூற்பைகளிலும் ஒற்றை நிறக்கோல்கள் அமைக்கப்பெறுகின்றன. இவை ஆண் முன் - குமரப்பருவம் வரையிலும் பெண் பூப்பெய்தும் வரையிலும் 'ஆலமர் விதத்தின் அருங்குறள்போல்' அடங்கி அறிதுயில் கொண்ட நிலையில் உள்ளன. அப்பருவம் எய்திய பிறகு இவை நீண்ட உறக்கத்திலிருந்து எழுகின்றன. இவை ஒன்றையொன்று சேர்ந்து இரட்டை நிறக்கோல்களாலான உடலாக உருப்பெறத் துடிக்கின்றன. இத் துடிப்பே காதல் என்ற உணர்வாகும். இந்த உணர்வை வள்ளுவர் பெருமான் நோய் என்கின்றார். தத்துவ நோக்கில் பிறவியே நோய் தானே. அஃதாவது பிறவிநோய் - ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் நோக்குவதை நோய் நோக்கு (குறள் 1091) என்று உருவகப் படுத்திக் காட்டியவர் அதே குறளில் அந்நோக்கு மருந்தாக மாறுவதையும் சித்திரிக்கின்றார் அல்லவா?

இந்த நோய் இப்பருவ உயிர்களை உறங்காமல் கலுழ்கின்ற நிலைக்குத் தள்ளுகின்றது. இடையே சிறிது நேரம் உறக்கம் பெற்றாலும் அது கனவு நிலையாக மாறு கின்றது. கனவில் காதலனோ காதலியோ வருகின்றனர். கனவு கலை கின்றது. இவ்வாறு இராக் காலம் ஒருவாறு கழிந்தபிறகு பொழுது புலர்கின்றது. காலையில் காதலரைப் பிரிந்த பிரிவுத்துன்பம் தலையெடுக்கின்றது; அரும்புகின்றது; பகல் முழுவதும் மெல்ல வளர்கின்றது. அரும்பு போது ஆகின்றது. மாலை வந்த உடனே துன்பம் பழையபடி முற்றி முழு நிலை அடைந்து மீண்டும் வருத்துகின்றது; மலராகின்றது. இந்த நிலைமை தன் உள்ளத்தில் மாறி மாறி நேர்கின்றது. இதனைப் பெண் எண்ணிப் பார்ப்பதாக வள்ளுவர் பெருமான் சித்திரிக்கின்றார்.

காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை அலரும்இந் நோய் (1227)

என்ற குறட்பாவில் தன்நெஞ்சு தன் காதலர் பின் சென்று அலைவதையும் உணர்கின்றாள்.

இந்தக் காதல் உணர்வுக்கு வடிவந் தந்து எண்ணற்ற இலக்கியங்கள் எழுந்துள்ளன. தமிழ் இலக்கியக் கருவூலத் தில் அக இலக்கியம் பெரும் பகுதியாகும். இந்த உணர்வு பக்தி இலக்கியங்களிலும் **'நாயக நாயகி பாவனையாக'** இடம் பிடித்துக் கொண்டுள்ளது.

இந்நிலைகள் சக்தி இலக்கியத்தில் இடம் பெற்றி ருப்பதைக் காண்போம். திருமங்கையாழ்வார் திருக்கண்ண மங்கைப் பதிகம் ஒன்றில் (பெரி. திரு. 8.5) இந்நிலையைச் சித்திரித்துக் காட்டுகின்றார். 'தலைவனைப் பிரிந்த தலைவி மாலைப் பொழுது கண்டு இரங்குதல்' என்ற குறிப்புடன் காணப்

பெறுகின்றது 'தந்தைகாலில் விலங்கு அற' என்று தொடங்கும் இத்திருமொழி. இதில் ஒரு பாசுரம்:

மாரி மாக்கடல் வளைவணற்
கிளையவன் வளர்புரை திருமார்வில்
தாரின் ஆசையில் போயின
நெஞ்சமும் தாழ்ந்தது; ஓர்துணைகாணேன்;
ஊரும் துஞ்சிற்று; உலகமும்
துயின்றது; ஒளியவன் விசும்பியங்கும்
தேரும் போயிற்று; திசைகளும்
மறைந்தன;செய்வதொன்று அறியேனே (2)

(மாரி - மேகம் ; வளைவணன் -சங்கு போன்ற வெண்ணிறமுடையபலராமன்; தாழ்ந்தது - தாமதித்தது - விசும்பு - ஆகாயம்; ஒளியவன் - சூரியன் ; மறைந்தன தெரியவில்லை.)

திருமங்கையாழ்வார் - பரகாலர் - நாயகி நிலையி யிலிருந்து (பரகாலநாயகி) பேசுகின்றார். ''எம்பெருமான் திருமார்பில் அணிந்துள்ள மாலையின் மீதுள்ள ஆசையாலே என் நெஞ்சு என்னை விட்டு அங்குச் சென்றது. அதனைப் பெற்றுத் திரும்பி வருதலையும் செய்யவில்லை; அதனைப் பெறுவது அரிது என்று ஆசையை விட்டொழித்து விட்டுத் திரும்பி வந்து விடலாம்; அதையும் செய்யவில்லை. இதுவரையில் எனக்குத் துணையாக இருந்து வந்த என் நெஞ்சும் அகன்று விட்டது; உற்ற துணைவனான எம் பெருமானும் என்னை அலட்சியம் செய்து விட்டான். இப்போது எனக்குத் துணையாவார் ஒருவரும் இலர். 'உண்டியே உடையே உவந்தோடும்' உலகினருக்கும், 'உண்ணும் சோறு பருகும்

நீர் தின்னும் வெற்றிலையும் கண்ணன்' என்று இருக்கின்ற எனக்கும் எந்தவித பொருத்தமும் இல்லை. என்றாலும் யாருடனாவது எதையாவது பேசிக் கொண்டு பொழுதைப் போக்கித் தொலைப்போம் என்று பார்த்தாலும் ஊராரும் உலகத்தாரும் தாங்கள் விரும்பிய இன்பங்களைக் குறைவரப் பெற்றுக் களித்துக் குறட்டை விட்டு உறங்குகின்றனர். 'உலகப் பொருள்களில் எதையேனும் கண்டு கொண்டாகிலும் இந்தப் பிரிவாற்றாமையை ஒருவாறு ஆற்றுவோம்' என்று நினைத்தாலும் பகலோன் தேரோடும் போய் மறைந்தான்; இருள் கௌவிக் கொணடு விட்டதனால் ஒரு பொருளும் கண்ணுக்குப் புலனாவதில்லை. வெளியுலகிலும் ஒருவரும் இலர். நெஞ்சும் குடிபோயிற்று. நாயகனும் வந்து அணை கின்றிலன். காலமோ துயர் நெருடும்படியான இராக்காலமாக உள்ளது. என்ன செய்து தரிக்கலாம் என்று தெரியவில்லையே" என்கின்றாள் பரகால நாயகி.[1]

இப்பாசுரத்தின் ஈற்றடியில் ஒரு வரலாறு ஐதிகமாக உரையில் காணப்பெறுகின்றது. அதனையும் உணர்ந்து தெளிந்தால் வள்ளுவர் பெருமானின் ஆழ்ந்த கருத்து நம் உள்ளுணர்வுக்குத் தட்டுப்படும். அதனையும் காட்டுவேன்.

பிள்ளையுறங்காவில்லிதாசர் உறையூர் அரசனுக்கு உடம்பு பிடிக்கும் தொழிலை மேற்கொண்டிருந்த மல்லன்; (பூர்வாசிரமத்தில்). அவன் துணைவி பொன்னாச்சி பேரழகு மிக்கவள். இவர்கள் இருவரும் ஒருநாள் சித்திரைத் திரு விழாவைக் கண்டு களிக்கத் திருவரங்கத்திற்கு வருகின்றனர். வில்லி தன் மனைவிக்குக் கால்சுடும் என்று கம்பளத்தை

1. பாசுரப்பொருளை நன்கு மனத்தில் அமைத்துத் தெளிந்தபின் வள்ளுவர் பெருமானின் வாக்கைச் சிந்தித்து உணர்தல் வேண்டும்.

விரித்து அதன் மீது நடக்கச் செய்து கொண்டும் சூரிய வெப்பம் உடலில் படும் என்று குடை பிடித்துக் கொண்டும் வந்து கொண்டிருந்தான். இராமாநுசருடன் சீடர்கள் காவிரியில் நீராடியபின் திருமடத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். அவர்கள் இக்காட்சியைக் கண்டு கை கொட்டி நகைத்தனர், இராமாநுசரும் இக்காட்சியைக் கண்டனர். (இக்காட்சியிலேயே நயனதீக்கை உறங்கா வில்லிக்கு நடைபெற்று விடுகின்றது.

இராமாநுசர் கை அசைவினால் சைகை காட்டித் தம் அருகில் வருமாறு பணிக்க, வில்லியும் வந்து அவரை வணங்கினான். இராமாநுசர் 'பலர் நடமாடும் தெருவில் இவ்வாறு செய்து வருவது விரும்பத்தக்கதன்று' என்று அறிவுரை கூறினார். அதற்கு வில்லி மறுமொழியாக "இத்தகைய பேரழகு மிக்க மங்கை சுடும் வெயிலில் வாடுவது சரியா?" எனவேதான், தான் இவ்வாறு செய்வதாகச் சொன்னான். உடையவர் இருவரையும் மடத்திற்கு வருமாறு பணித்துச் சென்றார்.

மறுநாள் வில்லியும் பொன்னாச்சியும் திருமடத் திற்குப் போந்தனர். இராமாநுசர் வினவுகின்றார் :'இப்பெரு மாட்டியைவிட அழகுடைய பொருளைக் கண்டால் நின் விருப்பம் மாறுமா?" என்று. "கட்டாயம் மாறும்" என்று மறுமொழி வருகின்றது. இராமாநுசர் இருவரையும் அரங்கன் சந்நிதிக்கு இட்டுச் செல்கின்றார். அரங்கன் திருவடி திருவரை, திருமார்பு, திருக்கழுத்து, திருக்கண்கள், திருமுகம், திருவபிடேகம் வரையிலும் உற்று நோக்கி அநுபவிக்குமாறு (திருப்பாணாழ்வார் அநுபவித்தது போல)[2] பணிக்கின்றார் இருவரும் அங்ஙனமே அநுபவித்து மகிழ்கின்றனர். மூவரும் திருமடத்திற்குத்

2.. அமலனாதிபிரான் - காண்க.

திரும்பிய பிறகு வில்லியும் பொன்னாச்சியும் இராமாநுசர் பாதகமலங்களைச் சேவித்து அவர்தம் சீடர்களாகின்றனர். இராமாநுசர் வில்லியைத் தம் மகனாகவே பாவிக்கின்றார். வில்லியும் தன் பதவியைத் துறந்து பிள்ளையுறங்கா வில்லி தாசராகி திருமடத்திலேயே தங்கி விடுகின்றான். இருவரும் இராமாநுசர் திருத்தொண்டில் தம் வாழ்நாளைக் கழிக்கின்றனர்.[3]

வில்லிதாசரின் இறுதிக் காலம் நெருங்குகின்றது. அவருக்கு மக்கள்இருப்பினும் அவரது சரம காரியங்களைக் கவனிக்குமாறு மாறனேர் நம்பிக்குப் பணிக்கின்றார் இராமாநுசர். இறுதி நாளில் இராமாநுசரின் திருவடிகளில் (நடையன்கள் - காலணிகள்) தனது தலையையும், கால்களைத் தமது மனைவியின் தொடைகளின்மீதும் வைத்திருக்கும் நிலையில் பேசுகிறார். "அன்பே, நாம் இராமாநுசரின் கைங்கர்யம் செய்தவர்கள். நமக்கு வீடுபேறு உறுதி. நான் முன்னே போகிறேன் நீ அழாதே. நீ பின்னர் வந்து சேர்வாய்" என்று சொல்லியிருக்கும் நிலையில் வில்லிதாசரின் ஆவி பிரிகின்றது. திருநாட்டுக்கு எழுந்தருளுகின்றார்.

முன் ஏற்பாட்டின்படி அவரது திருமேனி பிரம்ம ரதத்தில் (தேரில்) எழுந்தருளப் பண்ணிச் செல்ல அவருடைய தேவியாரான பொன்னாச்சியார் மாலை நேரத்தின் பரகால நாயகியாரின் பிரிவாற்றாமைப் பாசுரங்கள் அடங்கிய இப்பதி கத்தை அநுசந்திக்கத் தொடங்கினார். முதல் பாசுரம் அநுசந் தித்து இரண்டாவதான கீழ்க் குறிப்பிட்ட இப்பாசுரத்தை அநுசந் திக்கும்போது பிரம்மரதம் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு

3. உறையூர் மன்னனும் தன்பதவியைத் துறந்து இராமாநுசர் சேவையில் இறங்கி விடுகின்றான்.

செல்பவர்கள் விரைந்து சென்றதால் திருத்தேர் மறைகின்றது. அதற்குத் தகுதியாகப் பொன்னாச்சி யாரின் அநுசந்தானம்:

தேரும் போயிற்று திசைகளும் மறைந்தன
செய்வதொன் றறியேனே (2)

என்று முடிகின்றது. பொன்னாச்சியாரின் வாய் 'செய்வ தொன்றறியேனே செய்வதொன்றறியேனே... செய்வ தொன்றறி யேனே... செய்வதொன்றறியேனே' என்று திரும்ப திரும்ப ஓதிக் கொண்டேயிருந்து குரல் ஒலியும் குறைந்து கொண்டே வந்து நின்று போகின்றது. பொன்னாச்சியாரின் உயிரும் தன்னடைவே விட்டு நீங்கிப் போகிறது அவரும் திருநாட்டுக்கெழுந்தருள் கின்றார். [4]

பின்னர் பிரம்மரதம் நிறுத்தப்பெற்று பொன்னாச் சியார் திருமேனியையும் அதில் எழுந்தருளச் செய்து இருவருடைய சரம கைங்கரியங்களும் ஒரு சேர நிறை வேற்றப் பெறுகின்றன.

---

4. இந்த ஐதிகம் வியாக்கியான சக்கர வர்த்தி பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானத்தில் காணப்பெறுகின்றது.

36. மலரினும் மெல்லிது காமம்

காதல் உணர்வு மலரினும் மெல்லிது[1]. இறைவனால் இனப்பெருக்கத்திற்காக வழங்கப்பெற்ற ஓர் அற்புத ஆற்றல். ஐயறிவுப் பிராணிகளிடம் ஆண்டில் சிலகாலப் பகுதியில் உடலில் ஊறும் ஒருவகைச் சத்துச் சாறுகளால் செயற்படுகிறது. ஊறுதல் அடங்கியவுடன் அவற்றின் உணர்ச்சி செயற்படு வதில்லை. மனிதனிடம் அவ்வுணர்வு மூளையினால் (நரம்பு மண்டலம்) செயற்படு கின்றது. ஆதலால் அவ்வுணர்வு இரவும் பகலும் கனவிலும் நனவிலும் தலைகாட்டிக் கொண்டே உள்ளது. இனப் பெருக்கத்திற்காக வழங்கப்பெற்ற அத் தெய்விக உணர்வை தகாத வழிகளில் பயன்படுத்தத் தொடங்கு கின்றான் மனிதன். கதைகளில், தெய்வ வரலாறுகளிலும் கூட இவ்வுணர்வு தகாத வழிகளில் செயற்படுவது காட்டப் பெற்றுள்ளது. திருவிளையாடற்புராணத்திலும் தாயைப் புணர்ந்தகதை (மாபாதகம் தீர்த்த படலம்) குருபத்தினியைப் புணர்ந்த கதை (அங்கம் வெட்டிய படலம்) ஆகியவற்றை விட்டு வைக்க வில்லை. ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு வாய்க்கப்பெற்ற அதைத் தகாத வழியில் (மனசாட்சி உள்ளிருக்கும் இறைவன்) தடுத்தாலும் அதனையும் மீறிச் செயற்படுவது மிகவும் வருந்தத்தக்கதாக உள்ளது. விடுதலைப் புலிகள், விடுதலைச் சிறுத்தைகள் என்று தம் கட்சிகட்கும் பெயரிட்டுக் கொண்டு மூர்க்கத்தனமாகச் செயற்பட்டுவது மனித நலத்தையே கனவிலும் நனவிலும் கொண்டுள்ள உண்மை

1. புணர்ச்சி விதும்பல் - 9

அறிஞர்களுக்கு சொல்லொணாத் துயரத்தை விளைவித்து வருகின்றது.

வல்லந்தமாக இளம்மகளிரைக் கற்பழித்தல், குழுவாகச் சென்று ஒரு பெண்ணைக் கற்பழித்தல், சில சமயம் வயதிற்கு வராத பெண்ணைக் கற்பழித்தல் போன்ற செய்திகள் அன்றாடச்செய்தித்தாள்களில் காணப்படு கின்றன. தந்தை சில சமயம் மகளையே கற்பழித்த செய்தியும் வருகின்றது. இவர்களை வள்ளுவர் பெருமானாலும் திருத்த முடியவில்லை. அப்பெருமான் ஒழுக்கம் என்பதை மிக விரிந்த பொருளில் எல்லா நிலைகளிலும் வற்புறுத்தி வருவதைச் சிலர் சிந்திப்பதே இல்லை. வள்ளுவர் பெருமான்,

மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படுவார் (1289)

என்று கூறுவர். பல்லாண்டுகளுக்கு முன் இதனை இரும்புப் பட்டறையில் பணிபுரியும் **பில்லா ரங்கா** என்ற பணி யாளர்கட்கு எங்ஙனம் புரியும்? பேருந்துக்காகக் காத்திருக்கும் பள்ளியில் படிக்கும் அந்த இளம் மங்கையை இல்லத்தில் சேர்ப்பதாகச் சொல்லி அவளைத் தமது மகிழ்வுந்தில் ஏற்றிச் சென்று தமது பணியிடத்தில் பலவந்தமாகக் கற்பழித்து மகிழ்ந்தார்கள். பின்னர் அவர்கள் அப்பெண் தம்மைக் காட்டிக் கொடுத்து விடுவாள் என்று அஞ்சி அவளைக் கொன்று விட்டார்கள். செல்வமும் செல்வாக்குமுள்ள அவளது தந்தை யார் வழக்கு தொடுத்து குற்றவாளிகட்குத் தூக்குத் தண்டனை பெறச்செய்தார் என்பது எல்லா நாளேடுகளிலும் வந்த செய்தி. அறத்துப்பாலின் ஆராய்ச்சியில் காமத்துப் பாலின் நுட்பமும் பொருட்பாலின் உள்ளுறையும் வட்டமிடு தலை வள்ளுவரை ஆராய்வார்க்குட் புரியாமற் போகாது. மனத்தின் மாசின்மையும் அகத்திணையின் மனோதத்துவமும் அங்குத் தாண்டவமாடு தலை அறிவார்கள்.

37. முடிப்புரை

வாழ்க்கை இலக்கணமாகத் திகழும் தொல் காப்பியத்தைப்போல, வாழ்க்கை மறையாகத் திகழ்வது வள்ளுவர் வான்மறையாம் திருக்குறள். இவை இரண்டிற்கும் ஏனைய இலக்கண இலக்கியங்கட்குமெல்லாம் அச்சாணி யாக நின்று உதவுவது மரபிலக்கணம்.

மரபுகளைப் பொருட்படுத்தாவிட்டால் நூல்கள் ஒழுங்கு முறையற்றுத் தள்ளாடிப் பயனற்றுப் போகும். மரபு முறைகளைத் தழுவி நடக்காதவர்கட்கு நூல்களால் பெரும் பயனும் இல்லை. நடத்தையும் நெறி தவறும் வாழ்க்கையும் நிலை குலையும். மரபிலக்கணத்தைத் தழுவி நடப்பதே எல்லாவற்றிற்கும் மாமருந்து.

நூல் வழக்கும் ஏனை உலக வழக்கும் உடம்பைப் போல்வன. மரபு ஒன்றுதான் அதற்கு உயிர். உயிரற்ற உடம்பு எதற்கு உதவும்? அத்தகையனவே மரபு தழுவாத நூல்களும் உரைகளும் நடத்தைகளும். மரபுநிலை திரிதல் மாபெரும் குறையாய்க் கருதப் பெறும். காரணம், மொழியே அதனால் நிலை குலைந்து விடும். உடம்பும் அதன் உறுப்பும் சிறிது ஊனமாயிருந்தாலும் உயிரொழுக்கம் திரியாமல் வாழ வேண்டியது நல்வாழ்க்கையின் இயல்பு; நற்பண்பு.

மரபை மாற்றிப் புதிதாக ஒரு வழக்கத்தை உண்டு பண்ணுவதை நேர்மையாளராகிய சான்றோரும் எளிதில் செய்ய ஒருப்படார். தொல்காப்பியர் தம் நூலைத் தொடங்கும் போதே

நூன் மரபு, மொழிமரபு என்று மரபுப் பெயர்களா லேயே தொடங்கினமை ஈண்டு நினைவு கூர்தற்குரியது.

மரபுகளைக் கடைப்பிடித்தற்கு உயர்ந்த நூல் வழக்குகள் முன்னும் பின்னுமாய் இருந்து உதவுகின்றன. வள்ளுவர் பெருமானும் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்க் காப்பியரும் எல்லைக் கற்களாக இருந்து மரபுகளைக் காத்து வந்த பெரியோர்களாவர். திருக்குறள் மறைநூலாக விளங்கு வதால் பின் வந்த ஆசிரியர்கள் பலரும் மரபு கொள்வதற்கு அம்மாபெரும் வான்மறை வள்ளுவர் நூலையே கலங்கரை விளக்கமாகக் கொண்டனர்.

பன்னெடுங்காலமாக மரபு கொண்டு நிலை நின்று வருகின்ற வள்ளுவரின் வான்மறைக் கருத்துகளை அவற்றின் உறுதி தேர்ந்து சிதைக்காமல் தழுவி வாழ்வது நல்லோராகிய பெருமக்களின் கடமை. மேலும் திருக்குறள் காலத்தால் மாறுபடாத, தேயத்தால் பிறசூழலால் கிளர்ச்சி புரட்சிகளால் நிலை திரியாத மாபெரும் உண்மைகளையே தொகுத் துரைக்கும் நூலாகும்!.

உண்மைகளை மறைக்கும் சில கால வேறுபாடுகள் உண்டு. அந்நிலையில் அத்தகைய காலமாசுகளையே சான் றோர் போக்குவர்; போக்குவதற்குரியவை கால நிலைகளாகிய மாசுகளேயன்றி உண்மைகள் அல்ல. திருக்குறள் உண்மைகள் என்றுமே மாசுபடுபவன அல்ல.

தமிழகம் நெடுங்காலப் பழைமையுடையது. ஆதலால் காலந்தோறும் அதன் நாகரிக வாழ்க்கையிலும் மொழியிலும் மாசுகள் படிதல் இயல்பு. அம்மாசுகளை நீக்கி மாசிலாமணி களாக மாந்தரை விளங்க வைக்கும் பொருட்டே திருக்குறள்

வழியில் பெரியோர் புரட்சிகளைச் செய்தனர்; அவர்கள் யாரும் திருக்குறள் உண்மைகளைச் சிதைக்க வில்லை. உண்மைகள் எழுத்தாலும் சொல்லாலும் மட்டும் துணியப்படுவன அல்ல; மரபால் துணியப்படுதலே உறுதி மிக்கது.

சொல்லாலும் பொருளாலும் தருக்கம் முதலிய முறைமைகளாலும் கலைகளாலும் மெய்ப்பொருள் துணிய முடியாத நிலையில் மரபு ஒன்றுதான் அதைத் துணிவிக்கும் சிறந்தவாயிலாக உள்ளது. சிக்கலுள்ள இடங்களிலெல்லாம் மரபுதான் கைக்கொடுத்து உதவும்.

மரபு நிலை திரியா மாட்சிமை கொண்டதாய் உள்ள உண்மைகளைக் கொண்ட வள்ளுவர் பெருமான் வழங்கிய நூலை, பல்வேறு வகைப்பட்ட நூல்களை யெல்லாம் கற்கும் காலத்தில், இடை இடை புரட்டிப் பார்க்கும் போதெல்லாம் வாழ்க்கைக்குப் பாங்காகவுள்ள சில உண்மைகள் உள்ளங் கவரும். அத்தகைய உண்மைகளைச் சிந்தித்து அவ்வப் பொழுது எழுதி வைத்திருந்த விளக்கங்களின் தொகுப்பே இந்நூல். யாவும் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வல்லனவாக அமைந்தன.

பல்லாற்றானும் சிறந்த இத்திருக்குறள் செல்வம்,
பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ? பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ?

(உரைச் சிறப்புப் பாயிரம்)

என்பதும்,

மக்களுக்கு மாநிலத்தில் வாழ்க்கை வழிகளெல்லாம்
சிக்கலறக் காட்டி நலம் செய்நூலாம் -(கவிமணி)

செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே

(வெள்ளிவீதியார்)

உள்ளுதொ றுள்ளுதொறுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி - (மாங்குடி மருதனார்)

உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் உண்டெடன்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு - (செயலூர்க் கொடுஞ் செங்கண்ணனார்)

தேவிற் சிறந்த திருவள்ளுவர் குறள்வெண்
பாவிற் சிறந்திடுமுப்பால் -(உறையூர் முதுகூற்றனார்)

எல்லாப் பொருளும் இதன்பால் உளஇதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால் -(மதுரைத் தமிழ்நாகனார்)

சிந்தைக்கு இனிய செவிக்கினிய வாக்கினிய
வந்தஇருவினைக்கு மாமருந்து -(கவுனியனார்)

வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்கும்
தெள்ளமுதின் தீஞ்சுவையும் ஒவ்வாதால்
(ஆலங்குடிவங்கனார்)

என்ற புகழ் மாலைகள் நூலுக்குப்பொருந்து வனவாகின்றன.

எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுச்
செப்பிய வள்ளுவர்
- (பாலை பாடிய பெருந் தேவனார்)

வள்ளுவரும் தன்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவஎல் லாம்அளந்தார் ஓர்ந்து (பரணர்)

அறம்பொருள் இன்பம்வீ டென்னும் அந்நான்கின்
திறம் தெரிந்துசெப்பிய தேவு -(மாமூலனார்)

வேதப் பொருளை விரகால் விரித்து உலகோர்
ஓதத் தமிழால் உரை செய்தார்
- செயலூர்க் கொடுஞ் செங்கண்ணனார்

என்னும் புகழ் மாலைகள் வள்ளுவர் பெருமானுக்கு உகந்த புகழ்மாலைகளாகப்பொருந்து வனாவாகின்றன.

வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு -(பாரதியார்)

என்ற புகழ்மாலை தமிழ் நாட்டுக்குரியதாகி தமிழர்கள் அனைவரையும் பெருமிதத்துடன் மகிழச் செய்கின்றது.

இவற்றிற்கெல்லாம் உரிய பொருளாகக் கொண்ட நூலையும் அதனைப் படைத்த வள்ளுவர் பெருமானையும்

"காதல் ஓங்க பொருள் பெருக
அறம் வளர்க பொதுமைப் புது
உலகம் பூக்க; உலகம் ஒரு
குலம் ஆக"

என்ற மூதறிஞராகிய பேரறிஞர் திரு. வி.க. அவர்களின் புகழ்மணந்து தேன்போல் இனிக்கும் பொன்னுரை வாழ்த்தை நினைந்து மகிழ்ந்து உள்ளம் பூரிக்கின்றோம்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் -பூங்குன்றனார்

என்ற பொன்னுரை பூரித்த உள்ளமெல்லாம் மணம் வீசி நிற்கின்றது.

பின்னிணைப்பு

பயன்பட்ட நூல்கள்

அழகரடிகள் : திருக்குறள் அறம் (கழகம்)

ஆழ்வார்கள் : நாலாயிரத் திவ்விய பிரபந்தம் (கி.வேங்கடசாமி ரெட்டியார் பதிப்பு)

ஆழ்வார்கள் : நாலாயிரதிவ்விய பிரபந்தம் (பெரிய வாச்சான் பிள்ளை உரை)

இளங்கோவடிகள் : சிலப்பதிகாரம் நாவலர் வேங்கடசாமி நாட்டார் பதிப்பு

ஔவையார் : நல்வழி

கம்பர் : கம்பராமாயணம் பாலகாண்டம் (வை.மு.கே. உரை)

கம்பர் : கம்பராமாயணம் அயோத்தியா காண்டம் (வை.மு.கோ. உரை)

கம்பர் : கம்பராமாயணம் கிட்கிந்தா காண்டம் (வை.மு. கோ. உரை)

கம்பர் : கம்பராமாயணம் சுந்தரகாண்டம் (வை.மு. கோ. உரை)

கம்பர் : கம்பராமாயணம் யுத்த காண்டம் (வை. மு கோ. உரை)

கிருஷ்ணவேணிஅம்மையார் : செம்பொருள் (முழுமூட்சுப்படி) திருமலை - திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

சமண முனிவர்கள்: நாலடியார்
சுப்புரெட்டியார் . ந.: இல்லறநெறி (தமிழ் புத்தகாலயம் பைகிராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை - 5)
சுப்புரெட்டியார் . ந.: திருக்குறள் தெளிவு (சுரா) வெளியீடு
மாபெரும் கவிஞர் பாரதியார் பாடல்கள் (ஐந்திணைப்பதிப்பகம்)
செகவீரபாண்டியன் : வீரபாண்டியம்
திருத்தக்கதேவர் : சீவகசிந்தாமணி நச்சினார்க்கினியர் உரை (உ. வே. சா. பதிப்பு)
திருவள்ளுவர் : திருக்குறள் பரிமேலழகர் உரை (கழகம்)
தொல்காப்பியர்: தொல்காப்பியம் - பொருளதிகாரம் (இளம்பூரணம்)
பவணந்தி முனிவர் : நன்னூல் காண்டிகை உரை
புகழேந்தி : நளவெண்பா (கழகம்)
வரதராசன், மு : திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் (பொதிகை பதிப்பகம், கடலூர்)
வில்லிபுத்தூராழ்வார் : வில்லிபாரதம் மூலம்

First Paper: *என்ன ஆச்சரியம்?* **"Enna Aacharyam !" [1949]**

ஓர் அறிமுகம்

பேராசிரியர்

ந சுப்பு ரெட்டியார்

Books Published : **135 + 1**
Papers Published : **200** [Tamil 173 + English 27]
Endowments established: **10**
Endowment Lectures : **12**
Awards received: **8**
Prizes won : **14**
Titles conferred : **8**

Masterpieces:

1) Tamil Payitrum Murai [1957]
2) Religion & Philosophy of Naalayira Divyap-pirabhandham with special reference to Nammalwar [English][His PhD thesis] [1977]
3) Kalvi Ulaviyal Kotpaadukal [1989]
4) Vainava Selvam [1995]

Financial Aid for publishing the Books:

a) Tirumala Tirupathi Devasthanams - 21

b) Directorate of Tamil Development
Government of Tamil Nadu - 6

Research on Professor's Books

a) University of Madras - 1993 (leading to PhD)
b) Madurai Kamaraj University - 2017 (leading to PhD)

பேராசிரியரின் 135 நூல்களில், தெரிவு செய்யப்பெற்ற 100 நூல்கள் (முழுமையாக)
http://tinyurl.com/nsr100collections
எனும் இணையதளத்தில் உள்ளன. [freely downloadable]

India Book of Records

CERTIFICATE

CENTENARY CELEBRATIONS OF PROF DR. N SUBBU REDDIAR

Prof Dr S Ramalingam (born on 13 Oct 1949) Organizing Secretary, Na Subbu Reddiar 100 Educational Trust, Chennai, Tamil Nadu, has conceived, designed and meticulously executed 108 Centenary Events throughout Tamil Nadu during the Centenary Year (2015-2016) of Prof. Dr. N Subbu Reddiar who served the cause of education for 65 years andwritten 135 books in various fields (100 books after retirement).

Biswaroop Roy Chowdhury
Chief Editor
India Book of Records

Date: March 19, 2018

India Book of Records is registered with the Government of India with RNI no. HARENG/2010/32259.
India Book of Records is affiliated to Asia Book of Records and follows Asian Protocol of Records (APRs) as per the consensus arrived at the meeting of the Chief Editors of National Record Books, Ho Chi Minh City, Vietnam.

ISBN 978-81-939685-6-7
9 788193 968567